# அழகப்பா பல்கலைக்கழகம்




தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003


# ONLINE PROGRAMMES

**இளங்கலை - முதலாமாண்டு**

முதற் பருவம்

200111

# பொதுத்தமிழ்

**Author:**

**Dr. V.THIRUVENI,** *Assistant Professor in Tamil & Research Supervisor, PPR- Coordinator- All Tamil Programmes- DDE Directorate of Distance Education, Alagappa University- Karaikudi-630003, Tamilnadu.India.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr.S.Naganathan,** *Assistant Professor of Tamil, Ramasamy Tamil College, Karaikudi-630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-484/Preparation and Printing of Course Materials/2019 Dared 08.07.2019 Copies 4000**

# இளங்கலை - முதலாமாண்டு

# முதற் பருவம்

# 11A- பொதுத்தமிழ்

## பாடத்திட்டம் - பொருளடக்கம்

**நோக்கம்** : மொழி அறிவு- கவிதை, புதுக்கவிதை, காப்பிய அறிவை வளர்த்தல்

## பிரிவு -1 : இசைப்பாடல்


| | | பக்கம். |
|---|---|---|
| **கூறு 1** | | |
| | **கண்ணதாசன் - ஸ்ரீ கிருஷ்ண கானம்** | **01** |
| 1. | புல்லாங்குழல் கொடுத்த | 10 |
| 2. | குருவாயூருக்கு வாருங்கள் | 12 |
| **கூறு 2** | | **18** |
| 1. | கோகுலத்து பசுக்கள் | 21 |
| 2. | கோகுலத்தில் ஒரு நாள் ராதை | 23 |
| 3. | ஆயர்பாடி மாளிகையில் | 25 |
| **கூறு 3** | | **30** |
| | **பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்** | **31** |
| 1 | நெஞ்சில் குடியிருக்கும் | 46 |
| 2 | செய்யும் தொழிலே தெய்வம் | 48 |
| **கூறு 4** | | **52** |
| | **பாரதியார்** | **53** |
| 1 | கண்ணன் என் விளையாட்டுப்பிள்ளை | 63 |
| 2 | பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி | 67 |

## பிரிவு - 2 : கவிதை, புதுக்கவிதை


| | | | | |
|---|---|---|---|---|
| **கூறு 5** | | | | **74** |
| 1. | **பாரதிதாசன்** | - | உலகப்பன் பாட்டு (5) | 82 |
| 2. | **நாமக்கல் கவிஞர்** | - | நோயற்ற வாழ்வு 7 பாட்டு | 90 |
| 3. | **பெ.தூரன்** | - | நிலா பிஞ்சு | 101 |
| **கூறு 6** | | | | **107** |
| 1. | **வல்லிக் கண்ணன்** | | வெறும் புகழ் | 112 |
| 2. | **கு.ப.இராஜகோபாலன்** | - | எதற்காக? | 116 |
| 3. | **மீரா** | - | பதினைந்து | 120 |
| **கூறு 7** | | | | **125** |
| 1. | **சிற்பி** | - | சர்ப்ப யாகம் | 131 |
| 2. | **ஞானக்கூத்தன்** | - | தோழர் மோசிகீரனார் | 138 |
| **கூறு 8** | | | | **141** |
| 1. | **அப்துல் ரகுமான்** | - | கண்ணும் எழுதேம் | 146 |
| 2. | **சண்முக சுப்பையா** | - | வயிறு | 150 |


## பிரிவு - 3 : காப்பியம்


| | | | | |
|---|---|---|---|---|
| **கூறு 9** | | | | **154** |
| 1. | **சிலப்பதிகாரம்** | - | வழக்குரை காதை | 162 |
| 2. | **கம்பராமாயணம்** | - | அயோத்தியா காண்டம் | 175 |

## பிரிவு - 4 : காப்பியம்


**கூறு 10** **208**

1. **சீறாப்புராணம்** - ஈத்தங்குலை வரவழைத்த படலம் (1) 210

**கூறு 11** **219**

**தேம்பாவணி** - காட்சிப்படலம்

பாடல் எண் ( ஒவ்வொரு பாடலின் முதல்வரி )

1. இன்னவாயில் 227
2. கொழுந்துறும் 227
3. பஞ்(ச) அரங்கில் 227

**கூறு 12** **229**

**தேம்பாவணி** - காட்சிப்படலம்

பாடல் எண் ( ஒவ்வொரு பாடலின் முதல்வரி )

1. எண்ணுளே 234
2. ஒண்தலங்கள் 235
3. இரவியேந்த கஞ்சக் 235

**கூறு 13** **237**

**தேம்பாவணி** - காட்சிப்படலம்

பாடல் எண் ( ஒவ்வொரு பாடலின் முதல்வரி )

1. கன்னியாயதாயும் 246
2. ஏந்தி ஓங்கு உளத்து 246
3. ஆவ தேமுனர் 246
4. கொல்லும் வேலொடும் 247

**கூறு 14** **248**

**தேம்பாவணி** - காட்சிப்படலம்

பாடல் எண் ( ஒவ்வொரு பாடலின் முதல்வரி )

1. என்ற வாசகம் 258
2. அம்பினால் 259
3. வேண்டும் ஓர் வினை 259

# பிரிவு -1 : இசைப்பாடல்

குறிப்பு

## கூறு :1 கண்ணதாசன் - ஸ்ரீ கிருஷ்ண கானம்

## புல்லாங்குழல் கொடுத்த குருவாயூருக்கு வாருங்கள்

1 - பாடஅமைப்பு:

1.1. அறிமுகம்- கண்ணதாசன்

1.2. நோக்கம்

1.3. அரசியல் நாட்டம்

1.4 திரைத்துறைப் பங்களிப்புகள்

1.4.1 திரையிசைப் பாடல்கள்

1.4.2 வசனம் எழுதிய திரைப்படம்

1.4.3 கதை வசனம் எழுதிய திரைப்படம்

1.5. இலக்கியப் படைப்புகள்

1.5.1. காப்பியங்கள்

1.5.2. கவிதைத் தொகுப்புகள்

1.5.3. சிற்றிலக்கியங்கள்

1.5.4. கவிதை நாடகம்

1.5.5. மொழிபெயர்ப்பு

1.5.6. புதினங்கள்

1.5.7. சிறுகதைகள்

1.5.8. தன்வரலாறு

குறிப்பு

1.5.9. கட்டுரைகள்

1.5.10. சமயம்

1.5.11. நாடகங்கள்

1.5.12. உரை நூல்கள்

1.5.13. பேட்டிகள்

1.5.14. விருதுகள்

1.6. ஸ்ரீகிருஷ்ணகானம்

1.6.1. பாடல் 1

1.6.2. பாடல் விளக்கம்

1.6.3. பாடல் 2

1.6.4. பாடல் விளக்கம்

1.6.5. இறைவழிபாடும் பயனும்

1.7. நிறைவாக

1.8. சோதித்தறியும் வினா விடைகள்

1.9. பயிற்சி வினா

1.10. மேலும் படித்தறிக

## 1.1 அறிமுகம் - கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் சூன் 24, 1927ல் சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு அருகில் உள்ள சிறுகூடல்பட்டி என்னும் கிராமத்தில் சாத்தப்பன் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோருக்கு 8ஆவது மகனாகத் தோன்றினார். இவருடன் உடன்பிறந்தோர் 10பேர். சிறுவயதில் இவரை சிகப்பி ஆச்சி என்பவர் 7000 ரூபாய்க்குத் தத்து எடுத்துக்கொண்டார். அவர் வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார். ஆரம்பக்கல்வியைச் சிறுகூடல்பட்டியிலும்,

குறிப்பு

எட்டாம்வகுப்பு வரை அமராவதிபுதூர் உயர்நிலைப்பள்ளியிலும் படித்தார். 1943ஆம் ஆண்டில் திருவொற்றியூர் ஏஜாக்ஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். பத்திரிக்கை ஆசிரியர் பணிக்குச் சென்றபோது அவர் வைத்துக்கொண்ட புனைபெயர் கண்ணதாசன்.

கண்ணதாசனுக்கு முதல் திருமணம் பொன்னழகி என்னும் பொன்னம்மாள் என்பவரோடு 1950 பிப்ரவரி 9ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்றது. இவர்களுக்கு கண்மணிசுப்பு, கலைவாணன், இராமசாமி, வெங்கடாசலம் ஆகிய 4 மகன்களும், அலமேலு சொக்கலிங்கம், தேனம்மை, விசாலாட்சி ஆகிய 3 மகள்களும் உள்ளனர். கண்ணதாசன், பார்வதி என்பவரை 1951 நவம்பர் 11ஆம் நாள் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு காந்தி, கமல், அண்ணாதுரை, கோபால கிருஷ்ணன், சீனிவாசன் ஆகிய 5 மகன்களும், ரேவதி, கலைச்செல்வி ஆகிய 2 மகள்களுமாக ஏழு குழந்தைகள் உள்ளனர். ஐம்பதாவது வயதில் புலவர் வள்ளியம்மை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு விசாலி என்னும் மகள் ஒருவர் உள்ளார்.

கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் பாரதியாரை மானசீகக் குருவாகக் கொண்டவர்.

உடல்நிலை காரணமாக 1981, ஜூலை 24இல் சிகாகோ நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அக்டோபர் 17, சனிக்கிழமை இந்திய நேரம் 10.45 மணிக்கு இறந்தார். அக்டோபர் 20இல் அமெரிக்காவிலிருந்து அவரது சடலம் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, இலட்சக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலிக்குப் பிறகு அரசு மரியாதையுடன் அக்டோபர் 22இல் எரியூட்டப்பட்டது.

## 1.2 நோக்கம்

கவிஞர் கண்ணதாசனின் பாடல்கள் இனிமையும் எளிமையும் வாய்ந்தவை. இவருடைய பல பாடல்கள் திரையிசைப் பாடல்களாக வந்து மக்களை மகிழ்வித்தன. மனதில் துன்பம் நிறைந்தவருக்கு சோகமான பாடல்கள் மனதுக்கு ஆறுதலாகவும், மகிழ்ச்சியான மனதுக்கு

உற்சாகமாகவும் அமையும் இவருடைய பாடல்களை மாணவர்கள் கற்றுப் பயன்பெற வேண்டும் என்பது நோக்கமாகும்.

குறிப்பு

## 1.3 அரசியல் நாட்டம்

அண்ணாவின் திராவிட கழகத்தில் இருந்த கண்ணதாசன் 1961 ஏப்ரல் 9இல் கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து வெளியேறினார்.

## 1.4 திரைத்துறைப் பங்களிப்புகள்

### 4.1 திரையிசைப் பாடல்கள்

கண்ணதாசன் எழுதிய திரைப்படப் பாடல்கள் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

### 1.4.2 வசனம் எழுதிய திரைப்படம்

- நாடோடி மன்னன் 1958

### 1.4.3 கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள்

- மதுரை வீரன் 1956
- நானே ராஜா 1956
- ராஜா தேசிங்கு
- மகாதேவி
- மாலையிட்ட மங்கை
- கருப்புப் பணம்
- தெனாலி ராமன்
- தெய்வத் திருமணங்கள்
- மன்னாதி மன்னன்
- இல்லற ஜோதி

## 1.5 இலக்கியப் படைப்புகள்

### 1.5.1 காப்பியங்கள்

குறிப்பு

- ஆட்டனத்தி ஆதிமந்தி
- இயேசு காவியம்
- ஐங்குறுங்காப்பியம்
- கல்லக்குடி மகா காவியம்
- கிழவன் சேதுபதி
- பாண்டிமாதேவி
- பெரும்பயணம் (1955), அருணோதயம், சென்னை – 14
- மலர்கள்
- மாங்கனி
- முற்றுப்பெறாத காவியங்கள்

### 1.5.2 கவிதைத் தொகுப்புகள்

- கண்ணதாசன் கவிதைகள் (1959), காவியக்கழகம், சென்னை 2, வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1968
- கண்ணதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, 1960, காவியக்கழகம், சென்னை, வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1968
- கண்ணதாசன் கவிதைகள், முதலிரு தொகுதிகள்
- கண்ணதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி (1968), வானதி பதிப்பகம், சென்னை
- கண்ணதாசன் கவிதைகள், நான்காம் தொகுதி (1971), வானதி பதிப்பகம், சென்னை
- கண்ணதாசன் கவிதைகள், ஐந்தாம் தொகுதி (1972), வானதி பதிப்பகம், சென்னை
- கண்ணதாசன் கவிதைகள், ஆறாம் தொகுதி (1976), வானதி பதிப்பகம், சென்னை
- கண்ணதாசன் கவிதைகள், ஏழாம் தொகுதி (1986), வானதி பதிப்பகம், சென்னை
- பாடிக்கொடுத்த மங்களங்கள்

### 1.5.3 சிற்றிலக்கியங்கள்

குறிப்பு

- அம்பிகை அழகுதரிசனம்
- கிருஷ்ண அந்தாதி
- கிருஷ்ண கானம்
- கிருஷ்ண மணிமாலை
- ஸ்ரீகிருஷ்ண கவசம்
- ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி
- ஸ்ரீவெங்கடேச சுப்ரபாதம்
- தைப்பாதை

### 1.5.4 கவிதை நாடகம்

1. கவிதாஞ்சலி

### 1.5.5 மொழிபெயர்ப்பு

1. பொன்மழை (ஆதிசங்கரரின் கனகதாரா ஸ்தோத்திரத்தின் தமிழ்ப்பாடல் வடிவம்)

2. பஜகோவிந்தம்

### 1.5.6 புதினங்கள்

- அவளுக்காக ஒரு பாடல்
- அவள் ஒரு இந்துப் பெண்
- அரங்கமும் அந்தரங்கமும்
- அதைவிட ரகசியம்
- ஆச்சி (வானதி பதிப்பகம், சென்னை)
- ஆயிரங்கால் மண்டபம்
- ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி, 1956, அருணோதயம், சென்னை
- ஊமையன் கோட்டை

**குறிப்பு**

- கடல்கொண்ட தென்னாடு
- காமினி காஞ்சனா
- சரசுவின் சௌந்தரிய லஹரி
- சிவப்புக்கல் மூக்குத்தி
- சிங்காரி பார்த்த சென்னை
- சுருதி சேராத ராகங்கள்
- சேரமான் காதலி (சாகித்ய அகாதெமி விருது பெற்றது)
- தெய்வத் திருமணங்கள்
- நடந்த கதை
- பாரிமலைக்கொடி
- பிருந்தாவனம்
- மீரா
- முப்பது நாளும் பவுர்ணமி
- ரத்த புஷ்பங்கள்
- விளக்கு மட்டுமா சிவப்பு
- வேலங்குடித் திருவிழா
- ஸ்வர்ண சரஸ்வதி

### 1.5.7 சிறுகதைகள்

- ஈழத்துராணி (1954), அருணோதயம், சென்னை
- ஒரு நதியின் கதை
- கண்ணதாசன் கதைகள்
- காதல் பலவிதம் - காதலிகள்
- குட்டிக்கதைகள்
- பேனா நாட்டியம்
- மனசுக்குத் தூக்கமில்லை, வானதி பதிப்பகம், சென்னை
- செண்பகத்தம்மன் கதை
- செய்திக்கதைகள்
- தர்மரின் வனவாசம்

### 1.5.8 தன்வரலாறு

- எனது வசந்த காலங்கள்
- வனவாசம் (பிறப்பு முதல் தி.மு.கவிலிருந்து பிரியும் வரை)
- எனது சுயசரிதம் (வனவாசத்தின் விடுபட்ட பகுதிகள்)
- மனவாசம் (காங்கிரசு கட்சியில் இருந்த காலத்தின் வாழ்க்கை)

குறிப்பு

### 1.5.9 கட்டுரைகள்

- அந்தி, சந்தி, அர்த்தஜாமம்
- இலக்கியத்தில் காதல், 1956, அருணோதயம், சென்னை
- இலக்கிய யுத்தங்கள்
- எண்ணங்கள் 1000
- கடைசிப்பக்கம்
- கண்ணதாசன் கட்டுரைகள் (1960) காவியக்கழகம், சென்னை
- கண்ணதாசன் நடத்திய இலக்கிய யுத்தங்கள்
- குடும்பசுகம்
- சந்தித்தேன் சிந்தித்தேன்
- சுகமான சிந்தனைகள்
- செப்பு மொழிகள்
- ஞானமாலிகா
- தமிழர் திருமணமும் தாலியும், 1956, அருணோதயம், சென்னை
- தென்றல் கட்டுரைகள்
- தெய்வதரிசனம்
- தோட்டத்து மலர்கள்
- நம்பிக்கை மலர்கள், வானதி பதிப்பகம், சென்னை
- நான் பார்த்த அரசியல் (முன்பாதி)
- நான் பார்த்த அரசியல் (பின்பாதி)
- புஷ்பமாலிகா
- போய் வருகிறேன், 1960, காவியக்கழகம், சென்னை
- மனம்போ் வாழ்வு, வானதி பதிப்பகம், சென்னை

- ராகமாலிகா
- வாழ்க்கை என்னும் சோலையிலே



### 1.5.10 சமயம்

- அர்த்தமுள்ள இந்துமதம் 1
- அர்த்தமுள்ள இந்துமதம் 2
- அர்த்தமுள்ள இந்துமதம் 3
- அர்த்தமுள்ள இந்துமதம் 4: துன்பங்களிலிருந்து விடுதலை
- அர்த்தமுள்ள இந்துமதம் 5: ஞானம் பிறந்த கதை
- அர்த்தமுள்ள இந்துமதம் 6: நெஞ்சுக்கு நிம்மதி
- அர்த்தமுள்ள இந்துமதம் 7: சுகமான சிந்தனைகள்
- அர்த்தமுள்ள இந்துமதம் 8: போகம் ரோகம் யோகம்
- அர்த்தமுள்ள இந்துமதம் 9: ஞானத்தைத்தேடி
- அர்த்தமுள்ள இந்துமதம் 10: உன்னையே நீ அறிவாய்

### 1.5.11 நாடகங்கள்

- அனார்க்கலி
- சிவகங்கைச்சீமை
- ராஜ தண்டனை, 1956, அருணோதயம், சென்னை

### 1.5.12 உரைநூல்கள்

கவிஞர் கண்ணதாசன் பின்வரும் இலக்கியங்களுக்கு உரை எழுதியுள்ளார்

- அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி
- ஆடவர் மங்கையர் அங்க இலக்கணம்
- ஆண்டாள் திருப்பாவை
- ஞானரஸமும் காமரஸமும்

- சங்கர பொக்கிஷம்
- சுப்ரதீபக் கவிராயரின் கூளப்பநாயக்கன் காதல்
- சுப்ரதீபக் கவிராயரின் விறலிவிடு தூது
- திருக்குறள் காமத்துப்பால்
- பகவத் கீதை

குறிப்பு

### 1.5.13 பேட்டிகள்

- கண்ணதாசன் பேட்டிகள் - தொகுப்பாசிரியர், ஆர்.பி.சங்கரன் (மாசிலாமணி பதிப்பகம், சென்னை – 4)
- சந்தித்தேன் சிந்தித்தேன்

### 1.5.14 விருதுகள்

சாகித்ய அகாதமி விருது (சேரமான் காதலி படைப்பிற்காக)

## 1.6 ஸ்ரீகிருஷ்ணகானம்

### 1.6.1 பாடல் 1- புல்லாங் குழல் கொடுத்த மூங்கில்களே !

புல்லாங் குழல் கொடுத்த மூங்கில்களே – எங்கள்

புருஷோத்தமன் புகழ் பாடுங்களே!

வண்டாடும் கங்கை மலர்த் தோட்டங்களே – எங்கள்

மதுசூதனன் புகழ் பாடுங்களே!

பன்னீர் மலர் சொரியும் மேகங்களே – எங்கள்

பரந்தாமன் மெய்யழகைப் பாடுங்களே

தென்கோடித் தென்றல்தரும் ராகங்களே – எங்கள்

ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திபுகழ் பாடுங்களே – எங்கள்

குறிப்பு

ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திபுகழ் பாடுங்களே.

குருவாயூர் தன்னில் அவன் தவழ்கின்றவன் - ஒரு

கொடியோடு மதுராவை ஆள்கின்றவன்

திருவேங்கடத்தில் அவன் தவழ்கின்றவன் - அந்த

ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன் - அந்த

ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்

பாஞ்சாலி புகழ் காக்க தன்கை கொடுத்தான் - அந்த

பாரதப்போர் முடிக்கச் சங்கை எடுத்தான்

பாண்டவர்க்கு உரிமையுள்ள பங்கைக் கொடுத்தான் - நாம்

படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான் - நாம்

படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான் (புல்லாங்)

## 1.6.2 பாடல் விளக்கம்

புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே என்று தொடங்கும் பாடலில் கவிஞர் இயற்கைப் பொருள்களை அழைக்கின்றார். மூங்கில்களே மலர்த்தோட்டங்களே மேகங்களே தென்றலே நீங்கள் கண்ணன் புகழ் பாடுங்கள். கண்ணன் கைப்பட, வாய்ப்பட, குழலூதப் புல்லாங்குழல் கொடுத்தன மூங்கில்கள். ரீங்காரம் இடும் வண்டுகளை உடையன மலர்த்தோட்டங்கள். கண்ணன் நிறத்தை ஒத்தன மேகங்கள். தென்கோடியில் பிறந்ததனால் ராகங்களை உடையன தென்றல். ஆகவே கண்ணன் புகழ்பாட நீங்கள் தகுதி உடையவர்கள். அதனால் அவன் புகழைப் பாடுங்கள் என்று வேண்டுகிறார். கண்ணனைப் புருஷோத்தமன், மதுசூதனன், பரந்தாமன், கிருஷ்ணமூர்த்தி என்று பல பெயராலும்

*Self-Instructional Material*

அழைக்கிறார். உலகம் முழுவதும் கண்ணன் புகழ் பரவ வேண்டும் என்பது கவிஞனின் பெரு விருப்பம்.

குறிப்பு

அடுத்து கண்ணனின் பல செயல்களையும் குறிப்பிடுகிறார். குருவாயூரில் தவழ்கிறான். மதுராவை ஆள்கின்றான், திருவேங்கடத்தில் ஏழுமலையனாக அருள்புரிகின்றான். திருவரங்கத்தில் பள்ளி கொண்ட பெருமாளாக விளங்குகின்றான். கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, வடநாடு என்று பல இடங்களிலும் புகழோடு நிறைந்து நிற்கும் கண்ணனைக் கவிஞர் இப்பாடலில் நினைந்து போற்றிப் புகழ்கிறார்.

அடுத்து பிறருக்கு உதவும் கண்ணனின் பெருந்தன்மையைக் கவிஞர் பாடுகிறார். துரியோதனன் அவையில் பாஞ்சாலி துகிலுரியப்படுகிறாள், தன்மானம் காக்கப் போராடுகிறாள். இறுதியில் கண்ணனை நினைக்கிறாள். கண்ணன் அபயக் கரம் காட்ட அவள் புகழ் காப்பாற்றப்படுகிறது.

கண்ணனின் சங்கநாதம் பாரதப் போரை முடித்து வைக்கிறது. அருச்சுனனுக்குத் தேரோட்டியாக அமைவதோடு பாண்டவர் வாழ்க்கை முழுவதற்கும் வழிகாட்டியாகவும் அமைகின்றான் கண்ணன். அவன் நெறிப்பட்டதனால் பாண்டவர்கள் பாரதப் போரிலும் வென்று ஆட்சி பெறுகிறார்கள். போர்க்களத்தில் பிறந்ததுதான் கீதோபதேஷம். அது கண்ணனுடைய அறிவுரை, அருளுரை. அது அருச்சுனனுக்கு மட்டுமன்று அகில உலகத்தினருக்கும் அருளியதாகும்.

புருஷோத்தமன் புகழ் பாடுங்களே! கிருஷ்ணமூர்த்தி புகழ் பாடுங்களே. ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன், படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான் என்று இரட்டித்து வருபவை. கவிஞர் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பாடுவனவாகும். பெரும்பாலும் இசைப் பாடல்களில் இவ்வாறு வரும்.

### 1.6.3 பாடல் - 2 - குருவாயூருக்கு வாருங்கள்

குருவா யூருக்கு வாருங்கள் - ஒரு

குழந்தை சிரிப்பதைப் பாருங்கள்

குறிப்பு

ஒருவாய் சோறுஊட்டும் தாய்முன்

உட்கார்ந் திருப்பதைக் காணுங்கள்... (குரு)

கண்ணனின் மேனி கடல்நீலம் - அவன்

கண்கள் இரண்டும் வான்நீலம்

கடலும் வானும் அவனே என்பதைக்

காட்டும் குருவாயூர்க் கோலம்.. (குரு)

சந்தியா காலத்தில் நீராடி ... அவன்

சந்நிதி வருவார் ஒருகோடி... (குரு)

நாராயண நாராயண ஹரிஹரி

நாராயண நாராயண

நாராயண நாராயண ஹரிஹரி

நாராயண நாராயண

சந்தியா காலத்தில் நீராடி – அவன்

சந்நிதி வருவார் ஒருகோடி

மந்திரக் குழந்தைக்கு வாகைசாட்டு

மாலைகள் இடுவார் குறைவோடி

நாராயண....நாராயண ...ஹரிஹரி..... (குரு)

உச்சிக் காலத்தில் சிருங்காரம் - அவன்

ஒவ்வொரு அழகுக்கும் அலங்காரம்

பச்சைக் குழந்தையைப் பார்க்கும்போதே

பாவையர் தாய்மை ரீங்காரம்

நாராயண... நாராயண

நாராயண ஹரிஹரி நாராயணா

நாராயண நாராயண

நாராயண ஹரிஹரி நாராயண

மாலை நேரத்தில் ஸ்ரீவேலி – அவன்

மாளிகை முழுவதும் நெய்வேலி

நெய்விளக் கேற்றி பொய்இருள் அகற்று

நித்தம் தருவாள் ஸ்ரீ தேவி

சாத்திரம் தந்த கண்ணனுக்கு

ராத்திரிப் பூஜை ஒருகோடி

பாத்திரம் கண்ணன் பால்போல் மக்கள்

பக்தியில் சிறந்த உயர்நீதி

நாராயண... நாராயண

நாராயண ஹரிஹரி நாராயணா

நாராயண நாராயண

நாராயண ஹரிஹரி நாராயண

குருவாயூருக்கு வாருங்கள் - ஒரு

குழந்தை சிரிப்பதைப் பாருங்கள்

ஒருவாய் சோறுஊட்டும் தாய்முன்

உட்கார்ந் திருப்பதைக் காணுங்கள் ... (குரு)

நாராயண... நாராயண

நாராயண ஹரிஹரி நாராயணா

நாராயண நாராயண

குறிப்பு

நாராயண ஹரிஹரி நாராயண

### 1.6.4 பாடல் விளக்கம்

கவிஞர் கண்ணதாசன் குருவாயூரப்பனைக் கண்ணனைக் குழந்தையாகக் கண்டு பாடுகிறார். அது சிரிப்பதைப் பாருங்கள். சோறு ஊட்டும் தாய்முன் உட்கார்ந்திருப்பதைப் பாருங்கள். இதைப் பார்ப்பதற்காகவே குருவாயூருக்கு வாருங்கள் என்கிறார்.

சூரியநிறக் கண்ணனைக் கவிஞர் எப்படி எல்லாம் பாராட்டுகிறார் பாருங்கள். அவன் மேனி கடல் நீலம் - அவன் கண்களோ வானத்து நீலம் - இந்தக் குருவாயூர்க் கோலம் கடலும் வானும் நானே என்று கண்ணன் மக்களுக்கு உணர்த்துவதாகப் பாடுகிறார். பஞ்ச பூதங்களையும் இறைவன் படைக்கிறான். எல்லாமாக நிறைந்து இருக்கிறான் என்பது ஆன்றோர் வாக்கு.

### 1.6.5 இறை வழிபாடும் பயனும்

பக்தர்கள் சந்தியா காலத்தில் நீராடி இறைவன் முன்னர் வருவர். வாகை மாலைகள் சாத்துவர். – அவ்வாறு வருபவர்கள் கோடானுகோடி 'பெறும் பயன்' குறைகள் எல்லாம் அவர்களை அவர்களை விட்டு ஓடும். கண்ணன் திருநாமத்தை 108 முறைகள், 1008 முறைகள் என ஓதுவர். இவ்வாறு வழிபடும் பழக்கம் இன்றும் நாட்டில் உள்ளது. இறைவன் பெயரை உச்சரிக்க உச்சரிக்க அதுவே மந்திரமாகி விடுகிறது. இறைவனை மந்திரக் குழந்தை என்கிறார். நாராயண என்றும் ஹரி என்றும் பலமுறை கூறிக் கவிஞர் உருகுகிறார்.

கண்ணனுக்குத் தான் எத்தனை விதமான அலங்காரங்கள், உச்சிக் காலத்தில் சிருங்கார நாயகனாகத் தோன்றுகின்றான். பச்சைக் குழந்தையைப் பார்க்கும்போது அதைப் பெற்றெடுத்த தாயை யல்லவா பாராட்டுகிறோம். அங்கு தாய்மை போற்றப் படுகிறது என்கிறார் கவிஞர்.

குறிப்பு

மாலை நேரத்தில் ஸ்ரீவேலி. அவன் மாளிகை முழுவதும் நெய் விளக்குகள். அதைக் கவிஞர் கோவிலைச் சுற்றி நெய்யாலேயே வேலியிட்டதாகக் கூறுகிறார். அது தான் கவிதை. நெய் விளக்கு ஏற்றியதற்குப் பயன் ஸ்ரீதேவி நித்தம் செல்வம் தருவாள் என்று உரைக்கிறார்.

இரவு நேரத்தில் அவனுக்குக் கோடிப் பூசை நிகழும். கண்ணனைப் பாத்திரமாகவும், மக்களைப் பாலாகவும் உருவகம் செய்கிறார் கவிஞர். பாலுக்குப் பாத்திரம் தேவை. அதுபோல மக்களுக்குக் கண்ணன் தேவை. இவ்வாறு உணர்வதுதான் நீதி. அதுமட்டுமல்ல அது பக்தியுமாகும்.

திரும்பவும் நாராயணனைப் பலமுறை கூறி வழிபடுகிறார். மக்களே குருவாயூருக்கு வாருங்கள் அவன் அடக்கத்தைப் பாருங்கள் அழகை பாருங்கள்.

## 1.7 நிறைவாக

கவிஞர் கண்ணதாசன் கண்ணன் மீது அளவு கடந்த ஈடுபாடு கொண்டவர். இவர் கண்ணன் மீது கொண்ட பற்றினால் தான் முத்தையா என்ற தன் பெயரைக் கண்ணதாசன் என்று மாற்றிக் கொண்டார். கண்ணனின் விளையாட்டுத்தனத்திலும், கண்ணனின் அழகிலும் பெரிதும் கவர்ந்த கண்ணதாசன் அவனைப் போற்றும் விதமாக பரவசப்பட்டுப் பாடிய பாடல்களை மாணவர்கள் கற்பதின் வாயிலாக கண்ணதாசனின் பக்திச் சிறப்பை உணரலாம்.

## 1.8 சோதித்தறியும் வினா விடைகள்

1. கண்ணதாசன் பற்றிக் குறிப்பு வரைக

கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. இவர் சூன் 24, 1927ல் சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு அருகில் உள்ள சிறுகூடல்பட்டி என்னும் கிராமத்தில் சாத்தப்பன் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோருக்கு 8ஆவது மகனாகத் தோன்றினார்.

குறிப்பு

கண்ணதாசனுக்கு முதல் திருமணம் பொன்னழகி என்னும் பொன்னம்மாள் என்பவரோடு 1950 பிப்ரவரி 9ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்றது. இவர்களுக்கு கண்மணிசுப்பு, கலைவாணன், ராமசாமி, வெங்கடாசலம் ஆகிய 4 மகன்களும், அலமேலு சொக்கலிங்கம், தேனம்மை, விசாலாட்சி ஆகிய 3 மகள்களும் உள்ளனர். கண்ணதாசன், பார்வதி என்பவரை 1951 நவம்பர் 11ஆம் நாள் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு காந்தி, கமல், அண்ணாதுரை, கோபால கிருஷ்ணன், சீனிவாசன் ஆகிய 5 மகன்களும், ரேவதி, கலைச்செல்வி ஆகிய 2 மகள்களுமாக ஏழு குழந்தைகள் உள்ளனர். ஐம்பதாவது வயதில் புலவர் வள்ளியம்மை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.இவர்களுக்கு விசாலி என்னும் மகள் ஒருவர் உள்ளார்.

உடல்நிலை காரணமாக 1981, ஜூலை 24இல் சிகாகோ நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அக்டோபர் 17, சனிக்கிழமை இந்திய நேரம் 10.45மணிக்கு இறந்தார். அக்டோபர் 20இல் அமெரிக்காவிலிருந்து அவரது சடலம் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, இலட்சக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலிக்குப் பிறகு அரசு மரியாதையுடன் அக்டோபர் 22இல் எரியூட்டப்பட்டது.

2. கவிஞர் கண்ணதாசனின் தன் வரலாற்று நூல்கள் யாவை?

- எனது வசந்த காலங்கள்
- வனவாசம் (பிறப்பு முதல் தி.மு.கவிலிருந்து பிரியும் வரை)
- எனது சுயசரிதம் (வனவாசத்தின் விடுபட்ட பகுதிகள்)
- மனவாசம் (காங்கிரசு கட்சியில் இருந்த காலத்தின் வாழ்க்கை)

3. கண்ணதாசன் ஸ்ரீகிருஷ்ணகானத்தில் கண்ணனின் பெயர்களாகக் குறிப்பிடுவன யாவை?

கண்ணனைப் புருஷோத்தமன், மதுசூதனன், பரந்தாமன், கிருஷ்ணமூர்த்தி என்று பல பெயரால் ஸ்ரீகிருஷ்ணகானத்தில் அழைக்கிறார்.

## 1.9 பயிற்சி வினா

குறிப்பு

1. கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து கண்ணதாசன் பாடும் பாடல்களைத் தொகுத்துரைக்க

## 1.10 மேலும் படித்தறிக

1. கண்ணதாசன் கவிதைகள், காவியக் கழகம், சென்னை – 2, 1959

2. கண்ணதாசன் திரையிசைப் பாடல்கள், வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை – 17, முதற்பதிப்பு 1968

## பிரிவு -1 (தொடர்ச்சி)

## கூறு: 2 கோகுலத்து பசுக்கள்
## கோகுலத்தில் ஒரு நாள் ராதை
## ஆயர்பாடி மாளிகையில்

**2 - பாடஅமைப்பு:**

**2.1. அறிமுகம்-**

**2.2. நோக்கம்**

**2.3. கண்ணதாசன் மணிமண்டபம்**

**2.4 கண்ணதாசன் நடத்திய இதழ்கள்**

**2.5 கண்ணதாசனின் புனைப்பெயர்கள்**

**2.6 பாடல் 1**

**2.6.1 பாடல் விளக்கம்**

**2.7. பாடல் 2**

**2.7.1. பாடல் விளக்கம்**

**2.7.2. ராதையின் பேச்சு**

**2.8 பாடல் 3**

**2.8.1 பாடல் விளக்கம்**

**2.8.1.1 கண்ணன் துயிலும் காசினியின் உறக்கமும்**

**2.9 நிறைவாக**

**2.10 சோதித்தறியும் வினா விடைகள்**

**2.11 பயிற்சி வினா**

**2.12 பொருளறிக**

**2.13 மேலும் படித்தறிக**

## 2.1. அறிமுகம்

கவிஞர் கண்ணதாசன் பன்முகப் புலமை பெற்றவர். அவரை பார் முழுதும் அறியும். அவர் தன் கவிதைகளின் மூலமும், திரையிசைப் பாடல்களின் மூலமும் உலக மக்கள் அனைவரையும் கவர்ந்தவர். அவர் திரைத்துறைக்கு அளித்த பங்களிப்புகள் அளப்பரியன. அவர் கவிஞராகவும், பாடலாசிரியராகவும், அரசியல்வாதியாகவும், திரைப்படத் தயாரிப்பாளராகவும் இலக்கிய ஆசிரியராகவும் பரிணமித்தவர்.

## 2.2 நோக்கம்

கண்ணனின் மழலைப் பருவத்தை மிகவும் ரசித்த கண்ணதான், கண்ணனின் குழந்தைப் பருவம் முதல் அவதாரம் எடுத்தது வரை கண்ணன் செய்த பல செய்கைகளைத் தன் கவிதை மொழிகளால் புனைந்தவர். கண்ணனைப் பற்றி இவர் எழுதிய பாடல்களின் மூலமாக அவரின் கவிச்சிறப்பை உணர்வது நோக்கமாகும்.

## 2.3 கண்ணதாசன் மணிமண்டபம்

குறிப்பு

தமிழ்நாடு அரசு கண்ணதாசன் நினைவைப் போற்றும் வகையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கவியரசு கண்ணதாசனுக்கு மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 2400 நூல்களுடன் ஒரு நூலகமும் இயங்கி வருகின்றது. இங்கு கவியரசு கண்ணதாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள், சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் ரூ.54.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கண்ணதாசன் அவர்களின் மணிமண்டபத்தினை 21.10.1992 அன்று திறந்து வைத்தார்.

## 2.4 கண்ணதாசன் நடத்திய இதழ்

கண்ணதாசனை ஆசிரியராகக் கொண்டு 1954 முதல் 1962 வரை எட்டு ஆண்டுகள் கிழமை இதழாகத் ‘தென்றல்’ வெளிவந்தது. கவிஞர் கண்ணதாசன், புரட்சிக்கவி பாரதிதாசன், தாம்பரம் எத்திராசன் ஆகியோர் தென்றல் இதழ் அலுவலகம் அடிக்கடி வந்து இதழ்கள் சீரிய முறையில் தொடர்ந்து வெளிவர முக்கிய காரணகர்த்தாக்களாகத் திகழ்ந்தார்கள். 14.05.1955 அன்று அவர்கள் மூவரும் வந்து அப்பணியினைச் செய்ததற்கான புகைப்படத்தைத் தென்றல் இதழ் வெளியிட்டுள்ளது.

இது தி.மு.கவின் சாரபில் வெளிவந்த போதும் இவ்விதழில் சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், கல்வியாளர்கள் போன்றோரின் எழுத்துக்கள் இடம்பெற்றன. செய்திகளைச் சுவையோடும் பரபரப்போடும் வெளியிட்ட இவ்விதழ் தொடக்கத்திலேயே சுமார் 20000 பிரதிகள் வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கதாகும். பல இளம் எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் வாய்ப்பளித்தது. தென்றல் நடத்திய வெண்பாப் போட்டியில் கவிதை எழுதியவர்கள் பிற்காலத்தில் பெரும் கவிஞர்களாக விளங்கினர். இவ்விதழின் துணையாசிரியராக விளங்கிய தமிழ்ப்பித்தன், ஏ.கே.வில்வம், எஸ்.எஸ் தென்னரசு, ப.புகழேந்தி, நாரா.நாச்சியப்பன், அருப்புக்கோட்டை இராமசாமி, மா.பாண்டியன் ஆகியோர் பின்னாளில் புகழ்பெற்றனர். இவ்விதழில் ந.மு வேங்கடசாமி நாட்டார், மயிலை சீனி.வேங்கடசாமி, சதாசிவ

பண்டாரத்தார், கா.அப்பாதுரை, மு.வரதராசன், இராசமாணிக்கனார், சிதம்பரநாதன் செட்டியார் போன்றோரின் கட்டுரைகள் வெளியாயின.

குறிப்பு

## 2.5 கண்ணதாசனின் புனை பெயர்கள்

காரை முத்துப் புலவர், வணங்காமுடி, கமகப்பிரியா, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி

## 2.6 பாடல் 3 - கோகுலத்துப் பசுக்கள்

இங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாடலில் கண்ணனுடைய குழலோசையின் மகிமையை உணர்த்துகிறார். கோபாலன் குழல் கேட்டுக் கோகுலத்துப் பசுக்கள் எல்லாம் 4 படி பால் கறக்குது. உறியிலோ 3 படி நெய் இருக்குது என்று பெருமிதம் பொங்கக் கூறுகிறார்.

கோகுலத்துப் பசுக்கள் எல்லாம்

கோபாலன் குழலைக் கேட்டு

நாலுபடி பால் கறக்குது ராமாரி – அந்த

மோகனின் பேரைச் சொல்லி

மூடிவைத்த பாத்திரத்தில்

மூன்றுபடி நெய்யிருக்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி

கண்ணனவன் நடனமிட்டுக்

காளிந்தியை வென்றபின்தான்

தண்ணிப் பாம்பில் நஞ்சுஇல்லை ராமாரி – அவன்

கனிஇதழில் பால்குடித்து

பூதகியைக் கொன்ற பின்தான்

கன்னியர்க்கோர் வஞ்சமில்லை கிருஷ்ணாரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி

குளத்தில் முங்கிக் குளிக்கையிலே

கோவிந்தன் பேரைச் சொன்னால்

கழுத்தில் உள்ள தாலிமின்னுது ராமாரி – சேலை

திருத்தும் போது அவன் பெயரை

ஸ்ரீரங்கா என்று சொன்னால்

அழுத்தமான சுகமிருக்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி

படிப்படியாய் மலையில் ஏறி

பக்தி செய்தால் துன்பம் எல்லாம்

பொடிப்பொடியாய் நொறுங்குதடி ராமாரி – அடி

படிப்பில்லாத ஆட்கள் கூட

பாதத்திலே போய் விழுந்தால்

வேதத்துக்கே பொருள் விளங்குது கிருஷ்ணாரி

வேதத்துக்கே பொருள் விளங்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி

குறிப்பு

## 2.6.1 பாடல் விளக்கம்

குறிப்பு

யமுனை நதி தீரத்தில் கண்ணன் காளிந்தி என்ற பாம்பினை வென்றான். அதன் பிறகு தான் தண்ணிப் பாம்புக்கு விஷமில்லை என்று கவிஞர் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார். மேலும் கம்சனால் ஏவப்பட்டுக் கண்ணனைக் கொல்ல பூதகி என்ற கொடிய அரக்கி வருகிறாள். அவளுடைய விஷம் நிறைந்த பாலைக் குடித்துக் குடித்தே அவளைக் கண்ணன் கொன்று விடுகிறான். அது முதல் தான் பெண்களுடைய பாலிலும் விஷத்தன்மை நீங்கிப் பால் அமுதமாயிற்று என்றும் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார்.

ராமாஹரி, கிருஷ்ணாஹரி என்பவனை விரைவாகக் கூறும்போது ராமாரி, கிருஷ்ணாரி என்ற ஒலிக்கப் பெறுவது இயல்பு. ராமாரி, கிருஷ்ணாரி, ஹரி, ஹரே என்றெல்லாம் கண்ணனை அழைக்கிறார்.

இறைவனை எப்பொழுதும் வணங்கலாம். குளத்தில் குளிக்கையிலே கோவிந்தா என்றால் கழுத்தில் உள்ள தாலி மின்னுது என்கிறார் கவிஞர். இதன் பொருள் - தாலிப் பாக்கியம் நிலைக்கிறது நீடிக்கிறது என்பதாகும். சேலை திருத்தும்போது ஸ்ரீரங்கா என்றால் அதிலேயும் ஒரு சுகம் இருக்கிறது. நாம் என்ன செயல்களைச் செய்தாலும் இறைவன் சிந்தனையோடு செய்வது நலம் பயக்கும் என்கிறார் கவிஞர்.

மேலும் படிப்படியாய் மலையில் ஏறிப் பக்தி செய்தால் துன்பம் பொடிப்பொடியாய் ஆகி நீங்கும் என்று உறுதி கூறுகிறார். அது மட்டுமல்ல படியாதவர்கள் கூடப் பக்தியோடு இறைவன் திருப்பாதத்தைச் சரண் அடைந்தால் அவர்கள் ஞானவான் ஆகலாம். வேதக் கருத்துக்களே கூட அவர்களுக்குப் புரியும் என்கிறார். பக்தியின் மேம்பாட்டைக் கண்ணதாசன் இவ்வாறு வலியுறுத்துகிறார்.

## 2.7 பாடல் 2- கோகுலத்தில் ஒருநாள் ராதை

ஊடல் என்பது மருதநிலத்து ஒழுக்கமாகும். ‘ஊடுதல் காமத்திற்கு இன்பம்’ என்பார் வள்ளுவர். ராதையின் ஊடலையும் கண்ணன் ஊடல் தணித்ததையும் இந்தப் பாடலில் கண்ணதாசன் பாடுகிறார்.

கோகுலத்தில் ஒருநாள் ராதை

கோபத்தில் ஆழ்ந்திருந்தாள்

ஏனடி ராதா என்று என்னடி சேதி என்று

ஸ்ரீநந்த பாலன் வந்தான் தானொரு

ஆனந்த ராகம் தந்தான்

கோகுலத்தில் ஒருநாள் ராதை

கோபத்தில் ஆழ்ந்திருந்தாள்

கோபியர் தம்மைத்தொட்டு

கொஞ்சிய கைகள் எந்தன்

கூந்தலைத் தொடவேண்டாம் நான்

கோடியில் ஒன்று அல்ல

கோவிலின் பெண்மை என்னை

கொஞ்சிட வரவேண்டாம் - இனி என்

கோலமும் கெடவேண்டாம் … (கோகு)

ராதையின் ஊடலுக்கும்

கீதை படித்த கண்ணன்

கோதையை வசியம் செய்தான்

கோதையை வசியம் செய்தான் - அங்கு

சோலை யமுனை வெள்ளம் துள்ளி எழுந்து அவள்

மேனியைத் தொடவும் செய்தான் - கண்ணன்

மீண்டொரு கலகம் செய்தான் …..(கோகு)

### 2.7.1 பாடல் விளக்கம்

ராதை ஒருநாள் கோகுலத்தில் கோபமாக இருக்கிறாள். அதைப் பார்த்த கண்ணன், ஏனடி ராதா இன்று என்னடி சேதி ஒரு மாதிரியாய் இருக்கிறாயே என்று கேட்டுவிட்டு அவள் கோபத்தைக் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாமல் ஒரு ஆனந்த ராகம் தருகிறான்.

### 2.7.2 ராதையின் பேச்சு

கோபியரைக் கொஞ்சிய கைகளால் கண்ணன் தன் கூந்தலைத் தொடவேண்டாம் என்கிறாள். தன்னுடைய கோலம் கெடவும் வேண்டாம் என்கிறார். மேலும் என்னை யாரென்று இந்தக் கண்ணன் நினைத்தான். நான் கோடிப் பெண்கள் போல ஒருத்தி இல்லை. நான் கோடிக்கு ஒருத்தி. என் பெண்மை கோவிலில் இருக்க வேண்டிய பெண்மையாகும் என்று ராதை தன் பெருமிதம் தோன்றப் பேசுகிறாள்.

உலகத்திற்கே கீதை தந்த கண்ணன் இவள் உள்ளத்தை அறிய மாட்டானா கோதையைத் தன் வழிக்குக் கொண்டு வருகிறான். அவளை வசியம் செய்கிறான். அவனுடைய முயற்சியைக் கவிஞர் அடுக்கிச் சொல்கிறார். அந்த வசியத்தில் யமுனை வெள்ளம் துள்ளி எழுகிறது பாய்ந்து பரவுகிறது.

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்

கூடி முயங்கப் பெறின்

என்பார் வள்ளுவர். இப்பாடலில் கவிஞர் மக்களுடைய ஊடல் ஒழுக்கத்தைச் சிறப்பிக்கின்றார்.

## 2.8 பாடல் 3 - ஆயர்பாடி மாளிகையில்

அழுகின்ற குழந்தைகளுக்கு நிலவினைக் காட்டிச் சோறு ஊட்டலும், சோறு ஊட்டியபின் தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டித் தூங்க வைத்தலும் தாய்மார்கள் மேற்கொள்கின்ற இன்பக் கடமைகளாகும். இப்பாடலில் கவிஞர் தாலாட்டுகின்றார். கண்ணனைத் தூக்கத்தைப் பாடுகிறார்.

குறிப்பு

ஆயர்பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ – அவன்
வாய்நிறைய மண்ணைஉண்டு மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ …..(ஆயர்)
பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ – அந்த
மந்திரத்தில் அவனுறங்க – அந்த
மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ ..(ஆயர்)
நாகப்படம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக் கொண்டான் தாலேலோ – அவன்
மோகநிலை கூட ஒருயோகநிலை போலிருக்கும்
யாரவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யாரவனைத் தூங்க விட்டார் ஆராரோ …(ஆயர்)
கண்ணனவன் தூங்கிவிட்டால் காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயல்எழுப்ப வாரீரோ – அவன்
பொன்னழகைப் பார்ப்பதற்கும் போதைமுத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாழீரோ … (ஆயர்)

## 2.8.1 பாடல் விளக்கம்

### 2.8.1.1 கண்ணன் துயிலும் காசினியின் உறக்கமும்

குறிப்பு

ஆயர்பாடி மாளிகையில் கண்ணன் உறங்குகின்றான். தாய் மடியில் கன்றினைப் போல் என்று அவன் தூக்கத்திற்கு உவமை கூறுகிறார் கவிஞர். அன்னையிடம் துயில்கின்ற குழந்தை உலகை மறந்து அச்சமின்றித் துன்பமின்றி ஆதரவோடும் அணைப்போடும் தூங்குகிறது. அவ்வாறு தூங்குகிறான் கண்ணன்.

வாய்நிறைய மண்ணை உண்டு அன்னை யசோதைக்கு வாயைத் திறந்து உலகையே காட்டுகிறான் கண்ணன். அதனால் அவனைக் கவிஞர் மாயக் கண்ணன் என்கிறார். ஒரு பெருஞ்செயல் செய்தபின் ஓய்வு எடுத்தல் உலக இயல்பு. அதுபோலக் கண்ணனும் ஓய்வெடுத்துத் தூங்குகின்றான்.

கோபியரின் கன்னத்தில் கன்னம் வைத்து மன்னன் போல் லீலை செய்தவனே தூங்கு. அந்த லீலை காரணமாக மாதர்கள் தூங்குகின்றனர். அவர்கள் மட்டுமா அவனும் தூங்குகிறான்.அவன் மட்டுமா அகில உலகமே தூங்குகிறது.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே

அடங்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே என்று

என்று திருநாவுக்கரசர் பாடுவார். அதுபோல இறைவனின் ஒடுக்கம் சகல உயிர்களின் ஒடுக்கமாகிறது. அதை இங்கு கண்ணதாசன் கண்ணன் உறங்க உலகம் உறங்குவதாகக் காட்டுகிறார்.

மக்கள் தரையிலே நடனம் ஆடுவார்கள். இவன் மாயக் கண்ணன். ஆதலால் நாகப்படம் மீதில் ஆடுகின்றான். ஆடவேண்டும் என்ற அவனுடைய தாகம் தீர்கிறது. அவன் எந்த நிலையில் இருக்கிறான் அவன் மோகநிலை கூட ஒரு யோகநிலை போலிருக்கும் என்று கவிஞர் வியக்கிறார்.

அவன் தூங்கினால் உலகம் தூங்கிவிடும். உலகம் தூங்கக் கூடாது அவனை எழுப்புங்கள் என்று அடுத்த பாடலில் கோரிக்கை

குறிப்பு

விடுக்கிறார். அன்னையர் குழந்தையின் தூக்கத்தைக் கெடுத்து எழுப்புவார்களா எழுப்பமாட்டார்கள். அதற்குக் காரணம் சொல்லுகிறார் கவிஞர் அவன் பொன்னழகைப் பார்ப்பதற்கும் போதை முத்தம் பெறுவதற்கும் அன்னையரே வாரீர் அவனை எழுப்புங்கள் என்கிறார்.

அன்னையர் வருவாரோ மாட்டாரோ

கன்னியரே கோபியரே வாரீர் என அடுத்து அழைக்கிறார். கண்ணன் துயிலெழுப்ப வருகின்றவர்களை வாழீர் என வாழ்த்துகிறார்.

இவ்வாறு கவிஞர் இந்தப் பாடலில் தாலாட்டும் பாடித் தூங்க வைத்துப் பின்னர் துயில் எழுப்பவும் பாடுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ண கானம் மொத்தத்தில் கண்ணன் பெருமையையும், அவன் குழலின் நாதப் பெருமையையும் இசைக்கிறது.

## 2.9 நிறைவாக

கண்ணனின் குழலோசையின் மகிமையையும், கண்ணன் ராதையின் மேல் ஊடல் கொண்டதும், பின்னர் ஊடல் தணிந்ததும், ஆயர்பாடியில் கண்ணனை யசோதா தூங்க வைத்ததும் இப்பகுதியில் இடம்பெறுகிறது.

## 2.10. சோதித்தறியும் வினா விடைகள்

1. கண்ணன் பூதகி என்ற அரக்கியைக் கொன்றது எங்ஙனம்?

கம்சனால் ஏவப்பட்டுக் கண்ணனைக் கொல்ல பூதகி என்ற கொடிய அரக்கி வருகிறாள். அவளுடைய விஷம் நிறைந்த பாலைக் குடித்துக் குடித்தே அவளைக் கண்ணன் கொன்று விடுகிறான்.

2. யார் ஞானவான் ஆகலாம் என்று கவிஞர் கூறுகிறார்?

பக்தியோடு இறைவன் திருப்பாதத்தைச் சரண் அடைந்தால் அவர்கள் ஞானவான் ஆகலாம். வேதக் கருத்துக்களே கூட அவர்களுக்குப் புரியும் என்கிறார்.

3. ராதையின் பெருமிதப் பேச்சுக்களை எழுதுக.

கோபியரைக் கொஞ்சிய கைகளால் கண்ணன் தன் கூந்தலைத் தொடவேண்டாம் என்கிறாள். தன்னுடைய கோலம் கெடவும் வேண்டாம் என்கிறார். மேலும் என்னை யாரென்று இந்தக் கண்ணன் நினைத்தான். நான் கோடிப் பெண்கள் போல ஒருத்தி இல்லை. நான் கோடிக்கு ஒருத்தி. என் பெண்மை கோவிலில் இருக்க வேண்டிய பெண்மையாகும் என்று ராதை தன் பெருமிதம் தோன்றப் பேசுகிறாள்.

4. ஊடல் கொண்ட ராதையின் மனதை எவ்வாறு தணிக்கின்றான்?

உலகத்திற்கே கீதை நத்த கண்ணன் உள்ளத்தை அறிந்து கோதையைத் தன் வழிக்குக் கொண்டு வருகிறான். அவளை வசியம் செய்கிறான். அவனுடைய முயற்சியைக் கவிஞர் அடுக்கிச் சொல்கிறார். அந்த வசியத்தில் யமுனை வெள்ளம் துள்ளி எழுகிறது பாய்ந்து பரவுகிறது.

5. கண்ணனை மாயக்கண்ணன் என்று போற்றக் காரணம் என்ன?

வாய்நிறைய மண்ணை உண்டு அன்னை யசோதைக்கு வாயைத் திறந்து உலகையே காட்டுகிறான் கண்ணன். அதனால் அவனைக் கவிஞர் மாயக் கண்ணன் என்கிறார்.

2.11 பயிற்சி வினா

1. கண்ணனின் குழலோசையின் மகிமையைக் கவிஞர் கண்ணதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

## 2.12 பொருளறிக

வசியம் - மனதை தன் பால் ஈர்க்கும் நிலை, லீலை – விளையாட்டு, காசினி – உலகம்

## 2.13 மேலும் படித்தறிக

1. ரௌத்திரன், கண்ணதாசனின் துதி, கண்ணதாசன் பதிப்பகம், கண்ணதாசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை – 17

2. கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள், கண்ணதாசன் பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை - 17

குறிப்பு

பிரிவு -1(தொடர்ச்சி)

## கூறு : 3 - பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

## நெஞ்சில் குடியிருக்கும்
## செய்யும் தொழிலே தெய்வம்

3. பாடஅமைப்பு

3.1 அறிமுகம் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

3.2 நோக்கம்

3.3 பட்டுக்கோட்டையார் மணிமண்டபம்

3.4 கவிபாடும் திறன்

3.4.1 முதல் கவிதை

3.4.2 அரசியல் ஈடுபாடும் பகுத்தறிவுக் கொள்கையும்

3.4.3 பொதுவுடைமைச் சிந்தனை

3.4.4 திரைத்துறை ஆர்வம்

3.4.5 தன்மானம் மிக்க பட்டுக்கோட்டையார்

3.4.6 மனித நேயம் மிக்க பட்டுக்கோட்டையார்

3.4.7 எளிமையான பட்டுக்கோட்டையார்

3.4.8 வேடிக்கையும் விவேகமும் மிக்க கவிஞர்

3.4.9 தொழிலும் பாட்டும்

குறிப்பு

3.5 பன்பரிமாணங்கள்

3.6 எழுதிய திரைப்படப் பாடல்கள்

3.6.1 இயற்கை

3.6.2 சிறுவர்

3.6.3 காதல், மகிழ்ச்சி, சோகம்

3.6.4 காதல்

3.7 பட்டுக்கோட்டையார் பற்றிய ஆவணப்படம்

3.7.1 பட்டுக்கோட்டையாரின் துணைவியின் பதிவு

3.8 பாடல் 1 நெஞ்சில் குடியிருக்கும்

3.8.1 பாடல் விளக்கம் - காதற்பாட்டு

3.9 பாடல் 2 செய்யும் தொழிலே தெய்வம்

3.9.1 பாடல் விளக்கம்

3.10 நிறைவாக

3.11 சோதித்தறியும் வினா விடைகள்

3.12 பயிற்சி வினா

3.13 பொருளறிக

3.14 மேலும் படித்தறிக

## 3.1 அறிமுகம் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் ஊரில் அருணாச்சலக் கவிராயர் மற்றும் விசாலாட்சி ஆகியோருக்கு இளைய மகனாக 13.04.1930ல் பிறந்தார். இவர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையும் கவிபாடும் திறன் பெற்றவர். இவருக்கு கணபதி சுந்தரம் என்கிற சகோதரரும் வேதாம்பாள் என்கிற சகோதரியும்

உள்ளனர். இவர் அண்ணன் கணபதி சுந்தரத்தோடு உள்ளூர் சுந்தரம் பிள்ளை திண்ணைப் பள்ளியில் அரிச்சுவடி படித்திருக்கிறார். கல்வி பயிலும் ஆர்வம் அவருக்கில்லை. ஆனால் அடிப்படைக் கல்வியை அண்ணனிடம் கற்றுக் கொண்டார். தம் வாழ்க்கையின் வழிகாட்டியாகப், பட்டுக்கோட்டையார் அண்ணனையே தனது குருவாக ஏற்றுக் கொண்டார். பள்ளிப்படிப்பு மட்டுமே கொள்ள முடிந்த கல்யாணசுந்தரம் திராவிட இயக்கத்திலும், கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய துணைவியார் பெயர் கௌரவாம்பாள். 1959ஆம் ஆண்டு இவர்களுடைய குழந்தை குமரவேல் பிறந்தது. அதே ஆண்டில் (08.10.1959) இவர் அகால மரணம் அடைந்தார்.

இவர் இறக்கும்போது ஐந்து மாதத்தில் குழந்தை இருந்தது. இவரது மறைவுக்கு கலைஞர் மு.கருணாநிதி தனது அஞ்சலியில் ‘கண்களை மூடுகிறேன்’ கல்யாணம் தெரிகிறார் - ஒளி தெரிகிறது, கண்களைத் திறக்கின்றேன், கல்யாணம் இல்லை – கலையுலகு இருட்டாயிருக்கிறது எனத் தெரிவித்தார்

## 3.2 நோக்கம்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாரதிதாசனின் கவிதைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். பொதுவுடைமையை விரும்பியவர். ஏழைகளின் வாழ்க்கையைக் கவிதையாக்கியவர். இளமையிலிருந்தே சுயமரியாதையோடு வாழ்ந்தவர். மக்களின் நிலை உயர எழுதியதாலும், அவர்கள் படும்பாட்டையும் பண்பாட்டையும் அவர்கள் புரிந்து கொள்ளும் முறையில் எழுதியதாலும் மக்கள் கவிஞர் என அழைக்கப்பட்டவர். பொது மக்கள் புரிந்து கொள்ளும் படியாக எளிய பாடல்களைப் பாடி திரைப்படத் துறையில் சாதனை படைத்தவர். இவரைப் பற்றி மாணவர்கள் மேலும் அறிந்து கொள்வது இக்கூற்றின் நோக்கமாகும்.

## 3.3 பட்டுக்கோட்டையார் மணிமண்டபம்

தமிழ்நாடு அரசு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவைப் போற்றும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் அமைத்துள்ளது. இந்த மணிமண்டபத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின்

மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. அவரது வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு

## 3.4 கவி பாடும் திறன்

தந்தை அருணாசலம் கவிஞராக இருந்ததால் அவர் மகன்களான கணபதி சுந்தரமும், கல்யாண சுந்தரமும் கவிபாடும் திறத்தைப் பெற்று இருந்தனர். பட்டுக்கோட்டையார் சிறுவயதிலேயே கவிதை பாடுவதில் ஆர்வம் காட்டினார்.

பத்தொன்பதாவது வயதிலேயே கவி புனைவதில் அதிக ஆர்வம் காட்டியவர். இவருடைய பாடல்கள் கிராமியப் பண்ணைத் தழுவியவை. பாடல்களில் உருவங்களைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் காட்டியவர். இருக்கும் குறைகளையும் வளரவேண்டிய நிறைகளையும் சுட்டிக்காட்டியவர். திரையுலகில் பாட்டாளி மக்களின் ஆசைகளையும், ஆவேசத்தையும், அந்தரங்க சக்தியுடன் பாடல்களாக இசைத்தார். இவர் இயற்றி வந்த கருத்துச் செறிவும் கற்பனை உரமும் படைத்த பாடல்களை ஜனசக்தி பத்திரிக்கை வெளியிட்டு வந்தது. 1954ஆம் ஆண்டு படித்த பெண் திரைப்படத்திற்காக முதல் பாடலை இயற்றி அந்தத் துறையில் அழுத்தமான முத்திரை பதித்தார்.

### 3.4.1 முதல் கவிதை

பட்டுக்கோட்டையார் பாடுவதிலும் வல்லவர். நாடகம், திரைப்படம் பார்ப்பதிலும் ஆர்வம் மிகுந்தவர். கற்பனை வளமும் இயற்கை ரசனையும் நிறைந்தவர். இதுவே இவரை இயல்பாகவே கவிதை புனைய வைத்தது. 1946ஆம் ஆண்டு தனது 15ஆம் வயதில் ஏற்பட்ட அனுபவத்தை அவரே கூறுகிறார்.

அவர் வாழ்ந்த ஊர் நிலவளம் நிறைந்தது. ஏரிக்கரையில் ஒருநாள் வயலைப் பார்க்கச் சென்ற பட்டுக்கோட்டையார் வீடு திரும்பும் போது, வேப்பமர நிழலில் அமர்ந்து ஏரியைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏரியில் நீர் நெளிவதை சூரிய ஒளி வீச்சில் நீர் சிரிக்கிறது எனக் கண்டு மகிழ்ந்தார். தாமரை மலர்கள் இலை மீது நீர்த்துளியைத் தெளித்துக் தலைகீழாய்க் குதித்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்,

குறிப்பு

ஓடிப்போ ஓடிப்போ
கெண்டைக் குஞ்சே – கரை
ஓரத்தில் மேயாதே
கெண்டைக் குஞ்சே
தூண்டிக்காரன் வரும்நேரமாச்சு – ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே

(கே.சீவபாரதி (தொ.ஆ), பட்டுக்கோட்டையார் பாடல்கள், ப.63)

என்று பாடினார். இந்தப் பாட்டை எல்லோரிடமும் பாடிக் காட்டினார். அனைவரும் ரசித்தனர். இவ்வாறு பட்டுக்கோட்டையார் இளமையிலிருந்தே பாடல் எழுதி வளர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதைவிட, அந்த இளமைப் பருவத்திலேயே வர்க்க எண்ணம் - துன்புறுவோர் - துன்புறுத்துவோர் பற்றிய எண்ணம் - துன்புறுவோர் சார்பாக அவர்களுக்குத் துணையாக நிற்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றி விட்டது என்பதை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. பிற்கால வளர்ச்சியில் தூண்டிலில் பிடிக்கப்படும் மக்களுக்கான படைப்பாளியாகவே அவர் ஆகிவிட்டார் என்பதைக் காணலாம்.

### 3.4.2 அரசியல் ஈடுபாடும் பகுத்தறிவுக் கொள்கையும்

பெரியார் ஈ.வே.ரா 1925இல் காங்கிரசை விட்டு வெளியேறிச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். நீதிக் கட்சியோடு இணைந்து சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பிற்பட்ட சாதியினர் கோயிலுக்குள் நுழையும் உரிமை, பெண் முன்னேற்றம் முதலியன குறித்துத் தீவிரமாகப் பேசினார். இதனால் நாட்டில் ஒரு புது எழுச்சி ஏற்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் கவிஞர் கல்யாணசுந்தரம் அரசியல் போக்கையும், நாட்டின் நிலையையும் உணர்ந்து பாடல்கள் படைத்தார்.

பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள், கல்யாணசுந்தரத்தின் பாடல்களில் பளிச்சிட்டன. “தான் பிறந்த சமூகத்தில் இருந்து வரும்

**குறிப்பு**

மூடநம்பிக்கைகளையும், ஆசார அனுட்டானங்களையும் கிண்டல் செய்து பல பாடல்களைத் தன் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பாடிக் காட்டிக் கிண்டல் செய்யும் பழக்கம் உடையவர் கவிஞர்" என்று திரு ஆ.பழனிவேல் கூறுகிறார்.

### 3.4.3 பொதுவுடைமைச் சிந்தனை

இளம் பிராயத்திலேயே விவசாய சங்கத்திலும், பொதுவுடைமைக் கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி)யிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். தான் பின்பற்றி வந்த கட்சியின் இலட்சியத்தை உயரத்தில் பறக்கும் வகையில் கலை வளர்ப்பதில் சலியாது ஈடுபட்டார்.

### 3.4.4 திரைத்துறை ஆர்வம்

நாடகக் கலையில் ஆர்வமும், விவசாய இயக்கத்தின் பால் அசைக்க முடியாத பற்றும் கொண்டிருந்தார். தஞ்சையைச் சேர்ந்த வீரத் தியாகிகள் சிவராமன், இரணியன் ஆகியோருடன் சேர்ந்து விவசாய இயக்கத்தைக் கட்டி வளர்க்க தீவிரமாகப் பங்கெடுத்தார்.

தமது 29ஆம் ஆண்டு வாழ்வில் விவசாயி, மாடு மேய்ப்பவர், உப்பளத் தொழிலாளர், நாடக நடிகர் என 17 வகைத் தொழில்களில் ஈடுபட்டவர். இவருக்கு இருந்த நடிப்பாசையின் காரணமாக 'சக்தி நாடக சபா'வில் இணைந்தார். இந்த சக்தி நாடக சபாவில்தான் பின்னாளில் திரையில் பிரபலமான சிவாஜி கணேசன், எம்.என்.நம்பியார், எஸ்.வி.சுப்பையா, ஓ.ஏ.கே.தேவர் ஆகியோர் நடிகர்களாக இருந்தனர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஓ.ஏ.கே தேவரின் நெருங்கிய நண்பரானார். சக்தி நாடக சபாவின் நாடகங்கள் ஒவ்வொன்றாய்த் திரைப்படமாகியும், அதன் நடிகர்கள் சினிமாவில் நுழைய ஆரம்பித்தனர். ஆனால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமோ நடிப்பை விட்டுவிட்டுப் பாடல் எழுதும் கலையைக் கற்றுக்கொள்ள புதுச்சேரி சென்று 'புரட்சிக்கவி' பாரதிதாசனிடம் உதவியாளராகச் சேர்ந்து விட்டு இறுதியில் கவிஞராக உருவானார்.

குறிப்பு

பாரதிதாசன் பாடல்களின் தாக்கத்தால் பொதுவுடைமைச் சிந்தனைகளும், சமூகக் கொடுமைகளின் மீதான சாடலும் பட்டுக்கோட்டையாரின் கவிதைகளில் மேலோங்கித் தெரிந்தன.

“கொடுக்கிற காலம் நெருங்குவதால் - இனி

எடுக்கிற அவசியம் இருக்காது

இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்

பதுக்குற வேலையும் இருக்காது

(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல், படம் திருடாதே, 1961)

என்று பொதுவுடைமைச் யுகத்தின் வருகையை அறிவிக்கின்றார்.

பொதுமைச் சிந்தனைக்குப் பாரதிதாசன் தான் அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். பட்டுக்கோட்டையார் விவசாயக் குடும்பத்தில் பிறந்ததால் ஏழை விவசாயி படும் துயரங்களைத் தெரிந்து சொல்கிறார்.

வாழை நிலைக்குது சோலை தழைக்குது

ஏழைகளுக்கதில் என்ன கிடைக்குது

கூழைக்குடிக்குது, நாளைக் கழிக்குது

ஓலைக்குடிசையில் ஒட்டிக் கிடக்குது

காடு வெளஞ்சென்ன மச்சான் - உழைப்போர்க்கு

கையுங்காலுந்தானே மிச்சம்

(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், ஜனசக்தி, 1956)

கவிஞரின் சொந்த வாழ்க்கைச் சூழல், அவர் வாழும் சமூகம் ஆகியன கவிதையின் கருப்பொருளாகின்றன என்பதை இதன்மூலம் உணரலாம்.

## 3.4.5 தன்மானம் மிக்க பட்டுக்கோட்டையார்

**குறிப்பு**

திரை உலகில் நுழைய பட்டுக்கோட்டையார் சென்னைக்கு வந்து ராயப்பேட்டை பொன்னுச்சாமி நாயக்கர் தெருவில் 10ஆம் நம்பர் வீட்டில் ஒரு அறையை 10 ரூபாய்க்கு வாடகைக்கு பிடித்தார். சிறிய அறை. அதில் அவரது நண்பர்களான ஓவியர் கே.என் ராமச்சந்திரனும், நடிகர் ஓ.ஏ.கே தேவரும் தங்கி இருந்தனர். பட்டுக்கோட்டை துவக்க காலத்தில் பணத்துக்கு கஷ்டப்பட்டாலும் துணிச்சல்காரராகவும், தைரியசாலியாகவும் இருந்தார். சினிமா கம்பெனி ஒன்றுக்கு அவர் பாட்டெழுதிக் கொடுத்தார். பணம் வந்து சேரவில்லை. பணத்தைக் கேட்க பட அதிபரிடம் சென்றால், ‘பணம் இன்னிக்கு இல்லே! நாளைக்கு வந்து பாருங்கோ’ என்று பதில். ஆனால் கல்யாணசுந்தரமோ பணம் இல்லாமல் நகருவதில்லை என்ற உறுதியுடன் நின்றார். ‘நிக்கிறதா இருந்தா நின்னுண்டே இரும்’ என்ற பட அதிபர் வீட்டிற்குள் போய்விட்டார். உடனே கல்யாணசுந்தரம் சட்டைப்பையில் இருந்த ஒரு தாளையும், பேனாவையும் எடுத்து சில வரிகள் எழுதி மேஜை மீது வைத்துவிட்டு சென்று விட்டார். கொஞ்ச நேரத்தில் படக்கம்பெனியைச் சேர்ந்த ஆள் பணத்துடன் அலறியடித்துக் கொண்டு கல்யாணசுந்தரத்திடம் வந்து பணத்தைக் கொடுத்தார். அப்படி என்னதான் அந்த சீட்டில் எழுதினார் பட்டுக்கோட்டை? இதோ தாயால் வளர்ந்தேன், தமிழால் அறிவு பெற்றேன், நாயே! நேற்றுன்னை நடுத்தெருவிலே சந்தித்தேன், நீ யார் என்னை நில் என்று சொல்ல? இதைப் படித்துப் பார்த்த பட அதிபர் அசந்து போனார். பணம் வீடு தேடி பறந்து வந்தது.

## 3.4.6 மனிதநேயம் மிக்க பட்டுக்கோட்டையார்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் அற்புதமான கவியாற்றலில் மனதைப் பறிகொடுத்தவர் கவியரசு கண்ணதாசன். அதுபோலவே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கண்ணதாசனிடம் மிகுந்த அன்பு கொண்டவர். ஒரு புகழின் உச்சியில் இருந்து ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் படங்களுக்குப் பாடல் எழுதி வந்த பட்டுக்கோட்டையை, கண்ணதாசன் நேரில் சந்தித்து, ஒரு பாடல் எழுதித் தருமாறு கேட்டதற்கு, அவர் மிகுந்த பற்றுதலோடு பாடல் எழுதித்தர இசைந்ததைக் கண்ணதாசன் ஒரு சமயம் நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டுள்ளார். மனிதநேயமும்,

குறிப்பு

துணிச்சலும் தன்னம்பிக்கையும் உள்ள மாமனிதர் பட்டுக்கோட்டையார். அந்த காலத்தில் சினிமா பத்திரிகை ஆசிரியர் ஒருவர் திரைப்பட கவிஞர்களை ஏளனமாகவும், கேலியாகவும் விமர்சித்தார். கவிஞர் கண்ணதாசனும் அதற்குப் பலியானார். ஒரு விழாவில் பத்திரிகை ஆசிரியரை பட்டுக்கோட்டையார் சந்தித்தபோது, கண்ணதாசனைக் குறிப்பிட்டு, 'என்னடா கவிஞர்கள் என்றால் உனக்கு ஏளனமா? கருவாட்டு வியாபாரம் செய்கிற உனக்கு கவிதையைப் பற்றி என்னடா தெரியும்? என்று கேட்டு உதைக்கப்போனார்.

## 3.4.7 எளிமையான பட்டுக்கோட்டை

'உங்க வாழ்க்கை வரலாற்றை பத்திரிகையில எழுதனும்' பாட்டாளிக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திடம் ஒரு நிருபர் கேட்டாராம். பட்டுக்கோட்டையார் அந்த நிருபரை ராயப்பேட்டையிலிருந்த தம் வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு தெருவில் சிறிது தூரம் நடந்திருக்கிறார். பிறகு இருவரும் ரிக்சாவில் ஏறி மௌண்ட் ரோட்டுக்கு வந்திருக்கிறார்கள். அப்புறம் பஸ்ஸைப் பிடித்து கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் இறங்கி இருக்கின்றனர். கேட்டைக் கடந்து ஒரு டாக்ஸி படித்து வடபழநியில் தம் பாடல் பதிவான ரெக்கார்டிங் ஸ்டுடியோவில் போய் இறங்கினார்கள். கூடவே வந்த நிருபர், "கவிஞரே, வாழ்க்கை வரலாறு" என்று நினைவூட்டி இருக்கிறார். உடனே பட்டுக்கோட்டையார், முதலில் நடையாய் நடந்தேன், ரிக்சாவில் போனேன். பிறகு பஸ்ஸில் போக நேர்ந்தது. இப்போது டாக்ஸியில் போகிறேன். இதுதான் என் வாழ்க்கை. இதுல எங்கே இருக்குது வரலாறு? என்று சிரித்துக் கொண்டே போய்விட்டாராம். இந்த எளிமைதான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

## 3.4.8 வேடிக்கையும் விவேகமும் மிக்க கவிஞர்

ஒரு சமயம் சென்னையில் நகரப் பேருந்தில் தான் பயணம் செய்து கொண்டிருந்தபோது, வழியில் ஒரு இடத்தில் சாலையில் பள்ளம் தோண்டப்பட்டு அங்கே பழுது வேலை பார்க்கும் வேலை நடப்பதை அறிவிக்க வாகனங்களுக்கு எச்சரிக்கையாக சிவப்புக்கொடி கட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே வந்த பட்டுக்கோட்டையார் தன் அருகிலே இருந்த நண்பரிடம், "எங்கே எல்லாம்

பள்ளம் விழுந்து அது மேடாக நிரப்பப்பட வேண்டுமோ, அங்கே எல்லாம் சிவப்பு கொடி பறந்துதான் அந்த பணிகள் நடக்க வேண்டும் போலும்' என்றார்.

ஒரு சமயம் பொதுவுடைமை இயக்கத்திற்காக நாடகம் நடத்தச் சென்றிருந்த பட்டுக்கோட்டையார் நாடகத்திற்குச் சரியான வசூல் இல்லாமல் தங்கள் குழுவினருடன் பசி, பட்டினியுமாக சென்னை திரும்ப பேருந்தில் ஏறினார். பேருந்தில் அமர்ந்திருந்த தங்கள் குழுவினர் அனைவரும் சோர்ந்த முகத்துடன் காணப்பட்டார்கள். அவர்கள் சோகத்தை மாற்றி அவர்களுக்குக் குதூகலத்தைத் தர பட்டுக்கோட்டையார் அங்கேயே ஒரு பாடல் எழுதி, அதனை சத்தமாகப் பாட ஆரம்பித்தார். அந்தப் பாடலைக் கேட்டதும் நாடகக் குழுவினருக்கு பசி பறந்துவிட்டது. அனைவரும் குதூகாமாக கைகளைத் தட்டிப் பாட ஆரம்பித்தார்கள்.

"சின்னக்குட்டி நாத்தனா
சில்லறைய மாத்துனா
குன்னக்குடி போற வண்டியில
குடும்பம் பூரா ஏத்துனா

இந்தப் பாட்டு ஆரவல்லி படத்தில் வருகிறது.

பட்டுக்கோட்டையார் சிறந்த தத்துவப் பாடல்கள் மட்டுமின்றி, நகைச்சுவை பாடல்களிலும் வல்லவர்.

"ஆறறிவில் ஓரறிவு அவுட்டு சிலருக்கு
ஆறறிவில் ஓரறிவு அவுட்டு இருக்கும்
ஐந்தறிவும் நிலைக்குமுன்னா
அதுவுங்கூட டவுட்டு!

பட்டுக்கோட்டையார் 'நான் வளர்த்த தங்கை' என்ற படத்திலே போலி பக்தர்களை நையாண்டி செய்கிறார்.

**குறிப்பு**

“பக்த ஜனங்கள் கவனமெல்லாம்
தினமும் கிடைக்கும் சுண்டலிலே…ஹா…ஹா…
பசியும், சுண்டல் ருசியும் போனால்
பக்தியில்லை பஜனையில்லை.

சமுதாயப் பாடல்களையும் பட்டுக்கோட்டையார் எழுதியிருக்கிறார்.

‘வசதி இருக்கிறவன் தரமாட்டான் அவனை
வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்.
வானத்தை வில்லா வளைச்சுக் காட்டுறேன்னு
வாயாலே சொல்லுவான் செய்ய மாட்டான்.
எழுதிப் படிச்சு அறியாதவன்தான்
உழுது ஔச்சு சோறு போடுறான்.
எல்லாம் படிச்சவன் ஏதேதோ பேசி
நல்ல நாட்டைக் கூறு போடுறான் இவன்
சோறு போடுறான் அவன் கூறு போடுறான்…

சங்கிலித் தேவன் என்ற திரைப்படத்தில்,

‘வீரத்தலைவன் நெப்போலியனும்
வீடு கட்டும் தொழிலாளி
ரஷ்யா தேசத்தலைவன்
மார்சல் ஸ்டாலின்
செருப்பு தைக்கும் தொழிலாளி!
விஞ்ஞான மேதை ஜி.டி.நாயுடு

குறிப்பு

காரு ஓட்டும் தொழிலாளி!

விண்ணொளிக் கதிரி

விவரம் கண்ட

சர்.சி.வி.ராமனும் தொழிலாளி

பொறக்கும் போது – மனிதன்

பொறந்த குணம்

போகப் போக மாறுது – எல்லாம்

இருக்கும் போது பிரிந்த குணம்

இறக்கும் போது சேருது"

(படம்: சக்கரவர்த்தித் திருமகள் 1957)

### 3.4.9 தொழிலும் பாட்டும்

பட்டுக்கோட்டையார் தம் பாடல்களில் உழவர், கட்டிடத் தொழிலாளர், சுரங்கத் தொழிலாளர், கல் உடைக்கும் தொழிலாளர், மீன் பிடிப்போர், முத்தெடுப்போர், தச்சர், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் போன்றோரைப் பாடியதுடன் அவர்கள் விழிப்படையவும் பாடல்கள் மூலம் உணர்ச்சி ஊட்டுகிறார்.

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்

திறமை தான் நமது செல்வம்

கையும் காலுந்தான் உதவி – கொடை

கடமைதான் நமக்குப் பதவி

(படம்: ஆளுக்கொரு வீடு, 1960)

இந்த அடிகளில் கையும் காலையும் பயன்படுத்திக் கடமை உணர்வோடு செய்கின்ற தொழிலைத் தான் தெய்வமாகப் போற்றி உழைத்தால்

அதுவே வாழ்வுக்கான சிறந்த செல்வம் என்ற கருத்தை அழுத்தமாகச் சொல்கிறார்.



ஓதுவார் தொழுவாரெல்லாம்

உழுவார் தலைக்கடையிலே

உலகம் செழிப்பதெல்லாம்

ஏர் நடக்கும் நடையிலே

(வே.பாலசுப்பிரமணியன், பட்டுக்கோட்டையார் பாடல்கள் - ஒரு திறனாய்வு, ப.181)

என்ற அடிகளில் உடல் உழைப்பில் ஈடுபடாமல் உயர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்கிற ஓதும் தொழில் செய்வோரைக் காட்டிலும் சிறந்தவர். உலகம் செழிக்க உழவுத்தொழிலைச் செய்கிறவர்கள்தான் என்று உழவரையும் உழவையும் பெருமைப்படுத்துகிறார்.

### 3.5 பன்பரிமாணங்கள்

- விவசாயி
- மாடுமேய்ப்பவர்
- மாட்டு வியாபாரி
- மாம்பழ வியாபாரி
- இட்லி வியாபாரி
- முறுக்கு வியாபாரி
- தேங்காய் வியாபாரி
- கீற்று வியாபாரி
- மீன், நண்டு பிடிக்கும் தொழிலாளி
- உப்பளத் தொழிலாளி
- மிஷின் டிரைவர்
- தண்ணீர் வண்டிக்காரர்
- அரசியல்வாதி
- பாடகர்

- நடிகர்
- நடனக்காரர்
- கவிஞர்

குறிப்பு

## 3.6 எழுதிய திரைப்படப் பாடல்கள்

பட்டுக்கோட்டையார் இயற்கை, சிறுவர், காதல், மகிழ்ச்சி, சோகம், நகைச்சுவை, கதைப்பாடல், நாடு, சமூகம், அரசியல், தத்துவம், பாட்டாளிகளின் குரல், இறைமை, பொது போன்ற பல்வேறு பரிமாணங்களில் திரையிசைப் பாடல்களை எழுதியுள்ளார்.

### 3.6.1 இயற்கை

- ஆடுமயிலே (இரத்தினபுரி இளவரசி)
- ஓ மல்லியக்கா (மக்களைப் பெற்ற மகராசி)
- வம்புமொழி (பாண்டித்தேவன்)
- வா வா வெண்ணிலவே (சௌபாக்கியவதி)
- கனியிருக்கு (எதையும் தாங்கும் இதயம்)
- கொக்கரக் கொக்கரக்கோ சேவலே (பதிபக்தி)
- சலசல ராகத்திலே – கங்கையக்கா (ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு)
- துணிந்தால் துன்பமில்லை (ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு)
- காக்காய்க்கும்(பிள்ளைக் கனியமுது)
- வா வா சூரியனே (பாண்டித்தேவன்)
- என்னருமை காதலிக்கு வெண்ணிலாவே (எல்லோரும் இந்நாட்டு மன்னர்)

### 3.6.2 சிறுவர்

- குழந்தை வளர்வது அன்பினிலே (இரத்தினபுரி இளவரசி)
- அன்புத் திருமணியே (இரத்தினபுரி இளவரசி)
- அமுதமே என் அருமைக்கனியெ (உலகம் சிரிக்கிறது)
- செங்கோல் நிலைக்கவே – மகுடம் காக்க (இரத்தினபுரி இளவரசி)

குறிப்பு

- சின்னஞ்சிறு கண்மலர் (பதிபக்தி)
- அழாதே பாப்பா (பெற்ற மகனை விற்ற அன்னை)
- ஆனா ஆவன்னா (அன்பு எங்கே)
- இந்த மாநிலத்தை பாராய் மகனே(கல்யாணிக்குக் கல்யாணம்)
- சின்னப்பயலே .. சின்னப்பயலே (அரசிளங்குமரி)
- தூங்காதே தம்பி தூங்காதே (நாடோடி மன்னன்)
- திருடாதே பாப்பா திருடாதே (திருடாதே)
- ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே (குமாரராஜா)
- உன்னைக் கண்டு நானாட (கல்யாணப் பரிசு)

### 3.6.3 காதல், மகிழ்ச்சி, சோகம்

- பக்கத்திலே இருப்பே (தேடிவந்த செல்வம்)
- வாடாத சோலை (படித்த பெண்)
- புது அழகை – ஆணும் பெண்ணும் (அவள் யார்)
- படிக்க படிக்க நெஞ்சிருக்கும் (இரத்தினபுரி இளவரசி)
- காலம் எனுமொரு ஆழக்கடலே (அமுதவல்லி)
- உள்ளங்கள் ஒன்றாகி (புணர்ஜென்மம்)
- இன்று நமதுள்ளமே (தங்கப்பதுமை)
- கழனி எங்கும் கதிராடும் (திருமணம்)
- ஆசை வைக்கிற இடந்தெரியனும் (கலையரசி)
- என்னைப் பார்த்த கண்ணு (குமாரராஜா)
- அன்புமனம் கனிந்த பின்னே (ஆளுக்கொரு வீடு)
- நீயாடினால் ஊராடிடும் (பாண்டித்தேவன்)
- வாடிக்கை மறந்ததும் ஏனோ (கல்யாணப் பரிசு)
- நெஞ்சில் குடியிருக்கும் அன்பருக்கு (இரும்புத் திரை)
- வருஷத்திலே ஒரு நாளு தீபாவளி (கல்யாணிக்குக் கல்யாணம்)
- ஆசையினாலே மனம் (கல்யாணப் பரிசு)
- துள்ளி துள்ளி அலைகளெல்லாம் (தலை கொடுத்தான் தம்பி)
- பெண்ணில்லே நீ (ஆளுக்கொரு வீடு)
- ஆண்கள் மனமே அப்படித்தான் (நான் வளர்த்த தங்கை)

குறிப்பு

- மஞ்சப்பூசி பூமுடிச்சு (சௌபாக்கியவதி)
- கன்னியூர் சாலையிலே (பொன் விளையும் பூமி)
- போட்டுக்கிட்டா ரெண்டு பேரும் - தாலி (வீரக்கனல்)
- ஆடக்கிடுவேன் (அவள் யார்)
- எழுந்தென்னுடன் வாராய் (தங்கப்பதுமை)
- ஆடைகட்டி வந்த நிலவோ (அமுதவல்லி)
- மானைத் தேடி மச்சான் வர (நாடோடி மன்னன்)

### 3.6.4 காதல்

- துள்ளாத மனமும் துள்ளும் (கல்யாணப்பரிசு)
- அழகு நிலாவின் பவனியிலே (மஹேஸ்வரி)
- உனக்காக எல்லாம் உனக்காக (புதையல்)
- கண்ணுக்கு நேரிலே (அலாவுதீனும் அற்புத விளக்கும்)
- முகத்தில் முகம் பார்க்கலாம் (தங்கப்பதுமை)
- கற்பின் இலக்கணமே (நான் வளர்த்த தங்கை)
- எதுக்கோ இருவிழி (சௌபாக்கியவதி)
- உன்னை நினைக்கையிலே (கல்யாணிக்குக் கல்யாணம்)
- உன்னைக் கண்டு நானாட (கல்யாணப் பரிசு)
- ஆசை கொண்ட நெஞ்சிரண்டு (இரும்புத் திரை)
- மொகத்தைப் பார்த்து முறைக்காதீங்க (விக்கிரமாதித்தன்)
- இல்லாத அதிசயமா (கற்புக்கரசி)
- துடிக்கும் வாலிபமே (மர்மவீரன்)
- கன்னித் தீவின் (இரத்தினபுரி இளவரசி)
- வேல் வெல்லுமா (மஹாலட்சுமி)
- ஐயா நானாடும் நாடகம் (இரத்தினபுரி இளவரசி)

இவ்வாறு பல திரையிசைப் பாடல்களை எழுதியிருக்கிறார்

## 3.7 பட்டுக்கோட்டையார் பற்றிய ஆவணப்படம்

குறிப்பு

பட்டுக்கோட்டையாரைப் பற்றி ஆவணப்படம் எடுத்திருக்கிறார் அம்பத்தூரைச் சேர்ந்த கார்த்திகேயன். இதில் பட்டுக்கோட்டையாரின் தனிப்பட்ட வாழ்க்கை, அவரது கவிதை உலகம், இடதுசாரி ஈடுபாடு, வறுமை, திரை அனுபவங்கள் அனைத்தும் அவருடன் நெருக்கமானவர்களுடனான பேட்டிகளின் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டையாரின் மனைவி கௌரவாம்பாள், அவரது பால்ய நண்பர் சுப்ரமணியம், தியாகி மாயாண்டி பாரதி, எம்.எஸ்.விஸ்வநாதன் உள்பட கவிஞருக்கு நெருக்கமானவர்கள் அனைவரின் பேட்டிகளும் இந்த ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும் கவிஞரின் முக்கியமான 12 திரைப்பாடல்களின் காட்சியும், அவரது அரிய புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளமை ஆவணப் படத்தின் தரத்தை உயர்த்துகிறது.

### 3.7.1 பட்டுக்கோட்டையாரின் துணைவியின் பதிவு

பட்டுக்கோட்டை பக்கத்துல ஆத்திக்கோட்டைதான் சொந்த ஊர். எங்க அண்ணன் சின்னையனும் 'அவுக'ளோட அண்ணனும் சிங்கப்பூர்ல வேலை பார்க்கும்போது சிநேகிதமானவங்க. 'எனக்கு ஒரு தங்கச்சி இருக்கா. அவளுக்கு கல்யாணம் பண்ணனும்னு எங்க அண்ணன்தான் சொல்லியிருக்காக. அப்ப அவுக அண்ணன் ஒண்ணும் சொல்லலையாம். சிங்கப்பூர்லேயிருந்து லீவுல ஊருக்கு வரும்போது, தம்பியைக் கூட்டிக்கிட்டு என்னைப் பொண்ணு பார்க்க வந்துட்டார். அப்ப அவுக, 'அண்ணனுக்குத்தான் பொண்ணு பார்க்கப் போறோம்னு நினைச்சுக்கிட்டு வந்தாகளாம். பொண்ணு பார்த்துட்டு ஊருக்குத் திரும்பும்போது, 'பொண்ணு எப்படிடா இருக்கு'ன்னு அண்ணன் கேட்க, 'அழகாத்தான் இருக்கு'ன்னு இவுக சொல்லிருக்காக. உனக்குத் தான்டா இந்தப் பொண்ணுன்னு அண்ணன் சொன்னதும், இவுகளுக்குச் சந்தோஷமா போச்சாம். அப்போ வீட்டுல வந்து எழுதுனது தான், ஆடை கட்டி வந்த நிலவோ, கண்ணில் மேடைகட்டி ஆடும் எழிலோ' பாட்டு என்று தன் நினைவுகளைப் பகிர்ந்துள்ளார் அவரின் துணைவியார்.

### 3.8 பாடல் 1 நெஞ்சில் குடியிருக்கும்

பெண்: நெஞ்சில் குடியிருக்கும்

குறிப்பு

அன்பருக்கு நானிருக்கும்
நிலைமை என்னவென்று தெரியுமா
நினைவைப் புரிந்து கொள்ள முடியுமா – என்
நினைவைப் புரிந்து கொள்ள முடியுமா

ஆண்: கண்ணில் குடியிருக்கும்
காதலிக்கு நானிருக்கும்
கவனம் என்னெவென்று தெரியுமா
கருத்தைப் புரிந்து கொள்ள முடியுமா – என்
கருத்தைப் புரிந்து கொள்ள முடியுமா

பெண்: என்றும் பேசாத தென்றல்
இன்று மட்டும் காதில் வந்து
இன்பம் இன்பம் என்று சொல்வதும் என்ன

ஆண்: ஓரவிழிப் பார்வையிலே
உள்ள தெல்லாம் சொல்லி விட்டு
ஒன்றும் தெரியாததுபோல்
கேட்பதுமேனோ

பெண்: மலர்க்கொடி தலையாட்ட
மரக்கிளையும் கைநீட்டக்
கிளையில் கொடி இணையும்படி
ஆனதுமேனோ

ஆண்: இயற்கையின் வளர்ச்சிமுறை

இளமை செய்யும் கிளர்ச்சி முறை

ஏனென்று நீ கேட்டால் யானறிவேனோ

(படம்.இரும்புத்திரை)

குறிப்பு

### 3.8.1 பாடல் விளக்கம் - காதற்பாட்டு

நெஞ்சில் குடியிருக்கும் என்ற பாடல் இரும்புத்திரை என்னும் படத்தில் வருகிறது. ஆணும் பெண்ணுமாகப் பாடும் பாடல்.

தன் நிலைமையை நினைவைப் புரிந்து கொள்ள முடியுமா என்கிறாள் தலைவி. தன் கருத்தை – தன் கவனத்தை அவளால் புரிந்து கொள்ள முடியுமா என்கிறான் தலைவன்.

தலைவி தென்றல் காதில் வந்து இன்பம் இன்பம் என்று சொல்லுவது ஏன் என்கிறாள்.

தலைவன் உன் பார்வையிலே உள்ளதெல்லாம் உனக்குத் தொரியாதா என்கிறாள்.

தலைவி மலர்க்கொடி தலையாட்ட மரக்கிளை கைநீட்ட கிளையில் கொடி இணையும்படி ஆனதுமேனோ அவள் கேள்வி.

தலைவன் பதில் இயற்கையின் வளர்ச்சி முறை இளமை இளங்கொடி அருகிலிருக்கும் மரத்தைச் சுற்றிப் படரும் என்னும் இயல்பைப் பட்டுக்கோட்டையார் இப்படிப் பாடுகிறார்.

### 3.9 பாடல் 2 செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்

திறமை தான் நமது செல்வம்

குறிப்பு

கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி (செய்யும்)
பயிரை வளர்த்தால் பலனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலை உண்டு குலமானம் உண்டு
வருங்காலம் உண்டு அதை நம்பிடுவோம் (செய்யும்)
சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை – அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை - இதைப்
பாடிப் பாடி விளையாடி ஆடிப் பல
கோடிக் கோடி முறை கும்பிடுவோம் (செய்யும்)
காயும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம் (செய்யும்)

(படம்: ஆளுக்கொரு வீடு)

### 3.9.1 பாடல் விளக்கம்

குறிப்பு

பட்டுக்கோட்டையார் தொழிலின் மேன்மையை மக்களுக்கு உணர்த்துகிறார். செய்யும் தொழிலிலே தெய்வம் என்கிறார். பாரதியாரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்கிறார். தொழிலைத் திறமையாகச் செய்வதே செல்வம் என்றார். பிறருதவியை நம்ப வேண்டாம். நமக்குக் கையும் காலுமே உதவி என்று வலியுறுத்துகிறார். வேலை செய்வதால் குலமானம் காக்கலாம். எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கை தெரிவிக்கிறார்.

ஏழைகள் நிலைமை சாமிக்கும் தெரியும். பூமிக்கும் தெரியும். பூமி தரும் பலனைக் கும்பிடுவோம்.

உடல் வாடினாலும், பசி மீறினாலும் வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம் என்று ஏழைகளுக்கு நல்வழி காட்டுகிறார். உழைத்து வாழு என்பது அவரது சித்தாந்தமாகும்.

### 3.10 நிறைவாக

பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலிக்கப் பிறந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். மக்கள் கவியாக விளங்கிய இவர் ஏழை எளிய மக்களுக்காகவே பாடியவர் ஆவார். இவர் பாடல்களின் தரத்தாலே சினிமாவின் தரம் உயர்ந்தது.

தனியுடைமைக் கொடுமைகள் தீர

தொண்டு செய்யான் என்றும்

காயும் ஒரு நாள் கனியாகும் - நம்

கனவும் ஒரு நாள் நனவாகும்

என்றும் நம்பிக்கை தந்தார். தமிழ்த் தென்பாங்குச் சிந்து, இலாவணி போன்ற நாட்டுப் பாடல்களுக்குத் திரையுலகில் புத்துயிரூட்டினார்.

உழைப்பாளர்களையும், தொழிலாளர்களையும் கவிதையின் பாடுபொருளாக்கியவர். ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு மாறப் பாடியவர். விவசாயக் குடும்பத்தில் பிறந்ததால் விவசாயிகளின் பிரச்சனையைப் புரிந்து கொண்டு எழுதியவர்.

பொதுவுடைமை விரும்பி, வர்க்க எதிர்ப்பாளர், பெரியார் ஈ.வே.ராவின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பாடலில் பாடியவர், மூட நம்பிக்கைகளைச் சாடியவர், சாதி ஏற்றத்தாழ்வு கூடாது எனப் பாடியவர்.

திரைப்படத்தைத் தம்முடைய கருத்துக்களைச் சொல்ல ஊடகமாகப் பயன்படுத்தியவர். நல்ல இலக்கியப் படைப்பாளர், இளம் வயதிலேயே சாதனைகள் புரிந்து முதுமையடையாமலேயே இறந்த இவருடைய திரைத்துறைப் பங்களிப்புகள் சாகாவரம் பெற்றவை. இத்துணைச் சிறப்பிற்குரிய பட்டுக்கோட்டையாரின் வாழ்க்கையையும், பாடல்களையும் மாணவர்கள் அறிந்து பயன்பெறுவர்.

## 3.11 சோதித்தறியும் வினா விடைகள்

1. நெஞ்சில் குடியிருக்கும் என்ற பாடலில் தலைவனும் தலைவியும் எவ்வாறு உரையாடுகிறார்கள்?

நெஞ்சில் குடியிருக்கும் என்ற பாடலில் தலைவி வினாவை எழுப்ப தலைவன் பதில் கூறும் நோக்கிலும், மீண்டும் தலைவன் வினா கேட்கும் நிலையிலும் அமைகிறது. இது இவர்களுடைய காதல் நிலையைப் புலப்படுத்துகிறது.

2. பட்டுக்கோட்டையார் தொழிலின் சிறப்புக்களாகக் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

தொழிலைத் திறமையாகச் செய்வதே செல்வம் என்றார். பிறருதவியை நம்ப வேண்டாம். நமக்குக் கையும் காலுமே உதவி என்று வலியுறுத்துகிறார். வேலை செய்வதால் குலமானம் காக்கலாம். எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கை தெரிவிக்கிறார்.

## 3.12 பயிற்சி வினா

1. பட்டுக்கோட்டையாரின் பகுத்தறிவுச் சிந்தனையைப் புலப்படுத்துக

குறிப்பு

### 3.13 பொருளறிக

அன்பர் - காதலர், வாடினாலும் - சோர்வுற்றாலும்,

### 3.14 மேலும் படித்தறிக

1. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டையார் பாடல்கள், கற்பகம் புத்தகாலயம், தியாகராய நகர், சென்னை – 600 017

2. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள், பதிப்பக வெளியீடு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை – 600 001.

## பிரிவு -1 ( நிறைவு)

## கூறு: 4 -பாரதியார்
## கண்ணன் என் விளையாட்டுப்பிள்ளை
## பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி

**4.பாட அமைப்பு**

4.1 அறிமுகம்

4.2 நோக்கம்

4.3 பாரதியாரின் திருமண வாழ்க்கை

4.4 பாரதியாரின் இலக்கியப் பணி

4.5 பாரதியார் பற்றிய கவிஞர்களின் புகழ்மொழி

4.6 பாரதியாரின் தேச உணர்வு

4.7 தெய்வ நம்பிக்கையும் வழிபாடும்

4.8 கண்ணன் பாட்டு

4.9 பாரதி நோக்கில் கண்ணன்



4.10 பக்தி இலக்கியத்தில் ஒரு பரிணாமம்

4.11 விடுதலைப் போராட்டத்தில் பாரதியின் பங்கு

4.12 பாரதியாரை நினைவூட்டும் சின்னங்கள்

4.13 பாரத நாடு

4.14 திருப்பள்ளி எழுச்சி

4.15 பாடல் 1 கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை

4.15.1 கண்ணனின் குறும்புத்தனங்கள்

4.16 பாடல் 2 பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி

4.16.1 பாடல் விளக்கம்

4.16.2 காலைக்காட்சி

4.16.3 பாரத மாதாவின் பழம்பெருமைகள்

4.16.4 உலக வழக்கம்

4.17 நிறைவாக

4.18 சோதித்தறியும் வினா

4.19 பயிற்சி வினா

4.20 பொருளறிக

4.21 மேலும் படித்தறிக

### 4.1 அறிமுகம் - பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் சின்னச்சாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் டிசம்பர் 11, 1882ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட

பெயர் சுப்பிரமணியன் என்பதாகும். அவருடைய ஐந்து வயதில் தாயார் காலமானார். சிறு வயதிலேயே பாரதியாருக்குத் தமிழ்மொழி மீது சிறந்த பற்றும் புலமையும் இருந்தது. ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார். தன்னுடைய பதினொரு வயதில் கவிபாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார். இவருடைய கவிப்புலமையைப் பாராட்டிய எட்டயபுர மன்னர் இவருக்குப் 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் 'சுப்பிரமணிய பாரதியார்' என அழைக்கப்பட்டார்.

1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு சென்ற பொது, எதிர்பாராதவிதமாக அந்த கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார். பிறகு 1921 செப்டம்பர் 11ம் நாள் தனது 39ஆம் வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார்.

## 4.2 நோக்கம்

சுப்பிரமணிய பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் விடுதலைப்போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர். தம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்றுக் கொண்ட இவர், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்று போற்றிப் பாடியுள்ளார். விடுதலைப் போராட்ட காலத்தில், இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் 'தேசியக் கவியாக' போற்றப்பட்ட மாபெரும் புரட்சி வீரனின் வாழ்க்கை, சாதனைகள், கடவுள் பக்தி, தேச பக்தி போன்றவற்றைக் காண்பது நோக்கமாகும்.

### 4.3 பாரதியாரின் திருமண வாழ்க்கை

பாரதியார் அவர்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே 1897ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து

குறிப்பு

கொண்டார். தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு பாரதியார் வறுமையில் வாடினார். சிறிது காலம் காசிக்குச் சென்று தங்கியிருந்தார். பிறகு எட்டையபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவைக் கவிஞராகப் பணியாற்றினார்.

## 4.4 பாரதியாரின் இலக்கியப் பணி

'மீசைக் கவிஞன்' என்றும் 'முண்டாசுக் கவிஞன்' என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், தாய்மொழியாம் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் தனிப் புலமைபெற்று விளங்கினார். 1912ஆம் ஆண்டு கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். கண்ணன்பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி போன்ற புகழ்பெற்ற காவியங்கள் பாரதியாரால் எழுதப்பெற்றன.

## 4.5 பாரதியார் பற்றிய கவிஞர்களின் புகழ்மொழி

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையுலகின் தலைமகன் பாரதி, பாரதிதாசன் மொழியிலே குறிப்பிடுவது என்றால், பாரதி பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவன் ஒரு செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை, கவிதைக் குயில் என்றெல்லாம் பாராட்டுகிறார். இக்கால கவிப்பேரரசு வைரமுத்து வார்த்தைகளில் கூறவேண்டுமென்றால் பாரதி எட்டயபுரத்துக் கொட்டும் முரசம், சுதந்திரச் சூரியன், தமிழுக்குப் புது ரத்தம் தந்த கவிஞன், எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடையே பள்ளம் இல்லாத பாவலன் என்றெல்லாம் போற்றுகிறார்.

இத்தரணியில் தமிழ்மொழி உள்ள வரையில் பாரதியாரின் தீஞ்சுவைச் சொற்கள் மந்திரம் போன்று ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை என்பார் ப.கோதண்டராம்.

## 4.6 பாரதியாரின் தேச உணர்வு

குறிப்பு

நம்மைப் பெற்று வளர்த்து உருவாக்கும் தாயின் மீது நாம் மிகுந்த பற்றுக் கொண்டிருப்போம் இல்லையா? தாய்க்கு ஒரு துன்பம் அல்லது ஆபத்து வந்தால் மிகவும் துடித்து விடுவோம், துன்பப் படுவோம். அவள் துன்பத்தைப் போக்குவதற்கு நம்மால் முடிந்த உதவிகளை உடனே செய்வோம். அதைப்போல, நாம் பிறந்து வளர்ந்த, நமது தாய்நாட்டிற்கு ஒரு துன்பம் அல்லது ஆபத்து வந்தால் உடனே உதவ வேண்டும். இது நமது முதன்மையான கடமை. இதனையே பாரதியார் தமது தேசியப் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாரத நாடு பழம்பெருமை வாய்ந்த நாடு. சிறந்த பாரம்பரியத்தையும், உயர்ந்த பண்பாட்டையும் உடைய நாடு. இங்கு தோன்றிய சிந்துவெளி நாகரிகம், உலக நாகரிகங்களுள் தொன்மையானது, நிலவளமும் நீர்வளமும் கலைவளமும் மிகுந்த நாடு. இதன் சிறப்பினைப் பாரதியார் பல பாடல்களின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

## 4.7 தெய்வ நம்பிக்கையும் வழிபாடும்

‘தெய்வ நம்பிக்கையும் வழிபாடும்’ என்பது கடவுள் மீது கொண்ட உறுதியால் அவரை வணங்கும் செயலைக் குறிப்பது. பாரத நாட்டில் தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் பண்டைக்காலம் தொட்டே காணப்படுகிறது. தமிழ்நாட்டில் பக்தியைப் பாடல் பொருளாகக் கொண்டு பாடியவர்கள் எல்லாம் தாங்கள் வழிபட்ட தெய்வத்தை மட்டுமே பாடினார்கள். சைவ சமயத்தைச் சேர்ந்த நாயன்மார்கள் சிவபெருமான் மீதும், வைணவ சமயத்தைச் சார்ந்த ஆழ்வார்கள் திருமால் மீதும் பாடியிருப்பதை நோக்கும்போது, அவர் பிற சமயத்திலுள்ள தெய்வங்கள் பற்றிப் பாடவில்லை எனத் தெரிகிறது. ஆனால் பாரதியார் இவர்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றார். அவர் வைதிகச் (வேதத்தை ஆதாரமாகக் கொண்ட சமயம்) சமயத்தைச் சார்ந்தவர். ஆயினும் பிற சமய‌த் தெய்வங்களான புத்தர், இயேசு கிறிஸ்து, அல்லா ஆகியோரையும் பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்களிலோ, கட்டுரைகளிலோ ஓர் இடத்தில் கூடச் சமய வெறுப்புணர்வு

இடம்பெறவில்லை. மக்கள் எல்லோரும் சகோதரர்கள் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் ஆணிவேராய் நிலைபெற்றிருந்தது. அனைவரையும் ஒன்றாகப் பாவிக்கும் பொதுநோக்கு, பரந்த உள்ளம், சமயப்பொறை போன்றவை அவரிடம் காணப்பட்டன. எல்லாத் தெய்வங்களையும் பாரதி வணங்குகிறார். இந்த ஒப்பற்ற மேலான நிலை வேறு எந்தக் கவிஞனிடமும் தென்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

சமுதாயம், அரசியல் முதலியவற்றில் பாரதியார் புரட்சிகரமான சீர்திருத்தவாதி என்றாலும் தெய்வ நம்பிக்கை மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது என்று கருதினார். வேத ஆகம சாஸ்திரங்களின் உண்மைக் கருத்துக்களை உணர்ந்த பாரதி, கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என எண்ணினார். ஆயினும் எல்லா மதங்களும் மனித நலத்தையே பேசுகின்றன என்பது அவரது உறுதியான கொள்கை.

### 4.8 கண்ணன் பாட்டு

பாரதி சக்தியின் பல வடிவங்களைப் பாடியவர் என்பதை முன்னரே கண்டோம். சக்தியை மட்டுமன்றி, பிள்ளையார், முருகன், வள்ளி, கலைமகள், திருமகள், ஞாயிறு, நிலவு, அக்கினி ஆகிய தெய்வங்களைப் பாடியதோடு தோத்திரப் பாடல்கள் அல்லது தெய்வப் பாடல்களில் கண்ணனையும் பாடுகின்றார். தெய்வப் பாடல்களிலேயே பாரதியார் கண்ணனைக் கண்ணம்மா ஆக்கியிருக்கிறார். இவற்றைத் தவிரக் கண்ணன் பாட்டு என்ற தலைப்பில் இருபத்து மூன்று தலைப்புகளில் கண்ணனைப் பல கோணங்களில் புனைந்து எழுதியுள்ளார். தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப் பிள்ளை, காதலன், காதலி, ஆண்டான், குலதெய்வம் எனப் பல்வேறு உறவு நிலைகளில் பாரதியார் கண்ணனை இப்பாடல்களில் வைத்து எண்ணுகின்றார்.

மகாபாரதம், பாகவதம் ஆகிய இரு நூல்கள் கண்ணனின் அழகு, இளமை, அறிவு, ஆண்மை, அரசியல் தந்திரம், ஆட்சித்திறம், எல்லாவற்றுக்கும் மேலான தெய்வப் பேராற்றல்

ஆகியவற்றைப் புனைகின்றன. மகாபாரதத்தின் பகுதியாகிய பகவத் கீதையில் கண்ணனை அத்வைத வேதாந்தத்தின் சிகரமாகக் காண்கிறோம். தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம் காட்டும் ஆய்ச்சியர் குரவை, ஆழ்வார்களின் பாசுரங்கள் ஆகியன கண்ணனைப் போற்றுகின்றன. பகவத் கீதையில் 'அருச்சுனன் மகனுக்குத் தந்தையாகவும், தோழனுக்குத் தோழனாகவும், காதலிக்குக் காதலனாகவும் அருள் செய்க' என்று கண்ணனை வேண்டுகிறான்.

நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்ப்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்

(கண்ணன் பாட்டு – 4)

விளங்குகிறான் கண்ணன் எனப் பாரதியார் கூறுவது அவர் பகவத் கீதையின் தாக்கத்தைப் பெற்றிருந்தார் எனக் காட்டும். ஆழ்வார்கள் வைணவச் சித்தாந்தங்களுடன் பக்தி உணர்ச்சியோடும் கண்ணனை அணுகியிருக்கின்றனர். பாரதி இந்த எல்லைகளைத் தாண்டி மிக உரிமையோடு கண்ணனை அணுகுகின்றார்.

## 4.9 பாரதி நோக்கில் கண்ணன்

பாரதி கண்ணனைத் திருமாலின் ஓர் அவதாரமாகக் கண்டு, அந்த அவதாரத்தின் செயற்கரிய செயல்கள் புரிந்த வித்தகத்தை (திறமையை) வழிபடும் தோத்திரப் பாடல்களுக்கு உரிய கருப்பொருளாகக் காணவில்லை. மனிதர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றவனாகவும், மனிதர்களுக்கு மிக நெருங்கிய உறவினனாகவும் பாரதி கண்ணனைக் காண்கிறார். அவருடைய இந்த அணுகுமுறை குறித்து, "இறைவனைப் பாடுதல் இரண்டு வகை. ஒன்று உலகியல் வட்டத்திலிருந்து பாடுதல், பிறிதொன்று இறை வட்டத்திலிருந்த பாடுதல்" என்கிறார் பி.ஸ்ரீ.பாரதி. உலகியல் வட்டத்திலிருந்து கண்ணன் பாடல்களைப் பாடுகிறார் என்பது தெளிவு.

மீராபாய், ஆழ்வார்கள் போல் பாரதி பக்தி மயமாக மட்டும் வாழ்ந்தவரல்லர். தன் இறைப்பற்றின் வெளிப்படையாகப் பல பக்திப்

பாடல்களைப் பாடுகிறார். என்றாலும் அவர் வறுமை, அறியாமை, நோய், பிணி ஆகிய சமுதாயத் தீமைகளை நீக்கும் ஆசையும், தேச விடுதலை, பெண் விடுதலை போன்ற சமுதாயக் கடமைகளும் நிறைந்தவர். அவர் பாடிய கண்ணன் பாடல்களிலும் இச்சமுதாய உணர்வுதான் மேலோங்கிச் சிறக்கிறது." என்று கூறுவது கருதத்தக்கது. கண்ணனை வைணவ சமய வழியாகக் காணும் அணுகுமுறை பாரதியிடம் இல்லை. இதனைப் பக்தி இலக்கியத்தின் ஒரு வளர்ச்சி என்றும், இறைவனைக் கோயிலிலிருந்து வீட்டுக்கே கொண்டு போய்விடும் நோக்கு எனவும் கூறலாம்.

## 4.10 பக்தி இலக்கியத்தில் ஒரு பரிணாமம்

பக்தி இலக்கியத்தில் மூன்று வகைக் கோட்பாடுகளை இலக்கியங்களின் வழியாக நாம் காணலாம். அவையாவன,

1. இறைவனைப் போற்றும் மந்திரங்கள் (108, 1008 போன்றவை) போற்றிப் பாடல்கள் வழியாகத் தொழுது போற்றுதல்.

2. இறைவனை ஆண்டவராகவும், பிறவிப்பிணி நீக்குபவனாகவும் கருதி வீட்டுலகம் வேண்டும் பாடல்களைப் பாடுதல்.

3. இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் வைத்து, பக்தியில் காதற் சுவையில் குழைத்து என்னை ஏற்றுக் கொள் என வேண்டுதல்.

தமிழ் இலக்கிய வரலாற்றின் இருபது நூற்றாண்டு இலக்கியங்களில் மேற்கூறிய மூன்று தன்மைகளே காணப்படுகின்றன. பாரதி இந்த மூன்றையும் கடந்து, கடவுளை இன்னும் நெருக்கமான முறையில் நோக்குகின்றார். இந்த உரிமையைப் பாரதியாருக்கு யார் கொடுத்தது? நாட்டின் சமூகத்தின் கதியற்ற நிலை, பிணி தீர்ப்பதற்குரிய நெருக்கமான ஆள் இல்லாத சூழல் ஆகியன பாரதியாருக்கு இந்த நோக்கு நிலை உரிமையை வழங்கியிருக்கிறது. மேலும் முன்னை இலக்கியங்களில் இந்த உரிமை மனப்பாங்கு ஆங்காங்கு முருகே' (முருகனே வாழ்க! நீ திண்ணமாக அறியாமை உடையவன் என்று நற்றிணையில் (34, அடி 11) கூறுவதையும், இடைக்காலத்தில்

இறைவனைப் பழிப்பதுபோல் புகழும் நெறியில் புலவர்கள் பாடிய (நிந்தாஸ்துதி) பாடல்களையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். எனினும் பாரதியே இதனை முழுப் பரிணாமங்களோடு விரிவுபடுத்தியவர் என்பதைக் கண்ணன் பாட்டுக் காட்டுகின்றது. பாரதியார் பாடியுள்ள தெய்வப்பாடல்களில் கண்ணன் பாட்டிலேயே இந்தப் பரிணாமம் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

## 4.11 விடுதலைப் போராட்டத்தில் பாரதியின் பங்கு

சுதந்திரப் போரில் பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய் காட்டுத் தீயாய், சுதந்திரக் கனலாய் தமிழ்நாட்டை வீரு கொள்ளச் செய்தது. பாரதியார் இந்திய பத்திரிக்கையின் மூலம் மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் பல **எழுச்சியூட்டும்** கட்டுரைகளை எழுதினார். பாரதியின் எழுச்சிக்குத், தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி “இந்தியா’ பத்திரிக்கைக்குத் தடை விதித்து அவரைக் கைது செய்து சிறையிலும் அடைத்தது. அது மட்டுமல்லாமல், விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால், பாரதி தேசியக் கவியாக அனைவராலும் போற்றப்பட்டார். இவர் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்டு 1906 வரை பணியாற்றினார். ‘ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்’ என்று சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தைத் தன் பாட்டின் மூலம் வெளிப்படுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

## 4.12 பாரதியாரை நினைவூட்டும் சின்னங்கள்

எட்டையபுரத்திலும், சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியிலும் பாரதியார் வாழ்ந்த இடத்தைப் பாரதியாரின் நினைவு இல்லமாகத் தமிழ்நாடு அரசு மாற்றி இன்று வரை பொதுமக்களின் பார்வைக்காகப் பராமரித்து வருகிறது. இவர் பிறந்த எட்டயபுரத்தில், பாரதியின் நினைவாக மணிமண்டபமும் அமைக்கப்பட்டு இவருடைய திருவுருவச் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. பாரதியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படக் கண்காட்சியும், இவருடைய திருவுருவச்

சிலையும், இவரின் நினைவைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு

## 4.13 பாரத நாடு

பாரத நாடு பழம்பெருமை வாய்ந்த நாடு. சிறந்த பாரம்பரியத்தையும், உயர்ந்த பண்பாட்டையும் உடைய நாடு. இங்குத் தோன்றிய சிந்துவெளி நாகரிகம், உலக நாகரிகங்களுள் தொன்மையானது. நில வளமும் நீர்வளமும் கலைவளமும் மிகுந்த நாடு. இதன் சிறப்பினைப் பாரதியார் பல பாடல்களின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

உலகில் உள்ள நாடுகளுள், பாரத நாடு ஒரு நல்ல நாடு. அறிவிலும், வீரத்திலும், மானத்திலும், கற்பிலும், இரக்கத்திலும், ஆன்மீகத்திலும் சிறந்த ஒரு நாடு. இவற்றைக் கருதித்தான் பாரதியார்,

பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள்

பாரத நாடு

என்று புகழ்கிறார். மேலும் இந்த நாட்டின் பெருமைக்கு என்ன காரணம் என்பதனையும் வரிசையாக எடுத்துக் கூறுகிறார். உலகிலுள்ள மிக உயர்ந்த மலையாகிய இமயமலையை உடைய நாடு. வற்றாத கங்கை நதியை உடைய நாடு. வேதங்களை உடைய நாடு. கௌதம

புத்தர் தோன்றியதும் இந்நாடு. இத்தகைய சிறப்புகளைப் பாரதியார் தம் பாடல்களில் பாடிப் பெருமை அடைகிறார்.

மன்னும் இமயமலை எங்கள் மலையே

மாநிலம் மீதிது போல்பிறிது இலையே!

இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் ஆறே

இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு

குறிப்பு

புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு

பாரத நாடு பழம் பெரும் நாடே

பாடுவம் இ∴தை எமக்கிலை ஈடே

(எங்கள் நாடு – 1,2)

இவ்வாறு பாரத நாட்டின் பெருமையைப் பற்றிப் பாடி மகிழ்கிறார் பாரதியார்.

## 4.14 திருப்பள்ளி எழுச்சி

பாரதியார் பாடிய பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்ற பாடல் எண்சீர் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இது மாணிக்க வாசகர் சிவபெருமானைப் பள்ளி எழுந்தருளுமாறு பாடிய திருப்பள்ளி எழுச்சி என்னும் இலக்கிய வகை போன்றது. பாரதியார்,

நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்

நெஞ்சகத்து ஆவலை நீஅறி யாயோ?

இன்னமும் துயிலுதி யேல்இது நன்றோ?

இன்னுயி ரேபள்ளி எழுந்தரு ளாயே!

(பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி – 14)

என்று பாரத மாதாவைத் துயில் எழுப்புகிறார். இப்பாடல் பாரதியின் சுதந்திர வேட்கையைக் காட்டுகிறது.

பாரத நாட்டின் அனைத்து மாநில மக்களும் சுதந்திரத்திற்காகப் போராடும் நிலையை,

விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி

வேண்டிய வாறுஉனைப் பாடுதும் காணாய்

(பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி – 5)

(விதம் - வகை) என்றும்,

குறிப்பு

பொங்கியது என்றும் சுதந்திர நாதம்

(பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி – 2)

என்றும் விளக்குகின்றார்.

கண்ணனைத் தாயாகத் தந்தையாகக் குருவாக அரசனாகப் பல வடிவங்களில் அமைத்துப் பாடியவர் பாரதியார். அதுவும் போதாதென்று பெண்ணாகப் பாவித்து கண்ணம்மா என் காதலி, என் குல தெய்வம் என்றும் பாடுகிறார்.

**4.15 பாடல் எண்: 1 கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை**

கேதாரம், கண்டஜாதி ஏகதாளம்

ரசங்கள் அற்புதம், சிருங்காரம்

தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை (தீராத)

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் (தீராத)

தேனொத்த பண்டங்கள் கொண்டு – என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்

மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழு நேரத்தி லேகிள்ளி விடுவான் (தீராத)

குறிப்பு

அழகுள்ள மலர்கொண்டு வந்தே – என்னை
அழஅழச் செய்துபின் கண்ணைமூ டிக்கொள்
குழலிலே சூட்டுவேன் என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான் (தீராத)

பின்னலைப் பின்னின் றிழுப்பான் - தலை
பின்னேதி ரும்புமுன் னேசென்று மறைவான்
வன்னப் புதுச்சோலை தனிலே – புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குழைப்பான் (தீராத)

புல்லாங் குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே – அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம் (தீராத)

அங்காந் திருக்கும்வாய் தனிலே – கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்
எங்காகிலும் பார்த்த துண்டோ – கண்ணன்

எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ (தீராத)

குறிப்பு

விளையாட வாவென் றழைப்பான் - வீட்டில்

வேலையென் றாலதைக் கேளா திழுப்பான்

இளையாரொ டாடிக் குதிப்பான் - எம்மை

இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான் (தீராத)

அம்மைக்கு நல்லவன் கண்டீர் - மூளி

அத்தைக்கு நல்லவன் தந்தைக்கு ம.ஃ.தே

எம்மைத் துயர்செய்யும் பெரியோர் - வீட்டில்

யாவர்க்கும் நல்லவன் போலே நடப்பான் (தீராத)

கோளுக்கு மிகவுஞ் சமத்தன் - பொய்மை

சூத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன்

ஆளுக் கிசைந்தடிப பேசி – தெருவில்

அத்தனை பெண்களையு மாகா தடிப்பான் (தீராத)

கண்ணனைத் தீராத விளையாட்டுப் பிள்ளையாகக் காண்கிறார்.

### 4.15.1 கண்ணனின் குறும்புத் தனங்கள்

குறிப்பு

தெருவில் உள்ள அத்தனை பெண்களுக்கும் ஓயாத தொல்லையாக விளங்குகின்றான் கண்ணன். அவன் செய்யும் குறும்புகள் தான் எத்தனை? எத்தனை? பெண்கள் கூறுவதாகப் பட்டியல் இடுகிறார் கவிஞர்.

1. பழங்கொண்டு வந்து தருவான். அதை முழுவதுமாகத் தின்ன விடமாட்டான். பாதியிலேயே தட்டிப் பறிப்பான். ஏனப்பா இப்படிச் செய்தாய் என்றால் அதை எச்சிற் படுத்துவான். பின்னர் கடித்துக் கொடுப்பான்.

2. தேன் போன்ற சுவையான பண்டங்கள் கொண்டு வருவான். அதை எடுக்கவே இயலாதபடி உயரத்தில் வைப்பான். அது நமக்கு வருத்தத்தைத் தரும். வருத்தம் போக்க மானொத்த பெண்ணடி என்று புகழ்வான். உலகில் புகழ்ச்சிக்கு மயங்காதவர் யார்? நாம் மயங்கி மகிழும் நேரத்தில் கிள்ளி விடுவான்.

3. கண்ணைப் பறிக்கும் மலர் கொண்டு வருவான். கெஞ்சிக் கேட்டாலும் தர மாட்டான். அழ வைத்துப் பின்னர் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லுவான். நம்மைக் குருடாக்கி மலரினைத் தோழிக்குச் சூட்டுவான்.

4. பின் இருந்து பின்னலை இழுப்பான். வேதனையோடு நாம் திரும்பும் முன்னே மறைவான். புத்தம் புதுச்சேலை உடுத்தி நாம் மகிழும் போது அதில் புழுதி வாரித் தூற்றி அழுக்கு ஆக்குவான்.

5. இதோ பார் புல்லாங்குழல் அதில் கீதம் ஒன்று இசைப்பான். அது தேவகானம் போலிருக்கும். மக்கள் கள்ளால் மயங்குவது போலே நாங்கள் கண் மூடி வாய் திறந்து கேட்டிருப்போம் என்று பெண்கள் கூறுகின்றனர். கீதத்துக்குக் கள்ளை உவமையாக்குகிறார் கவியரசர் பாரதியார். கள்குடித்தவர் மயங்குமாறு போல இசைமடுத்தவரும்

மயங்குவார். அந்த மயக்கத்தில் கண் மூடிக் கொள்கிறது. வாய் திறந்து கொள்கிறது. காது நிறைந்து இருக்கிறது.

குறிப்பு

6. அங்காத்த வாய்தனில் ஒன்றா, இரண்டா, ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான் என்று குற்றம் சாட்டுகின்றனர் பெண்கள். எங்களிடம் கண்ணன் செய்கின்ற குறும்புகள் ஒன்றோ என்று பெண்கள் முறையிடுகின்றனர்.

7. விளையாட வா என்று அழைப்பான். வீட்டில் வேலை என்றாலும் கேட்க மாட்டான். கையைப் பிடித்து இழுப்பான். பின்னர் நம்மை விட்டுவிட்டு இளைய பெண்களோடு ஆடிக் குதிப்பான். இடையே போய் நம் வீட்டிலும் புகார் சொல்லி விடுவான்.

8. வீட்டில் உள்ள அம்மா, அப்பா, அத்தை – அத்தனை பேருக்கும் நல்லவன் போல் நடிப்பான். இவன் தொல்லை பொறாது இவனோடு திரிந்தால் வீட்டில் உள்ளவர்கள் நமக்குத் துன்பம் செய்வர்.

9. பொய் சொல்லல், பழி சொல்லல், சண்டை போடுதல் - இவற்றில் எல்லாம் கைதேர்ந்தவன் கண்ணன். ஆனாலும் ஆள் ஆளுக்கு இசைந்தபடி பேசி அத்தனை பெண்களையும் ஒன்றும் செய்யாதபடி செய்து விடுவான்.

ஆகவே கண்ணன் - தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற பெண்களின் குரலைப் பாரதியார் பிரதிபலிக்கிறார்.

## 4.16 பாடல் 2 பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி

பொழுது புலர்ந்தது, யாஞ்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின் யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்.

விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே,

வியப்பிது காண் பள்ளி யெழுந்தரு ளாயே

புள்ளினம் ஆர்த்தன, ஆர்த்தன முரசம் (1)

பொங்கின தெங்கும் சுதந்திர நாதம்

வெள்ளிய சங்க முழங்கின கேளாய்

வீதியெ லாமணு குற்றனர் மாதர்

தெள்ளிய அந்தணர் வேதமும்நின்றன

சீர்தரு நாமமும் ஓதிநிற் கின்றார்

அள்ளிய தெள்ளமு தன்னையெ மன்னை

ஆருயி ரேபள்ளி யெழுந்தரு ளாயே. (2)

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்

பார் மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்

கருதிநின் சேவடி யணிவதற் கென்றே

கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்

சுருதிகள் பயந்தனை சாத்திரம் கோடி

சொல்லரு மாண்பின் ஈன்றனை யம்மே

நிருதர்கள் நடுக்குறச் சூழ்-கரத் தேற்றாய்

நிர்மலை யேபள்ளி யெழுந்தரு ளாயே (3)

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்

நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ

பொன்னனை யாய்வெண் பனிமுடி யிமையப்

பொருப்பின னீந்த பெருதனப் பொருளே

குறிப்பு

என்னத வங்கள்செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே
இன்னமும் துயிலுதி யோலிது நன்றோ
இன்னுயிரேபள்ளி யெழுந்தரு ளாயே (4)

மதலைய ரெழுப்பவும் தாய்துயில் வாயோ
மாநிலம் பெறற்றவளி∴துண ராயோ
சூதலை மொழிக்கிரங் காதொரு தாயோ
கோமக ளேபெரும் பாரதர்க் கரசே
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய்
ஈன்றவ ளேபள்ளி யெழுந்தருள் வாயே ! (5)

### 4.16.1 பாடல் விளக்கம்

திருப்பள்ளி எழுச்சி என்பது துயில்கின்ற இறைவனைத் துயில் நீக்கி எழுந்தருளச் செய்வது. இங்கு பாரதமாதாவைத் துயிலெழச் செய்கிறார் பாரதியார். இது தொல்காப்பியத்தில் துயிலெடைநிலை எனக் குறிக்கப் பெறுகிறது.

### 4.16.2 காலைக் காட்சி

மக்கள் செய்த தவத்தால் பொழுது விடிந்தது என்கிறார் பாரதியார். புல்லிய இருள் கூட்டங்கள் கலைந்தன. எங்கும் பொற்சுடரைப் பரப்பிச் சூரியன் எழுந்தான். சூரியனை – அறிவு எனும் சூரியன் - (அறிவன்) எழுந்தான் என்கிறார். நீ எழவில்லையே என்று பாரதியார் பாரத மாதாவைக் கேட்கிறார். உன்னைச் சூழ்ந்து உன்னை வணங்குவதற்குத் தொண்டர் பல்லாயிரவர் நிற்கிறார். தாயே இன்னுமா

தூங்குகிறாய். எங்களுக்கு இது வியப்பைத் தருகிறது தாயே விழித்து எழு என்கிறார்.

**குறிப்பு**

காலைச் செயல்களாகப் பலவற்றைப் பாரதியார் காட்டுகிறார். பறவைகளின் ஓசை, முரசங்களின் ஓசை மக்களிடம் பொங்குகிற சுதந்திர ஓசை (வந்தே மாதரம்) வெண்சங்குகள் முழங்குகின்றன. வீதியெல்லாம் பெண்கள் வந்து நிற்கிறார்கள். இத்தனை ஓசைகளுக்கும் இடையே எம் அன்னையே, அமுதே, ஆருயிரே நீ துயில்கின்றாயே அம்மா விழித்து எழு.

### 4.16.3 பாரத மாதாவின் பழம்பெருமைகள்

சூரியனின் பேரொளியை விண்ணிடைக் கண்ட நாங்கள் தாயே உன் அருள் ஒளியை மண்ணிடைக் காண்பதற்கு விருப்புற்றோம். எண்ணிப் பார்த்து எங்கள் இதயமாகிய மலர்களை உன் சிறந்த பாதங்களில் சூட்ட வந்தோம். சுருதிகள் தந்தவளே, சாத்திரங்கள் பல படைத்தவளே அரக்கர்கள் சாய்வுறக் கரத்தில் சூலாயுதம் ஏந்தியவளே மாசற்றவளே தாயே விழித்து எழு.

உன் கண்களில் பொங்கும் கருணை காண்பதற்கு எங்கள் உள்ளத்து ஆவலை அறியாயா பொன் போன்றவளே பருவத ராசன் ஈன்ற பார்வதியே தவமே ஏழைகளாகிய நாங்கள் நின் அருள் பெறுவதற்கு எத்தனை காலம் தவம் செய்வோம் ஏங்குவோம் தாயே இன்னமும் நீ தூங்குகின்றாய் என்றால் இது நல்லதா எங்கட்கு உயிர் போன்றவளே விழித்தெழு.

#### 4.16.4 உலக வழக்கம்

தாயார் பிள்ளைகளை எழுப்புவர். நாங்கள் எழுப்ப நீ துயிலலாமா? உனக்குக் கோடான கோடி மக்கள் (மாநிலம் அவ்வளவு) பெற்றவளுக்கு இது தெரிய வேண்டாமா? பிள்ளைக்கு இரங்காதவர் ஒரு தாயா என பாரதியார் கேட்கிறார்.

பாரத நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவள். பாரத நாட்டில் உள்ள பதினெட்டு மொழியினரும் உன்னைப் பாடுகிறார்கள், புகழ்கிறார்கள். அன்பாக வந்து எம்மை ஆண்டு அருள் செய்வாய் (உலகு) ஈன்றவளே விழித்து எழு.

பாரத மாதா விழித்து எழுவதற்குப் பல காரணங்களை அடுக்கிப் பாடுகிறார் மகாகவி பாரதி. அடிமைத் தளையில் வீழ்ந்து கிடக்கும் பாரத மாதாவை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. பாரதியால் பொங்கி எழுகிறது அவருள்ளம். அங்கு வெள்ளமென வெளிப்படுகிறது திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள்

## 4.17 நிறைவாக

பாரதியை மக்கள், ‘கவி’, ‘மானுடம் பாடவந்த மாகவி’, ‘புது நெறி காட்டிய புலவன்’, எண்ணத்தாலும் எழுத்தாலும் இந்திய சிந்தனைக்கு வளம் சேர்த்தவர், ‘பல்துறை அறிஞர்’, ‘புதிய தமிழகத்தை உருவாக்க கனவு கண்ட கவிக்குயில்’, ‘தமிழின் கவிதை மற்றும் உரைநடையில் தன்னகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர் என்றெல்லாம் புகழ்கின்றனர். உலகத் தமிழர் நாவில் மக்கள் கவி பாரதியாரின் பெயர் அடிக்கடி உச்சரிக்கப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

## 4.18 சோதித்தறியும் வினா விடைகள்

1. பாரதியார் பற்றிக் குறிப்பு வரைக

சுப்பிரமணிய பாரதியார் சின்னச்சாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் டிசம்பர் 11, 1882ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன் என்பதாகும். அவருடைய ஐந்து வயதில் தாயார் காலமானார். சிறு வயதிலேயெ பாரதியாருக்கு தமிழ்மொழி மீது சிறந்த பற்றும் புலமையும் இருந்தது. ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும் பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார்.தன்னுடைய பதினொரு வயதில் கவி பாடும் ஆற்றலை வெளிப்படுத்தினார். இவருடைய கவிப்புலமையைப் பாராட்டிய எட்டயபுர மன்னர் இவருக்குப் ‘பாரதி’ என்ற

பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் 'சுப்பிரமணிய பாரதியார்' என அழைக்கப்பட்டார்.

2. பாரதியாரின் தேச பக்தியைப் புலப்படுத்துக

பாரத நாடு பழம்பெருமை வாய்ந்த நாடு. சிறந்த பாரம்பரியத்தையும், உயர்ந்த பண்பாட்டையும் உடைய நாடு. இங்குத் தோன்றிய சிந்துவெளி நாகரிகம், உலக நாகரிகங்களுள் தொன்மையானது, நிலவளமும் நீர்வளமும் கலைவளமும் மிகுந்த நாடு. இதன் சிறப்பினைப் பாரதியார் பல பாடல்களின் மூலம் வெளிப்படுத்துகிறார். இது அவரின் தேசத்தின் மீது கொண்ட பக்தியைப் புலப்படுகிறது.

3. பாரதியாரின் விடுதலை உணர்வை எழுதுக

சுதந்திரப் போரில் பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய் காட்டுத் தீயாய், சுதந்திரக் கனலாய் தமிழ்நாட்டை வீரு கொள்ளச் செய்தது. பாரதியார் இந்திய பத்திரிக்கையின் மூலம் மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். பாரதியின் எழுச்சிக்கு, தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சி "இந்தியா' பத்திரிக்கைக்குத் தடை விதித்து அவரைக் கைது செய்து சிறையிலும் அடைத்தது. அது மட்டுமல்லாமல், விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பலவேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால், பாரதி தேசியக் கவியாக அனைவராலும் போற்றப்பட்டார். இவர் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்டு 1906 வரை பணியாற்றினார். 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்ற சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தைத் தன் பாட்டின் மூலம் வெளிப்படுத்தியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

4. கண்ணன் செய்யும் குறும்புகள் இரண்டினைக் கூறுக.

குறிப்பு

கண்ணைப் பறிக்கும் மலர் கொண்டு வருவான். கெஞ்சிக் கேட்டாலும் தர மாட்டான். அழ வைத்துப் பின்னர் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லுவான். நம்மைக் குருடாக்கி மலரினைத் தோழிக்குச் சூட்டுவான்.

பின் இருந்து பின்னலை இழுப்பான். வேதனையோடு நாம் திரும்பும் முன்னே மறைவான். புத்தம் புதுச்சேலை உடுத்தி நாம் மகிழும் போது அதில் புழுதி வாரித் தூற்றி அழுக்கு ஆக்குவான்.

5. உலக வழக்கம் என பாரதியார் எதனைக் கூறுகிறார்?

தாயார் பிள்ளைகளை எழுப்புவர். நாங்கள் எழுப்ப நீ துயிலலாமா? உனக்குக் கோடான கோடி மக்கள் (மாநிலம் அவ்வளவு) பெற்றவளுக்கு இது தெரிய வேண்டாமா? பிள்ளைக்கு இரங்காதவர் ஒரு தாயா என பாரதியார் கேட்கிறார். பாரத நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவள். பாரத நாட்டில் உள்ள பதினெட்டு மொழியினரும் உன்னைப் பாடுகிறார்கள், புகழ்கிறார்கள். அன்பாக வந்து எம்மை ஆண்டு அருள் செய்வாய் (உலகு) ஈன்றவளே விழித்து எழு. ஓர் அன்னை பிள்ளையைப் பாதுகாப்பதும், பிள்ளை அன்னையைப் பாதுகாப்பதும் உலக வழக்கம் என்கிறார்.

## 4.19. பயிற்சி வினா

1. பாரத மாதாவின் திருப்பள்ளி எழுச்சிச் சிறப்பை விவரி

## 4.20 பொருளறிக

இரவி - சூரியன், புள்ளினம் - பறவையினம், பொருப்பு – மலை, தனம் - செல்வம், துயில் - உறக்கம், மதலை – குழந்தை

## 4.21 மேலும் படித்தறிக

**1.** கவிஞர் பத்மதேவன், பாரதியார் கவிதைகள், கற்பகம் புத்தகாலயம், 2017

2. மகாகவி பாரதியார், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

3. முனைவர் சுகவை வாணன், மகாகவி பாரதியாரின் கண்ணன் பாட்டு, சப்னா புக் ஹவுஸ், காந்தி நகர், பெங்களூர் - 560 009, கர்நாடகா, இந்தியா

**குறிப்பு**

## பிரிவு : 2 கவிதை, புதுக்கவிதை

**கூறு: 5 பாரதிதாசன் -** உலகப்பன் பாட்டு (5)

**நாமக்கல் கவிஞர் -** நோயற்ற வாழ்வு 7 பாட்டு

**பெ.தூரன் -** நிலா பிஞ்சு

### 5. பாட அமைப்பு

5.1 கவிஞர்களின் அறிமுகம்

5.1.1 பாரதிதாசன்

5.1.2 நாமக்கல் கவிஞர்

5.1.3 பெ.தூரன்

5.2 நோக்கம்

5.3 பாரதிதாசனின் இளமைப் பருவம்

5.4 பாரதிதாசன் கவித்திறன்

5.5 பாரதிதாசன் புனைப்பெயர்

5.6 தந்தை பெரியாரின் மீது கொண்ட பற்று

5.7 பாரதிதாசனின் பல்துறைப் புலமை

5.8 புரட்சிக்கவி என்ற பட்டம்

5.9 சாகித்ய அகாதமி விருது

5.10 பாரதிதாசன் எழுதிய புகழ்பெற்ற வரிகள்

5.12 சமத்துவம் சாத்தியம்

குறிப்பு

5.13 பாடல் 1 உலகப்பன் பாட்டு

5.13.1 பாடல் விளக்கம்

5.13.2 செல்வர் நிலை

5.13.3 புரட்சிக் கவிஞர் கருத்து

5.13.4 கவிஞர் காட்டும் வழி

5.14 நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

5.15 கல்வி

5.16 திருமணம்

5.17 ஓவியப் புலமை

5.18 ஓவியத்தின் மூலம் வருமானம் ஈட்டல்

5.19 படைப்புகள்

5.19.1 கவிதை

5.19.2 உரைநடைக் கட்டுரைகள்

5.19.3 புதினம்

5.20 பாடல் 2 நோயற்ற வாழ்வு

5.20.1 பாரதத்தின் பெருமையும் நோயின் வலிமையும்

5.20.2 கவிஞர் காட்டும் நெறி

5.20.3 நோய்க்கு அறிகுறிகள்

5.21 பெ.தூரன்

5.22 கல்வி

5.23 நாட்டுப்பற்று

5.24 ஆசிரியப்பணி

5.25 கலைக்களஞ்சியம் வெளியிடல்

5.26 இசை ஆர்வம்

5.27 இயற்றிய பாடல்கள் பட்டியல்

5.28 பெற்ற விருது

5.29 வெளிவந்த நூல்கள்

5.29.1 உயிரியல் (மரபியல்)

5.29.2 உளவியல்

5.29.3 கதைத் தொகுதிகள்

5.29.4 கட்டுரைத் தொகுப்புகள்

5.29.5 மொழிபெயர்ப்பு நூல்கள்

5.29.6 நாடக நூல்கள்

5.29.7 இசை நூல்கள்

5.29.8 கவிதை நூல்கள்

5.29.9 இவர் இயற்றிய பிற நூல்கள்

5.29.10 நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

5.30 விருதுகளும் சிறப்புகளும்

5.31 பாடல் 3 நிலாப்பிஞ்சு

5.32 பாடல் விளக்கம்

5.33 நிறைவாக

5.34 சோதித்தறியும் வினா விடைகள்

குறிப்பு

**குறிப்பு**

5.35 பயிற்சி வினா

5.36 பொருளறிக

5.37 மேலும் படித்தறிக

## 5.1 கவிஞர்களின் அறிமுகம்

### 5.1.1 பாரதிதாசன் குறிப்பு

பாரதிதாசன் ஏப்ரல் 29ஆம் நாள் பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) பிறந்து பெரும்புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் கனக. சுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் புதுவையில் பெரிய வணிகராயிருந்த கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு பிறந்தார்.

பாரதிதாசன் 21.4.1964 அன்று காலமானார்.

### 5.1.2 நாமக்கல் கவிஞர் குறிப்பு

தந்தை வெங்கடராமப் பிள்ளை, தாய் அம்மணி அம்மாள் ஆகிய இருவருக்கும் 19.10.1888இல் நாமக்கல்லில் பிறந்தார்.

இளம் வயதில் மிகுந்த வறுமையில் வாழ்ந்து வந்தார். இவர் ஏழு பெண் குழந்தைகளுக்குத் தந்தை. ஒருமுறை, வெங்கட்ராமர், தம் வேலை தொடர்பாக, காவல் துறை ஆய்வாளர் ஒருவரைப் பார்க்க வந்திருந்தார். ஆய்வாளரின் மூன்று வயது ஆண் குழந்தை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. அந்த வழியே வந்த குதிரை வண்டி ஒன்றின் கீழ்க் குழந்தை அகப்பட்டுக்கொண்டது. வண்டிக்காரன் வண்டியை நிறுத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த வெங்கட்ராமர் ஒரே தாவாகத் தாவிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டார். அவ்வண்டியில் வந்தவர் ஆய்வாளர் சுந்தராசுலு. தான் தன் குழந்தையைக் காப்பாற்றிய வெங்கட்ராமரைப் பாராட்டி அவருக்கு

காவல்துறை பணிக்குப் பரிந்துரைத்தார். அந்த வேலையில் சேர்ந்த வேங்கட்ராமர் பின் தலைமைக் காவலராகப் பதவி உயர்வு பெற்றார். இந்தச் சூழலில்தான் வெங்கட்ராமருக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்.

குறிப்பு

நாமக்கல் கவிஞர் பிறப்பதற்கு முன்னரே அவருடைய தாயார் பலராலும் புகழப்பட்டார். பிறக்கும் குழந்தை ஆணாக இருக்கும் என்று பலர் வாழ்த்தினர். சிறந்த அறிவாளியாகவும் நிறைந்த ஆயுள் உடையவராகவும் விரிந்த புகழுடையவராகவும் உன் மகன் விளங்குவான் என்று அந்தணர் ஒருவர் பாராட்டியது அனைத்தும் கவிஞர் வாழ்வில் உண்மையாயிற்று.

எட்டாவது குழந்தை கட்டி அரசாளும் என்ற பழமொழிக்கு ஏற்ப, கவிஞர் தமிழ்நாட்டில் கவிதை உலகில் தனிப்பெரும் மன்னராக, அரசவைக் கவிஞராக விளங்கினார். இதற்குக் காரணம் அவர் இளமைப் பருவத்தில் பெற்ற கல்வியாகும். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்கள். அதற்கு நாமக்கல் கவிஞர் சான்றாவார்.

### 5.1.3 பெ.தூரன் குறிப்பு

பழனிவேலப்பக் கவுண்டர் பாவாத்தாள் ஆகியோருக்கு மகனாகச் செப்டம்பர் 26, 1908ஆம் ஆண்டு தமிழ்நாடு, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சிக்கு அருகிலுள்ள மஞ்சக் காட்டு வலசு என்ற ஊரில் பிறந்தார். கொங்கு நாட்டவரின் வரலாற்று நாயகர்களான அண்ணன்மார், பொன்னர் - சங்கர் இருவரும் பெரியசாமி என்று அழைக்கப்பட்டனர். மேழிப்பள்ளி பொன்னர் நினைவால் இவருக்குப் பெரியசாமி என்று பெயர் வைத்தனர். இவர், கொங்கு வேளாளரின் “தூரன்” குலத்தைச் சார்ந்தவர் என்பதால் தன் பெயரோடு “தூரன்” என்று சேர்த்துக் கொண்டார். மஞ்சக்கட்டு வலசு பெரியசாமித்தூரன்” என்பதன் சுருக்கமே ம.ப.பெரியசாமித்தூரன் ஆகும்.

1980ஆம் ஆண்டு கடுமையான வாத நோயால் வாடியவர். 1987ஆம் ஆண்டு சனவரி 20ஆம் நாள் மறைந்தார்.

## 5.2 நோக்கம்



பாரதிதாசன் புதுவைக் கவி என்றழைக்கப்பட்டவர். பெண்ணின் பெருமைகளைப் பேசும் பல கவிதைகளைப் படைத்துள்ளார். இவர் பகுத்தறிவுச் சிந்தனையாளர், புரட்சி மிக்க கருத்துக்களை தன் கவிதையில் புனைந்தவர்.

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை விடுதலை உணர்வை ஊட்டும் வகையில் கவிதைகளைப் பாடியவர். தமிழ்நாட்டுப் பட்டிதொட்டிகளிலெல்லாம் இவரின் கவிதை சென்று மக்களுக்கு விடுதலை உணர்வை வளர்த்தது. அவர் படைத்த படைப்புகள் ஏராளம்.

கவிஞர் பெ.தூரன் ம.பெ.தூரன் என்றழைக்கப்படுகிறார். மஞ்சக்காட்டு வலசு என்பது அவர் வாழ்ந்த சிற்றூராகும். அதனால் அவர் ஊர்ப்பெயரையும் சேர்த்து ம.பெ.தூரன் என்றழைக்கப்பட்டார். இவர் இசையார்வம் மிக்கவர். தானே பாடல் எழுதி இராக தாள இசையில் பாடக்கூடியவர்.

பாரதிதாசனின் உலகப்பன் பாட்டு, நாமக்கல் கவிஞரின் நோயற்ற வாழ்வு, பெ.தூரனின் நிலாப்பிஞ்சு ஆகிய கவிதைகளைக் காண்பது நோக்கமாகும்.

## 5.3 பாரதிதாசனின் இளமைப் பருவம்

பாரதிதாசன் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும் தமிழ்ப் பள்ளியில் பயின்ற காலமே கூடியது. தமது பதினாறாம் வயதிலேயே கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். தமிழ்மொழிப் பற்றும் தமிழறிவும் நிறைந்தவராதலின் இரண்டாண்டில் கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். பதினெட்டு வயதிலேயே அவர் அரசினர் கல்லூரித் தமிழாசிரியரானார்.

## 5.4 பாரதிதாசனின் கவித்திறன்

இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர்கட்குப் பாடிக் காட்டுவார்.

குறிப்பு

நண்பர் ஒருவர் திருமணத்தில் விருந்துக்குப் பின் பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். ஆனால் கவிஞருக்கு அது தெரியாது. அப்பாடல் அவரை பாரதியாருக்கு அறிமுகம் செய்து வைத்தது.

தன் நண்பர்கள் முன்னால் பாடு என்று பாரதி கூற பாரதிதாசன் "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்று ஆரம்பித்து இரண்டு பாடலைப் பாடினார். இவரின் முதற் பாடல் பாரதியாராலேயே சிறீ சுப்பிரமணியபாரதி கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது என்றெழுதப்பட்டு சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பப்பட்டது.

## 5.5 பாரதிதாசனின் புனைபெயர்

புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில் "கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் என பல புனை பெயர்களில் எழுதி வந்தார்.

## 5.6 தந்தை பெரியாரின் மீது கொண்ட பற்று

தந்தை பெரியாரின் தீவிரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிட இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாக கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினைத் தன் பாடல்கள் மூலம் பதிவு செய்தார்.

## 5.7 பாரதிதாசனின் பல்துறைப் புலமை

பாரதிதாசன் எழுத்தாளராகவும், திரைப்படக் கதாசிரியராகவும், பெரும் கவிஞராகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல் அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக 1954ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 5.8 புரட்சிக்கவி என்ற பட்டம்

1946ஆம் ஆண்டு சூலை 29இல் அறிஞர் அண்ணா அவர்களால் கவிஞர் 'புரட்சிக்கவி' என்று பாராட்டப்பட்டு ரூ.25000 வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

## 5.9 சாகித்ய அகாதமி விருது

பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை உணர்வு நிரம்பியவர். கவிஞருடைய படைப்பான 'பிசிராந்தையார்' என்ற நாடக நூலுக்கு 1969இல் சாகித்ய அகாதமி விருது கிடைத்தது. இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினரால் 1990இல் பொதுவுடைமையாக்கப்பட்டன.

## 5.10 பாரதிதாசன் எழுதிய புகழ்பெற்ற வரிகள்

'எங்கள் திருநாட்டில் எங்கள் நல்லாட்சியே'

'புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'

'தமிழுக்கும் அமுதென்று பேர்' அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்'

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு'

## 5.11 பாரதிதாசனின் ஆக்கங்கள்

பாரதிதாசன் தன் எண்ணங்களைக் கவிதை, இசைப்பாடல், நாடகம், சிறுகதை, புதினம், கட்டுரை ஆகிய வடிவங்களில் வெளியிட்டார்.

- அம்மைச்சி (நாடகம்)
- உயிரின் இயற்கை, மன்றம் வெளியீடு
- உரிமைக் கொண்டாட்டமா? குயில்
- எது பழிப்பு, குயில்
- கடவுளைக் கண்டீர், குயில்
- கழைக்கூத்தின் காதல் (நாடகம்)
- கலை மன்றம்
- கற்புக் காப்பியம், குயில்
- சத்திமுத்தப் புலவர் (நாடகம்)
- நீலவண்ணன் புறப்பாடு
- பிசிராந்தையார் (நாடகம்) பாரிநிலையம்
- பெண்கள் விடுதலை

குறிப்பு

- விடுதலை வேட்கை
- வீட்டுக் கோழியும், காட்டுக் கோழியும், குயில்
- ரஸ்புடீன் (நாடகம்)
- திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் ஐந்து கட்டளைக் கலித்துறை பாடலையும் எழுதியுள்ளார்.

### 5.12 சமத்துவம் சாத்தியம்

உலகம் இப்படியே இருந்துவிடாது என்றும் அவர் கருதுகின்றார். ஏழை கோழையாக இருக்கும் வரைதான் இந்த நிலை இருக்கும். அவன் தாழ்ந்து குனிந்து பணிந்து வாழும் நிலையிலிருந்து நிமிரும் நிலை வரும். அப்படி நிமிர்ந்தால் ஒரே நொடியில் உலகம் மாறிவிடாதா எனக் கேட்கின்றார். கையிலே திருவோடுதான் உண்டு என்று கூறும் ஓடப்பர் ஒருபுறம், செல்வநிலையின் உச்சியிலே இருக்கும் உயரப்பர் மற்றொரு புறம். ஏழையப்பராக இருக்கும் ஓடப்பரும் உயரப்பரும் ஒன்றாக முடியுமா? முடியும் என்கிறார் கவிஞர்.

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ!

(உலகப்பன் பாட்டு,37-40, முதல் தொகுதி)

அடி, உதை என்றாலே அஞ்சுவோர் கீழோர் அல்லவா? அந்த நிலையிலே தான் இவர்கள் சுரண்டிச் சுருட்டி வைத்திருக்கும் செல்வத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்வார்கள். இயந்திரத்தில் இட்டுப் பிழிந்தால்தானே கரும்பு சாறு தரும்? உலகம் வழங்கும் உடைமை எல்லாம் பொது எனும் மனநிலை வரவேண்டுமென்று பாரதிதாசன் கருதுகின்றார். பொருளாதார நிலையில் ஒரு சமத்துவம் நிலவும் சமுதாயத்தையே அவர் காண விரும்பினார்.

## 5.13 உலகப்பன் பாட்டு

பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற
பழையமுத லாளியினை நிற்க வைத்து

குறிப்பு

மிகுந்திருந்த உன்நன்செய் புன்செய் யாவும்
வெகுகாலத்தின் முன்னே மக்கள் யாரும்
சுகித்திருக்கக் குத்தகைக்கு விட்ட துண்டோ
சொல் என்றேன் உலகப்பன் ஆம் ஆம் என்றான்
வகுத்த அந்தக் கத்தகைக்குச் சீட்டு முண்டோ
வாய்ச் சொல்லோ என்றுரைத்தேன் வாய்ச் சொல் என்றான் (1)
குத்தகைக் காரர்தமக்குக் குறித்த எல்லை
குறித்தபடி உள்ளதுவா என்று கேட்டேன்
கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தை யெல்லாம்
கொத்திக்கொண் டேப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்
பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப் போலானார் செல்வர் (2)
அதிகரித்த தொகைதொகையாய்ச் செல்வ மெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம் யோயேறிக் கொண்டு
சதிராடு தேவடியாள் போல்ஆ டிற்று
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின் றார்கள்
இதுஇந்நாள் நிலையென்றான் உலகப் பன்தான்
இந்நிலை யிலிருப்பதனால் உலகப் பாநீ
புதுக் கணக்குப் போட்டுவிடு பொருளை யெல்லாம்

குறிப்பு

பொதுவாக எல்லார்க்கும் நீகுத்தகை செய் (3)
ஏழை முதலாளி என்பதில் லாமல்செய்
என்றுரைத்தேன் உலகப்பன் எழுந்து துள்ளி,
ஆழமப்பா உன்வார்த்தை உண்மை யப்பா,
அதற்கென்ன தடையப்பா, இல்லை யப்பா
ஆழமப்பா உன்கருத்து மெய்தானப்பா
அழகாயும் இருக்குதப்பா, நல்ல தப்பா,
தாழ்வுயர்வு நீங்குமப்பா என்று சொல்லித்
தகதகென ஆடினான் நான் சிரித்து (4)
ஆடுகின்றாய் உலகப்பா யோசித்துப் பார்
ஆர்பாட்டக் காரர்இதை ஒப்பா ரப்பா
தேடப்பா ஒருவழியை என்று சொன்னேன்
செகதப்பன் யோசித்துச் சித்தம் சோர்ந்தான்
ஓடப்பா ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவர் உணரப் பாநீ (5)

### 5.13.1 பாடல் விளக்கம்

பாரதியாருக்குப் பின்னர் பாவேந்தராகவும், புரட்சிக் கவிஞராகவும், புதுவை தந்த குயிலாகவும் விளங்கியவர் பாரதிதாசன் ஆவார்.

ஏழை மக்கள் இயல்பான ஏழைமக்களாக இருப்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் வஞ்சகராலும் செல்வர்களாலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. இவ்வாறு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைக்கிறார். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். செல்வம் எல்லோருக்கும் பொதுவாக அமைதல் வேண்டும். கற்பனை விரிகிறது. கவிஞரிடம் உலகப்பன் பாட்டு தோன்றுகிறது. நீதிமன்றத்தில் உலகை நிறுத்துகிறார். அது பகுத்தறிவு மன்றம் வழக்குரைஞராகக் கவிஞர் கேட்கிறார். உலகே பழங்காலத்தில் உன்னுடைய நன்செய் புன்செய் நிலங்களை மக்களுக்குக் குத்தகைக்கு விட்டதுண்டா.

உலகப்பன்: ஆமாம் என்கிறான்

கேள்வி: அதற்கு ஏதாவது ஒப்பந்தச் சீட்டு உண்டா இல்லை வாய்ச்சொல் தானா?

உலகப்பன்: வாய்ச்சொல் என்கிறான். வாய்மொழிக்குப் பழைய காலத்தில் அவ்வளவு மரியாதை. உலகம் மாறினும் மக்கள் சொன்ன சொல் மாறமாட்டார்கள்.

கவிஞர் அடுத்து கேட்கிறார்

குத்தகைதாரர்களுக்குச் சொன்னபடி, கால எல்லை, நில எல்லை உள்ளனவா?

உலகப்பன் கையைப் பிசைந்தபடி சொல்லுகிறான்

கைத்திறனும் வாய்த்திறமையும் உள்ளவர்கள் மற்றவர்களது நிலத்தை அபகரித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் தூங்கினார்கள். நான் என்ன செய்வது.

இந்தப் பாடலில் இரண்டு உவமைகளைக் கையாள்கிறார். ஏழை மக்கள் பொத்தல் இலையானார். (பொத்தல் இலை, இருந்தும் பயன் இல்லாதது). செல்வர் நீர் நிறைந்த தொட்டியானார். மேன்மேலும் வரவு இருப்பதனால், தொட்டி நீர் நிறைந்ததாயிற்று.

### 5.13.2 செல்வர் நிலை

குறிப்பு

சிலரிடம் செல்வம் சேர்ந்து சேர்ந்து ஆடுகிறது. ஆந்தச் செல்வ ஆட்டத்தைச் சதிராடும் தேவடியாளுக்கு ஒப்பிடுகிறார் கவிஞர். இது ஒரு புறம்.

மறுபுறம் தரித்திரர் புழுப்போலத் துடிக்கிறார். இது இந்நாள் நிலைமை என்கிறான் உலகப்பன்.

கவிஞர் கட்டளை இடுகிறார். உலகப்பா நீ புதுக்கணக்குப் போடு. பொருளை எல்லாம் எல்லார்க்கும் குத்தகை செய்.

### 5.13.3 புரட்சிக் கவிஞரின் கருத்து

ஏழை முதலாளி இல்லாமல் செய். உலகப்பன் துள்ளினான். மகிழ்ந்தான். உன் வார்த்தை ஆழம் உன் கருத்து ஆழம் நிறைந்தது என்று கவிஞரைப் பாராட்டினான். அதுதான் சரி. தாழ்வு உயர்வு நீங்கும். உன் கருத்து நன்றாகவும் இருக்கிறது. அழகாகவும் இருக்கிறது. (குலத்தாழ்ச்சி, உயர்ச்சி சொலல் பாவம் என்பார் பாரதியார்) உலகப்பன் மகிழ்ச்சியில் தகதக வெனக் குதித்தான்.

அவனைக் கையமர்த்திக் கவிஞர் கூறுகிறார். அப்பா உலகப்பா நீ யோசி ஆர்ப்பாட்டக் கார மக்கள் இதை ஒப்புக் கொள்வாரா. ஒரு வழி தேடு – உலகப்பன் சிந்தித்து வழி தெரியாது திகைத்தான்.

### 5.13.4 கவிஞர் காட்டும் வழி

ஓடப்பராய் இருக்கும் ஏழை மக்கள் உதையப்பர் ஆகிவிட்டால் நொடிப்பொழுதில் ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பொப்பர் ஆகிவிடுவார் என்று கூறுகிறார். மேலும் உலகப்பனைப் பார்த்து இதை உணரப்பா என்கிறார்.

கவிஞர் காட்டும் வழி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை அடையும் வழியாகும்.

## 5.14 நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை

## 5.15 கல்வி

குறிப்பு

| | | |
|---|---|---|
| ஆரம்பக் கல்வி | : | நம்மாழ்வார் பள்ளி, நாமக்கல் |
| உயர்நிலைக் கல்வி | : | கோவை மெட்ரிகுலேசன் பள்ளி |
| கல்லூரிக் கல்வி | : | பிஷப் ஈபர் கல்லூரி, திருச்சி |

## 5.16 திருமணம்

கவிஞருக்கு இரண்டு மனைவியர். முதல் மனைவி முத்தம்மாள். அவர் வலியால் 1924இல் இறந்து விடுகிறார். அவர் வேண்டுகோளுக்கேற்ப, அவர்தம் தங்கை சௌந்தரம்மாளை மணக்கிறார் கவிஞர். அவர் மூலமாகப் பிறந்த குழந்தைகள் ஐவர். பெண்கள் இருவர், ஆண்கள் மூவர்.

## 5.17 ஓவியப் புலமை

நாமக்கல் கவிஞர் நான்காம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது நம்மாழ்வார் என்ற ஆசிரியர் ஒரு கணக்குக் கொடுத்திருந்தார். எல்லா மாணவர்களும் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இராமலிங்கம் மட்டும் அன்றைய நாடக விளம்பரத்தில் அச்சடிக்கப்பட்டிருந்த கமலஇந்திரசபா நாடகப் படத்தைப் பார்த்து பார்த்துத் தம் பலகையில்

எழுதிக் கொண்டிருந்தார். ஆசிரியர் கணக்கைக் காட்டச் சொன்னார். இராமலிங்கம் ஓவியத்தைக் காட்ட பளீர் என அடி விழுந்தது. உயர்நிலைப் பள்ளியிலும் இது தொடர்ந்தது.

மற்றொரு நிகழ்ச்சியையும் இங்கே சுட்டிக்காட்டலாம். கல்லூரியில் ஆங்கிலக் கட்டுரை ஒன்று எழுத முதல்வர் பணித்தார். அதை எழுதி முடித்துவிட்டு, இராமலிங்கம், முதல்வர் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருப்பதை அப்படியே வரைந்தார். இதைப் பார்த்த முதல்வர் அவரைப் பாராட்டினார். கட்டுரை எழுதிய திறத்தையும், ஓவியம் வரைந்த திறத்தையும் பாராட்டி, பைபிளையும் கட்டுரை எழுதுவது எப்படி என்ற

ஒரு நூலையும் பரிசாகத் தந்து, ஓவியக் கலைப் பயிற்சியை விடாமற் செய்து வருமாறு ஊக்கப்படுத்தினார்.

இராமலிங்கம் பிள்ளை, தம் நண்பரும் சிறந்த வழக்குரைஞருமான நாகராஜ ஐயங்காரின் தூண்டுதலால் திரு.இராமகிருட்டினர், திரு.விவேகானந்தர், திலகர், அரவிந்தர், லஜபதிராய் முதலிய தலைவர்களைப் படமாக வரைந்தார். அந்த ஓவியங்களைக் கொண்டு கண்காட்சி அமைத்தார். ஓவியப் புலமை கைவரப் பெற்றவர் கவிஞர் என்பதை இதனால் அறிய முடிகிறது.

## 5.18 ஓவியத்தின் மூலம் வருமானம் ஈட்டல்

கவிஞர் இராமலிங்கத்தின் ஆசான் தி.வி.லட்சுமணன் தம் வேலையிலிருந்து ஓய்வு பெற்றபோது அவருடைய படத்தை நாமக்கல் நகர மண்டபத்தில் திறந்து வைக்க, அவருடைய மாணவர்கள் விரும்பினர். அதற்கு இராமலிங்கம் பிள்ளை படம் வரைந்து கொடுத்தார். அப்படம் நகர மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. தொழில் துறையில் வருவாயும், வெற்றியும் இராமலிங்கத்துக்குத் தேடிக் கொடுத்த படம் இதுவாகும்.

இதுவரையில் இராமலிங்கத்தின் பிறப்பு, சூழல், கல்வி, திருமணம், ஓவியப் புலமை ஆகியவற்றைப் பார்த்தோம்.

இனி கவிஞரின் படைப்புகளைப் பற்றி அறியலாம்.

## 5.19 படைப்புகள்

நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் மிகச் சிறந்த கவிதைகள் பலவற்றைப் பாடியுள்ளார். அவை தேசிய உணர்வை வெளிப்படுத்தும் உன்னதமான பாடல்கள். உரைநடை நூல்கள் பலவற்றையும் படைத்துள்ளார். மேலும் புகழ்வாய்ந்த புதினங்களையும் எழுதியுள்ளார்.

### 5.19.1 கவிதை

குறிப்பு

- தேசபக்திப் பாடல்கள், 1938
- பிரார்த்தனை, 1938
- தமிழன் இதயம், 1942
- காந்தி அஞ்சலி, 1951
- சங்கொலி, 1953
- கவிதாஞ்சலி, 1953
- மலர்ந்த பூக்கள், 1953
- தமிழ்மணம், 1953
- தமிழ்த்தேன், 1953
- நாமக்கல் கவிஞர் பாடல்கள், 1960
- அவனும் அவளும்

### 5.19.2 உரைநடைக் கட்டுரைகள்

- தமிழ்மொழியும் தமிழரசும், 1956
- இசைத்தமிழ், 1965
- கவிஞன் குரல், 1953
- ஆரியராவது திராவிடராவது, 1947
- பார்ப்பனச் சூழ்ச்சியா, 1948
- திருக்குறள் - உரை
- கம்பன் கவிதை இன்பக் குவியல்

### 5.19.3 புதினம்

- மலைக்கள்ளன், 1942
- தாமரைக்கண்ணி, 1966
- கற்பகவல்லி, 1962
- மரகதவல்லி, 1962
- காதல் திருமணம், 1962
- மாமன் மகள்

குறிப்பு

உலகில் பல்வேறு இயக்கங்கள் தோன்றித் தத்தம் கொள்கைகளை நிறைவேற்றியுள்ளன. அவற்றுள் இந்திய வரலாற்றில் திலகர் சகாப்தம் என்பது ஒன்று. காந்தி சகாப்தம் என்பது மற்றொன்று. அந்நாளில் இவ்விரு சகாப்தங்கள் உருவாயின. காந்தி சகாப்தமானது விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து கிளை இயக்கங்கள் பல தோன்றின. அவை கதர் வளர்ச்சி இயக்கம், தீண்டாமை ஒழிப்பு இயக்கம், அகிம்சை பிரசார இயக்கம் என்பனவாகும். இவை அத்தனைக்கும் பாடல்களைப் புனைந்து அளித்த பெருமை கவிஞர் இராமலிங்கம் ˙பிள்ளை அவர்களையே சாரும்.

## 5.20 பாடல் - 2 நோயற்ற வாழ்வு

உலகினிற் சிறந்த தென்றம்
உருவினில் பரந்த தென்றும்
உயர்தவ யோக சித்தர்
ஒப்பிலார் இருந்த தென்றும்
பலவளம் நிறைந்த தென்றும்
பகுத்தறி வுயர்ந்த தென்றும்
படித்தனம் கேட்டோ மந்தப்
பாரத தேச மக்கள்
புலபுல வென்று நித்தம்
புதுப்புது நோய்களாலே
புழுக்கள்போல் விழுந்து மாண்டு
போவதைக் கண்டு மையோ
விலகிட வழிதே டாமல்
விலங்கினம் போல வாழ்ந்து

விதியென வாதம் பேசி

வீணரா யிருத்தல் நன்றோ (1)

குறிப்பு

கற்பமும் அறிந்து காய

சித்தியும் கற்க மேலோர்

பற்பலர் இருந்த இந்தப்

பாரத தேச மக்கள்

அற்பமாய் ஆயுள் குன்றி

ஆழ்ந்திடல் ஏனோ வென்று

சொற்பனந் தன்னிற் கூட

எண்ணிடத் துணிந்தோ மில்லை (2)

உடல்வலி மிகுந்து நல்ல

ஊக்கமும் உறுதி பொங்க

உலகினில் இன்ப மெல்லாம்

உயர்வழி அனுப வித்த

திடமுள்ள தீர வீரர்

திகழ்ந்த இச்சிறந்த நாட்டில்

சிறிய தோர் நோய்வந் தாலும்

தாங்கிடத் திறனில் லாமல்

நடைபிணம் போல நாமும்

நாள்கழித் திருந்தோ மையோ

நாடிலோம் இதனை மாற்ற
நல்வழி என்ன வென்று
மடமையோ மதியோ வன்று
விதியெனு மயக்கந் தானோ
மாற்றநாம் அல்ல தென்றால்
மதியினாற் பயன்தா னென்னே (3)

முற்றிய ஒழுக்கத் தானும்
முறைநெறி வாழ்க்கை யாலும்
பெற்றவர் காண முன்னாள்
பிள்ளைகள் இறந்த தில்லை
கற்றவர் பெரியோர் நித்தம்
கதைகளிற் சொல்லக் கேட்டோம்
இற்றை – நாள் கோடி கோடி
பிறக்குமுன் இறப்ப தேனோ (4)

மணத்தையே விரும்பி யோடி
மலரினைக் கசக்கு வார்போல்
பணத்தையே பெரிதென் றெண்ணிச்
சுகத்தினைப் பழித்து வாழ்ந்து
குணத்தையே விலைக்கு விற்றுக்

குறிப்பு

குரங்கினைக் கொண்டார் போல
இனத்தையே பிணிகள் வாட்ட
இருந்தனம் அறிவி ருந்தும் (5)

உண்டியில் ஆசை வைத்தோம்
ஒழுக்கமே மறந்து போனோம்
பெண்டுகள் மக்கள் தம்மை
வளர்த்திடும் முறைமை பேணார்
மண்டையி லெழுத்தி தென்று
மயங்கினோம் கர்மந் தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம்
மலிந்திட நலிந்தோ மையோ (6)

பிணியிலே பிறந்து நித்தம்
பிணியையே அருந்திப் பொல்லாப்
பிணியிலே வளர்ந்தும் அந்தப்
பிணியினாற் சாகக் கண்டும்
அணியிலே ஆடை யாலே
அலங்கரித் தோமே யன்றி
அறிவிலே ஆசா ரத்தால்
அழகெதும் செய்தோ மில்லை

குறிப்பு

பணியிலும் பணத்தி லேயும்
சுகமெலாம் இருந்தாற் போலப்
பழகினோம் நாமே யன்றிப்
பழக்கினோம் மக்கள் தம்மை
துணிவிலோம் தூய்மை யில்லோம்
சுசிகர நடத்தை இல்லோம்
துவக்குவோம் இனிமே லேனும்
நோய்களைத் துடைக்கும் வாழ்க்கை

பாரத தேச மக்கள் நோயற்ற வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்புகின்றார். நோயினாற் சாவதைக் கண்டும் மக்கள் காணாததுபோல் இருப்பதைச் சாடுகிறார். நீண்டநாள் வாழ்வதற்கு வழிமுறைகள் கூறுகிறார்.

### 5.20.1 பாரதத்தின் பெருமையும் நோயின் வலிமையும்

பாரத தேசம் உலகினிற் சிறந்தது. உருவத்தால் பெரியது. தவயோகிகள் சித்தர்கள் வாழ்ந்தது. பல வளம் நிறைந்தது. பகுத்தறிவில் உயர்ந்தது. அது எல்லாம் சரி அந்த தேசத்து மக்கள் நித்தம் நோயாலே பொலபொல என்று சாகிறார்களே அதைப் போக்க வழி தேடாமல் அது அவர்கள் விதி என்று வாதமிட்டு நாம் வீணராய் வாழ்தல் நல்லதா மக்களைப் பார்த்துக் கவிஞர் கேட்கிறார்.

உடம்பைப் பொன்னாக்கும் இரும்பாக்கும் காயகற்பம், எண்ணியவெல்லாம் பெற உதவும் காயசித்தி இவற்றை எல்லாம் கண்ட மேலோர்கள் வாழ்ந்த நாடு நம்நாடு. மக்கள் அற்பமாய் மடிதல் ஏன் என்று சொப்பனத்தில் கூட நாம் நினைத்துப் பார்க்கவில்லை. இது ஏன் என்று கவிஞர் வருந்துகிறார்.

குறிப்பு

உடல் வலிமை, ஊக்கம் உடைமை, உறுதியுடைமை கொண்டு உலக இன்பங்களை எல்லாம் உயர்ந்த வழிமுறைகளில் அனுபவித்த வீரர்கள் தீரர்கள் வாழ்ந்த நாடுதான் நம்நாடு. இன்று சிறிய நோயைக் கூடத் தாங்கச் சக்தி இல்லாது நடைப் பிணம் போல வாழ்கிறோம். இதை மாற்றும் வழியை நினைத்தோமில்லை. விதி என நினைத்தால் மதி பெற்றதால் என்ன பயன் கவிஞர் கேட்கிறார்.

### 5.20.2 கவிஞர் காட்டும் நெறி

ஒழுக்கத்தாலும், உயர்ந்த வாழ்க்கை நெறிமுறைகளாலுமே சிறந்த வாழ்க்கையை வாழ முடியும். பழங்காலத்தில் பெற்றோர் இருக்கப் பிள்ளைகள் இறந்தார்களா (அது எவ்வளவு கொடுமை) இன்று பிறக்கும்முன் இறப்போரே கோடி கோடி.

மணத்தை விரும்பி மலரைக் கசக்குவார் போல

பணத்தை விரும்பி வாழ்வைக் குலைத்துக் கொள்கிறார்

என்று ஆசிரியர் நல்ல உவமை ஒன்றைக் கூறுகிறார். ஆசிரியரின் அடுத்த கேள்வி. குணத்தை விற்றுக் குரங்கு கொள்வாரோ? மக்கள் இனத்தைப் பிணி வாட்டுகிறது. செய்வதறியாது இருக்கிறோம் என்கிறார்.

## 5.20.3 நோய்க்கு அறிகுறிகள்

உணவிலே பெருவிருப்பம். ஒழுக்கம் மறத்தல், பெண்டுகள் மக்களை முறையாக வளர்க்காமை, தலை எழுத்து என வினை செய்யாமை முதலியன் நோயைத் தருவனவாகும்.

நாம் பிணியிலே பிறந்து, பிணியிலே வளர்ந்து பிணியிலே சாகின்றவர்களாக இருக்கிறோம். இருப்பினும் நாம் ஆடை அணிகளையே பெரிதாக மதிக்கிறொம்.

அறிவு, ஆசாரத்தில் நம் மனம் பற்றுக் கொள்ளவில்லை. அதுவே எல்லாம் கேட்டுக்கும் காரணமாகிறது. பணி செய்தலிலும் பணம் சேர்த்தலிலுமே வாழ்க்கையின் சுகம் இருப்பதாகக் கொண்டோம். பிள்ளைகளையும் பழக்கினோம். அதுவல்ல சிறந்த வாழ்க்கை. துணிவும், தூய்மையும் நன்னடத்தையும் ஒருங்கே அமையப் பெறவதே சிறந்த

வாழ்க்கையாகும். இனிமேலாவது நோயற்ற வாழ்க்கையைக் கருதுவோமாக என்கிறார் நாமக்கல் கவிஞர்.

குறிப்பு

## 5.21 பெ.தூரன்

## 5.22 கல்வி

இளம் வயதிலேயே தாயை இழந்த தூரன் செம்மாண்டம் பாளையத்தில் உள்ள தன் பாட்டி வீட்டில் வளர்ந்தார். மொடக்குறிச்சியில் தொடக்கக்கல்வி முடித்து ஈரோடு மாகாண உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புவரை படித்தார். அங்கு பணியாற்றிய தமிழாசிரியர் திருமலைசாமி ஐயங்கார் பாடம் கற்பிக்கும் நேரம் அல்லாமல் மற்ற நேரமும் மாணவர்களுக்குத் தமிழ் அறிவை ஊட்டுபவர். அவரால் எனக்குத் தமிழில் பற்றும் கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது” என்று கூறியுள்ளார் தூரன்.

தான் படித்த பள்ளியில் விடுதி வசதி இல்லாததால் ஒரு கன்னடிய நாயக்கர் வீட்டில் தங்கி உணவுண்டு படித்தார். மாணவப் பருவத்தில் ஈரோடு கருங்கல்பாளையம் நூலகம் சென்று ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் முதலியோர் எழுதிய புதினங்களைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டார். 1926 - 27இல் சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களை இடைநிலை (இன்டர்மீடியட்) வகுப்பில் பயின்றார். 1929ஆம் ஆண்டு இளங்கலை (பி.ஏ) கணித பட்ட வகுப்பில் சேர்ந்தார். 1931ஆம் ஆண்டு பட்ட வகுப்புத் தேர்வு எழுதாத போதும் கோபி செட்டி பாளையம் வைரவிழாப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார்.

பெரியசாமித்தூரனை தமது கல்லூரி மாணவப் பருவம் முதலான நண்பராகவும், பாரதி பாடல்களில் ஈடுபடுத்தியவராகவும், தமிழ்ப்பற்றை மேலும் தூண்டி வளர்த்ததாகவும் பத்மஸ்ரீ முனைவர் நெ.து.சுந்தரவடிவேலு குறிப்பிடுகின்றார்.

## 5.23 நாட்டுப்பற்று

தூரனின் பாட்டி அவரது மாணவப் பருவத்திலேயே இராட்டை ஒன்றை அளித்து அதில் நூல் நூற்கவும் கற்றுத் தந்தார். அந்த

குறிப்பு

இராட்டையில் நூல் நூற்று, பெரியார் தம் வீட்டிலேயே நடத்திய கதர்க் கடையில் நூல் சிட்டங்களைக் கொடுத்து கதர் வாங்கி அணிவதை வழக்கமாக்கிக் கொண்டார். சென்னையில் கல்லூரிக் கல்வி கற்கும் போதே உடன் பயின்ற மாணவர்களுடன் இணைந்து, 'வனமலர்ச் சங்கம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்து பாரதி பாடல்களைப் பரவலாக்கி, தேசியப் போராட்டத்துக்கு வலு சேர்த்தார். 'பித்தன்' என்ற மாத இதழை நடத்தவும் தூரன் காரணமாக இருந்தார்.

## 5.24 ஆசிரியப் பணி

1929 முதல் நான்காண்டுகள் கோபிசெட்டிபாளையம் வைரவிழா உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றினார். பிறகு போத்தனூரிலும், அதன் பின்னர் பெரியநாயக்கன் பாளையத்தில் இயங்கிய இராமகிருஷ்ணா வித்யாலயத்திலும் சேர்ந்து ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் 1948 வரை பணியாற்றினார். அப்போது சிலரிடம் நேரடியாக இசைப்பயிற்சி பெற்றார்.

## 5.25 கலைக்களஞ்சியம் வெளியிடல்

அப்போதைய தமிழகக் கல்வியமைச்சர் தி.சு.அவிநாசிலிங்கத்தின் முயற்சியால் தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. தன்னாட்சி உரிமை உடைய இக்கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட கலைக்களஞ்சியத்தின் ஆசிரியராக 1948ஆம் ஆண்டு பொறுப்பேற்று 1968 வரை 750க்கும் மேற்பட்ட பக்கங்களையுடைய பத்து தொகுதிகளை வெளியிட்டர். பிறகு 100 பக்கங்களையுடைய குழந்தைகள் கலைக்களஞ்சியம் பத்து தொகுதிகளை 1976 வரை வெளியிட்டார்.

## 5.26 இசை ஆர்வம்

இளம் வயதில் சிற்றப்பா அருணாசலக் கவுண்டர் கூறிய கதைகளும், மற்றொரு உறவினர் அருணாசலக் கவுண்டர் கற்றுக் கொடுத்த இசைப்பாடல்களும் தூரனுக்குக் கதையிலும் இசையிலும் ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தன. பிறவியிலேயே கவி உள்ளம் படைத்த தூரன் தமிழில் பாடல்கள் (கீர்த்தனைகள்) புனையத் தொடங்கினார். பிற்காலத்தில் இவரின் கீர்த்தனைகள், சுர,தாள இசைக்

குறிப்பு

குறிப்புகளுடன் தொகுதிகளாக வந்துள்ளன. தமிழகத்தின் மிகப்பெரிய இசைவாணர்கள் பலரும் தூரனின் பாடல்களை மேடையில் பாடியுள்ளனர். இசைக் கல்லூரிகளில் இவரின் பாடல்கள் சிலவற்றைப் பாடமாக வைத்துள்ளனர்.

## 5.27 இயற்றிய பாடல்கள் பட்டியல்

நான் ஒரு சிறு வீணை

## 5.28 பெற்ற விருது

1968ஆம் ஆண்டு பத்மபூஷன் விருது பெற்றார்.

## 5.29 வெளிவந்த நூல்கள்

### 5.29.1 உயிரியல் (மரபியல்)

- பாரம்பரியம் (1949)
- பெற்றோர் கொடுத்த பெருங்கொடை (1954)
- கருவில் வளரும் குழந்தை 1956

### 5.29.2 உளவியல

- குழந்தை உள்ளம் 1947
- குமரப் பருவம் 1954
- தாழ்வு மனப்பான்மை 1955
- அடிமனம் 1957
- மனமும் அதன் விளக்கமும் 1968
- குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும் 1953 (குழந்தை உள்ளம் நூலின் விரிவாக்கம்)
- மனம் என்னும் மாயக் குரங்கு 1956 (மனமும் அதன் விளக்கமும் நூலின் சுருங்கிய வடிவம்)

### 5.29.3 கதைத் தொகுதிகள்

- மாவிளக்கு

குறிப்பு

- உரிமைப்பெண்
- காலிங்கராயன் கொடை
- தங்கச்சங்கிலி, பிள்ளைவரம்
- தூரன் எழுத்தோவியங்கள்

### 5.29.4 கட்டுரைத் தொகுப்புகள்

- தேன்சிட்டு
- பூவின் சிரிப்பு
- காட்டு வழிதனிலே

### 5.29..5 மொழிபெயர்ப்பு நூல்கள்

- கானகத்தின் குரல்
- கடல் கடந்த நட்பு
- பறவைகளைப் பார்

### 5.29.6 நாடக நூல்கள்

- காதலும் கடமையும்
- அழகு மயக்கம்
- சூழ்ச்சி
- மனக்குகை
- ஆதிமந்தி
- பொன்னியின் தியாகம்
- இளந்துறவி

### 5.29.7 இசை நூல்கள்

- கீர்த்தனை அமுதம்
- இசைமணி மஞ்சரி
- முருகன் அருள்மணிமாலை
- நவமணி இசைமாலை
- இசைமணி மாலை

குறிப்பு

- கீர்த்தனை மஞ்சரி

### 5.29.8 கவிதை நூல்கள்

- இளந்தமிழா
- மின்னல்பூ
- நிலாப்பிஞ்சு
- தூரன் கவிதைகள்
- பட்டிப்பறவை

### 5.29.9 இவர் இயற்றிய பிற நூல்கள்

குழந்தைகளுக்குக் கதையாக, பாடலாக, நெடுங்கதையாக, அறிவியல் முறையில் 14 நூல்களைத் தூரன் இயற்றியுள்ளார். சுப்பிரமணிய பாரதியின் படைப்புகள் பற்றிப் பதினொரு நூல்கள் எழுதியுள்ளார். உளவியல், தத்துவம் தொடர்பாக ஒன்பது நூல்கள் எழுதியுள்ளார்.

### 5.29.10 நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

- நவமணி இசைமாலை
- மின்னல் பூ
- இளந்தமிழா

போன்ற 66 நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

### 5.30 விருதுகளும் சிறப்புகளும்

- பத்மபூஷன் விருது (இந்திய அரசு)
- கலைமாமணி விருது (தமிழக அரசு)
- இசைப் பேரறிஞர் விருது, 1972, தமிழ் இசைச் சங்கம், சென்னை
- 2008இல் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை தனது ஆண்டு விழாவை பெ.தூரன் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடியது.

குறிப்பு

- தமிழக அரசு அவருடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக்கியுள்ளது.

## 5.31 பாடல் 3 நிலாப்பிஞ்சு

பின்னற் கொடியதனில் மிகநயமாய்த் தறித்தெடுத்த
வன்னச் சிறுவளைவாய் மயங்கந்தி மேல்வானில்
விஞ்சைக் கனவைப் போல் வேளுக்குப்புது வில்போல்
பிஞ்சுப் பருவத்தின் பேசரிய அதிசயத்தால்
அன்னை முகநோக்கும் அருங்குழவி யென வுலகந்
தன்னை யெட்டியெட்டிப் பார்க்கும் தளிர்க்கீற்றே
காதலனைச் சந்திக்கக் கதிர்மறைவில் வந்தகன்னி
பாதைமுனை அவன்வரவைப் பார்த்தங்கு புதர்ச்செறிவில்
விளையாட்டாய்ப் போயொளிக்கும் வேளையிலே
உளம்பொங்கி
முளைகாட்டும் புன்சிரிப்பை மோனவெளி நீலத்தில்
வீசிவிட்டுச் சென்றதுபோல் விளங்குகின்ற நிலாப்பிஞ்சே
ஆசையற்றுத் தோலுடுத்து அரவுபுனை சிவனார்க்கும்
இத்தனை பேரெழிலுடன் நீ இருப்பதனால் சிரமணிய
மெத்தவுமோர் பேராசைப் பித்தமெழல் வியப்பாமோ
கலைமலரும் மெல்லரும்பே கவிஞனுளக் கற்பனையின்
உலையொளிர வருகின்றாய் உனைக் காணும் போதெல்லாம்
வளர்ச்சியிலும் பூரணமாம் மலர்ச்சியிலும் புதியதொரு

தளர்ச்சியிலா நம்பிக்கை தழைத்தோங்கும் என்னுளத்தே.

குறிப்பு

## 5.32 பாடல் விளக்கம்

பெ.தூரன் அவர்கள் பிஞ்சு நிலாவை நிலாப்பிஞ்சு எனப் பாடுகிறார். மின்னற்கொடியில் சிறுவளைவாகத் தறித்தெடுக்கப் பெற்றது. இந் நிலாப் பிஞ்சு. அதனால் மனிதனுக்குப் புதுவில் போலத் திகழ்கிறது.

பெ.தூரன் புது உவமை ஒன்று படைக்கிறார். அன்னை முகம் நோக்கும் குழவி போலச் சந்திரன் உலகை எட்டி எட்டிப் பார்க்கிறதாம். அறிவியல் ரீதியாகச் சந்திரன் பூமித்தாயின் குழந்தை தான் பூமியைத் தான் சுற்றிச் சுற்றி வரும்.

### 5.32.1 பிறைநிலவில் புன்னகை

மாலையிலே காதலன் வரவை எதிர்நோக்குகிறாள் கன்னி ஒருத்தி. பாதையிலே முனையிலே அவன் வரவைப் பார்த்ததும் உளம் பூரிக்கிறாள். புதர்ச் செறிவில் மகிழ்ச்சியோடு மறைகின்ற அவள் புன்னகை சிந்துகிறாள். அது போலப் பிறை நிலவே நீ விளங்குகிறாய் எனக் கவிஞர் பாராட்டுகிறார். ஆசையற்றவன் சிவன், தோலாடை உடுத்து அரவு புனைந்தவன். உன் அழகன்றோ அவனையும் மயக்கிச் சிரத்தில் அணிய வைத்தது. கலை கலையாக மலரும் அரும்பே கவிஞனுக்குக் கற்பனை தரும் நிலவே உன்னைக் காணும் போதெல்லாம் உன் வளர்ச்சியும் மலர்ச்சியும் எனக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது.

தனக்கு நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாகப் பிறைநிலவைக் கருதுகிறார் பெ.தூரன் அவர்கள்.

## 5.33 நிறைவாக

பாரதிதாசன் பாரதியார் மீது கொண்ட அன்பினால் தன் இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்ற பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். சிறு வயது முதலே கவி பாடும் திறன் உடையவர். அவர் பெரியாரிடம் பேரன்பு கொண்டவர். பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையின்படி வாழ்ந்து வந்தவர். இப்பகுதியில் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரின் படைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள உலகப்பன் பாட்டு செல்வர்களின் நிலையையும், ஏழை மக்கள் வறுமையில் வாடுவதையும் ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

குறிப்பு

நாமக்கல் கவிஞர் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர். ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்தவர். இவர் குழந்தைப் பருவத்திலேயே சிறந்த அறிவாளியாக இருந்தவர். ஓவியத்தில் மிகுந்த நாட்டமுடையவர். இவர் கவிதை, உரைநடைக் கட்டுரைகள், புதினம் ஆகியவற்றைப் படைத்துள்ளார். இப்பகுதியில் நாமக்கல் கவிஞரின் வாழ்க்கை வரலாறும், அவரின் படைப்புகளும் இடம்பெற்றுள்ளன. இவரின் படைப்புகளில் ஒன்றான நோயற்ற வாழ்வு என்னும் பகுதியில் மக்கள் நோயின்றி நீண்ட நாள் வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

பெ.தூரன் என்பவர் பெரியசாமித் தூரன் என்று அழைக்கப்படுகிறார். இவர் சிறு வயதிலேயே கதர் ஆடை அணிவதில் பெருவிருப்பம் கொண்டவர். இசையார்வம் அதிகம் மிக்கவர். ஆதலால் பாடல்களை ராக தாள நயங்களுடன் பாடுபவர். இவருடைய வாழ்க்கை வரலாறும் படைப்புகளும் இப்பகுதியில் அமைந்துள்ளன. இப்பகுதியில் நிலாப்பிஞ்சு என்பது பாடமாக அமைந்துள்ளது. இயற்கை மீது கொண்ட அளவற்ற ஆசையின் காரணமாக நிலாவையே இளம் பிஞ்சாகக் கொண்டு பாடிய பாடல்கள் நம் மனதை மயக்குவதாக அமைகின்றன.

## 5.34 சோதித்தறியும் வினா

1. பாரதிதாசன் பற்றிக் குறிப்பு வரைக

பாரதிதாசன் ஏப்ரல் 29ஆம் நாள் பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) பிறந்து பெரும்புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் புதுவையில் பெரிய வணிகராயிருந்த கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு பிறந்தார். பாரதிதாசன் 21.4.1964 அன்று காலமானார்.

2. பாரதிதாசன் படைப்புகளைக் கூறுக

- அம்மைச்சி (நாடகம்)
- உயிரின் இயற்கை, மன்றம் வெளியீடு
- உரிமைக் கொண்டாட்டமா? குயில்
- எது பழிப்பு, குயில்
- கடவுளைக் கண்டீர், குயில்
- கழைக்கூத்தின் காதல் (நாடகம்)
- கலை மன்றம்
- கற்புக் காப்பியம், குயில்
- சத்திமுத்தப் புலவர் (நாடகம்)
- நீலவண்ணன் புறப்பாடு
- பிசிராந்தையார் (நாடகம்) பாரிநிலையம்
- பெண்கள் விடுதலை
- விடுதலை வேட்கை
- வீட்டுக் கோழியும், காட்டுக் கோழியும், குயில்
- ரஸ்புடீன் (நாடகம்)
- திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் ஐந்து கட்டளைக் கலித்துறை பாடலையும் எழுதியுள்ளார்.

குறிப்பு

3. ஓடப்பர், உயரப்பர் என்று பாரதிதாசன் யாரைக் கூறுகிறார்.

பாரதிதாசன் ஓடப்பர் என்று வறுமை நிலையில் வாடுவோரையும், உயரப்பர் என்று செல்வந்தர்களையும் குறிப்பிடுகிறார்.

4. நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை குறிப்பு எழுதுக

தந்தை வெங்கடராமப் பிள்ளை, தாய் அம்மணி அம்மாள் ஆகிய இருவருக்கும் 19.10.1888இல் நாமக்கல்லில் பிறந்தார்.

இளம் வயதில் மிகுந்த வறுமையில் வாழ்ந்து வந்தார். இவர் ஏழு பெண் குழந்தைகளுக்குத் தந்தை. ஒருமுறை, வெங்கட்ராமர், தம் வேலை தொடர்பாக, காவல் துறை ஆய்வாளர் ஒருவரைப் பார்க்க வந்திருந்தார். ஆய்வாளரின் மூன்று வயது ஆண் குழந்தை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. அந்த வழியே வந்த குதிரை வண்டி ஒன்றின் கீழ்க் குழந்தை அகப்பட்டுக்கொண்டது. வண்டிக்காரன் வண்டியை நிறுத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த வெங்கட்ராமர்

ஒரே தாவாகத் தாவிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டார். அவ்வண்டியில் வந்தவர் ஆய்வாளர் சுந்தராசுலு. தான் தன் குழந்தையைக் காப்பாற்றிய வெங்கட்ராமரைப் பாராட்டி அவருக்கு காவல்துறை பணிக்குப் பரிந்துரைத்தார். அந்த வேலையில் சேர்ந்த வேங்கட்ராமர் பின் தலைமைக் காவலராகப் பதவி உயர்வு பெற்றார். இந்தச் சூழலில்தான் வெங்கட்ராமருக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்.

5. நாமக்கல் கவிஞரின் கவிதை நூல்கள் யாவை?

- தேசபக்திப் பாடல்கள், 1938
- பிரார்த்தனை, 1938
- தமிழன் இதயம், 1942
- காந்தி அஞ்சலி, 1951
- சங்கொலி, 1953
- கவிதாஞ்சலி, 1953
- மலர்ந்த பூக்கள், 1953
- தமிழ்மணம், 1953
- தமிழ்த்தேன், 1953
- நாமக்கல் கவிஞர் பாடல்கள், 1960
- அவனும் அவளும்

6. நாமக்கல் கவிஞர் மதி, விதி என்று எதனைக் குறிப்பிடுகிறார்?

நடைப்பிணம் போல் மனித சமுதாயம் திகழ்ந்தால் அது மடமையோ மதியோ ஆகாது. அது விதி என்று நாம் எளிதில் சொல்லி விடுவோம். ஆனால் விதி என்று சொல்லி நாம் நினைத்து விட்டால் மதியினால் என்ன பயன் என்று குறிப்பிடுகிறார்.

7. பெ.தூரன் பற்றிக் குறிப்பு வரைக

பழனிவேலப்பக் கவுண்டர் பாவாத்தாள் ஆகியோருக்கு மகனாக செப்டம்பர் 26,1908ஆம் ஆண்டு தமிழ்நாடு, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சிக்கு அருகிலுள்ள மஞ்சக் காட்டு வலசு என்ற ஊரில் பிறந்தார். கொங்கு நாட்டவரின் வரலாற்று நாயகர்களான அண்ணன்மார்,

பொன்னர் - சங்கர் இருவரும் பெரியசாமி என்று அழைக்கப்பட்டனர். மேழிப்பள்ளி பொன்னர் நினைவால் இவருக்குப் பெரியசாமி என்று பெயர் வைத்தனர். இவர், கொங்கு வேளாளரின் "தூரன்" குலத்தைச் சார்ந்தவர் என்பதால் தன் பெயரோடு "தூரன்" என்று சேர்த்துக் கொண்டார். மஞ்சக்கட்டு வலசு பெரியசாமித்தூரன்" என்பதன் சுருக்கமே ம.ப.பெரியசாமித்தூரன் ஆகும்.

1980ஆம் ஆண்டு கடுமையான வாத நோயால் வாடியவர். 1987ஆம் ஆண்டு சனவரி 20ஆம் நாள் மறைந்தார்.

8. பெ.தூரனின் இசையார்வத்தைக் கூறுக

இளம் வயதில் சிற்றப்பா அருணாசலக் கவுண்டர் கூறிய கதைகளும், மற்றொரு உறவினர் அருணாசலக் கவுண்டர் கற்றுக் கொடுத்த இசைப்பாடல்களும் தூரனுக்குக் கதையிலும் இசையிலும் ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது. பிறவியிலேயே கவி உள்ளம் படைத்த தூரன் தமிழில் பாடல்கள் (கீர்த்தனைகள்) புனையத் தொடங்கினார். பிற்காலத்தில் இவரின் கீர்த்தனைகள், சுர,தாள இசைக் குறிப்புகளுடன் தொகுதிகளாக வந்துள்ளன. தமிழகத்தின் மிகப்பெரிய இசைவாணர்கள் பலரும் தூரனின் பாடல்களை மேடையில் பாடியுள்ளனர். இசைக் கல்லூரிகளில் இவரின் பாடல்கள் சிலவற்றைப் பாடமாக வைத்துள்ளனர்.

9. பெ.தூரன் தளிர்க்கீற்று என்று எதனைக் குறிப்பிடுகிறார்?

பெரியசாமி தூரன் அன்னை முகம் நோக்கும் அழகான குழந்தை போல வானின் மேகத்தில் எட்டி எட்டிப் பார்க்கும் தளிர்க்கீற்று என்று இளம் நிலாவைக் குறிப்பிடுகிறார்.

## 5.35 பயிற்சி வினா

1. பாரதிதாசன் இயற்றிய உலகப்பன் பாடற்கருத்துக்களைக் கூறுக

2. நாமக்கல் கவிஞரின் நோயற்ற வாழ்வு பற்றிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க

3. பெ.தூரனின் நிலாப்பிஞ்சு என்ற கவிதையில் இடம்பெறும் இயற்கை வருணனைகளைக் கூறுக.

குறிப்பு

## 5.36 பொருளறிக

சுகித்திருக்க – சுகமாய் இருக்க, சித்தம் - அறிவு, சொப்பனம் - கனவு, நித்தம் - தினமும், உண்டி – உணவு, குழவி – குழந்தை, பூரணம் - முழமை

## 5.37 மேலும் படித்தறிக

1. பாரதிதாசன் கவிதைகள், பாரதி புத்தகாலயம், சென்னை

2. நாமக்கல் கவிஞர் கவிதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

3. பெ.தூரன், நினைவு அலைகள், சாந்தா பதிப்பகம் (ப.618)

4. தினமணி நாளிதழில் எழுதப்பட்ட ஒரு இசை விமர்சனக் கட்டுரை (http://dinamani.com/music/article 1)

## பிரிவு – 2 (தொடர்ச்சி)

**கூறு 6**

| | | | |
|---|---|---|---|
| **1.** | **வல்லிக் கண்ணன்** | - | வெறும் புகழ் |
| **2.** | **கு.ப.இராஜகோபாலன்** | - | எதற்காக? |
| **3.** | **மீரா** | - | பதினைந்து |

6. பாட அமைப்பு

6.1 அறிமுகம் -

6.1.1 வல்லிக்கண்ணன்,

6.1.2 கு.ப.இராஜகோபாலன்,

6.1.3 மீரா

6.2 நோக்கம்

குறிப்பு

6.3 வல்லிக்கண்ணன் வாழ்க்கைக் குறிப்பு

6.3.1 பள்ளிப்பருவம்

6.3.2 பத்திரிகை அறிமுகம்

6.3.3 இலக்கிய ஆர்வமும் பத்திரிகைப் பணியும்

6.3.4 அரசுப் பணியாற்றிய அனுபவம்

6.4 பாடல் 1 வெறும் புகழ்

6.4.1 பாடல் விளக்கம்

6.5 கு.ப.ராஜகோபாலன் வாழ்க்கைக் குறிப்பு

6.5.1 பள்ளிப்படிப்பு

6.5.2 திருமணம்

6.5.3 அரசுப்பணி

6.5.4 எழுத்துப்பணி

6.5.5 கு.ப.ராவின் படைப்புகள்

6.6 பாடல் 2 எதற்காக

6.6.1 பாடல் விளக்கம்

6.7 மீராவின் வாழ்க்கைக் குறிப்பு

6.7.1 கல்வி

6.7.2 பணி

6.7.3 ஈடுபாடு

6.7.4 படைப்புகள்

6.7.5 விருதுகள்

6.7.6 குறும்பாக்கள்

6.7.7 குக்கூ

6.7.8 கவிதைக்கலை

6.7.9 சிறப்புகள்

6.7.10 மீராவின் தனித்துவம்

6.8 பாடல் 3 பதினைந்து

6.8.1 பாடல் விளக்கம்

6.9 நிறைவாக

6.10 பொருளறிக

6.11 சோதித்தறியும் வினா விடைகள்

6.12 பயிற்சி வினா

6.13 மேலும் படித்தறிக

## 6.1 அறிமுகம்

குறிப்பு

### 6.1.1 வல்லிக்கண்ணன்

வல்லிக்கண்ணன் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் திசையன்விளை என்ற கிராமத்தில் 12.11.1920 அன்று பிறந்தார். தந்தையார் ரா.மு.சுப்பிரமணிய பிள்ளை, தாயார் மகமாயி அம்மாள். நடுத்தரமான சைவ வேளாளர் மரபைச் சார்ந்தவர். இவர் பிறந்த உடன் இவருக்குப் பெற்றோர்கள் கோபாலகிருஷ்ணன் என்று தான் பெயர் சூட்டினார்கள். ஆனால் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கும் போது இவர் பெயரை கிருஷ்ணசுவாமி என்று இவர் தந்தை பதிவு செய்து விடுகிறார். வல்லிக்கண்ணன் என்பது இவரின் புனைபெயராகும். இவருடைய தந்தையார் உப்பளங்களை ஆய்வு செய்யும் ஆய்வாளராகப் பணியாற்றினார். வல்லிக்கண்ணனின் பத்தாவது வயதில் அவர் தந்தை இறந்து விட்டதால் தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார். இவருக்கு உடன்பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்களும் ஒரு தம்பியும் ஆவர். இவர், இவரின் தாய்க்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். தந்தையார் உப்பளங்களை ஆய்வு செய்யும் ஆய்வாளராக அரசுப் பணியில் இருந்ததால், ஊர் ஊராகச் மாறுதலாகிச் செல்லும் நிலையில் இருந்தார். 1939இல் இவர் தன் பெயரை வல்லிக்கண்ணன் என்று மாற்றிக் கொண்டார்.

### 6.1.2 கு.ப.ராஜகோபாலன்

கு.ப.ராஜகோபாலன் கும்பகோணத்தில் ஜனவரி 1902இல் பிறந்தவர். அவருடைய பெற்றோர் பட்டாபிராமையர், ஜானகி அம்மாள்.

### 6.1.3 மீரா

மீரா என்ற மீ.ராஜேந்திரன் 10.10.1938ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தவர். பெற்றோர் மீனாட்சி சுந்தரம் - இலட்சுமி அம்மாள். இளம் பருவத்தில் பர்மாவில் வளர்ந்தார். 1.9.2002இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## 6.2 நோக்கம்

குறிப்பு

வல்லிக்கண்ணன், கு.ப.ரா, மீரா போன்ற எழுத்தாளர்கள் சிறு வயது முதலே இலக்கியத் துறையிலும், பிற துறைகளிலும் சாதனை செய்து வந்துள்ளனர். வறுமையோ, துன்பமோ அவர்களின் எழுத்துப் பணியைச் சிதைத்ததில்லை. எழுத்துப் பணி மேல் ஆர்வம் கொண்டு விடாமுயற்சியுடன் அவர்கள் செய்த இலக்கியப் பணிகள் ஏராளம். இவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், சாதனைகளும் மாணவர்களுக்குச் சிறந்த பாடமாக அமைய வேண்டும் என்பது நோக்கமாகும்.

## 6.3 வல்லிக்கண்ணன் வாழ்க்கைக் குறிப்பு

### 6.3.1 பள்ளிப் பருவம்

வல்லிக்கண்ணன் ஐந்தாம் வயதை எட்டியவுடன் கோவில்பட்டியில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இவரின் கல்விப் பயணம் ஆரம்பித்தது. சில மாதங்கள் மட்டும் அங்குள்ள அண்ணாவிடம் எழுத்துப் பயிற்சி பெற்றுக் கொண்டார். பிறகு அருகில் இருந்த ஒரு துவக்கப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுகிறார். 1926 முதல் ஸ்ரீவைகுண்டம் அருகில் உள்ள பெருங்குளம் என'ற ஊரில் இரண்டு, மூன்றாம் வகுப்பு வரை கல்வி கற்றார். நான்காம் வகுப்பை திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் முடிக்கிறார். ஐந்தாம் வகுப்பு முதல் பள்ளி இறுதித் தேர்வு (S.S.L.C) முடிய பாளையங்கோட்டை தூய சவேரியார் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். 1936இல் பள்ளிப்படிப்பை முடித்த பிறகு சொந்த ஊரான ராஜவல்லிபுரத்திற்குத் திரும்பினார். அங்கு தன் தாயாருடன் சுமார் இருபது மாதங்கள் தங்கினார்.

### 6.3.2 பத்திரிக்கை அறிமுகம்

சிறு பத்திரிக்கையுடனான அறிமுகம் வல்லிக்கண்ணனுக்குச் சிறு வயது முதலே கிடைத்து விடுகிறது. நான்காம் வகுப்பு படிக்கும் போது பரலி சு.நெல்லையப்பரின் ‘லோபகாரி’ என்ற சிற்றிதழும்,

'ஒற்றுமை' என்ற மாதப் பத்திரிகையும் அண்டை வீட்டுக்காரர்களால் இவருக்குப் படிக்கக் கிடைக்கிறது. இவ்வாறு பத்திரிக்கை வாசிக்கும் பழக்கம் தொடர்கிறது.

குறிப்பு

### 6.3.3 இலக்கிய ஆர்வமும் பத்திரிகைப் பணியும்

சிறு வயது முதலே துணிக்கடை மறியல், அந்நியத்துணி எரிப்பு போன்ற சத்தியாகிரகப் போராட்டங்களை நேரில் காணும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. திருநெல்வேலியில் சத்தியமூர்த்தி, சோமயாஜுலு, திரிகூட சுந்தரம்பிள்ளை போன்ற சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் பேசும் பேச்சுக்களைக் கேட்கும் சந்தர்ப்பமும் சிறு வயதிலேயே கிடைத்தது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டங்களில் முதலில் மகாகவி பாரதியாரின் சுதந்திரப் பாடல்களைப் பாடுவார்கள். அதிலிருந்து பாரதியாரின் பாடல்கள் மீது ஆர்வம் கொண்டு அவற்றைப் படித்தார். மேலும் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் போன்றவற்றினையும் தொடர்ந்து படித்துக் கொண்டு வந்தார். நா.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், பி.எஸ்.ராமையா, மௌனி முதலியவர்களின் கதைகள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. இத்தகைய கதைகளைப் போல தாமும் எழுத வேண்டும் என்று நினைத்து 'வ.க'வும் சிறுகதைகள் சிலவற்றை எழுதத் தொடங்கினார். அதை 'இதயஒலி' என்ற பெயரில் தானே ஒரு கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கி அதை மாத இதழாக வெளிவரும்படிச் செய்தார். அந்தப் இதழில் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் என்று அனைத்தையும் இவரே எழுதினார். இவ்வாறு இவர் பத்திரிகைப் பணியும், இலக்கியப் பணியும் தொடர்ந்தது. நாவல், சிறுகதை, குறுநாவல், கட்டுரை என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

இவர் பெரிய மனுஷி என்ற சிறுகதை எழுதியுள்ளார். இச்சிறுகதை அனைத்து இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இவர் எழுதிய வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்

துறையின் 2002ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்கள் பட்டியலில் இடம்பெற்றுப் பரிசு பெற்றிருக்கிறது.



### 6.3.4 அரசுப் பணியாற்றிய அனுபவம்

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் அலுவலகத்தில் ஸ்டோர்கீப்பர் என்ற அரசுப் பணியில் பணிபுரிந்தார். அரசுப் பணியில் பணிபுரிந்தாலும் பத்திரிகைகளுக்குத் தன் படைப்புகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். அரசுப் பணியில் உள்ளவர்கள் வேறு எந்தப் பணியும் செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடவும் தன் வேலையை இராஜினாமா செய்து விட்டு பத்திரிகைத் துறையிலே தன் முழுநேரப் பணியை மேற்கொண்டார்.

## 6.4 பாடல் 1 வெறும் புகழ்

வெறும் புகழ்

பார்க்கப் போனால்

வெறும் புகழில்

என்ன இருக்கிறது

புகழ் ஒரு வேசி

ஏஏய் வேசியாவது

காசு சம்பாதிப்பாள்

கிராக்கி வராதபோது

இன்பம் தருவாள்

வெறும் புகழ்

என்ன தர முடியும்

காப்பி தாகம்

மனசை வறட்டுது

குறிப்பு

புகழைக் குடிக்க முடியுமா

பசி வேட்டை நாயென
குடலைக் குதறுது
புகழ் தீனி ஆகுமா
கண்டதும் கவரும்
பண்டமும் பகட்டும்
கண்ணில் பட்டால்
ஆசை தூண்டுது
வாங்கி மகிழ் என
மணிப் பர்ஸ் காலி
புகழைக் கொண்டு
பணப்பை ரொம்புமா

உள்ளத்தில் அரிப்பு
ஊர் சுற்ற வேணும்
சட்டையோ கிழிசல்
அணிய முடியுமா

தெருவில் போனால்
தார் ரோடு பொசுக்குது
புகழ் செருப்பு ஆகுமா
கடும் வெயில் தாக்கி
மூளை குழம்புது காத்திட
புகழ் என்ன குடையா

குளிர் இரவில்

பனிக் காற்று

உடலை வாட்டுது

புகழ் போர்வை இல்லையே

பார்க்கப் போனால்

வெறும் புகழில்

என்ன இருக்கிறது



### 6.4.1 பாடல் விளக்கம்

இப்பாடலில் கவிஞர் அன்றாட வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறார். தாகம் எடுக்கிறது. பசி எடுக்கிறது. ஊர் சுற்ற ஆசை பொங்குகிறது. கடும் வெயில் தலையில் சுடுகிறது. காலைப் பொசுக்குகிறது. பனிக்காற்று உடலை வாட்டுகிறது. இவற்றில் இருந்து எல்லாம் நம்மைக் காக்க வேண்டும். அது நம் கடமை. வேண்டும்போது காபி அருந்த வேண்டும். போர்வை வேண்டும். இதற்கெல்லாம் காசு வேண்டும். காசு இல்லாத போது வாழ்க்கையே நரகமாகி விடுகிறது. வெறும் புகழால் என்ன பயன் என்று கவிஞர் வருந்துகிறார். புகழும் தேவை. ஆனால் அதற்கு மேல் பணமும் தேவை. இந்த யதார்த்தத்தைக் கவிஞர் கவிதையில் உணர்த்துகிறார். பசியை வேட்டை நாயொடு உவமிப்பது சிறப்புடையது.

## 6.5 கு.ப.ராஜகோபாலன் வாழ்க்கைக் குறிப்பு

### 6.5.1 பள்ளிப்படிப்பு

கு.ப.ரா திருச்சி கொண்டையம்பேட்டைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியும், தேசியக் கல்லூரியில் இடைநிலை (இண்டர்மீடியட்) கல்வியும் பெற்றார். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் வடமொழியைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.

### 6.5.2 திருமணம்

குறிப்பு

கு.ப.ரா தனது 24ஆம் வயதில் அம்மணி அம்மாளை மணந்தார்.

### 6.5.3 அரசுப்பணி

மதுரை மாவட்டம் மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கணக்கராகப் பணியாற்றினார் கண்புரை நோயின் காரணமாக கண்பார்வை குன்றியதால் அப்பணியில் இருந்து விலகினார்.

### 6.5.4 எழுத்துப் பணி

கு.ப.ரா அரசுப்பணியைத் துறந்து தன் முழு நேரத்தையும் இலக்கியம் எழுதுவதில் ஈடுபட்டார். கண் பார்வை குன்றிய நிலையிலும் மணிக்கொடி போன்ற இதழ்களில் அவர் இலக்கியப் படைப்புகளை எழுதி வெளியிட்டார்.

மருத்துவ சிகிச்சைக்குப் பின் கண்பார்வை மீண்டும் கிட்டியது. சென்னைக்கு இடம்பெயர்ந்து முழுநேர எழுத்தாளராக மாறினார். மணிக்கொடி, கலைமகள், சுதந்திர சங்கு, சூறாவளி, ஹனுமன்,

ஹிந்துஸ்தான் போன்ற இதழ்களில் அவரின் படைப்புகள் வெளியாயின. வ.ராமசாமி ஆசிரியராக இருந்த ‘பாரத தேவி’ என்ற இதழிலும், கா.சீ.வெங்கடரமணி நடத்திய ‘பாரத மணி’ இதழிலும் சிலகாலம் பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின் போது கும்பகோணத்துக்கு மீண்டும் திரும்பி ‘மறுமலர்ச்சி நிலையம்’ என்ற பெயரில் புத்தக நிலையம் ஒன்றை நடத்தினார். 1943ஆம் ஆண்டு கிராம ஊழியன் இதழின் சிறப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். அதற்கு அடுத்த

ஆண்டு அவ்விதழின் ஆசிரியரானார். ஆனால் இதய அழுகல் நோயால் தாக்கப்பட்டு 1944ஆம் ஆண்டு இறந்தார்.



### 6.5.5 கு.ப.ராவின் படைப்புகள்

கு.ப.ரா தனது இயற்பெயரிலும், 'பாரத்வாஜன்', 'கரிச்சான், 'சதயம்' போன்ற புனைபெயர்களிலும் படைப்புகளை வெளியிட்டார்.

- அகலியை (13 ஓரங்க நாடகங்களின் தொகுப்பு)
- கண்ணன் என் கவி (சிட்டி பெ.கோ.சுந்தரராஜனுடன்) இணைந்து எழுதிய இலக்கியத் திறனாய்வு நூல்)
- பாரதியே மகாகவி (சிட்டியுடன் இணைந்து எழுதிய நூல்)
- ஆறு நவயுக நாவல்கள்
- ஸ்ரீஅரவிந்த யோகி
- டால்ஸ்டாய் வாழ்க்கையும் உபதேசமும்
- வேரோட்டம் (முற்றுப்பெறவில்லை)

கு.ப.ரா என்று பரவலாக அறியப்பட்ட கு.ப.ராஜகோபாலன் சிறுகதை, நாவல், கவிதை, வசன கவிதை, ஓரங்க நாடகம், திறனாய்வு, வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு எனப் பல வகைப்பட்ட படைப்புகளை அளித்தவரெனினும் அவரின் சிறுகதைகளின் சிறப்பினால் 'சிறுகதை ஆசான்' என்று அழைக்கப்பட்டார்.

## 6.6 பாடல் 2 எதற்காக

பாம்பே படமெடுத்து நீ ஏன் இப்படி

மகுடிமன் மெய்மறந்து ஆடுகிறாய்

பாம்பாட்டிக்குப் பிழைப் பளிக்கவா

இல்லை, இல்லை

ஆடியாடியுன் ஆவலைத் தீர்த்துக் கொள்ள

ராதே, குழலோசை கேட்டேன் நீ

காதல் கொண்டு கானமெல்லாம் ஓடுகிறாய்
கண்ணுக்குள் கண்ணோக்கின்ப மளிக்கவா



இல்லை, இல்லை
ஓடி ஓடி உன் உள்ளப் பூரிப்பைக் கொட்ட
பெண்ணே, புருஷனுக்கேன் இப்படிப் பணிந்து
அடிமை போல் இட்டதெல்லாம் செய்கிறாய்
பண்ணு என்று சொல்லும்
புருஷனுக் கஞ்சியா
இல்லை, இல்லை
இட்டதைத் செய்து செய்து
உணர்ச்சியை அடக்க

சிறிது வெளிச்சம் என்ற கு.ப.ராவின் நூலிலிருந்து இப்பாடல் தரப்பட்டுள்ளது.

### 6.6.1 பாடல் விளக்கம்

சிறுகதை உலகில் நிலையான இடம்பெற்றவர்களில் ராஜகோபாலனும் ஒருவர். குடும்ப வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அவர் கதைகள் நன்றாகக் காட்டுவன. உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர். விடியுமா என்ற கதை பொழுது விடிவதையும் அவள் வாழ்க்கை விடியாததையும் சொல்கிறது. கிராமத்துச் சூழ்நிலை அவருக்குப் பிடித்தது. திரை என்ற கதையில் இளம்விதவை தன் உடன் பிறந்தாளுக்காக வாழ்வதை அருமையாகச் சித்தரிக்கிறார்.

எதற்காக என்ற இந்தக் கவிதையில் கவிஞர் கு.ப.ராஜகோபாலன் புதிய சிந்தனைகளைத் தருகிறார். மகுடிமுன் பாம்பு மெய்மறந்து ஆடுகிறது. மகுடி இசை பாம்பை ஆட்டுவிக்கிறது. அந்த ஆட்டம்

பாம்பாட்டிக்கு வாழ்வு அளிப்பதற்குத்தான். ஆனால் கவிஞர் அதை மறுத்து பாம்பின் ஆடும் ஆவலைத் தீர்த்துக் கொள்ள என்கிறார்.

குழலோசை கேட்ட ராதை கண்ணனைக் காணக் கானகமெல்லாம் ஓடுகிறாள். கண்ணனைக் காண்பதுவும் அவள் நோக்கம். உள்ளப் பூரிப்பை வெளிப்படுத்துவதும் அவள் நோக்கம். கண்ணனுக்குப் பார்வையால் இன்பம் தருவது என்பதைக் கவிஞர் மறுக்கிறார்.

பண்ணு என்னும் கணவனுக்கு அஞ்சியா மனைவி பணிவிடைகள் செய்கிறாள். இல்லை என்கிறார் கவிஞர். அவள் உணர்ச்சிகளை அடக்க அவ்வாறு செய்கிறாள் என்கிறார். எதற்காக என்பது கவிஞரின் புதிய சிந்தனை ஆகும்.

## 6.7 மீராவின் வாழ்க்கைக் குறிப்பு

### 6.7.1 கல்வி

மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டம் பெற்றார். கவிஞர் அப்துல் ரகுமான் இவரது வகுப்புத் தோழர் மற்றும் கவிதை நண்பர்.

### 6.7.2 பணி

1962 முதல் சிவகங்கை மன்னர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி தொடங்கினார். முதல்வர் பொறுப்பு வரை உயர்ந்து ஓய்வு பெற்றார்.

### 6.7.3 ஈடுபாடு

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தந்த பகுத்தறிவு, அறிஞர் அண்ணாவின் இயக்கம் தந்த தமிழ்மொழிக் காதல், அறிஞர்

காரல் மார்க்சின் பொதுவுடைமைச் சித்தாந்தம் இவை மூன்றின் சங்கமம் கவிஞர் மீரா.

குறிப்பு

### 6.7.4 படைப்புகள்

மீ.ராசேந்திரன் என்ற பெயர் கவிதைக்காக மீரா ஆனது. இராசேந்திரன் கவிதைகள் (1965), மூன்றும் ஆறும் (1967), கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் (1971), ஊசிகள் (1974), கோடையும் வசந்தமும் (2002), குக்கூ (2002) ஆகியவை இவருடைய கவிதை நூல்கள். பல உரைநடை நூல்களும் படைத்துள்ளார்.

### 6.7.5 விருதுகள்

சிற்பி கவிதை விருது. கவிக்கோ விருது முதலிய பல விருதுகள் பெற்றார்.

### 6.7.6 குறும்பாக்கள்

மீராவையும் லிமரிக் கவிதை கவர்ந்தது. ஆனால் அந்த வடிவத்தை விட்டுவிட்டு உள்ளடக்கத்தை மட்டும் உள்வாங்கி தமிழில் எழுதினார். அதனால் இவருடைய ஊசிகள் நூல் மீராவின் தனித்தன்மை கொண்ட புதுக் குறும்பாக்கள் தொகுப்பாக ஒளி வீசுகிறது.

### 6.7.7 குக்கூ

ஹைக்கூ என்னும் ஜப்பானியக் கவிதை வடிவத்தை அப்படியே தமிழில் பின்பற்ற முயன்று பலர் எழுதியுள்ளனர். மீரா அதிலும் வடிவத்தைப் பின்பற்றாமல், தம் தனித்தன்மையுடன் எழுதிக் குக்கூ என்ற நூலைப் படைத்தார். இந்தக் கவிதைகளில் பல 'லிம்ரிக் தன்மையுடன் உள்ளன. நகைச்சுவை நடை, விமரிசனச் சொடுக்கு, சிந்தனை நறுக்கு இவற்றால் மீராவின் குறும்பாக்களாகவே விளங்குகின்றன.

### 6.7.8 கவிதைக்கலை

குறிப்பு

மீராவின் ‘ஊசிகள்’ அன்றைய தமிழகத்தின் அரசியல், சமூக வாழ்க்கையின் சிறுமைகளை அழகியலோடு சாடும் (கடுமையாய் விமர்சனம் செய்யும்) அங்கதப் பாக்களால் ஆனது. புதுக்கவிதை வடிவக் குறும்பாத்தொகுதி இது.

### 6.7.9 சிறப்புகள்

மரபிலும், வசனக் கவிதையிலும், புதுக்கவிதையிலும் சாதனைகள் செய்தவர். சிறந்த உரைநடை எழுதியவர். முன்னணிப் பதிப்பாசிரியராக இருந்து பல இளம் படைப்பாளிகளைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்தவர். இலக்கிய இதழ்களின் ஆசிரியர். ஆசிரியர் சங்கம் மற்றும் உழைக்கும் மக்களின் சங்கத் தலைமைப் பொறுப்பில் இருந்து உரிமைப் போராட்டங்கள் நடத்தியவர். இவ்வாறு பல சிறப்புகளுக்கு உரியவர் மீரா.

### 6.7.10 மீராவின் தனித்துவம்

தமிழ்க் கவிஞர்களுள் பாரதியைப் போல் சமூகப் போராளிகளாகவும் திகழ்ந்தவர்கள் மிகச் சிலர். அவர்களுள் ஒருவர் கவிஞர் மீரா. நடையில் எளிமை, கருத்தில் வலிமை, தமிழ்க் கவிதை மரபில் பழுத்த புலமை, சொல்லுக்குச் சொல் புதுமை, அங்கதம் என்னும் குறும்பு குதிக்கும் தமிழ்நடை, ஆனால் எவரையும் புண்படுத்தாத பண்பாட்டு வரையறை. ஒரு வகையில் ஈழத்து மஹாகவியுடன் மீராவை ஒப்பிடலாம். ஆனால் மீரா சிலவகைகளில் வேறுபட்டுத் தனித்து நிற்கிறார்.

### 6.8 பாடல் 3 பதினைந்து

உன் நெற்றியைப் பார்த்து விட்டு

எந்தக் கோயிலுக்குப்

போய் விட்டு வருகிறாய்

என்கிறேன்

குறிப்பு

முருகன் கோவிலுக்கு ….

பதில் பஞ்சாமிர்தமாய் வருகிறது

அவன்

ஒரு மயில்மேல் மட்டுமல்ல

இரு மயில்களோடும் இருக்கிறான்

என்பதை மறந்து விட்டாயா

என்கிறேன்.

அந்தத் துணிச்சலில்

அரைவாசியாவது

உங்களுக்கு இருந்தால்

இந் நேரம்

என்று தான் நினைத்துக் கொண்டு வருகிறேன்.

உன் பதில் வேலாய் வந்து விழுகிறது.

நீ பொல்லாதவள்.

### 6.8.1 பாடல் விளக்கம்

மீ.ரா.கனவுகள் கற்பனைகள் காகிதங்கள் என்ற நூலிலிருந்து இது எடுக்கப்பெற்றது.

புதுக் கவிதைகள் எழுதுவதில் ஈடுபட்டவர். இவரோடு பல புதுக் கவிஞர்கள் மானுடம் பாடும் வானம்பாடி ஆயினர். எதிர்காலச் சிந்தனை முதலியவற்றுக்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். புதுக்கவிதை உலகின் விடிவெள்ளிகள் இவர்கள்.

குறிப்பு

தலைவன் தலைவியின் உரையாடலாக இக்கவிதை மலர்கிறது. கோயிலுக்குப் போய் வருகிற தலைவியின் நெற்றியைப் பார்த்து விட்டுத் தலைவன் கேட்கிறான். எந்தக் கோவிலுக்கு முருகன் கோவிலுக்கு. அந்த பதில் தலைவனுக்குப் பஞ்சாமிர்தமாய் இனிக்கிறது. அதற்குக் காரணம் அடுத்த பேச்சில் வெளிப்படுகிறது.

முருகன் ஒரு மயில் மேல் மட்டுமல்ல. பக்கத்திலும் இரண்டு மயில்களை வைத்திருக்கிறான். பார்த்தாயா என கவிஞர் வள்ளி, தெய்வயானையைக் குறிப்பிடுகிறார். அதில் அவருக்கு இரண்டு மனைவியர் இல்லையே என்ற ஏக்கமும் கலந்திருக்கிறது.

தலைவி பதில் சொல்லுகிறாள். அந்தத் துணிச்சலில் உங்களுக்குப் பாதியாவது இருந்தால் இந்நேரம் … நிறுத்துகிறாள் தலைவி. வீட்டிற்கு ஒருத்தி வந்திருக்க மாட்டாளா என்ற கருத்து தொனிக்கிறது. மேலும் யாராவது வந்திருக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்பும் தலைவியின் பேச்சில் இருக்கிறது.

தலைவன், அவன் பதில் வேலாய் வந்து விழுகிறது என்று கூறிப் பொல்லாதவள் என்றும் பாராட்டுகிறாள்.

முருகன் என்றதுமே கவிஞருக்குப் பஞ்சாமிர்தமும், வேலும் நினைவுக்கு வருகின்றன.

## 6.9 நிறைவாக

வல்லிக்கண்ணன் மிகச் சிறந்த எழுத்தாளர். மிகச் சிறிய வயதிலேயே பத்திரிகை உலகில் அறிமுகமானார். இவருடைய பள்ளிப் பருவமும், இலக்கியத்தில் அவருக்கிருந்த பற்றும், அரசுப் பள்ளியில் பணியாற்றிய அனுபவமும் ஆகிய வாழ்க்கைக் குறிப்பு மாணவர்களுக்குச் சிறந்த பாடமாக அமையும்.

கு.ப.ராஜகோபாலன் எல்லோராலும் கு.ப.ரா என்றே அழைக்கப்பட்டார். இவருடைய பள்ளிப் பருவம், திருமணம், அரசுப்பணி, எழுத்துப்பணி, கு.ப.ராவின் படைப்புகள் போன்றவை இங்கு கொடுக்கப்பட்டுள்ளன

குறிப்பு

கவிஞர் மீ.ராசேந்திரன் என்பதன் சுருக்கமே மீரா ஆகும். இவருடைய கல்வி, பணி, இலக்கியத்தில் இவருக்கிருந்த ஈடுபாடு, இவரின் படைப்புகள், இவர் பெற்ற விருதுகள், குறும்பாக்கள், குக்கூ கவிதைகள், கவிதைக்கலையில் இவருக்கிருந்த ஆர்வம், இவர் பற்றிய சிறப்புகள், மீராவின் தனித்துவமாகப் போற்றப்படக் கூடியவை போன்ற மீராவின் வாழ்க்கைக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

## 6.10 பொருளறிக

வேசி – விலைமாது, கிராக்கி – ஒரு நபர் (கொச்சைச் சொல்), பண்டம் - ஆர்வத்தைத் தூண்டும் உணவு, பொசுக்குது – சுடுது, மகுடி – பாம்பை மயக்கும் இசைக்கருவி,

6.11 சோதித்தறியும் வினா விடைகள்

1. வல்லிக்கண்ணன் பற்றிக் குறிப்பு வரைக

வல்லிக்கண்ணன் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் திசையன்விளை என்ற கிராமத்தில் 12.11.1920 அன்று பிறந்தார். இவருடைய தந்தையார் ரா.மு.சுப்பிரமணிய பிள்ளை, தாயார் மகமாயி அம்மாள். நடுத்தரமான சைவ வேளாளர் மரபைச் சார்ந்தவர். இவர் பிறந்த உடன் இவருக்குப் பெற்றோர்கள் கோபாலகிருஷ்ணன் என்று தான் பெயர் வைத்தார்கள்.

2. எதிலிருந்து நம்மைக் காக்க வேண்டும் என்று வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார்?

கவிஞர் அன்றாட வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறார். தாகம் எடுக்கிறது. பசி எடுக்கிறது. ஊர் சுற்ற ஆசை பொங்குகிறது. கடும் வெயில் தலையில் சுடுகிறது. காலைப் பொசுக்குகிறது. பனிக்காற்று உடலை வாட்டுகிறது. இவற்றில் இருந்து எல்லாம் நம்மைக் காக்க வேண்டும் என்கிறார்.

3. கு.ப.ரா பற்றிக் குறிப்பு வரைக

கு.ப.ராஜகோபாலன் கும்பகோணத்தில் ஜனவரி 1902இல் பிறந்தவர். அவருடைய பெற்றோர் பட்டாபிராமையர், ஜானகி அம்மாள

குறிப்பு

4. குழலோசை கேட்ட ராதையின் நோக்கமாக கவிஞர் கு.ப.ரா கூறுவதை விளக்குக

குழலோசை கேட்ட ராதை கண்ணனைக் காணக் கானகமெல்லாம் ஓடுகிறாள். கண்ணனைக் காண்பதுவும் அவள் நோக்கம். உள்ளப் பூரிப்பை வெளிப்படுத்துவதும் அவள் நோக்கம். கண்ணனுக்குப் பார்வையால் இன்பம் தருவது என்பதைக் கவிஞர் மறுக்கிறார்.

5. கவிஞர் மீரா பற்றிக் குறிப்பு வரைக

மீரா என்ற மீ.ராஜேந்திரன் 10.10.1938ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தவர். பெற்றோர் மீனாட்சி சுந்தரம் - இலட்சுமி அம்மாள். இளம் பருவத்தில் பர்மாவில் வளர்ந்தார். 1.9.2002இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

6. ‘பதினைந்து’ என்ற கவிதையில் கவிஞரின் ஏக்கமாக எதைக் கூறுகிறார்?

முருகன் ஒரு மயில் மேல் மட்டுமல்லாமல் பக்கத்திலும் இரண்டு மயில்களை வைத்திருக்கிறான். கவிஞர் வள்ளி, தெய்வயானையைக் குறிப்பிடுகிறார். அதில் அவருக்கு இரண்டு மனைவியர் இல்லையே என்ற ஏக்கமும் கலந்திருக்கிறது.

## 6.12 பயிற்சி வினா

1. வெறும் புகழ் என்ற கவிதையில் கவிஞர் வல்லிக்கண்ணன் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரைக்க

## 6.13 மேலும் படித்தறிக

குறிப்பு

1. அ.நா.பாலகிருஷ்ணன், சிறியன சிந்தியான் வல்லிக்கண்ணன், ஞானியாரடிகள் தமிழ் மன்றம், சென்னை வெளியீடு, முதற்பதிப்பு 2000

2. சிறுகதை ஆசான் கு.ப.ரா, தினமணி நாளிதழ், கட்டுரை எண் 761164

## பிரிவு – 2 (தொடர்ச்சி)

**கூறு: 7 சிற்பி** - சர்ப்ப யாகம்

**ஞானக்கூத்தன்** - தோழர் மோசிகீரனார்

7. பாட அமைப்பு

7.1 அறிமுகம்

7.1.1 சிற்பி பாலசுப்ரமணியம்

7.1.2 ஞானக்கூத்தன்

7.2 சிற்பி வாழ்க்கைக் குறிப்புகள்

7.2.1 கல்வி

7.2.2 பணி

7.2.3 விருது

7.2.4 சிற்பி அறக்கட்டளை

7.3 இலக்கியப் படைப்பு

7.3.1 கவிதை நூல்கள்

குறிப்பு

7.3.2 கவிதை நாடகம்

7.3.3 சிறுவர் நூல்கள்

7.3.4 உரைநடை நூல்கள்

7.4.5 வாழ்க்கை வரலாற்று நூல்கள்

7.4 மொழிபெயர்ப்பு நூல்கள்

7.4.1 கவிதைகள்

7.4.2 புதினங்கள்

7.5 பிறநூல்கள்

7.6 இலக்கிய வரலாறு

7.7 ஆங்கில நூல்

7.8 அறக்கட்டளைப் பொழிவு நூல்

7.9 உரை நூல்கள்

7.10 தொகுப்பு நூல்கள்

7.11 பதிப்பித்த நூல்கள்

7.12 இதழாளர்

7.13 சிறப்புகள்

7.14 பாடல் 1 சர்ப்பயாகம்

7.14.1 பாடல் விளக்கம்

7.15 ஞானக்கூத்தன் வாழ்க்கைக் குறிப்பு

7.15.1 தொழில்

7.15.2 திரைப்படப் பங்களிப்பு

7.15.3 இதழியல் துறையில் பங்களிப்பு

7.16 இயற்றிய நூல்கள்

7.16.1 கவிதை நூல்கள்

7.16.2 கட்டுரை நூல்கள்

7.16.3 பிற படைப்புகள்

7.17 விருதுகள்

7.18 பாடல் 2 தோழர் மோசிகீரனார்

7.18.1 பாடல் விளக்கம்

7.19 நிறைவாக

7.20 பொருளறிக

7.21 சோதித்தறியும் வினா விடைகள்

7.22 பயிற்சி வினா

7.23 மேலும் படித்தறிக

குறிப்பு

## 7.1 அறிமுகம்

### 7.1.1 சிற்பி பாலசுப்ரமணியம்

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் ஆத்துப் பொள்ளாச்சி கிராமத்தில் பிறந்தவர்.

### 7.1.2 ஞானக்கூத்தன்

கவிஞர் ஞானக்கூத்தன் அக்டோபர் 7, 1938ல் பிறந்தார். இவருடைய இயற்பெயர் அரங்கநாதன் என்பதாகும். இவர் நாகை மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறை அருகே திருஇந்தளூர் என்ற ஊரில் பிறந்தார். ‘திருமந்திரம்’ என்ற நூல் ஏற்படுத்திய தாக்கத்தால் தன் புனைபெயரை ஞானக்கூத்தன் என்று மாற்றிக்கொண்டார்.

கவிஞர் ஞானக்கூத்தன் 2016, ஜூலை 27ஆம் நாள் புதன்கிழமை தனது 77ஆம்வயதில் சென்னையில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## 7.2 வாழ்க்கைக் குறிப்புகள்

### 7.2.1 கல்வி

கேரள மாநிலம் பாலக்காட்டில் உள்ள தத்தமங்கலம் சீலி நினைவு உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். 1953ஆம் ஆண்டு திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இடைநிலைக் கல்வி பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ.ஆனர்ஸ் (தமிழ் இலக்கியம்) கற்றார்.

### 7.2.2 பணி

1958 முதல் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தவர். 1989இல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று 1997 வரை சிறப்புறப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

### 7.2.3 விருது

மொழிபெயர்ப்புக்காகவும் (2001), படைப்பிலக்கியத்துக்காகவும் (2003) இருமுறை சாகித்திய அகாதமி விருது பெற்றவர். தமிழக அரசின் பாவேந்தர் விருது குன்றக்குடி ஆதீனம் கபிலர் விருது, திருவனந்தபுரம் தமிழ்ச்சங்க மகாகவி உள்ளூர் விருது, மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது எனப் பல விருதுகள் பெற்றவர்.

### 7.2.4 சிற்பி அறக்கட்டளை

1996இல் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் தலைசிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள், பரிசுகள் அளித்து வருகிறது.

## 7.3 இலக்கியப் படைப்பு

### 7.3.1 கவிதை நூல்கள்

நிலவுப்பூ, சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை, சர்ப்பயாகம், புன்னகை பூக்கும் பூனைகள், மௌன மயக்கங்கள், சூரிய நிழல், இறகு, சிற்பியின் கவிதை வானம், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி, பெருமூச்சுகளின் பள்ளத்தாக்கு, பாரதி-கைதி எண், மூடுபனி, சிற்பி – கவிதைப் பயணங்கள், தேவயானி, மகாத்மா, சிற்பி கவிதைகள் தொகுதி, நீலக்குருவி, கவிதை வானம் போன்ற 20 கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

### 7.3.2 கவிதை நாடகம்

ஆதிரை என்ற ஒரு கவிதை நாடக நூலை எழுதியுள்ளார்.

### 7.3.3 சிறுவர் நூல்கள்

சிற்பி தரும் ஆத்திசூடி, வண்ணப்பூக்கள் ஆகிய இரண்டு சிறுவர் நூல்கள் இவர் படைத்தனவாகும்.

### 7.3.4 உரைநடை நூல்கள்

இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, இல்லறமே நல்லறம், அலையும் சுவடும், மின்னல் கீற்று, சிற்பியின் கட்டுரைகள், படைப்பும் பார்வையும், கவிதை நேரங்கள், மகாகவி, நேற்றுப் பெய்த மழை, காற்று வரைந்த ஓவியம், புதிர் எதிர்காலம், மனம் புகும் சொற்கள் ஆகிய உரைநடை நூல்களை இயற்றியுள்ளார்.

### 7.3.5 வாழ்க்கை வரலாற்று நூல்கள்

இராமாநுசர் வரலாறு, ம.ப.பெரியசாமித் தூரன், பாரத் ரத்னம் சி.சுப்பிரமணியம், ஆர்.சண்முகசுந்தரம், சே.ப.நரசிம்மலு நாயுடு, மகாகவி பாரதியார், நம்மாழ்வார், தொண்டில் கனிந்த தூரன் ஆகியவை இவர் இயற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகும்.

## 7.4 மொழிபெயர்ப்பு நூல்கள்

### 7.4.1 கவிதைகள்

குறிப்பு

சச்சிதானந்தன் கவிதைகள், உஜ்ஜயினி, கவிதை மீண்டும் வரும், காலத்தை உறங்க விட மாட்டேன் நான், கே.ஜி.சங்கரப்பிள்ளை கவிதைகள் ஆகிய மொழிபெயர்ப்புக் கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

### 7.4.2 புதினங்கள்

அக்கினி சாட்சி என்ற புதினம் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருது பெற்றது. ஒரு சங்கீதம் போல, வாராணசி ஆகிய மொழிபெயர்ப்புப் புதினங்களை இயற்றியுள்ளார்.

### 7.5 பிற நூல்கள்

தேனீக்களும் மக்களும், சாதனைகள் எப்போதும் சாத்தியந்தான், வெள்ளிப்பனி மலையின் மீது ஆகியவை இவர் படைத்த பிற நூல்கள் ஆகும்.

## 7.6 இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய வரலாறு (2010)

### 7.7 ஆங்கில நூல்

A Comparative study of Bharati and vallathol

### 7.8 அறக்கட்டளைப் பொழிவு நூல்கள்

கம்பனில் மானுடம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை, பாரதிதாசனுக்குள் பாரதி ஆகிய நூல்கள் அறக்கட்டளைப் பொழிவு நூல்களாகும்.

### 7.9 உரை நூல்கள்

திருப்பாவை உரை, திருக்குறள் உரை, மார்கழிப்பாவை

### 7.10 தொகுப்பு நூல்கள்

நதிக்கரைச் சிற்பங்கள்

## 7.11 பதிப்பித்த நூல்கள்

மகாகவி பாரதி சில மதிப்பீடுகள், பாரதி – பாரதிதாசன் படைப்புக் கலை, தமிழ் உலா, பாரதி என்றொரு மானுடன், மருதவரை உலா, நாவரசு, அருட்பா, பாரதியார் கட்டுரைகள், மண்ணில் தெரியுது வானம், கொங்கு களஞ்சியம், வளமார் கொங்கு

### 7.12 இதழாளர்

வானம்பாடி, அன்னம் விடு தூது, வள்ளுவம், கவிக்கோ, கணையாழி

## 7.13 சிறப்புக்கள்

1982லிருந்து 2012 வரை இவர் தன் படைப்புகளின் மூலம் 40 விருதுகளைப் பெற்றுள்ளார்.

கவிஞர் சிற்பி குறித்து 11 தமிழ் நூல்களும், 3 ஆங்கில நூல்களும் வெளிவந்துள்ளன.

இவர் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்குத் துணைவேந்தர் தேர்வுக்குழு உறுப்பினர்

பல்கலைக்கழக மானியக் குழு, மத்திய அரசு பண்பாட்டுத்துறை, மத்திய அலுவலர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசு செயலர் தேர்வாணையத் தேர்வுக்குழு முன்னாள் உறுப்பினர்.

சென்னை, அண்ணாமலை, பாரதியார், பாரதிதாசன், கொல்கத்தா, அழகப்பா, மதுரை, கேரளா பல்கலைக்கழகங்களிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் அறக்கட்டளை உரையாளர்.

## 7.14 பாடல்1 சர்ப்ப யாகம்

பரம பதத்துச்

சோபான படம்

எங்கள் தேசம்

அதில்
கட்டங்கள் தோறும்
நச்சுப் பாம்புகள்
காத்துக் கிடக்கின்றன

ஆதி சேஷன்
கார்க் கோடகன்
கண்ணாடி விரியன்
கொம்பேறி மூர்க்கன்
படங்கள் விரித்து
உடல்கள் நெளித்து
காத்துக் கிடக்கின்றன.

தாயங்கள் போட்டு
நாங்கள் தொடங்கும்
ஒவ்வொரு பயணத்தையும்
தடுத்துக் கடிக்க
அடுத்துக் கொடுக்க
இத்தனை நாகங்களா

புறப்பட்ட திசைக்கே
விரட்டியடிக்கும்

குறிப்பு

குறிப்பு

இருட்டுத் தாரைகளே
பரம பதத்தின்
தடத்தை மறைக்கும்
திருட்டுச் சாரைகளே

வழிவிடச் சொல்லி
விரல்கள் நடுங்கத்
தாயம் உருட்டுகிறோம்
உங்கள்
வாயில் விழுந்து
வாலில் விழுந்து
நேற்றைப் புரட்டுறோம்
எங்கோ சில சில
ஏணிகள் - அவற்றில்
ஏறி நிமிர்ந்தவுடன்
சீறிய உங்கள்
விஷ நாக்குகளின்
ஈரத்தில் வழுக்குகிறோம்
தலைமேல் பூமியை
வைத்தால் சுமக்கும்
ஆதி(க்க) சேடர்களே
சுற்றி வளைத்தால்

குறிப்பு

சமுதாயப் பாற்

கடலின் அலைநடுவே

இலாபம் கருதிச்

சுழலும் மந்தர

மலையின் தோள்களிலே

கடை கயிறாகிக்

கதையை நடத்தும்

வாசகிப் பாம்புகளே

நடுங்கி நடுங்கித்

தாயக் கட்டைகள்

உருட்டிக் காத்திருந்தால்

பரமபதத்தை

ஒரு நாளும் நீர்

அடைந்திட விடமாட்டீர்

அதனால்

நாகங்கள் அழிக்கும்

யாகங்கள் தொடங்கினோம்

கொடிய சர்ப்ப யாகம்

எமது சர்ப்ப யாகத்தில்

சிறியது - குறியது

குறிப்பு

பெரியது – நெடியது

பூநாகம் முதல் பொறிநாகம் வரை

எரியும் - எரியும்

கரியும் - கரியும்

அந்த எரிதழற் சாம்பலில்

ஒரு பதத்தை

எங்கள் சிரம பதத்தால்

சிருஷ்டித்துக் கொடுப்போம்

ஏனெனில் இது

ஜனமே ஜய

யுகம்

இக்கவிதை சிற்பியின் கவிதை வானம் என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

### 7.14.1 பாடல் விளக்கம்

சர்ப்ப யாகம் ஒரு குறியீட்டுக் கவிதையாகும். கவிஞர் சிற்பி வாழ்வில் வெற்றி பெற விரும்பும் மக்களைச் சித்தரிக்கிறார். அவர்களின் முயற்சிகளைத் தடுக்கும், பின்னடையச் செய்யும் தடைகளைப் பாம்புகளைத் (தீயவர்களைப்) படைக்கிறார். இவற்றின் பிடியிலிருந்து நழுவி மேலே செல்ல முயலும் மக்களின் முயற்சியினைக் காட்டுகிறார். ஆனாலும் அவர்களால் முடிவதில்லை. திரும்பத் திரும்ப பழைய இடத்திற்கே வருகிறார்கள். அவர்களுக்கு உதவச் சில ஏணிகளாக (சில

குறிப்பு

நல்ல மனிதர்கள்) இருக்கிறார்கள். ஆனாலும் தீமை நிறைய இருப்பதால் மக்களால் மீள முடியவில்லை.

கவிஞர் சிந்தனையில் ஒரு புதிய விடிவெள்ளி தோன்றுகிறது. இந்த நாகங்களையே கொளுத்தினால் என்ன இது தான் சர்ப்பயாகம். அதாவது யாகம் நடத்தி எல்லா சர்ப்பங்களையும் அதில் போடுவது.

எல்லா வகை நாகங்களும் தீமைகளும் அங்கே எரிகின்றன. கரிகின்றன. அந்தச் சாம்பலில் ஒரு பரமபதத்தை (ஒரு புதிய பாரதத்தை) நன்மை தரும் நிலையைச் சமைப்போம். இது கவிஞரின் தீர்ப்பு ஆகும்.

இன்றைய சமுதாயத்தை – மக்களை – உயர்நிலைக்குக் கொண்டுவரக் கவிஞர் எண்ணுகிறார். சமுதாயத்தில் இருக்கும் தீமைகளைக் களைந்தால் தானே நன்மைக்கு வழி கிடைக்கும். வாழ வழி கிடைக்கும். அந்த நன்மையை அடைய தீமையைப் பொசுக்குவோம் என்கிறார். இது புறத்தீமைகளை மட்டும் குறிப்பதன்று அகத் தீமைகளையும் களையச் சொல்லுவதாகவும், அக மாசுகளையும் நீக்கினால் மக்கள் உன்னதமான வாழ்வை – சுக அனுபவத்தைப் பெறலாம். இது தான் ஆசிரியர் இக்கவிதையில் குறிப்பிட்டுச் சொல்லுவதாகும்.

## 7.15 ஞானக்கூத்தன் வாழ்க்கைக் குறிப்பு

### 7.15.1 தொழில்

இவர் 1968லிருந்து கவிதைகள் எழுதத் தொடங்கினார். இவர் ‘பிரச்சனை’ என்ற கவிதையின் மூலம் அறிமுகமானார். 1998இல் இவருடைய கவிதைகள் ஞானக்கூத்தன் கவிதைகள் என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

### 7.15.2 திரைப்படப் பங்களிப்பு

மருதநாயகம் (திரைப்படம்) திரைக்கதையை புவியரசு, சுஜாதா (எழுத்தாளர்) ஆகியோருடன் இணைந்து எழுதியுள்ளார்.

## 7.15.3 இதழியல் துறையில் பங்களிப்பு

குறிப்பு

இவர் நவீன இலக்கியத்தின் கவிஞூராகப் போற்றப்படுகிறார். இவர் கல்கி காலச்சுவடு மற்றும் உயிர்மை போன்ற இதழ்களில் இவரின் கவிதைகள் வெளிவந்துள்ளன.

இராமகிருஷ்ணன், சா.கந்தசாமி, ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரோடு இணைந்து ஞானக்கூத்தன் தொடங்கிய இதழ் ‘கசடதபற’, ‘கவனம்’ என்ற சிற்றிதழைத் தொடங்கினார்.

**7.16 இயற்றிய நூல்கள்**

**7.16.1 கவிதை நூல்கள்**

- அன்று வேறு கிழமை
- சூரியனுக்குப் பின்பக்கம்
- கடற்கரையில் சில மரங்கள்
- மீண்டும் அவர்கள்
- பென்சில் படங்கள்
- ஞானக்கூத்தன் கவிதைகள்
- என் உளம் நிற்றி நீ
- இம்பர் உலகம்

**7.16.2 கட்டுரை நூல்கள்**

- கவிதைக்காக
- கவிதைகளுடன் ஒரு சம்வாதம்

**7.16.3 பிற படைப்புகள்**

- கனவு பல காட்டல்
- நம்மை அது தப்பாதோ
- சொன்னதை கேட்ட ஜன்னல் கதவு
- அலைகள் இழுத்த பூமாலை

## 7.17 விருதுகள்

குறிப்பு

- 2010 கவிதைக்காக ‘சாரல்’ விருதினைப் பெற்றார்.
- விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் வழங்கும் இலக்கியப் பங்களிப்பிற்கான விஷ்ணுபுரம் விருதினை 2014இல் பெற்றார்.

## 7.18 பாடல் 2 தோழர் மோசிகீரனார்

மோசி கீரா

மகிழ்ச்சியினால்

மரியாதையை நான்

குறைத்ததற்கு

மன்னித்தருள வேண்டும்

சொந்தமாக உனக்கிருக்கும்

சங்கக் கவிதை யாதொன்றும்

படித்ததில்லை நான் இன்னும்

ஆனால் உன்மேல் அளவிறந்த

அன்பு தோன்றிற்று

இன்றெனக்கு

அரசாங்கத்துக் கட்டிடத்தில்

தூக்கம் போட்ட முதல் மனிதன்

நீதான் என்னும் காரணத்தால்

குறிப்பு

இப்பகுதி ஞானக்கூத்தனின் அன்று வேறு கிழமை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

### 7.18.1 பாடல் விளக்கம்

மோசிகீரனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.

…எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நல்தமிழ் முழுது அறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழுவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசியோயே ..

என்ற இப்பாடல் புறநானூற்றுப் (50) பாடலாகும். இதில் மோசிகீரனார் அரசனைக் காண வேண்டும் என்று வெகுதூரம் நடந்து வருகிறார். வரும்போது பயணக் களைப்பால் முரசுக் கட்டிலில் படுத்து உறங்கி விடுகிறார். இதைப் புரிந்து கொண்ட சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அவர் துயில் எழும் வரைக் காத்திருந்து கவரி வீசினான். இம்மன்னனைப் போற்றும் விதமாக இவர் பாடிய பாடலே புறநானூறு 50ஆம் பாடலாக இடம்பெற்றுள்ளது.

மோசிகீரனாரின் இச்செயல் கவிஞர் ஞானக்கூத்தனைப் பெரிதும் கவர்ந்தது. அவர் மேல் மிகுந்த அன்பு தோன்றியதாகவும் இப்பாடலில் புலப்படுத்துகிறார். மோசிகீரனாரைப் பற்றி அவர் பாடிய பாடல் பாடப்பகுதியில் அமைந்துள்ளது.

## 7.19 நிறைவாக

கவிஞர் சிற்பி பல்வேறு இலக்கியங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு, அவற்றின் செயல்பாடுகளை ஆவணப்படுத்தினார். இலக்கியங்களில் பல தளங்களில் கால் பதித்திருந்தாலும் ஒரு சிறந்த கவிஞராகவே பெரிதும் அறியப்படுகிறார். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், இந்தி, மலையாளம், கன்னடம் மராத்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் தலைவராகவும், ஞாலத் தமிழ் பண்பாட்டு மையத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

ஞானக்கூத்தன் மிகச் சிறந்த படைப்பாளர். சங்கத் தமிழ் நூல்களைக் கற்றறிந்த அவர் தன்னைப் பெரிதும் கவர்ந்த மோசிகீரனாரைப் பற்றிய தன் எண்ணங்களை கவிதை மூலம் காட்டுகிறார்.

## 7.20 பொருளறிக

சோபான – அழகான, தேசம் - நாடு, ஆதிசேஷன், கார்க் கோடகன், கண்ணாடி விரியன், கொம்பேறி மூர்க்கன் - பாம்புகள், தாயம் - மகளிர் விளையாட்டு, குறியது – குறுகியது, ஜனம் - மக்கள்.

## 7.21 சோதித்தறியும் வினா

1. கவிஞர் சிற்பி சர்ப்பயாகம் கவிதையில் குறிப்பிட்டிருக்கும் பாம்புகளின் பெயர்களைக் கூறுக.

ஆதிசேஷன், கார்க் கோடகன், கண்ணாடி விரியன், கொம்பேறி மூர்க்கன் ஆகிய பாம்புகளைக் கவிஞர் சிற்பி குறிப்பிடுகிறார்.

2. கவிஞர் ஞானக்கூத்தனுக்கு மோசிகீரனார் மேல் அன்பு தோன்றக் காரணம் என்ன?

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் அரசுக் கட்டிலில் உறங்கியதும், மன்னன் அவருக்குக் கவரி வீசியதும் சங்கப் பாடலான புறநானூற்றின் வழி அறியமுடிகிறது. அதைப் படித்த கவிஞர் ஞானக்கூத்தனுக்கு மோசிகீரனார் மேல் அன்பு தோன்றியது.

### 7.22 பயிற்சி வினா

1. சர்ப்பயாகம் என்ற கவிதை குறியீட்டுக் கவிதை விளக்குக

### 7.23 மேலும் படித்தறிக

கவிஞர் சிற்பி, சர்ப்பயாகம், கோலம் வெளியீடு, பொள்ளாச்சி, முதற்பதிப்பு 1990, இரண்டாம் பதிப்பு 1995.



## பிரிவு – 2 (நிறைவு)

### கூறு 8:

**1. அப்துல் ரகுமான் - கண்ணும் எழுதேம்**

**2. சண்முக சுப்பையா - வயிறு**

**8 - பாடஅமைப்பு**

**8.1. அறிமுகம்**

8.1.1 அப்துல் ரகுமான்

8.1.2 ஷண்முக சுப்பையா

**8.2. நோக்கம்**

8.3. அப்துல் ரகுமானின் வாழ்க்கைக் குறிப்புகள்

8.3.1 கல்வி

8.3.2 பணி

8.3.3 புதுக்கவிதைத் துறையில் அப்துல் ரகுமான்

**8.4. படைப்புகள்**

**8.4**.1 கவிதை

8.4.2 கவியரங்கக் கவிதைகள்

8.4.3 வசன கவிதை

8.5. கட்டுரை நூல்கள்

8.6 மொழிபெயர்ப்பு நூல்கள்

8.7 பதிப்பிக்கப்பட்டவை

8.8 விருதுகள்

8.9 கவிதை - கண்ணும் எழுதேம்

8.9.1 விளக்கம்

8.10 ஷண்முக சுப்பையா வாழ்க்கைக் குறிப்புகள்

8.10.1 பதிப்புப் பணி

8.10.2 கவிதை வெளி

8.10.3 கவிதை நடை

8.10.4 ஷண்முக சுப்பையா பற்றி இராஜமார்த்தாண்டன்

**8.11 வயிறு**

8.11.1 விளக்கம்

8.12 நிறைவாக

8.13 சோதித்தறியும் வினாவிடைகள்

8.14 பயிற்சி வினா

8.15 பொருளறிக

8.16 மேலும் படித்தறிக..

குறிப்பு

## அறிமுகம்

## 8.1.1 அப்துல் ரகுமான்

அப்துல் ரகுமான் மதுரையில் வைகை ஆற்றின் தென்கரையில் 1937, நவம்பர் 2ஆம் நாள் உருதுக் கவிஞர் மஹி என்னும் சையத் அஹமத் - ஜைனத் பேகம் இணையருக்கு மகனாகப் பிறந்தார். இவர் 2017ஆம் ஆண்டு சூன் மாதம் 2ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**8.1.2 ஷண்முக சுப்பையா**

**கவிஞர் ஷண்முக சுப்பையா 1924ஆம் ஆண்டு முதல் 1995 வரை வாழ்ந்தவர். இவர் திருவனந்தபுரத்தில் வாழ்ந்தவர்.**

## 8.2 நோக்கம்

அப்துல் ரகுமான் மிகச் சிறந்த கவிஞர். கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். 1960க்குப் பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளாலும் சிறப்படைந்துள்ளார். சிலேடை வார்த்தைகளால் கேட்போரைக் கவர்வது இவரது பாணி. இவரது கவிதைச் சிறப்புகளைக் காண்பது நோக்கமாக அமைகிறது.

## 8.3 அப்துல் ரகுமானின் வாழ்க்கைக் குறிப்புகள்

### 8.3.1 கல்வி

அப்துல் ரகுமான் தனது தொடக்கக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் மதுரையில் உள்ள பள்ளிகளில் படித்தார். பின்னர் மதுரை தியாகராசர் கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து அக்கல்லூரியிலேயே பயின்று இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்றார். அப்பொழுது முனைவர் மா.இராசமாணிக்கனார், ஔவை துரைசாமிபிள்ளை, அ.கி.பரந்தாமனார், அவ்வை நடராசன், அ.மு.பரமசிவானந்தம் ஆகிய தமிழறிஞர்களிடம் பயின்றார்.

சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அதன் இயக்குநராகப் பணியாற்றிய ச.வே.சுப்பிரமணியத்தை வழிகாட்டியாகக் கொண்டு புதுக்கவிதையில் குறியீடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

### 8.3.2 பணி

தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதும் தியாகராசர் நடத்திய தமிழ்நாடு என்னும் நாளிதழில் மெய்ப்பு திருத்துநராகச் சிலகாலம் பணியாற்றினார். அப்பொழுது தமிழகத்தில் இருந்த ஐந்து இசுலாமியக்

கல்லூரிகளுக்கு விரிவுரையாளர் பதவிக்காக விண்ணப்பித்தார். அவற்றுள் வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் பணியாற்ற அவருக்கு 1961ஆம் ஆண்டில் வாய்ப்புக் கிடைத்து, அங்கே சிற்றுரையாளர், விரிவுரையாளர், பேருரையாளர், பேராசிரியர் எனப் படிப்படியாக உயர்ந்து 1991ஆம் ஆண்டில் விருப்ப ஓய்வு பெற்றார். இதில் 20 ஆண்டுகள் தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றினார்.

**8.3.3 புதுக்கவிதைத் துறையில் அப்துல் ரகுமான்**

'வானம்பாடி' இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவர் பால்வீதி என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைபாளியாக இனம்காட்டிக் கொண்டார். அத்தொகுதி வெளிவந்த போது கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீட்டு முறையை அமைத்துக் கொண்டார். தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை புனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

அறிவுமதி உள்ளிட்ட இளம்தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கினார். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றவர்.

**8.4 படைப்புகள்**

**8.4.1 கவிதை**

நேயர் விருப்பம், ஆலாபனை, பித்தன், மின்மினிகளால் ஆன ஒரு கடிதம், ரகசியப் பூ, பறவையின் பாதை, தேவகானம், கண்ணீர்த் துளிகளுக்கு முகவரி, பாலை நிலா ஆகிய கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.

**8.4.2 கவியரங்கக் கவிதைகள்**

விதைபோல் விழுந்தவன், முத்தமிழின் முகவரி, இறந்ததால் பிறந்தவன் ஆகிய கவியரங்கக் கவிதைகளை எழுதியுள்ளார்.

குறிப்பு

**8.4.3 வசனகவிதை**

சொந்தச் சிறைகள் என்ற வசன கவிதையை இயற்றியுள்ளார்.

**8.5 கட்டுரை நூல்கள்**

கரைகளே நதியாவதில்லை, அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, விலங்குகள் இல்லாத கவிதை, பூப்படைந்த சபதம், தொலைபேசிக் கண்ணீர், காற்று என் மனைவி, உறங்கும் அழகி, நெருப்பை அணைக்கும் நெருப்பு, பசி எந்தச் சாதி, நிலவிலிருந்து வந்தவன், கடவுளின் முகவரி, முத்தங்கள் ஓய்வதில்லை, காக்கைச் சோறு, சோதிமிகு நவகவிதை, சிலந்தியின் வீடு, இது சிறகுகளின் நேரம், இல்லையிலும் இருக்கிறான், தட்டாதே திறந்திருக்கிறது, எம்மொழி செம்மொழி, பூக்காலம் ஆகிய கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.

**8.6 மொழிபெயர்ப்பு நூல்கள்**

தாகூரின் 'சித்ரா' என்ற மொழிபெயர்ப்பு நூலை இயற்றியுள்ளார்.

இவருடைய இப்படைப்புகள் ஜூனியர் விகடன், முத்தாரம், குங்குமம் ஆகிய இதழ்களில் தொடராக வெளிவந்தன.

**8.7 பதிப்பிக்கப்பட்டவை**

குணங்குடியார் பாடற்கோவை, ஐந்து சிறுகவிதைத் தொகுப்புகள் ஆகியவை இவரால் பதிப்பிக்கப்பட்டன.

**8.8 விருதுகள்**

குன்றக்குடி அடிகளார் - கவியரசர் பாரிவிழா விருது

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் - தமிழன்னை விருது

தமிழக அரசு – பாரதிதாசன் விருது

தமிழக அரசு – கலைமாமணி விருது

அக்னி – அக்ஸர விருது

கவிஞர் சிற்பி அறக்கட்டளை – சிற்பி அறக்கட்டளை விருது

தி.மு.க – கலைஞர் விருது

ராணா இலக்கிய விருது

சாகித்ய அகாடமி, டெல்லி – சாகித்ய அகாடமி விருது

கொழும்பு கம்பன் கழகம், இலங்கை – கம்ப காவலர் விருது

பொதிகை தொலைக்காட்சி, சென்னை – பொதிகை விருது

கம்பன் கழகம், சென்னை – கம்பர் விருது

தினத்தந்தி நாளிதழ் - சி.பா.ஆதித்தனார் இலக்கியப் பரிசு

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை – உமறுப் புலவர் விருது

**8.9 கண்ணும் எழுதேம்**

கண்ணில் ஏன்
மை தீட்ட வில்லை
என்கிறாயா தோழி
சொல்கிறேன்

கண்ணுக்குள் என்
காதலர்
அவர் முகத்தில்

குறிப்பு

கரி பூசலாமா
என் சூரியன் மீது
இருட்டைத் தடவுவதோ

வீட்டிற்குள்ளே அவர்
வாசலில் எதற்கு
வரவேற்புக் கோலம்

அவனையே தீட்டி
அழகு பெற்ற கண்ணுக்கு
மையலங்காரம்
வேண்டுமா

கண்ணைவிட மென்மையானவர்
காதலர்
கோல் பட்டால் வலிக்காதா
அவரை வைத்த இடத்தில்
வேறொன்றை வைப்பது
கற்புக்கு இழுக்கல்லவா

### 8.9.1 விளக்கம்

குறிப்பு

அப்துல் ரகுமானின் நேயர் விருப்பம் என்ற கவிதை நூலிலிருந்து புதுக்கவிதைகள் இயற்றும் கவிஞர் கூட்டத்தில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றவர் அப்துல் ரகுமான்.

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்

எழுதேம் கரப்பாக்கு அறிந்து (குறள்.1127)

என்ற இத்திருக்குறளைக் கருவாகக் கொண்டு கவிதை படைத்துள்ளார் ஆசிரியர்.

தலைவி கண்ணில் மை தீட்டாமைக்குக் காரணம் கூறுகிறாள். மை தீட்டும் போது கண்ணை இமை மூடிக் கொள்கிறது. அந்தச் சிறு பொழுதில் கண்ணில் உள்ள காதலர் மறைகிறாரே அதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும் அதனால் கண்ணும் எழுதேம் என்கிறாள்.

தலைவி – தோழியின் உரையாடலாகக் கவிதை தோன்றுகிறது. தோழி தலைவியே கண்ணில் ஏன் மை தீட்டவில்லை தலைவியின் பதில் பலவகைப்படுகின்றன.

- என் காதலர் கண்ணுக்குள் இருக்கின்றார். அவர் முகத்தில் கரி (மை) பூசலாமா
- என் காதலர் சூரியன் போன்று ஒளி படைத்தவர். அவர் மீது இருளைத் தடவுவதா
- என் வீட்டிற்குள் (கண்ணுக்குள்) அவர் இருக்கிறார். வாசலில் (இமையில்) எதற்கு வரவேற்புக் கோலம்.
- என் காதலரையே தாங்கித் தாங்கி அதனால் அழகு பெற்ற கண்ணுக்குப் பின்னும் ஓர் அலங்காரம் தேவையா
- கண்ணிலும் மெல்லியர் என் காதலர். அவர் மீது மை எழுதும் கோல் பட்டால் அவருக்கு வலிக்காதா
- இது கவிஞனின் உச்ச கட்டமான பதில் அவர் இருக்கிற இடத்தில் வேறொன்றை வைப்பது கற்புக்கு இழுக்கு ஆகாதா

பழைய கவிஞனின் கருத்துக்குப் புதுக் கவிஞர் அப்துல் ரகுமான் மெருகு ஊட்டுகிறார். தலைவியின் மென்மையான உணர்வுகளைக் கவிஞர்கள் எவ்வாறு எல்லாம் வெளிப்படுத்துகின்றனர் என்பதை எண்ணிப் பாருங்கள். அதனாலன்றோ வள்ளுவப் பெருந்தகை மலரினும் மெல்லிது காமம் சிலரதன் செவ்வி தலைப்படுவர் என்றார்.

## 8.10 ஷண்முக சுப்பையா வாழ்க்கைக் குறிப்புகள்

### 8.10.1 பதிப்புப் பணி

கவிஞர் ஷண்முக சுப்பையா கேரள பல்கலைக்கழகத்தில் பதிப்புத் துறையில் பிரிவு அலுவலராகப் (Section Officer) பணி புரிந்தார்.

### 8.10.2 கவிதை வெளி

கவிஞர் கா.நா.சுப்பிரமணியம் அவர்கள் ஆரம்பித்த இலக்கிய வட்டத்தில் இவருடைய மூன்று கவிதைகள் வாசிக்கப்பட்டு அதன் பிறகு வெளி உலகத்திற்கு அறிமுகம் ஆனவர்.

### 8.10.3 கவிதை நடை

இவரது கவிதை நடையில் எளிமை, நேரடித்தன்மை காணப்படும். குத்தல், எரிச்சல் ஆகிய பண்புகள் இவரது படைப்புகளில் வெளிப்படும்.

### 8.10.4 இதழியல் பணி

1975இல் எழுத்து என்னும் பிரசுரம் இவருடைய கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. கவிஞர்கள் சிலர் இவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்துள்ளனர். லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள The anthology of modern Indian poetry என்ற தொகுப்பு நூலில் இவரைப் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. இந்த நூலை வினய் தார் வார்க்கர் என்பவரும், ஏ.கே.ராமானுஜம் என்பவரும் பதிப்பித்துள்ளனர். எழுத்து முதல் கொல்லிப்பாவை வரை என்று இராஜமார்த்தாண்டன் எழுதிய கட்டுரையில் ஷண்முக சுப்பையா அவர்களைப் பற்றி எழுதியுள்ளார்.

### 8.10.5 ஷண்முக சுப்பையா பற்றி இராஜமார்த்தாண்டன்

குறிப்பு

இவர் எழுத்து முதல் கொல்லிப்பாவை வரை என்று இராஜமார்த்தாண்டன் எழுதிய கட்டுரையில் ஷண்முக சுப்பையா அவர்களைப் பற்றி எழுதியுள்ளார்.

இவர் கேரளா பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுகளுக்கும் மேலாக முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டிருந்த கால கட்டத்தில் நகுலன், ஷண்முக சுப்பையா, ஆ.மாதவன், நீல. பத்மநாபன், எம்.எஸ்.ராமசாமி ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது என்றும், அப்போது ஆகஸ்டு 1975இல் நாங்கள் நான்கு ஆய்வு மாணவர்கள் சேர்ந்து (அ.திருமாலிந்தர சிங், நான், அ.இராஜேந்திரன், ஆ.தசரதன்) திருமாலிந்தரசிங் ஆசிரியர் பொறுப்பில் இருந்த போது கோகயம் என்ற இருமாதம் ஒருமுறை வெளிவரும் சிற்றிதழைத் தொடங்கினோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## 8.11 வயிறு

தலையைச் சொறி

நாக்கைக் கடி

பல்லை இளி

முதுகை வளை

கையைக் கட்டு

காலைச் சேர்

என்ன இது

வயிற்றைக் கேள்

சொல்லு மது

### 8.11.1 விளக்கம்

ஷண்முக சுப்பையா கவிதைகள் என்ற நூலில் இருந்து பாடமாக வந்துள்ளது.

சங்கப் புலவர்கள் வறுமையை – வறியவர்களைப் பலவாறு சித்தரித்துள்ளார்கள். எல்லா நாட்டிலும் வறுமை இருக்கிறது. எல்லாக் காலங்களிலும் வறுமை இருக்கிறது. இந்த ஏழ்மையை – பிணியை - மூப்பைச் சித்தார்த்தன் பார்த்தான். காரணம் அறிந்து புத்தன் ஆனான்.

அந்த வறுமையை வயிறு என்ற தலைப்பில் புதுக் கவிஞர் ஷண்முக சுப்பையா சிந்தித்துப் பார்க்கிறார். மனிதன் தலையைச் சொறிகிறான். நாக்கைக் கடிக்கிறான். பல்லை இளிக்கிறான். முதுகை வளைக்கிறான். கையைக் கட்டுகிறான். காலைச் சேர்த்து வைத்துக் கொள்கிறான் எல்லாம் எதற்காக ஏன் இப்படி மனிதன் அல்லல் உறுகிறான். கவிஞர் வயிற்றைக் கேட்கச் சொல்கிறார். பதிலை வயிறு சொல்லும் என்கிறார். அது என்ன பதில் பசி தான். வயிற்றுப் பசி தான் மனிதனை இந்தக் கோலத்திற்கு ஆளாக்குகிறது. பசிக்கப் புசிக்க இருக்குமானால் அவன் உலகத்தையே வெல்லுவான். இதைத்தான் மகாகவி பாரதியார் தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜகத்தினையே அழிப்போம் என்கிறார்.

அத்தனை உறுப்புகளுக்கும் ஜீவனாக வயிறு விளங்குவதைக் கவிஞர் ஷண்முக சுப்பையா நமக்கு உணர்த்துகிறார்.

**8.12** நிறைவாக

அப்துல் ரகுமான் மிகச் சிறந்த கவிஞர் மட்டுமல்ல. எழுத்தாளருமாவார். இவருடைய ஆலாபனை என்ற கவிதைத் தொகுப்பு சாகித்ய அகாடமி பரிசு பெற்றது. இவர் பல கட்டுரை நூல்களையும், வசன கவிதைகளையும், கவியரங்கக் கவிதைகளையும் எழுதியுள்ளார். பாடப்பகுதியில் அமைந்துள்ள இவருடைய கவிதை திருக்குறள் கருத்தை மையமிட்டு எழுதியதாகும்.

ஷண்முக சுப்பையாவின் வயிறு என்னும் கவிதையில் நாம் வயிற்றுக்காகப் படும் பாட்டை தன் கவிதைகளில் மொழிந்திருக்கிறார்.

## 8.13 சோதித்தறியும் வினா விடைகள்

குறிப்பு

1. அப்துல் ரகுமான் பற்றிக் குறிப்பு வரைக

அப்துல் ரகுமான் மதுரையில் வைகை ஆற்றின் தென்கரையில் 1937, நவம்பர் 2ஆம் நாள் உருதுக் கவிஞர் மஹி என்னும் சையத் அஹமத் - ஜைனத் பேகம் இணையருக்கு மகனாகப் பிறந்தார். இவர் 2017ஆம் ஆண்டு சூன் மாதம் 2ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

2. ஏன் தலைவி கண்ணுக்கு மை தீட்ட மாட்டாள்?

கண்ணிலும் மெல்லியர் காதலர். தலைவன் மீது மை எழுதும் கோல் பட்டால் அவருக்கு வலிக்கும் என்ற காரணத்தால் தலைவி கண்ணுக்கு மை தீட்டுவதில்லை.

3. வயிறு என்னும் கவிதையில் ஷண்முக சுப்பையா குறிப்பிடுவனவற்றை விளக்குக

மனிதன் தலையைச் சொறிகிறான். நாக்கைக் கடிக்கிறான். பல்லை இளிக்கிறான். முதுகை வளைக்கிறான். கையைக் கட்டுகிறான். காலைச் சேர்த்து வைத்துக் கொள்கிறான் எல்லாம் எதற்காக ஏன் இப்படி மனிதன் அல்லல் உறுகிறான். கவிஞர் வயிற்றைக் கேட்கச் சொல்கிறார். பதிலை வயிறு சொல்லும் என்கிறார். அது என்ன பதில் பசி தான். வயிற்றுப் பசி தான் மனிதனை இந்தக் கோலத்திற்கு ஆளாக்குகிறது. பசிக்கப் புசிக்க இருக்குமானால் அவன் உலகத்தையே வெல்லுவான். இதைத்தான் மகாகவி பாரதியார் தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜகத்தினையே அழிப்போம் என்கிறார்.

அத்தனை உறுப்புகளுக்கும் ஜீவனாக வயிறு விளங்குவதைக் கவிஞர் ஷண்முக சுப்பையா நமக்கு உணர்த்துகிறார்.

## 8.14 பயிற்சி வினா

1. கண்ணும் எழுதேம் என்னும் கவிதையில் அப்துல் ரகுமானின் கவித்திறத்தை விவரி

## 8.15 பொருளறிக

குறிப்பு

கரி – கண்ணுக்குத் தீட்டும் மை, கோல் - மை தீட்டும் குச்சி, இழுக்கு – குற்றம்

## 8.16 மேலும் படித்தறிக

கவிதைகள், அப்துல் ரகுமான், யுனிவர்சல் வெளியீடு, தி.நகர், சென்னை 17

## பிரிவு - 3 : காப்பியம்

**கூறு 9**

1. **சிலப்பதிகாரம் - வழக்குரைகாதை**
2. **கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்**

குறிப்பு

**கூறு 9**

**9 பாட அமைப்பு**

**9.1 அறிமுகம்**

**9.2 நோக்கம்**

9.3 நூலாசிரியர் குறிப்பு - இளங்கோவடிகள்

9.4 நூலமைப்பு

9.5 காண்டங்கள் - காதைகள்

9.6 சிலப்பதிகாரம் உணர்த்தும் முப்பெரும் உண்மைகள்

9.7 காப்பியப் பெருமை

9.8 கதை மாந்தர்கள்

9.9 சிலப்பதிகாரம் வழக்குரை காதை

9.10 வழக்குரை காதையில் இடம்பற்ற காப்பிய மாந்தர்

9.11 பாடல் - வழக்குரை காதை

9.11.1 பாடல் விளக்கம்

9.11.1.1 கோப்பெருந்தேவி கண்ட கனவு

9.11.1.2 மன்னர்க்குச் செய்தி உரைத்தல்

9.11.1.3 கண்ணகியின் வரவும், வாயிற்காப்போன் உரையும்

9.11.1.4 கண்ணகி தன் வரலாறு கூறியது

9.11.1.5 அரசன் உரைத்தது

9.11.1.6 கண்ணகியின் மாற்றமும் அரசன் உரையும்

9.11.1.7 அரசன் நிலை

9.11.1.8 கோப்பெருந்தேவியின் நிலை

9.12 வெண்பா

9.12.1 கண்ணகி கூற்று

9.12.2 கண்டோர் கூற்று

9.13 நூலாசிரியர் குறிப்பு – கம்பர்

9.14 கம்பராமாயணத்தின் பிரிவுகள்

9.15 காப்பிய காலம்

9.16 தொன்மங்கள்

9.17 அரங்கேற்றம்

9.18 மந்திரப்படலத்தில் இடம்பெறுபவை

9.19 கடவுள் வாழ்த்து

9.20 மந்திரப்படலம்

9.20.1 தசரதன் ஆலோசனை மண்டபம் அடைதல்

9.20.2 சபையிலிருந்தாரைப் போக்கி, மந்திரக் கிழவரை மன்னன் வருவித்தல்

9.20.3 வசிட்ட முனிவனின் வருகை

9.20.4 மாண்பு பல பெற்ற மந்திரக் கிழவர் வந்து அவையில் அமர்தல்

9.20.5 தசரதன் தன் உளக் கருத்தை வெளியிடுதல்

9.20.6 தசரதன் சொல் கேட்ட மந்திரக் கிழவரின் மனநிலை

குறிப்பு

9.20.7 வசிட்டன் தசரதன் கருத்திற்கு உடன்பட்டுப் பேசுதல்

9.20.8 மன்னன் மகிழ்ந்து உரை செய்தல்

9.20.9 மந்திரக் கிழவரின் கருத்தைச் சுமந்திரன் எடுத்துரைத்தல்

9.20.10 தேருடன் சுமந்திரன் இராகவன் திருமனை புகுதல்

9.20.11 வீதிகளில் இராமன் செல்லும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

9.20.12 தம்பி இலக்குவனுடன் இராமன் தசரதன் இருந்த இடம் சேர்தல்

9.20.13 வசிட்டனையும் தசரதனையும் இராமன் வணங்க, தசரதன் அவனை மார்புறத் தழுவுதல்

9.20.14 தசரதன் தன் கருத்தை இராமனுக்கு விளங்க உரைத்தல்

9.20.15 தந்தை ஏவியது செயல் கடன் என, இராமன் தசரதன் கட்டளைக்கு இசைதல்

9.20.16 தசரதன் மகிழ்ந்து தன் அரண்மனைக்குப் போதல்

9.20.17 சுமந்திரனது தேரில் ஏறி, இராமனும் தன் அரண்மனை சேர்தல்

9.20.18 தசரதன் அரசர்களுக்கு ஓலைப் போக்கி, முடிசூட்டுவதற்கு வேண்டுவன செய்ய வசிட்டனிடம் கூறுதல்

9.20.19 வந்த மன்னர்களிடம் முடிசூட்டும் செய்தியைத் தசரதன் தெரிவித்தல்

9.20.20 யாவரும் மகிழ்ந்து, அரசன் கருத்தை விரும்பி வரவேற்றல்

9.20.21 என் கருத்திற்கு இசைந்தது எதனால்? என மன்னரைத் தசரதன் வினாவுதல்

9.20.22 வேத்தவையோரின் விடை

9.20.23 தசரதன் உவகை மிகுதியால், அவையோரை நோக்கிப் பேசுதல்

9.20.24 அரசவை விடுத்து, நாள் குறித்ததற்காகத் தசரதன் மற்றொரு மண்டபம் போதல்

9.21

9.21.1 தசரதன் மந்திரக் கிழவரை அழைத்தல்

9.21.2 மந்திரக் கிழவர் மாண்புகள்

9.21.3 தசரதனின் உள்ளக் கருத்து

9.21.4 அமைச்சர் மனநிலை

9.21.5 வசிட்டன் உடன்படல்

9.21.6 அறத்தின் மூர்த்தி இராமன்

9.21.7 நல்லவள் சீதை

9.21.8 தசரதன் மறுமொழி

9.21.9 சுமந்திரன் கூறியது

9.21.10 இராமன் தேரில் வரும்போது நகரில் நடந்தவை

9.21.11 தசரதன் இராமனுக்குத் தன் கருத்தை உரைத்தல்

9.21.12 இராமன் இசைவு

9.21.13 மன்னர்களுக்குச் செய்தி சொல்லல்

9.21.14 தசரதன் மீண்டும் கேட்டல்

9.21.15 மன்னன் மறுமொழி

9.21.16 அரசர்களைத் தசரதன் பாராட்டல்

9.22 நிறைவாக

9.23 பொருளறிக

9.24 சோதித்தறியும் வினா விடைகள்

9.25 பயிற்சி வினா

9.26 மேலும் படித்தறிக

குறிப்பு

## 9.1 அறிமுகம்

சிலப்பதிகாரம் சிலம்பு + அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது. சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆனதால் சிலப்பதிகாரம் ஆயிற்று. இந்நூல் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இந்நூல் 'பாட்டிடை வைத்த தொடர்நிலைச் செய்யுள்' எனவும் வழங்கப்படுகிறது. இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் காணலாம். கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பர். ஏனைய நூல்கள் அரசனையோ தெய்வங்களையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருக்க சிலப்பதிகாரம் கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதால் இதனை 'குடிமக்கள் காப்பியம்' என்றும் கூறுவர். இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியர் இளங்கோவடிகள் என்பவராவார். இவர் புகழ்பெற்ற சேரமன்னன் செங்குட்டுவனுடைய தம்பி எனக் கருதப்படுகிறது.

இக்காப்பியம் சமணசமயத்தைச் சார்ந்தது. சங்க காலத்திற்கும் தேவாரக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல்.

இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. கம்பராமாயணம் எனும் நூல் கம்பர் எனும் பெரும் புலவரால் இயற்றப்பட்ட தமிழ் நூலாகும். இந்நூல் இந்து சமய இதிகாசங்கள் இரண்டினுள் ஒன்றான இராமாயணத்தை மூலமாகக் கொண்டு

இயற்றப்பட்டதாகும். கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம் ஒரு வழி நூலாகும். இது வடமொழியில் வால்மீகி என்பவர் இயற்றிய இராமாயணத்தினைத் தழுவி எழுதப்பட்ட நூல் ஆகும். இது ஒரு வழிநூலாகவே இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் தமிழ்மொழியில் இயற்றியுள்ளார். வடமொழி கலவாத தூய தமிழ்ச்சொற்களைத் தனது நூலில் கையாண்டதால் கம்பர், தொல்காப்பிய நெறி நின்றவர் என்று புகழப்படுகிறார்.

## 9.2 நோக்கம்

பழந்தமிழில் நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டன. தொடர்நிலைச் செய்யுள் வடிவில் செய்யப்பட்டது காப்பியம் எனப்பட்டது. தமிழ்மொழியில் ஐந்து பெருங்காப்பியங்களும் ஐந்து சிறுகாப்பியங்களும் உள்ளன. இவை தவிர வேறு சில காப்பியங்களும் உள்ளன. ஐம்பெருங் காப்பியங்களுள் முதல் காப்பியமாகப் போற்றப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். அதில் ஒரு சிறுபகுதி வழக்குரை காதை என்பது. இந்தப் பகுதி மூலம் காப்பியத் தலைவி கண்ணகி. தன் கணவன் கோவலன் கள்வன் அல்லன் என நிறுவியதையும், அதன்வழி முப்பெரும் உண்மைகளுள் இரண்டு உணர்த்தப்படுவதையும் காண்பது நோக்கமாக அமைகிறது.

கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் பாலகாண்டத்தை அடுத்து இடம்பெறுகிறது. அயோத்தியா காண்டத்தில் இராமன் சீதையைத் திருமணம் செய்து கொண்டு அயோத்தியா செல்வதையும், பின்னர் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்வதும், மந்தரையின் சூழ்ச்சியால் கைகேயி மனம் மாறுவதும், பின்னர் இராமன் கானகம் செல்வதும், உடன் இலக்குவனும், சீதையும் செல்வதும், பரதன் நாட்டை ஆள்வதும், பின் பரதன் இராமன் கானகம் சென்று திரும்பியதும் பரதன் பதவியை ஒப்படைப்பதும் விளக்குவது நோக்கமாக அமைகிறது.

## 9.3 நூலாசிரியர் குறிப்பு

சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். இவர் இளவரசுப் பட்டத்தை விடுத்துத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். தன் அண்ணன் செங்குட்டுவனுடன் மலை வளம் காணச் சென்ற போது, கண்ணகியைப் பற்றிய செய்தியைச் சீத்தலைச் சாத்தனார் எனும் புலவர்

மூலமாக அறிந்தார் இளங்கோ. கண்ணகியின் கற்பொழுக்கமும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவரை மிகவும் கவர, மூவேந்தர்களுக்கும் உரிய தமிழின் உயர் காவியமாக சிலப்பதிகாரத்தைக் கவி புனைந்தார்.

சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி மற்றும் கோவலனின் துணைவி மாதவி ஆகியோரது வரலாற்றை விவரிக்கின்றது. இதன் இரட்டைக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை, ஆடலரசி மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாற்றை உரைக்கும் காவியமாகும். இதனை எழுதியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஆவார்.

## 9.4 நூலமைப்பு

காப்பியங்களுக்கான இலக்கண அமைப்பு அனைத்தும் பொருந்தி வரும்படி இயற்றப்பட்ட காப்பியமாகும். காவிரி, வைகை முதலான ஆறுகளும், புகார், உறந்தை, மதுரை, வஞ்சி முதலான நகரங்களும், குரவைக் கூத்து முதலிய கூத்துகளும், திருமால் முதலிய தெய்வங்களும், அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும் இந்நூலில் நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளன. அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரப் பதிகம் இதனை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனக் குறிக்கின்றது. இடையிடையே உரைகளும் வரிப்பாட்டுகளும் கலந்து வந்துள்ளன. பொருட்செறிவு, தெளிவான இனிய எளிய நடையுடன், அணிகள் பல பொதிந்த தமிழின் வளமான நூலாகும். இறையனார் களவியல் உரைகாரர், இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட பெருமை உடையது. தமிழறிஞர்களால் மிகுதியாக ஆய்வுக்கு உட்பட்ட நூல் இதுவேயாகும். சிலப்பதிகாரம், நூல் முகத்தில் உரைப்பாட்டினையும், கானல்வரி, வேட்டுவ வரி, ஆற்றுவரி, ஊசல் வரி, கண்புகு வரி என்னும் இசைப்பாட்டுகளும் நிறைந்தது.

## 9.5 காண்டங்கள் - காதைகள்

- புகார்க்காண்டம் - 10 காதைகள்
- மதுரைக் காண்டம் - 13 காதைகள்

- வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்

## 9.6 சிலப்பதிகாரம் உணர்த்தும் முப்பெரும் உண்மைகள்



சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. அவையாவன,

- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
- ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்

## 9.7 காப்பியப் பெருமை

சிலப்பதிகாரக் காலத்தில் வழக்கிலிருந்த தமிழர்தம் பண்பாடு, சமய நெறிகள், பழக்கவழக்கங்கள், கலைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள இக்காப்பியம் பெரிதும் துணைநிற்கும். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ‘நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்’ என்று பாராட்டியுள்ளார்.

## 9.8 கதை மாந்தர்கள்

கண்ணகி – பாட்டுடைத் தலைவி, கோவலனது மனைவி, களங்கமற்ற பெண்ணொழுக்கத்தின் எடுத்துக்காட்டாகவும், கற்புநெறியின் அளவுகோலாகவும் படைக்கப்பட்டவள். தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் என வள்ளுவர் உரைத்த மங்கை. கணவன் போற்றா ஒழுக்கம் புரிந்த போதும் அதை மாற்றா உள்ள வாழ்க்கையே ஆனவள். கணவனுக்காக மதுரை மாநகரையே எரித்தவள்.

கோவலன் - பெரும் செல்வந்தர் மாசாத்துவானின் மகன். புற ஒழுக்கங்கள் அனைத்தும் நிறைந்திருந்தாலும் மோகத்தால் அழிந்தவன். ஊழ்வினை காரணமாக உயிரிழந்தவன்.

மாதவி – பேரழகி. ஆடற்கலையின் ஆழமுணர்ந்தவள். கணிகையர் குலத்தோன்றலெனினும் கற்புநெறி வழுவாமல் கோவலனுக்கென்றே வாழ்ந்தவர். மணிமேகலையின் தாய்.

## 9.9 சிலப்பதிகாரம் - வழக்குரை காதை

**குறிப்பு**

சிலப்பதிகாரம் இரண்டாம் காண்டமான மதுரைக் காண்டத்தில் பத்தாவது காதையாக வழக்குரை காதை இடம்பெற்றுள்ளது. ஆசிரியப்பாவினால் அமைந்த இக்காதையில் சில வெண்பாக்களும் இடம்பெற்றிருக்கின்றன.

## 9.10 வழக்குரை காதையில் இடம்பெற்ற காப்பிய மாந்தர்

கோப்பெருந்தேவி

பாண்டிய மன்னன்

வாயில் காவலன்

கண்ணகி

## 9.11 பாடல் - வழக்குரை காதை

ஆங்குக்

குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்

கடைமணி இன்குரல் காண்பென்காண் எல்லா

திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்

கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்லா

விடுங்கொடி வில்விர வெம்பகல் வீழும்

கடுங்கதிர் மீனிவை காண்பென்காண் எல்லா

கருப்பம்

(1-8)

செங்கோலும் வெண்குடையும்

செறிநிலத்து மறிந்து வீழ்தரும்

நங்கோன்றன் கொற்றவாயில்

குறிப்பு

மணிநடுங்க நடுங்கு முள்ளம்
இரவு வில்லிடும் பகல்மீன் விழும்
இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பமுண்டு
மன்னவர்க்கியாம் உரைத்துமென
ஆடியேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணியிழையினர்
கோடி யேந்தினர் பட்டேந்தினர்
கொழுந்திரை யலின்செப் பேந்தினர்
வண்ண மேந்தினர் சுண்ணமேந்தினர்
மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியேந்தினர் பிணையலேந்தினர்
கவரியேந்தினர் தூபமேந்தினர்
கூனுங் குறளும் ஊமுங் கூடிய
குறுந் தொழிலிளைஞர் செறிந்து சூழ்தர
நரை விரைஅய நறுங்கூந்தலர்
உரைவிரைஇய பலர் வாழ்த்திட
ஈண்டுநீர் வையங் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி வாழ்கென
ஆயமுங் காவலும் சென்
றடியீடு பரசி யேத்தக்
கோப்பெருந் தேவிசென்றுதன்

குறிப்பு

தீக்கனாத் திறமுரைப்ப

அரிமா னேந்திய அமளிமிசை இருந்தனன்

திருவீழ் மார்பின் தென்னவர்கோவே இப்பால்

வாயி லோயே வாயி லோயே

அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து

இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே

இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்

கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று

அறிவிப் பாயே அறிவிப் பாயே, என

வாயிலோன், வாழியெங் கொற்கை வேந்தே வாழி

தென்னம் பொருப்பின் தலைவ வாழி

செழிய வாழி தென்னவ வாழி

பழியொடு படராப் பஞ்சவ வாழி

அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்

பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி

வெற்றிவேற் றடகைக் கொற்றவை யல்லள்

அறுவர்க் கிளைய நங்கை இறைவனை

ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்

கானகம் உகந்த காளி தாருகன்

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்

செற்றனன் போலும் செயிர்த்தனன் போலும்

குறிப்பு

பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என
வருக மற்றவள் தருக ஈங்கென
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி போய்எனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுட தான்தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப புகுந்தீங்கு
என்காற் சிலம்பு-பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

கண்ணகி யென்பதென் பெயரேயெனப்

பெண்ணணங்கே

குறிப்பு

கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்என ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே,

மணிகண்டு

தாழ்ந்த குடையன் தளர்ந்த –செங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லொன்று
இணையடி தொழுதுவீழ்ந் தனனே மடமொழி.

## 9.11.1 பாடல் விளக்கம்

### 9.11.1.1 கோப்பெருந்தேவி கண்ட கனவு

குறிப்பு

அரண்மனையில் பாண்டிய அரசி கோப்பெருந்தேவி தான் கண்ட தீய கனவினால் உள்ளங் கலங்கித் தன் தோழியிடம் கூறியது.

தோழீ! கேள். கனவில் மன்னனது வெண்கொற்றக் குடையும் செங்கோலும் கீழே விழுந்தன. வாயிலின் மணி ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது. எட்டுத் திசைகளும் அதிர்ந்தன. இருளானது ஞாயிற்றை விழுங்கியது. இரவில் வானவில் தோன்றியது. பகலில் விண்மீன்கள் எரிந்து வீழ்ந்தன. இதெல்லாம் என்ன? அதனால் நமக்கு வரக்கூடிய துன்பம் ஒன்றுண்டு. அதனை நம் மன்னவர்க்குச் சென்று கூறுவேன்.

இவ்வாறு கூறிய தேவி மன்னன் இருக்கும் அரசவை நோக்கிச் சென்றாள். (பின்னால் நிகழப் போகும் நிகழ்ச்சியைக் குறிப்பாக முன்னரே உணர்த்துவது நாடக உத்தியாகும். இங்குத் தேவி கண்ட கனவின் மூலம் பாண்டிய மன்னன் வீழ்ச்சி அடையப் போவது குறிப்பாக உணர்த்தப்பட்டது.) இப்பகுதியை ஆசிரியர் கீழ்வருமாறு பாடுகிறார்.

ஆங்குக்

குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்

கடைமணி இன்குரல் காண்பென்காண் எல்லா

திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்

கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்லா

விடுங்கொடி வில்விர வெம்பகல் வீழும்

கடுங்கதிர் மீனிவை காண்பென்காண் எல்லா

கருப்பம் (1-8)

### 9.11.1.2 மன்னர்க்குச் செய்தி உரைத்தல்

குறிப்பு

கோப்பெருந்தேவி தான் கண்ட கனவினால் கலக்கமுற்றாள். வருவதோர் துன்பம் உண்டு என்பதை உணர்ந்தாள். தான் கண்ட கனவினை அரசர்க்கு உணர்த்தப் புறப்பட்டாள். நறுமணப் பொருள்கள் சுமந்த குற்றவேல் மகளிர் வாழ்த்தவும் புடைசூழவும் தேவி மன்னனிடம் சென்றாள். சிங்கம் சுமந்த அரியணையில் வீற்றிருந்த மன்னனிடம் தான் கண்ட கனவினை உரைத்தாள்.

### 9.11.1.3 கண்ணகியின் வரவும் வாயிற்காப்போன் உரையும்

வாயிலோயே அறிவற்ற, அறவுணர்வற்ற அரச நீதியற்ற அரசனது வாயிலைக் காப்போனே கணவனை இழந்தாள் ஒருத்தி பரலுடைய இரண்டு சிலம்பினுள் ஒன்று ஏந்திய கையளாய் நம் கடையகத்தாள் என அரசனுக்கு அறிவிப்பாய் எனக் கண்ணகி கூறுகிறாள். இதனை,

வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே, என

என்ற அடிகள் விளக்குகின்றன.

வாயிற் காப்போன் அரசன் முன்வந்து கொற்கை நகரத்து அரசே வாழி பொதியமலைத் தலைவனே வாழி செழியவாழி பாண்டியவாழி மறநெறி செல்லாப் பஞ்சவ வாழி என வாழ்த்துகிறான். வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை அல்லள் பிடாரியும் அல்லள் பத்திரகாளியும் அல்லள் துர்க்கையும் அல்லள். ஆனால் உள்ளத்தில் கறுவு கொண்டவள் போலவும், சினமுற்றவள் போலவும், பொற்சிலம்பு ஒன்று ஏந்திய

கையளாய்க் கணவனை இழந்தாள் ஒருத்தி நம் கடையகத்தாள் என்று கூறினான்.

குறிப்பு

அரசன் அவளை அழைத்து வரச் சொன்னான்.

வாயிலோன் கண்ணகியை அழைத்துச் சென்று மன்னனைக் காட்ட மன்னனே பேசுகிறான்.

நீர் சிந்தும் கண்களை உடையராய் இளங்கொடி போல என் முன்னர் வந்து நின்ற பெண்ணே யார் நீ என்றான்.

ஆராய்ச்சி இல்லாத மன்னனே சொல்கிறேன்.

இப்பகுதி கண்ணகி சினத்தாலும் உருவத்தாலும் மக்கள் தன்மையில் இருந்து வேறுபட்டு, கொற்றவை முதலிய தெய்வ மகளே போல் காணப்பட்டாள் என்பதை உணர்த்துகிறது.

### 9.11.1.4 கண்ணகி தன் வரலாறு கூறியது

தேவர்கள் போற்ற புறா ஒன்றிற்காகத் தன் தசையை அரிந்த அரசன் ஒருவன், கடைவாயில் மணி நடுங்கப் பசு ஒன்றின் துயர் துடைக்கத் தேரில் தன்மகனைத் தானே கொன்ற அரசன் ஒருவன் இத்தகைய மன்னர்கள் ஆண்ட புகார் நகரம் என் ஊர். அவ்வூர்ப் பெருங்குடி வணிகன் மாசாத்துவான் மகனாகத் தோன்றி பொருளீட்டி வாழ்க்கை நடத்த உன் மதுரை நகர்ப்புகுந்து என் காற் சிலம்புக்கு விலை கேட்டுத் திரிந்து உன்னால் கொல்லப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி நான் என்று அரசனுக்கு உணர்த்தினாள்.

தேரா மன்னா செப்புவ துடையேன்

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்

புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்

வாயிற் கடைமணி நடுநா நடுங்க

ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்

அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப புகுந்தீங்கு
என்காற் சிலம்பு-பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

குறிப்பு

இப்பகுதியில் அரசன் மீண்டும் தன்னை வினவுவதற்கு இடமின்றிக் கூறவேண்டிய அனைத்தையும் குறைபடாது கூறிக் கண்ணகி வழக்குரைக்கின்ற திறம் போற்றுதற்குரியது.

### 9.11.1.5 அரசன் உரைத்தது

கள்வனைக் கொல்லல் கடுங்கோல் அன்று. பெண்ணே அ∴து அரசு நீதியல்லவா என்கிறான்.

### 9.11.1.6 கண்ணகியின் மாற்றமும் அரசன் உரையும்

அறநெறியிற் செல்லாத கொற்கை அரசே என் காற்சிலம்பின் பரல் மாணிக்கம் என்கிறாள். பெண்ணே நீ உரைத்தது நன்மொழி. என் தேவியின் சிலம்பில் உள்ள பரல்கள் முத்துக்களே என்று கூறி அச்சிலம்பினைத் தருவித்துக் கண்ணகியின் முன் வைத்தான். அவ்வளவில் அதை எடுத்து உடைத்தான். மாணிக்கப் பரல்கள் மன்னன் முகத்தை நோக்கித் தெறித்தன.

### 9.11.1.7 அரசன் நிலை

மாணிக்கத்தைக் கண்டதும் மன்னன் மனம் தளர்ந்தான். நிலை குலைந்தான். குடை தாழ்ந்தது. செங்கோல் நழுவியது. பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன்.

மக்களைக் காக்கின்ற பாண்டி நாட்டு ஆட்சி என் முதல் தவறியது. என் ஆயுள் போகட்டும் என மயங்கி விழுந்தனன்.

குறிப்பு

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென

இவ்வாறு அரசன் தன் தவற்றை உணர்ந்ததும், தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்தினான்.

### 9.11.1.8 கோப்பெருந்தேவியின் நிலை

அது கண்டு கோப்பெருந்தேவி உடல் நடுங்க உளம் குலைந்து கண்ணகியைப் பார்த்து கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று கூறித் தன் கணவன் அடிதொழுது விழுந்தனள். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதை இந்தக் காதை விளக்குகிறது. கண்ணகியின் மதிநுட்பமும் பேச்சாற்றலும் இக்காதையால் உணர்த்தப்படுகின்றன.

## 9.12 வெண்பா

இக்காதையின் இறுதியில் மூன்று வெண்பாக்கள் உள்ளன. முதல் வெண்பா கண்ணகி கூற்றாகவும், ஏனைய இரண்டும் நிகழ்ச்சியைக் கண்ட ஒருவர் கூற்றாகவும் அமைந்துள்ளன.

### 9.12.1 கண்ணகி கூற்று

1. அல்லவை செய்தார்க் கறங்கூற்று மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே – பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉங் காண்

தீவினைகளைச் செய்தவர்களை அறக்கடவுளே கூற்றாக நின்று தண்டிக்கும் என்று சான்றோர் கூறிய வாக்கு வாய்மையே ஆகும். பொல்லாத பழிச் செயலைச் செய்த வெற்றி வேந்தனின் தேவியே! தீவினைக்கு நான் இனிச் செய்கின்ற செயலையும் காண்பாயாக என்று கண்ணகி தான் அடுத்துச் செய்யவிருந்த செயலைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

### 9.12.2 கண்டோர் கூற்று

2. காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்

ஆவி குடிபோன அவ்வடிவும் - பாவியேன்

காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்

கூடலான் கூடாயி னான்.

கண்ணகியின் மலர் போன்ற விழிகளில் இருந்து சொரிகின்ற துன்பக் கண்ணீரையும், அவள் கையிலே ஏந்தி வந்த ஒற்றைச் சிலம்பினையும் உயிர் நீத்த உடம்பு போன்ற அவள் உருவத்தையும், காடு போன்று அடர்ந்து, அவிழ்ந்து சரிந்த அவளது கரிய கூந்தலையும் கண்டு அச்சமுற்று, மதுரை மன்னன் தானே அந்நிலைக்குக் காரணமானதால் உயிர் துறந்து வெற்றுடம்பாய்க் கிடந்தான். தீவினையுடையேன் இந்நிகழ்ச்சியைக் கண்கூடாகக் கண்டேன்.

3. மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்

கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக்கோன்

கண்டனவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியில்

உண்டனவே தோற்றான் உயிர்.

கண்ணகியினுடைய உடம்பில் படிந்த புழுதியையும், அவளது விரிந்து கிடந்த கரிய கூந்தலையும், அவளது கையிலேந்திய ஒற்றைச் சிலம்பையும் பார்த்த பொழுதே பாண்டிய நாட்டு மன்னன் வழக்கில்

தோற்றான். அக்கண்ணகி வழக்குரைத்த சொற்களைக் கேட்ட அளவிலேயே மன்னன் உயிரையும் துறந்தான்.



## 9.13 கம்பர் - நூலாசிரியர் குறிப்பு

கம்பர் தாம் இயற்றிய இந்நூலிற்கு இராமவதாரம் என்றே பெயரிட்டிருந்தார். ஆனால் இராமாயணம் பலரால் இயற்றப்பட்டதால் கம்பரின் பெயரோடு இணைத்து கம்பராமாயணம் என்றே அழைக்கப்படுகிறது. கம்பரின் இராமாயணத்தைக் கம்பநாடகம் எனவும், கம்பச்சித்திரம் எனவும் கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் அழைப்பதுண்டு. கம்பரின் யாப்பு வண்ணங்கள் நூல் நெடுகிலும் மின்னி மிளிர்கின்றன. ‘வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொண்ணூற்றாறே (யாப்பு வண்ணங்களின் எண்ணிக்கை 96) என்றொரு கணக்கீடும் உண்டு. கம்பாராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது. அணி பொருள், நடை ஆகியவற்றால் சிறந்து விளங்குவது. சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு தமிழ்ப் பண்பாட்டோடு இயைந்து விளங்குவது.

## 9.14 கம்பராமாயணத்தின் பிரிவுகள்

கம்பராமாயணம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களையும் நூற்றுப் பதினாறு (116) படலங்களையும் உடையது. காண்டம் என்பது பெரும் பிரிவினையும், படலம் என்பது அதன் உட்பிரிவினையும் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் | - | 22 படலங்கள் |
| அயோத்தியா காண்டம் | - | 12 படலங்கள் |
| ஆரண்ய காண்டம் | - | 11 படலங்கள் |
| கிட்கிந்தா காண்டம் | - | 17 படலங்கள் |
| சுந்தர காண்டம் | - | 15 படலங்கள் |
| யுத்த காண்டம் | - | 39 படலங்கள் |

## 9.15 காப்பிய காலம்

குறிப்பு

கம்பராமாயணத்தில் உள்ள பாடல்களையும், கம்பரின் வாழ்வினையும் கொண்டு கம்ப இராமாயணம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சிலர் கம்பராமாயணம் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பத்தாம் நூற்றாண்டினைச் சேர்ந்தது என்றும் கூறியுள்ளார். வையாபுரிப் பிள்ளை என்பவர் கம்பர் தனியன்கள் என்பதினை 16ஆம் நூற்றாண்டில் சிலர் புகுத்தியிருக்கக் கூடும் என்று கூறியுள்ளார். இந்த கம்பர் தனியன்களில் பதினேழு பாடல்கள் உள்ளன. அவற்றில் எண்ணிய சகாப்தம் எண்ணூற்று ஏழில் மேல் என்ற தொடர் அமைந்துள்ளது. இதனைக் கொண்டு கி.பி 885இல் இராமாயணம் இயற்றப்பட்டிருக்கக் கூடும் என்கின்றனர்.

மா.இராசமாணிக்கனார் கி.பி.1325க்கும் முன்பே கம்பராமாயணம் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கன்னட நாட்டில் உள்ள கல்வெட்டினைக் கொண்டு குறிப்பிடுகிறார். எனினும் இறுதியாகக் கம்பர் மூன்றாம் குலோத்துங்க சோழனோடு மாறுபட்டு தற்போதைய ஆந்திராவில் இருக்கும் ஓரங்கல் என்னும் பகுதியில் தங்கியிருக்கிறார். அப்போது அவ்விடத்தில் இருந்த அரசன் பிரதாபருத்திரன் என்பவராவார். அவருடைய காலம் கி.பி.1162 – 1197 ஆகும். இதனால் கம்பர் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து கம்பராமாயணத்தினை இயற்றியுள்ளார்.

## 9.16 தொன்மங்கள்

கம்பர் இக்காப்பியத்தை அதன் மூலமான வடமொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தார். அந்த முயற்சியை ஓர் அரிய உவமையின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். பசியுடைய பூனை ஒன்று பாற்கடலைக் கண்டு அதை நக்கிக் குடித்து விட ஆசை கொண்டது போல தன் முயற்சியை ஒப்பிடுகிறார். இது அவையடக்கமாகக் கொள்ளப்படுகிறது. கம்பர் இராமகாதையை எழுதுவதற்கு உறுதுணையாக இருந்தவர் சடையப்ப வள்ளல் ஆவார். இதற்கு நன்றி பாராட்டும் விதமாக தனது காப்பியத்தில் ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் எனும் விதத்தில் சடையப்ப வள்ளலைப் போற்றிப் பாடியுள்ளார்.

## 9.17 அரங்கேற்றம்



கம்பர் இராமாயணத்தினை எழுதிய பின்பு, அதனை திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ய விரும்பினார். திருவரங்கத்தில் உள்ளோர்கள், தில்லை தீட்சிதர்கள் ஒப்புக் கொண்டால் இராமாயணத்தினை திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யலாம். இல்லையென்றால் வேண்டாம் என்று கூறிவிடுகின்றனர். அதனால் கம்பர் தில்லை சென்றார். அங்கே தீட்சிதர்களாக இருக்கும் மூவாயிரம் நபர்களும் ஒன்று சேர்க்க இயலாமல் இருந்த போது, ஒரு குழந்தை இறந்தது. அந்தக் குழந்தைக்காக அனைத்துத் தீட்சிதர்களும் கூடி நின்றார்கள். அப்போது கம்பர் தன்னுடைய இராமாயணத்திலிருந்து நாகபாசப் படலம் என்ற பகுதியைப் பாடிக் குழந்தையை உயிர்ப்பித்தார். தீட்சிதர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். தான் இயற்றிய இராமாயணத்தினைத் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ய அனுமதியும் பெற்றார்.

திருவரங்கத்தில் உள்ளவர்கள் அரங்கேற்றத்திற்கு முன்பு சடகோபரைப் பாடும் படி கூறியமையால், கம்பர் சடகோபர் அந்தாதியைப் பாடினார். அதன் பின்பு இராமாயணத்தினைத் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்தார்.

## 9.18 மந்திரப் படலத்தில் இடம்பெறுபவை

இரண்டாவது காண்டம் அயோத்தியா காண்டம். இதில் மந்திரப் படலம் என்பது இராமனுக்கு முடிசூட்டுவது பற்றித் தசரதன் தன் மந்திரக் கிழவரோடு ஆலோசித்ததைக் கூறும் பகுதியாகும். இதன்கண் மந்திரக் கிழவரின் மாண்புகள், தசரதன் தன் கருத்தைக் கூறுவது அமைச்சர்கள் மனநிலை, வசிட்டன் உடன்படல். மன்னன் மறுமொழி, சுமந்திரன் இராமனை அழைத்து வரும் போது நகரில் நடந்தவை தசரதன் இராமனிடம் கூறுவது இராமன் ஏற்பு.

பிற மன்னர்களின் வருகையும் அவர்கள் கருத்தும் தசரதன் மகிழ்ச்சி முதலானவை இடம்பெறுகின்றன. கம்பன் பாடல்கள் உவமை நயங்களோடு மிளிர்கின்றன.

**குறிப்பு**

இராமாயணத்தில் இந்த அயோத்தியா காண்டம் உயிர் நிலையாகிறது. காரணம் கூனியின் சூழ்ச்சியினால் கைகேயி தன்மனம் மாறுபட்டு இராமனைக் காட்டிற்குச் செலுத்த அதுவே இராவணவதத்துக்கு அடிப்படை ஆகிறது. இதனைக் கம்பர்,

"அரக்கர் பாவமும் அல்லவ ரியற்றிய அறமும்
தரக்க நல்வருள் துறந்தனன் தூமொழிமடமான்
இரக்க மின்மை யன்றோ இன்றிவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புக ழமுதினைப் பருகின் றதுவே".

என்று குறிக்கிறார்.

## 9.19 கடவுள் வாழ்த்து

வான்நின்று இழிந்து, வரம்பு இகந்த மா பூதத்தின் வைப்பு எங்கும், ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்ப, கோல் துறந்து கானும் கடலும் கடந்து, இமையோர் இடுக்கண் காத்த கழல் வேந்தே.

## 9.20 பாடல் - மந்திரப் படலம்

### 9.20.1 தயரதன் ஆலோசனை மண்டபம் அடைதல்

மண்ணுறு முரசுஇனம் மழையின் ஆர்ப்புற,
பண்ணுறு படர் சினப் பரும யானையான்,
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற,
எண்ணுறு சூழ்ச்சியின் இருக்கை எய்தினான். 1

### 9.20.2 சபையிலிருந்தாரைப் போக்கி, மந்திரக் கிழவரை மன்னன் வருவித்தல்

புக்கபின், நிருபரும், பொருஇல் சுற்றமும்,

பக்கமும், பெயர்க என, பரிவின் நீக்கினான்,
ஒக்க நின்று உலகு அளித்து, யோகின் எய்திய

சக்கரத்தவன் எனத் தமியன் ஆயினான். 2

சந்திரற்கு உவமை செய் தரள வெண்குடை
அந்தரத்தளவும் நின்று அளிக்கும் ஆணையான்,
இந்திரற்கு இமையவர் குருவை ஏய்ந்த, தன்
மந்திரக் கிழவரை, வருக என்று ஏவினான் 3

### 9.20.3 வசிட்ட முனிவனின் வருகை

பூ வரு பொலன் கழல் பொரு இல் மன்னவன்
காவலின் ஆணைசெய் கடவுள் ஆம் என,
தேவரும் முனிவரும், உணரும், வேர்கள்
மூவரின் நால்வர் ஆம், முனி வந்து எய்தினான். 4

### 9.20.4 மாண்பு பல பெற்ற மந்திரக் கிழவர் வந்து அவையில் அமர்தல்

குலம் முதல் தொன்மையும், கலையின் குப்பையும்,
பல முதல் கேள்வியும், பயனும், எய்தினார்
நலம் முதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலம் முதல் அறுத்து, அருந் தருமம் தாங்கினார் 5

உற்றது கொண்டு, மேல்வந்து உறு பொருள் உணரும் கோளார்
மற்றது அது வினையின் வந்தது ஆயினும், மாற்றல் ஆற்றும்

பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர் மானம். நோக்கின் கவரிமா அனைய நீரார் 6

குறிப்பு

காலமும் இடனும், ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற
நூல் உற நோக்கி, தெய்வம் நுனித்து, அறம் குணிந்த மேலோர்
சீலமும், புகழ்க்கு வேண்டும் செய்கையும், தெரிந்து கொண்டு
பால் வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்.
7

தம் உயிர்க்கு இறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்று, உரைக்கும் வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத் தோற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார் 8

நல்லவும் தீயவும் நாடி, நாயகற்கு,
எல்லைஇல் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்
ஒல்லை வந்து உறுவன உற்ற பெற்றியின்,
தொல்லை நல்வினை என உதவும் சூழ்ச்சியார். 9

அறுபதினாயிரர் எனினும் ஆண்தகைக்கு
உறுதியில் ஒன்று இவற்கு உணர்வு என்று உன்னலாம்
பெறல் அருஞ் சூழ்ச்சியர் திருவின் பெப்பினர்

மறி திரை கடல் என வந்து சுற்றினார் 10



முறைமையின் எய்தினா் முந்தி, அந்தம் இல்
அறிவனை வணங்கி, தம் அரசைக் கைதொழுது,
இறையிடை வரன்முறை ஏறி, ஏற்ற சொல்
துறை அறி பெருமையான் அருளும் சூடினார் 11

**9.20.5 தயரதன் தன் உளக் கருத்தை வெளியிடுதல்**

அன்னவா், அருள் அமைந்து இருந்த ஆண்டையில்,
மன்னனும், அவா் முகம் மரபின் நோக்கினான்
உன்னிய அரும் பெறல் உறுதி ஒன்று உளது
என் உணா்வு அணையநீா் இனிது கேட்டிரால் 12

வெய்யவன் குல முதல் வேந்தா், மேலவா்,
செய்கையின் ஒரு முறை திறம்பல் இன்றியே
வையம் என் புயத்திடை, நுங்கள் மாட்சியால்,
ஐ-இரண்டு ஆயிரத்து ஆறு தாங்கினேன் 13

கன்னியா்க்கு அமைவதும் கற்பின், மா நில
தன்னை இத்தகையதாய்த் தருமம் தைர
மன்னுயிா்க்கு உறுவதே செய்து வைகினேன்
என் உயிா்க்கு உறுவதும் செய் எண்ணினேன் 14

விரும்பிய மூப்பு எனும் வீடு கண்ட யான்,
இரும் பியல் அனந்தனும், இசைந்த யானையும்,
பெரும் பெயர்க் கிரிகளும் பெயர, தாங்கிய
அரும் பொறை இனிச் சிறிது ஆற்ற ஆற்றலேன் 15

நம் குலக் குரவர்கள், நவையின் நீங்கினார்
தம் குலப் புதல்வரே தரணி தாங்கப் போய்,
வெங் குலப்புலன் கெட, வீடு நண்ணினார்
எங்கு உலப்புறுவர், என்று எண்ணி, நோக்குகேன் 16

வெள்ள நீர் உலகினில், விண்ணில், நாகரில்,
தள்ள அரும் பகை எலாம் தவிர்த்து நின்ற யான்,
கள்ளரின் கரந்து உறை காமம் ஆதி ஆம்
உள் உறை பகைஞருக்கு ஒதுங்கி வாழ்வெனோ? 17

பஞ்சி மென் தளிர் அடிப் பாவைகோல் கொள,
வெஞ் சினத்து அவுணர் தேர் பத்தும் வென்றுளேற்கு,
எஞ்சல் இல் மனம் எனும் இழுதை ஏறிய
அஞ்சு தேர் வெல்லும் ஈது அருமை ஆவதோ 18

ஒட்டிய பகைஞர் வந்து உருத்த போரிடைப்
பட்டவர் அல்லரேல், பரம ஞானம் போய்த்

தெட்டவர்அல்லரேல், செல்வம் ஈண்டு என
விட்டவர் அல்லரேல் யாவர் வீடு உளார்? 19

குறிப்பு

இறப்பு எனும் மெய்ம்மையை, இம்மை யாவர்க்கும்,
மறப்பு எனும் அதனின்மேல் கேடு மற்று உண்டோ?
துறப்பு எனும் தெப்பமே துணை செய்யாவிடின்,
பிறப்பு எனும் பெருங்கடல் பிழைக்கல் ஆகுமோ? 20

அருஞ் சிறப்பு அமைவரும் துறவும், அவ் வழித்
தெரிஞ்சு உறவு என மிகும் தெளிவும் ஆய், வரும்
பெருஞ் சிறை உள எனின், பிறவி என்னும் இவ்
இருஞ் சிறை கடத்தலின் இனியது யாவதோ? 21

இனியது போலும் இவ் அரசை எண்ணுமோ-
துனி வரு புலன் எனத் தொடர்ந்து தோற்கலா
நனி வரும் பெரும் பகை நவையின் நீங்கி, அத்
தனி அரசாட்சியில் தாழும் உள்ளமே? 22

உம்மை யான் உடைமையின், உலகம் யாவையும்
செம்மையின் ஓம்பி, நல் அறமும் செய்தனென்
இம்மையின் உதவி, இசை நடாய நீர்,
அம்மையும் உதவுதற்கு அமையவேண்டுமால். 23

குறிப்பு

இழைத்த தொல் வினையையும் கடக்க எண்ணுதல்,
தழைத்த பேர் அருளுடைத் தவத்தின் ஆகுமேல்,
குழைத்தது ஓர் அமுதினைக் கோடல் நீக்கி, வேறு
அழைத்த தீ விடத்தினை அருந்தல் ஆகுமோ? 24

கச்சைஅம் கடக் கரிக் கழுத்தின்கண் உறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்நிழல்
நிச்சயம் அன்றுஎனின் நெடிது நாள் உண்ட
எச்சிலை நுகருவது இன்பம் ஆகுமோ?
25

மைந்தரை இன்மையின் வரம்பு இல் காலமும்
நொந்தனென் இராமன் என் நோவை நீக்குவான்
வந்தனன் இனி அவன் வருத்த யான் பிழைத்து,
உய்ந்தனென் போவது ஓர் உறுதி எண்ணினேன். 26

இறந்திலன் செருக் களத்து இராமன் தாதை தான்,
அறம்தலை நிரம்ப, மூப்பு அடைந்த பின்னரும்,
துறந்திலன்'' என்பது ஓர் சொல் உண்டானபின்,
பிறந்திலென் என்பதின் பிறிது உண்டாகுமோ? 27

பெருமகன் என்வயின் பிறக்க, சீதை ஆம்
திருமகள் மணவினை தெரியக் கண்ட யான்,
அரு மகன் நிறை குணத்து அவனி மாது எனும்
ஒருமகள் மணமும் கண்டு உவப்ப உன்னினேன். 28

‘நிவப்புறு நிலன் எனும் நிரம்பு நங்கையும்,
சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்,
உவப்புறு கணவனை உயிரின் எய்திய
தவப் பயன் தாழ்ப்பது தருமம் அன்று அரோ. 29

‘ஆதலால், இராமனுக்கு அரசை நல்கி இப்
பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குறும்
மா தவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்
யாது நும் கருத்து? என, இனிய கூறினான். 30

**9.20.6 தயரதன் சொல் கேட்ட மந்திரக் கிழவரின் மன நிலை**

திரண்ட தோளினன் இப்பச் செப்பலும், சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர், ஆங்கே
வெருண்டு, மன்னவன் பிரிவு எனும் வதிர்ப்பறு நிலையால்,
இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ என இருந்தார் 31

அன்னர் ஆயினும், அரசனுக்கு, அது அலது உறுதி
பின்னர் இல் எனக் கருதியும், பெரு நில வரைப்பில்

மன்னும் மன்னுயிர்க்கு இராமனின் மன்னவர் இல்லை
என்ன உன்னியும், விதியது வலியினும், இசைந்தார். 32

குறிப்பு

### 9.20.7 வசிட்டன் தயரதன் கருத்திற்கு உடன்பட்டுப் பேசுதல்

இருந்த மந்திரக் கிழவர்தம் எண்ணமும், மகன்பால்
பரிந்த சிந்தை அம் மன்னவன் கருதிய பயனும்,
பொருந்து மன்னுயிர்க்கு உறுதியும், பொதுவுற நோக்கி,
தெரிந்து, நான்மறைத் திசைமுகன் மகன் இவை செப்பும் 33

நிருப நின் குல மன்னவர் நேமி பண்டு உருண்டிப்
பெருமை எய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்?
கருமமும் இது கற்று உணர்ந்தோய்க்கு இனிக் கடவ
தருமமும் இது தக்கதே உரைதனை – தகவோய் 34

புண்ணியம் தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ணலே இனி, அருந் தவம் இயற்றவும் அடுக்கும்
வண்ண மேகலை நிலமகள், மற்று, உனைப் பிரிந்து
கண் இழந்திலள் எனச் செயும், நீ தந்த கழலோன். 35

'புறத்து, நாம் ஒரு பொருள்' இனிப் புகல்கின்றது எவனோ,
அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான் என்பது அல்லால்?
பிறத்து, யாவையும் காத்து, அவை பின் உறத் துடைக்கும்,
திறத்து மூவரும் திருந்திடத் திருத்தும், அத் திறலோன். 36

குறிப்பு

'பொன் உயிர்த்த பூ மடந்தையும், புவி எனும் திருவும்,
இன் உயிர்த் துணை இவன் என நினைக்கின்ற இராமன்,
தன் உயிாக்கு என்கை புல்லிது தற் பயந்து எடுத்த
உன் உயிர்க்கு என நல்லன், மன் உயிர்க்கு எலாம் - உரவோய்
37

வாரம் என் இனிப் பகர்வது? வைகலும், அனையான்
பேரினால், வரும் இடம் எலாம் பெயர்கின்ற பயத்தால்,
வீர நின் குல மைந்தனை, வேதியர் முதலோர்
யாரும், யாம் செய்த நல் அறப் பயன் என இருப்பார் 38

'மண்ணினும் நல்லள் மலர்மகள், மலைமகள், கலை ஊர்
பெண்ணினும் நல்லள் பெரும் புகழ்ச் சனகி ஆம் நல்லனள் -
கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலாதவரும்,
உண்ணும் நீரினும், உயிரினும் அவனையே உவப்பார். 39

'மனிதா், வானவா் மற்றுளோா் அற்றம் காத்து அளிப்பாா்
இனிய மன்னுயிா்க்கு இராமனின் சிறந்தவா் இல்லை
அனையன் ஆதலின் அரச நிற்கு உறு பொருள் அறியின்,
புனித மா தவம் அல்லது ஒன்று இல் எனப் புகன்றான். 40

### 9.20.8 மன்னன் மகிழ்ந்து உரை செய்தல்

குறிப்பு

மற்று, அவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப் பெரு வில்
இற்ற அன்றினும், எறி மழுவாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும். பெரியது ஓர் உவகையன் ஆனான். 41

அனையது ஆகிய உவகையன், கண்கள் நீர் அரும்ப,
முனிவன் மா மலர்ப் பாதங்கள் முறைமையின் இறைஞ்சி,
இனிய சொல்லினை எம்பெருமான் அருள் வழியின்,
தனியன் நானிலம் தாங்கியது அவற்கு இது தகாதோ? 42

எந்தை நீ உவந்து இதம் சொல, எம் குலத்து அரசர்,
அந்தம் இல் அரும் பெரும் புகழ் அவனியில் நிறுவி,
முந்து வேள்வியும் முடித்து, தம் இரு வினை முடித்தார்
வந்தது அவ் அருள் எனக்கும் என்று உரை செய்து மகிழ்ந்தான். 43

### 9.20.9 மந்திரக் கிழவரின் கருத்தைச் சுமந்திரன் எடுத்துரைத்தல்

பழுதுஇல் மா தவன், பின் ஒன்றும் பணித்திலன், இருந்தான்
முழுதும் எண்ணுறும் மந்திரக் கிழவர் தம் முகத்தால்
எழுதி நீட்டிய இங்கிதம், இறை மகற்கு ஏற்க,
தொழுத கையினன், சுமந்திரன் முன் நின்று, சொல்லும் 44

குறிப்பு

"உறத் தகும் அரசு இராமற்கு என்று உவக்கின்ற மனத்தை,
துறத்தி நீ எனும் சொல் சுடும் நின் குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்கு அன்று
அறத்தின் ஊங்கு இனிக் கொடிது எனல் ஆவது ஒன்று யாதோ? 45

'புரைசை மாக் கரி நிருபர்க்கும், புரத்து உறைவோர்க்கும்,
உரைசெய் மந்திரக் கிழவர்க்கும், முனிவர்க்கும், உள்ளம்
முரசம் ஆர்ப்ப, நின் முதல் மணிப் புதல்வனை, முறையால்
அரசன் ஆக்கி, பின் அப் புறத்து அடுத்தது புரிவாய் 46

### 9.20.10 இராமனை அழைத்துவருமாறு மன்னன் சுமந்திரனுக்குக் கூறுதல்

என்ற வாசகம், சுமந்திரன் இயம்பலும், இறைவன்,
'நன்று சொல்லினை நம்பியை நளி முடி சூட்டி –
நின்று, நின்றது செய்வது விரைவினில், நீயே
சென்று, கொண்டு அணை, திருமகள் கொழுநனை' என்றான். 47

### 9.20.11 தேருடன் சுமந்திரன் இராகவன் திருமனை புகுதல்

அலங்கல் மன்னனை அடிதொழுது, அவன் மனம் அனையான்
விலங்கல் மாளிகை வீதியில் விரைவொடு சென்றான்,
தலங்கள் யாவையும் பெற்றனன் தான் எனத் தளிர்ப்பான்,
பொலன் கொள் தேரொடும் இராகவன் திருமனை புக்கான். 48

**குறிப்பு**

### 9.20.12 சுமந்திரன் செய்தி தெரிவிக்க, இராமன் உடனே தேரில் புறப்படுதல்

பெண்ணின் இன் அமுது அன்னவள் தன் னொடும் பிரியா
வண்ண வெஞ் சிலைக் குரிசிலும், மருங்கு இனிது இருப்ப,
அண்ணல் ஆண்டு இருந்தான் அழகு அரு நறவு என,
கண்ணும் உள்ளமும் வண்டு என களிப்புறக் கண்டான். 49

கண்டு, கைதொழுது,'ஐய, இக் கடலிடைக் கிழவோன்,
''உண்டு ஓர் காரியம் வருக என, உரைத்தனன் எனலும்,
புண்டரீகக் கண் புரவலன் பொருக்கென எழுந்து, ஓர்
கொண்டல்போல் சென்று, கொடி நெடுந் தேர்மிசைக் கொண்டான். 50

### 9.20.13 வீதிகளில் இராமன் செல்லும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

முறையின் மொய் முகில் என முரசு ஆர்த்திட, மடவார்
இறை கழன்ற சங்கு ஆர்த்திட, இமையவர்,'எங்கள்
குறை முடிந்தது என்று ஆர்த்திட, குஞ்சியைச் சூழ்ந்த
நறை அலங்களல் வண்டு ஆர்த்திட, தேர்மிசை நடந்தான் 51

பணை நிரைந்தன பாட்டு ஒலி நிரைந்தன அனங்கன்
கணை நிரைந்தன நாண் ஒலி கறங்கின நிறைப் பேர்
அணை நிரைந்தன அறிவு எனும் பெரும்புனல் அனையார்
பிணை நிரைந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார். 52

**குறிப்பு**

நீள் எழுத் தொடர் வாயிலில், குழையொடு நெகிழ்ந்த
ஆளகத்தினோடு அரமியத் தலத்தினும் அலர்ந்த
வாள் அரத்த வேல் வண்டொடு கெண்டைகள் மயங்க,
சாளரத்தினும் பூத்தன, தாமரை மலர்கள். 53

மண்டலம் தரு மதி கெழு, மழை முகில் அனைய
அண்டர் நாயகன் வரை புரை அகலத்துள் அலங்கல்
தொண்டை வாய்ச்சியார் நிறையொடும் நாணொடும், தொடர்ந்த
கெண்டையும் உள கிளை பயில் வண்டொடும் கிடந்த. 54

சரிந்த பூ உள, மழையொடு கலை உறத் தாழ்வ
பரிந்த பூ உள, பனிக் கடை முத்துஇனம் படைப்ப
எரிந்த பூ உள, இள முலை இழை இடை நுழைய
விரிந்த பூ உள, மீனுடை வானின்றும் வீழ்வ. 55

வள் உறை கழித்து ஒளிர்வன வாள் நிமிர் மதியம்
தள்ளுறச் சுமந்து, எழுதரும் தமனியக் கொம்பில்
புள்ளி நுண் பனி பொடிப்பன. பொன்னிடைப் பொதிந்த
எள்ளுடைப் பொரி விரவின – உள சில இளநீர் 56

**9.20.14 தம்பி இலக்குவனுடன் இராமன் தயரதன் இருந்த இடம் சேர்தல்**

குறிப்பு

ஆயது, அவ்வழி நிகழ்தர, ஆடவர் எல்லாம்
தாயை முன்னிய கன்று என நின்று உயிர் தளிர்ப்ப
தூய தம்பியும் தானம், அச் சுமந்திரன் தேர்மேல்
போய், அகம் குளிர் பரவலன் இருந்துழிப் புக்கான் 57

**9.20.15 வசிட்டனையும் தயரதனையும் இராமன் வணங்க, தயரதன் அவனை மார்புறத் தழுவுதல்**

மாதவன்தனை வரன்முறை வணங்கி, வாள் உழவன்
பாத பங்கயம் பணிந்தனன், பணிதலும், அனையாண்
காதல் பொங்கிட கண் பனி உகுத்திட. கனி வாய்ச்
சீதை கொண்கனைத் திரு உறை மார்பகம் சேர்த்தான். 58

'நலம் கொள் மைந்தனைத் தழுவினன்' என்பது ஏன்? நளி நீர்
நிலங்கள் தாங்கறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்கல் அன்ன திண் தோளையும், மெய்த் திரு இருக்கும்
அலங்கல் மார்பையும் தனது தோள், மார்பு, கொண்டு அளந்தான் 59

**9.20.16 தயரதன் தன் கருத்தை இராமனுக்கு விளங்க உரைத்தல்**

ஆண்டு, தன் மருங்கு இரீஇ, உவந்து, அன்புற நோக்கி,
'பூண்ட போர் மழு உடையவன் பெரும் புகழ் குறுக

நீண்ட தோளினாய் நிற் பயந்தெடுத்த யான் நின்னை
வேண்டி, எய்திட விழைவது ஒன்று உளது' என, விளம்பும். 60

குறிப்பு

'ஐய சாலவும் அலசினென் அருகு பெரு மூப்பும்
மெய்யது ஆயது வியல் இடப் பெரும் பரம் விசித்த
தொய்யல் மா நிலச் சுமை உறு சிறை துறந்து, இனி யான்
உய்யல் ஆவது ஓர் நெறி புக, உதவிட வேண்டும். 61

'உரிமை மைந்தரைப் பெறுகின்றது, உறு துயர் நீங்கி,
இருமையும் பெறற்கு'' என்பது பெரியவர் இயற்கை
தருமம் அன்ன நின்-தந்த யான், தளர்வது தகவோ?
கருமம் என்வயின் செய்யின் என் கட்டுரை கோடி. 62

'மைந்த நம் குல மரபினில் வந்தருள் வேந்தர்,
தம்தம் மக்களே கடன்முறை நெடுநிலம் தாங்க,
ஐந்தொடு ஆகிய முப் பகை மருங்கு அற அகற்றி,
உய்ந்து போயினர் ஊழி நின்று எண்ணினும் உலவார். 63

'முன்னை ஊழ்வினைப் பயத்தினும், முற்றிய வேள்விப்
பின்னை எய்திய நலத்தினும். அரிதினின் பெற்றேன்
இன்னம், யான் இந்த அரசியல் இடும்பையில் நின்றால்
நின்னை ஈன்றுள் பயத்தினின் நிரம்புவது யாதோ? 64

**குறிப்பு**

‘ஒருத்தல் எட்டொடு, திருத் தலை பன்மை சால் உரக
எருத்தம் மேல் படி பயம் அறச் சுமந்து, இடர் உழக்கும்
வருத்தம் நீங்கி, அவ் வரம்பு அறு திருவினை மருவும்
அருத்தி உண்டு, எனக்கு ஐய ஈது அருளிட வேண்டும். 65

‘ஆளும் நல் நெறிக்கு அமைவரும் அமைவினன் ஆகி,
நாளும் நம் குல நாயகன் நறை விரி கமலத்
தாளின் நல்கிய கங்கையைத் தந்து, தந்தையரை
மீள்வு இலா உலகு ஏற்றினான் ஒருமகன், மேல்நாள். 66

‘மன்னவர் வானவர் அல்லர் மேல் வானவர்க்கு அரசு ஆம்
பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர் அல்லர்
பின்னும், மா தவம் தொடங்கி, நோன்பு இழைத்தவர் அல்லர்
சொல் மறா மகப் பெற்றவரே துயர் துறந்தார். 67

‘அனையது ஆதலின். “அருந் துயர்ப் பெரும் பரம், அரசன்
வினையின் என்வயின் வைத்தனன்” எனக் கொள வேண்டா
புனையும் மா முடி புனைந்து. இந்த நல் அறம் புரக்க

நினையல் வேண்டும் யான் நின்வயின் பெறுவது ஈது என்றான்.
68



**9.20.17 தந்தை ஏவியது செயல் கடன் என இராமன் தயரதன் கட்டளைக்கு இசைதல்**

தாதை, அப்பரிசு உரைசெய, தாமரைக் கண்ணன்

காதல் உற்றிலன் இகழ்ந்திலன், கடன் இது என்று உணர்ந்தும்

யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ,

நீதி எற்கு?' என நினைந்தும், அப் பணி தலை நின்றான்.
69

**9.20.18 தயரதன் மகிழ்ந்து தன் அரண்மனைக்குப் போதல்**

குருசில் சிந்தையை மனக்கொண்ட கொற்ற வெண்குடையான்,

'தகுதி இவ் வரம்' எனச் சொல்லி, உயிர் உறத் தழுவி,

சுருதி அன்ன தன் மந்திரச் சுற்றமும் சுற்ற

பொரு இல் மேருவும் பொரு அருங் கோயில் போய்ப் புக்கான். 70

**9.20.19 சுமந்திரனது தேரில் ஏறி, இராமனும் தன் அரண்மனை சேர்தல்**

நிவந்த அந்தணர், நெடுந் தகை மன்னவர், நகரத்து

உவந்த மைந்தர்கள், மடந்தையர், உழைஉழைத் தொடர,

சுமந்திரன் தடந் தேர்மிசை, சுந்தரத் திரள் தோள்

அமைந்த மைந்தனும் தன் நெடுங் கோயில் சென்று அடைந்தான்.
71

**9.20.20 தயரதன் அரசர்களுக்கு ஓலை போக்கி, முடிசூட்டுவதற்கு வேண்டுவன செய்ய**

**குறிப்பு**

**வசிட்டனிடம் கூறுதல்**

வென்றி வேந்தரை,'வருக' என்று, உவணம் வீற்றிருந்த

பொன் திணிந்த தோட்டு அரும் பெறல் இலச்சினை போக்கி,

'நன்று சித்திர நளிர் முடி கவித்தற்கு, நல்லோய்

சென்று, வேண்டுவ வரன்முறை அமைக்க' எனச் செப்ப, 72

**9.20.21 வந்த மன்னர்களிடம் முடிசூட்டும் செய்தியைத் தயரதன் தெரிவித்தல்**

உரிய மா தவன் ஒள்ளியது என்று உவந்தனன், விரைந்து ஓர்

பொருள் இல் நேர்மிசை, அந்தணர் குழாத்தொடும் போக,-

'நிருபர் கேண்மின்கள், இராமற்கு நெறி முறைமையினால்

திருவும் பூமியும் சீதையின் சிறந்தன என்றான். 73

**9.20.22 யாவரும் மகிழ்ந்து, அரசன் கருத்தை விரும்பி வரவேற்றல்**

இறைவன் சொல் எனும் இன் நறவு அருந்தினர் யாரும்,

முறையில் நின்றல் முந்துறு களியிடை மூழ்கி

நிறையும் நெஞ்சிடை உவகை போய் மயிர் வழி நிமிர

உறையும் விண்ணகம் உடலோடும் எய்தினர் ஒத்தார். 74

ஒத்த சிந்தையர் உவகையின் ஒருவரின் ஒருவர்

குறிப்பு

தத்தமக்கு உற்ற அரசு எனத் தழைக்கின்ற மனத்தர்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
'அத்த நன்று' என, அன்பினோடு அறிவிப்பது ஆனார். 75

'மூ-எழு முறைமை எம் குலங்கள் முற்றுறப்
பூ எழு மழுவினால் பொருது போக்கிய
சேவகம் சேவகம் செகுத்த சேவகற்கு,
ஆவ இவ் உலகம் ஈது அறன்' என்றார் அரோ. 76

**9.20.23 என் கருத்திற்கு இசைந்தது எதனால்? என, மன்னரைத் தயரதன் வினாவுதல்**

வேறு இலா மன்னரும் விரும்பி, இன்னது
கூறியார் அது மனம் கொண்ட கொற்றவன்
ஊறிய உவகையை ஒளிக்கும் சிந்தையான்,
மாறும் ஓர் அளவை சால் வாய்மை கூறினான். 77

'மகன்வாயன் அன்பினால் மயங்கி, யான் இது
புகல, நீர் புகன்ற இப் பொம்மல் வாசகம்,
உகவையின் மொழிந்ததோ? உள்ளம் நோக்கியோ?
தகவு என நினைந்ததோ? தன்மை யாது?" என்றான். 78

### 9.20.24 வேத்தவையோரின் விடை

குறிப்பு

இவ்வகை உரைசெய இருந்த வேந்துஅவை,
‘செவ்வியோய் நின் திருமகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க்கு அவ்வவர்க்கு அமைந்தவாறு உறும்
எவ்வம் இல் அன்பினை, இனிது கேள்’ எனா, 79

‘தானமும் தருமமும் தகவும், தன்மை சேர்
ஞானமும் நல்லவர்ப் பேணும் நன்மையும்
மானவ எவையும் நின் மகற்கு வைகுமால்-
ஈனம் இல் செல்வம் வந்து இயைக என்னவே. 80

‘ஊருணி நிறையவும் உதவும் மாடு உயர்
பார் கெழு பயன்மரம் பழுத்தற்று ஆகவும்,
கார் மழை பொழியவும், கழனி பாய் நதி
வார் புனல் பெருகவும், மறுக்கின்றார்கள் யார்? 81

‘பனை அவாம் நெடுங் கரப் பரும யானையாய்
நினை அவாம் தகையனாய், நிமிர்ந்த மன்னுயிர்க்கு,
எனையவாறு அன்பினன் இராமன்,ஈண்டு, அவற்கு
அனையவாறு அன்பின் அவையும்’ என்றனர். 82

**9.20.25 தயரதன் உவகை மிகுதியால், அவையோரை நோக்கிப் பேசுதல்**



மொழிந்தது கேட்டலும் மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்த பேர் உவகையன், பொங்கு காதலன்
'கழிந்தது என் இடர்' எனக் களிக்கும் சிந்தையன்
வழிந்த கண்ணீரினன், மன்னன் கூறுவான். 83

செம்மையின், தருமத்தின், செயலின் தீங்கின்பால்
வெம்மையின் ஒழுக்கத்தின், மெய்ம்மை மேவினீர்
என் மகன் என்பது ஏன்? நெறியின் ஈங்கு இவன்
நும் மகன் கையடை நோக்கும் ஈங்கு' என்றான். 84

**9.20.26 அரசவை விடுத்து, நான் குறித்ததற்காகத் தயரதன் மற்றொரு மண்டபம் போதல்**

அரசவை விடுத்தபின் ஆணை மன்னவன்,
புரை தப நாளொடு பொழுது நோக்குவான்
உரை தெரி கணிதரை ஒருங்கு கொண்டு ஒரு
வரை பொரு மண்டபம் மருங்கு போயினான். 85

**9.21 பாடல் விளக்கம் மந்திரப் படலம்**

**9.21.1 தசரதன் மந்திரக் கிழவரை அழைத்தல்**

தசரதன் தன்னைச் சுற்றி இருந்த நிருபரையும் சுற்றத்தாரையும் பெயர்க என அன்போடு நீக்கினான். பின்னர்

குறிப்பு

"ஒக்க நின்று உலகளித்து யோகின் எய்திய

சக்கரத்தவன் எனத் தமிய னாயினான்"

அதன் பின்னர் வியாழ பகவானை ஒத்த 'மந்திரக் கிழவரை' வருக என அழைக்கிறான். வசிட்ட முனிவர் கடவுள் போன்று வந்து அமர்கிறார். அடுத்து மந்திரக் கிழவர்கள் அறுபதினாயிரம் பேர் வருகின்றனர். அவர்களது மாண்புகளைக் கம்பன் ஏழு பாடல்களால் குறிக்கிறான்.

**9.21.2 மந்திரக் கிழவர் மாண்புகள் (5-11)**

உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகவும், கலை ஞானம் பல கற்றவர்களாகவும் கேள்விச் செல்வம் உடையவர்களாகவும், தீமை வரினும் நடுவுநிலைமை தவறாதவர்களாகவும், குற்றம் கடிந்து தருமம் தாங்குபவர்களாகவும் இருந்தனர்.

நடந்ததை வைத்து இனி வருவதை உணரும் அறிவும், ஊழ்வினையால் வந்ததையும் அறிவினால் மாற்றும் வன்மையும், பிறப்பினால் மேன்மையும் அரிய நூற்கல்வியும் கவரிமான் போன்ற மான உணர்வும் உடையவர்கள் அவர்கள்.

காலம், இடம், கருவி அனைத்தும் அறிந்து தெய்வம் தெளிந்து அறம் செய்யும் மேலோராவர். பண்புகளும் புகழுக்கு வேண்டும் செய்கையும் அறிந்து அரசனுககு வேண்டிய உறுதிகளைக் கூறும் தன்மை உடையவர்கள் ஆவர்.

தம் உயிரைப் பெரிதாக மதிக்காமல் அரசன் சினந்த போதும் விடாது நீதியை உரைக்கும் வன்மை உடையவர்களாவர். சிறந்த நெறிகளினின்றும் நீங்காதவர்களாகவும், முக்காலம் உணர்ந்தவர்களாகவும் மாறிமாறிப் பேசாமல் நன்று ஒன்றையே கூறுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

நன்மை, தீமை நாடி மருத்துவன் போல அரசனுக்கு நன்மையையே நினைப்பவர்கள். அரசனுக்குத் துன்பம் வந்த போது அவன் செய்த நல்வினை அவனுக்கு உதவுமாறு போல உதவுகின்ற ஆற்றல் உடையவர்கள் இம் மந்திரக் கிழவர்கள் எண்ணிக்கையில்

அறுபதினாயிரவர் என்றாலும், அரசனுக்கு எது உறுதியோ அதைச் செய்வதில் இவர்கள் எல்லோரும் ஒத்த உணர்வு உடையவர்கள். செல்வமும் அறிவும் நிரம்பப் பெற்ற அவர்கள் கடல் எனத் தசரதனை வந்தடைந்தனர்.

**9.21.3 தயரதனின் உள்ளக் கருத்து**

அவர்களிடம் தசரதன் தன் உள்ளக் கருத்தைத் தெரிவிக்கிறான். அவர்கள் உதவியோடு அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டதாகக் கூறுகிறான். என் உணர்வனைய நீங்கள் என் கருத்தைக் கேட்க வேண்டும் என்கிறான்.

கன்னியர்க்கு இன்றியமையாக் கற்புப் போல மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனியன செய்தேன்.. இனி என் உயிர்க்கு நன்மை செய்ய எண்ணுகிறேன். முன்பு ஆண்ட மன்னர் எல்லாம் மூப்புக் காரணமாகத் தம் குலப் புதல்வரே தரணி ஆளத் தாம் போய் வீடு பெற்றார்.

சம்பராசுரன் முதலிய பத்து அரக்கர் தேரையும் வென்ற எனக்கு உள்ளத்தின் உள்ளே உறைகின்ற ஐம்புலப் பகைவர்களை வெல்லல் அரிதாவதோ?

போரிடை வீர மரணம் அடைந்தவர், ஞானத் தெளிவு பெற்றவர், செல்வத்தை பூமியில் விட்டவர் தவிர வேறு யார் வீடு பெற முடியும்.

இறப்பை மறப்பதை விட மனிதப் பிறவிக்கு வேறு கேடு உண்டா? உலகப் பற்றைத் துறப்பதையே தெப்பமாகக் கொண்டு பிறப்பு எனும் பெருங்கடல் தாண்ட வேண்டுமல்லவா பிறப்பு அறுத்தலை விட உயிர்க்கு இனியது எது?

இப்பிறப்பில் எனக்கு உதவிய நீங்கள் மறுமைக்கு வேண்டியனவற்றையும் செய்தல் வேண்டும்.

தவத்தால் வினைகளைக் கடக்கலாம் என்றால் அந்த அமுதாகிய தவத்தை விட்டு தீவிடத்தினை அருந்தலாமா.

மைந்தர் இல்லாமல் வருந்திய எனக்கு இராமன் மகனாக வந்தான். இனி அவன் வருந்த யான் பிழைத்துப் போக உறுதி எண்ணினேன். (இராமன் அரச பாரத்தைத் தாங்க யான் சுமை நீங்கப் பெற்றவனாக அமைய விரும்புகிறேன் என்று தசரதன் இயல்பாகச் சொல்லுகிறான். இவ்வாறு வரும் இடங்கள் நாடகக் கீழறை எனப்படும். எதிர்காலத்தை உணர்த்தும் தொனிப் பொருளாக இவை அமையும். இனி 'அவன் வருந்த' என்பது எதிர்காலத்தில் இராமன் வருந்தப் போகிறான் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது. ''யான் பிழைத்துப் போக'' என்பது அரசப் பொறுப்பில் இருந்து விடுபடப் போவதையும் பின்னர் உயிர் விடப் போவதையும் குறிப்பால் உணர்த்துகிறது.

மூப்பிலும் தசரதன் அரசாட்சியைக் கைவிடவில்லை என்று உலகோர் சொல்லுவார்களானால் அதைவிட வேறு பழிச்சொல் உண்டோ? அதற்கு நான் பிறக்காமலேயே இருந்திருக்கலாம்.

சீதையை இராமன் மணக்கக் கண்ட நான், பூமகளையும் (அரசாட்சி பெறல்) மணத்தல் காண வேண்டும்.

நிலமகளும், திருமகளும் செய்த தவப்பயனை அவர்கள் பெறுவதற்குத் தடையாக நான் இருப்பது தகாது.

இராமனுக்கு அரசு நல்கிக் கானகம் சென்று தவம் செய்ய விரும்புகிறேன். இவ்வாறு எல்லாம் தசரதன் மந்திரக் கிழவர்களிடம் சொல்லி அவர்கள் கருத்தைக் கேட்கிறான்.

### 9.21.4 அமைச்சர்கள் மனநிலை

இராமன் அரசன் ஆகிறான் என்பதனால் மகிழ்ச்சி பொங்க அமைச்சர்கள் இருந்தனர். அதே நேரத்தில் தசரதன் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பிரிகிறான் என்ற துக்கமும் அவர்களிடம் இருந்தது. 'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ ''வென இருந்தனர். அரசனுக்கு இதைவிட வேறு உறுதி இல்லை என்றும் இராமனை விட மன்னராதற்குச் சிறந்தவர் வேறு ஒருவர் இல்லை என்றும் நினைந்து விதியது வலிமையையும் உணர்ந்து இராமன் மன்னராதற்கு இசைந்தனர்.

**9.21.5 வசிட்டன் உடன்படல்**

பிரமன் மகன் வசிட்ட முனிவர் கூறுகிறார். நும் குலத்து முன்னோரில் யாவர் இராமனைப் பெற்றார்? செய்யத்தக்க கருமம் இது தருமமும் இது. தக்கதையே கூறினாய் என்று தசரதனிடம் கூறினார். இராமன் நிலமகளைக் காப்பான் என்றார்.

**9.21.6 அறத்தின் மூர்த்தி இராமன்**

இராமன் உனக்கு மட்டும் இல்லை. உலகுக்கே நல்லவன். வேதியர் முதலாயினோர் ‘‘யாம் செய்த நல்லறப் பயன்’’ என உவந்து இருப்பர்.

**9.21.7 நல்லவள் சீதை**

மண்மகளை விட, இலக்குமி, சரஸ்வதி, பார்வதி முதலானவர்களை விடப் ‘‘பெரும் புகழ்ச்’’ சனகி (சீதை) நல்லவள். இராமன நல்லவன். கற்றவர் கல்லாதவர் என்று எல்லாத் தரப்பினரும் தாம் உண்ணும் நீரைவிட தங்கள் உயிரினும் மேலாக இராமனை நினைப்பர்- மகிழ்வர் (அரசியும் நல்லவளாக இருக்க வேண்டும் என்ற குறிப்பு இங்கு உணர்த்தப் பெறுகிறது) அரசே உனக்குத் தவம்தான் உறுதி என்று வசிட்டன் உரைத்தான்.

**9.21.8 தசரதன் மறுமொழி**

வசிட்டன் கூறியதைக் கேட்ட தசரதன், இராமனைப் பெற்ற நாளை விட சீதையை மணப்பதற்காகச் தனுசை உடைத்த நாளை விட, பரசுராமனது குந்தாவிப் படையை வென்ற நாளை விடப் பெரியதொரு மகிழ்ச்சியை அடைந்தான்.

‘‘ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக் கேட்ட தாய்’’ என்னும் குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

எம் குல மூதாதையர் இருவினை முடித்தார் எமக்கும் அந்த அருள் வந்தது என்று தசரதன் மகிழ்ந்தான்.

### 9.21.9 சுமந்திரன் கூறியது

குறிப்பு

இராமனுக்கு அரசு என்றதும் மகிழ்கிற எங்கள் மனத்தை நீ துறந்து போகிறாய் என்ற சொல் சுடும். உங்கள் குலத்தார் செய்த தருமத்தை மறப்பதும் அழகல்ல. ஆகவே நீ முதற் புதல்வனை அரசன் ஆக்கிப் பின்னர் துறவு மேற்கொள் என்றான்.

நன்று என்ற தசரதன் இராமனை அழைத்துவா என்றான். அரசாட்சியைத் தானே பெற்றது போலச் சுமந்திரன் மகிழ்ந்தான் எனக் கம்பர் கூறுகிறார். இராமன் தேன் போல இருந்தான். சுமந்திரன் கண்ணும் உள்ளமும் வண்டுபோல இருந்து அவனைக் கண்டு களித்தான் எனக் கம்பன் வருணிக்கிறான்.

### 9.21.10 இராமன் தேரில் வரும்போது நகரில் நடந்தவை

இராமன் திருமனை புகுந்த சுமந்திரன், இராமனை வணங்கி 'ஐய', தசரதன் "உண்டு ஓர் காரியம், வருக" என உரைத்தனன் என்று சொன்ன அளவிலே பொருக்கென எழுந்து, மேகம் போல் சென்று, தேர் மிசை ஏறினான்.

மேகம் என முரசங்கள் ஆர்த்தன. மடவார் கைகளில் அணிந்திருந்த சங்க வளையல்கள் ஆர்த்தன. இமையவர் எங்கள் குறை முடிந்தது என்று ஆர்த்தனர்.

எங்கும் பாட்டொலி நிறைந்தது. மன்மதன் அம்புகள் நிறைந்தன. வில்லொலிகள் கேட்டன. ஆடவரும் பெண்டிரும் குழுமினர். வாசல்கள், முற்றங்கள், மடங்கள் சாளரங்கள் எங்கும் பெண்கள் நிறைந்தனர். எங்கும் பூக்கள் நிறைந்து இருந்தன. ஆடவர் எல்லாம் தாயை நினைந்த கன்று போல இராமனைக் கண்டு மகிழ்ந்தனர்.

தூய தம்பி இலக்குவனுடன் அகம் மகிழ்ந்து இருந்த தரசதனை இராமன் கண்டு சேர்ந்தான்.

### 9.21.11 தசரதன் இராமனுக்குத் தன் கருத்தை உரைத்தல்

வசிட்டனையும் தசரதனையும் இராமன் வணங்கினான். தசரதன் அன்பு பொங்க இராமனைத் தழுவிக் கொண்டான். அதைக் கம்பர்

கூறுகிறார். தசரதன் இராமனைத் தழுவவா செய்தான் இல்லை. இந்த பூமியை ஆள்வதற்குரிய ஆற்றல் இராமன் மார்புக்கும் தோள்களுக்கும் உண்டா என்று தன் மார்பையும் தோள்களையும் கொண்டு அளந்தான் என்கிறார்.

பின்னர், இராமனைப் பார்த்து,'ராமா பரசுராமனை வென்ற உன்னிடம் நான் விரும்புவது ஒன்று உண்டு என்று பேசத் தொடங்குகிறான். எனக்கு மூப்பு வந்துவிட்டது. இந்த நிலச் சுமை (ஆட்சி) எனும் சிறை துறந்து யான் மேம்படுவதற்கு நீ உதவ வேண்டும். பிள்ளைகளைப் பெறுவது, பெற்றோர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை அளிப்பதற்கென்று பெரியவர்கள் கூறுவார்கள். தருமம் என்று சொல்லத்தக்க உன்னைப் பெற்ற யான் தளரலாமா? எனக்கு நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். நம் மரபில் வந்தவர்கள் தம் மக்கட்கு அரசுடைமை நல்கித்த தாங்கள் தவம் செய்து உய்ந்தனர்.

ஊழ்வினைப் பயனாலும் வேள்வியின் நலத்தினாலும் உன்னை மகனாகப் பெற்றேன். இன்னும் நான் அரசனாக நீடித்தால் உன்னைப் பெற்றதன் பலன் தான் என்ன? பூபாரம் நீங்கி வரம்பு இல் இன்பம் தரும் தவம் மேற்கொள்ள விரும்புகிறேன். மன்னர், வானவர். இந்திரன், மாதவர்கள் போன்றோர் யாரும் துன்பத்திலிருந்து விடுபட்டவர்கள் இல்லை. ஆனால் சொன்ன சொல்லை மறுக்காத பிள்ளைகளைப் பெற்றோரே துன்பம் துடைத்தவர்கள். அரசன் பெரும் பாரத்தை நம் மீது வைத்து விட்டான் என்று நினைக்காதே. மூடி புனைந்து அறம் புரிதலை நினை. இதுவே நான் உன்னிடம் விரும்புவது என்றான் தசரதன்.

### 9.21.12 இராமன் இசைவு

தந்தை சொல்லக் கேட்ட இராமன், அரசபதவியை விரும்பவுமில்லை. வெறுக்கவுமில்லை. இது மகனுக்குக் கடமை என உணர்ந்தான். மேலும் அரசன் ஏவியதைச் செய்வது தானே தனக்கு நீதி என்றும் உணர்ந்தான்.

தசரதன் தன் அரண்மனைக்குப் போனான். அந்தணர். மன்னவர், ஆடவர், மகளிர் தொடர இராமனும் தன் மனைக்குப் போனான்.

குறிப்பு

### 9.21.13 மன்னர்களுக்குச் செய்தி சொல்லல்

தசரதன் எல்லா மன்னர்க்கும் கருட இலச்சினை பொறித்த மடல் அனுப்பி வரவழைத்தான். வசிட்டனிடம் முடி புனைவதற்கு வேண்டியன செய்யுமாறு பணித்தான். அவன் அந்தணர்களோடு தேர்மீது போனான். வந்த மன்னர்களிடம் இராமனுக்கு முடிசூட்டும் செய்தியினைச் சொன்னான். செய்தி கேள்விப்பட்டதும் மன்னர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மண்ணக மன்னர்களாகிய அவர்கள் உடலோடும் விண்ணகம் சென்றவர்கள் போலக் களிப்பு எய்தினர். மேலும் அவரவரும் அரசுரிமை பெற்றாற்போல் மகிழ்ந்தனர். நல்லது என அறிவித்தார்கள்.

பரசுராமனை வென்ற இராமனுக்கு இது நன்று என்றார்கள். (பரசுராமனால் அரசர் குலம் படாத பாடு பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இனி அரசர் குலத்துக்கு அச்சமில்லை என்பது அவர்கள் மகிழ்ச்சியைப் பெருக்கியது.

### 9.21.14 தசரதன் மீண்டும் கேட்டல்

மன்னர்களைப் பார்த்துத் தசரதன் திரும்பவும் கேட்கிறான். என் மகனிடம் அன்பு கொண்டு நான் இது கூற நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டதற்கு என்ன காரணம்? நீங்கள் 'நன்று' என்று கூறியது ஆசை காரணத்தாலா? அல்லது உள்ளக் கருத்தா? இல்லை. இராமனது தகுதியினாலா? உங்கள் ஏற்பின் தன்மை யாது? என வினவினான்.

### 9.21.15 மன்னன் மறுமொழி

தானம், தருமம். தகுதி, ஞானம். நல்லவரைப் பேணும் நன்மை எல்லாமே இராமனிடம் உள்ள பண்புகள், ஆகவே அவனுக்கு உயர்ந்த செல்வம் வந்து பொருந்தும்.

ஊருணி நிறைதலையும் பயன்தரும் மரம் பழுப்பதையும், மழை பொழிவதையும், வயலெல்லாம் நீர் பெருகுதலையும் யாராவது மறுப்பார்களா? மன்னுயிர்க்கு எல்லாம் எவ்வாறு இராமன் அன்புடையவனோ அவ்வாறே அவையும் அவனிடத்து அன்புடையவை என்று மன்னரெல்லாரும் தசரதனிடம் கூறினார்கள்.

இதைக் கேட்டதும், பேருவகை தசரதனுக்கு ஏற்பட்டது. ‘என் துன்பம் கழிந்தது’ என்று கூறி மகிழ்ந்தான்.



**9.21.16 அரசர்களைத் தசரதன் பாராட்டல்**

செம்மையாகவும், தருமம் செய்பவர்களாகவும் செயல் வீரராகவும். தீமையின் பாற் படாதவர்களாகவும் ஒழுக்கம் உடையவர்களாகவும் உண்மையின் காவலர்களாகவும் விளங்கும் அரசர் பெருமக்களே ‘இவன் என் மகன் என்பது என்ன? இனி உங்கள் மகன். உங்கள் கைகளில் ஒப்புவிக்கிறேன். பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்றான்.

அரசவையை விட்டு வெளியே வந்த தசரதன் முடிசூட்டக் குற்றமற்ற நாளும் பொழுதும் பார்க்கக் கணிதப் பெருமக்களை அழைத்துக் கொண்டு வேறொரு மண்டபத்துக்குச் சென்றான்.

இவ்வாறு மந்திரப்படலம் நிறைவு பெறுகிறது.

## 9.22 நிறைவாக

தமிழ் இலக்கியத்தில் தொடர்நிலைச் செய்யுளாலான முதல் காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரம் ஆகும். இக்காப்பியத்தின் ஒரு காதையான வழக்குரை காதை என்ற இந்தப் பாடப் பகுதியில் கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாறு மூலம் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும், பாண்டிய மன்னன் ஆராயாது செய்த தவறே அவனது உயிருக்குக் கூற்றாய் முடிந்தது என்பதன் மூலம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன.

## 9.23 பொருளறிக

எல்லா – தோழி, கடைமணி – முறை வேண்டி வருவோர் ஒலிக்கும் பொருட்டு அரண்மனை வாயிலில் கட்டப்படுவதோர் பெரிய மணி, கதிர் - சூரியன், கருப்பம் - அறிகுறி, அறிவு அறை போதல் - அறிவு சமயத்தில் உதவாமல் போதல், இறைமுறை – செங்கோன்மை, கொற்கை – சிறந்த முத்துக்கள் கிடைக்கும் கடற்கரைப் பட்டினம், செழியன், தென்னவன், பஞ்சவன் - பாண்டிய அரசர்க்குரிய பெயர்கள், பசுந்துணி – வெட்டப்பட்ட துண்டம், பிடர்த்தலை – பிடரியோடு கூடிய

குறிப்பு

மகிடாசுரன் தலை, இறைவன் - சிவபெருமான், அணங்கு – பத்திரகாளி, செற்றனள் - உட்பகை கொண்டவள், செயிர்த்தல் - சினத்தல், அல்லவை – தீயவை, அவையோர் - சான்றோர், பழுது – பொய்மை, வடு - பழி

## 9.24 சோதித்தறியும் வினா விடைகள்

1. சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள காண்டங்கள், காதைகள் பற்றி எழுதுக

புகார்க்காண்டம் - 10 காதைகள்
மதுரைக் காண்டம் - 13 காதைகள்
வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்

2. வழக்குரை காதையில் கண்ணகியின் தோற்றப் பொலிவினை வாயிற்காவலன் கூறியதை விளக்குக

வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை அல்லள் பிடாரியும் அல்லள் பத்திரகாளியும் அல்லள் துர்க்கையும் அல்லள். ஆனால் உள்ளத்தில் கறுவு கொண்டவள் போலவும், சினமுற்றவள் போலவும், பொற்சிலம்பு ஒன்று எந்திய கையளாய்க் கணவனை இழந்தாள் ஒருத்தி நம் கடையகத்தாள் என்று கூறினான்.

3. கம்பராமாயணம் குறிப்பு வரைக

கம்பர் தாம் இயற்றிய இந்நூலிற்கு இராமவதாரம் என்றே பெயரிட்டிருந்தார். ஆனால் இராமாயணம் பலரால் இயற்றப்பட்டதால் கம்பரின் பெயரோடு இணைத்து கம்பராமாயணம் என்றே அழைக்கப்படுகிறது. கம்பரின் இராமாயணத்தைக் கம்பநாடகம் எனவும், கம்பச்சித்திரம் எனவும் கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் அழைப்பதுண்டு. கம்பரின் யாப்பு வண்ணங்கள் நூல் நெடுகிலும் மின்னி மிளிர்கின்றன. 'வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொண்ணூற்றாறே (யாப்பு வண்ணங்களின் எண்ணிக்கை 96) என்றொரு கணக்கீடும் உண்டு.

குறிப்பு

கம்பாராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது. அணி பொருள், நடை ஆகியவற்றால் சிறந்து விளங்குவது. சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு தமிழ்ப் பண்பாட்டோடு இயைந்து விளங்குவது.

4. வசிட்டன் சீதையைப் பற்றி உரைத்த கருத்தை விளக்குக

மண்மகளை விட, இலக்குமி, சரஸ்வதி, பார்வதி முதலானவர்களை விடப் "பெரும் புகழ்ச்" சனகி (சீதை) நல்லவள். கண்ணணைவிட நல்லவன் இராமன். கற்றவர் கல்லாதவர் என்று எல்லாத் தரப்பினரும் தாம் உண்ணும் நீரைவிட தங்கள் உயிரினும் மேலாக இராமனை நினைப்பர்-மகிழ்வர் (அரசியும் நல்லவளாக இருக்க வேண்டும் என்ற குறிப்பு இங்கு உணர்த்தப் பெறுகிறது) அரசே உனக்குத் தவம்தான் உறுதி என்று வசிட்டன் உரைத்தான்.

**9.25 பயிற்சி வினா**

1. வழக்குரை காதையில் கண்ணகியின் வழக்கை விவரி

2. மந்திரக் கிழவரின் மாண்புகளை விவரி

**9.26 மேலும் படித்தறிக**

1. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

2. சிலப்பதிகாரம், மணிவாசகர் உரை, பாவை நிலையம், சென்னை

# பிரிவு - 4 : காப்பியம்

## கூறு 10

குறிப்பு

1. சீறாப்புராணம்- ஈத்தங்குலை வரவழைத்த படலம் (1)

**10 - பாடஅமைப்பு:**

**10.1 அறிமுகம்-**

**10.2 நோக்கம்**

10.3 நூற்குறிப்பு

104. சீறாப்புராணம் - உட்பகுதிகள்

10.5 சீறாப்புராணம் - ஈத்தங்குலை வரவழைத்த படலம்

10.5.1 பாடல் மற்றும் விளக்கம்

10.6 நிறைவாக

10.7 சோதித்தறியும் வினாவிடைகள்

10.8 பயிற்சி வினா

10.9 பொருளறிக

10.10 மேலும் படித்தறிக..

## 10.1 அறிமுகம்

உமறுப்புலவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர். செய்கு அப்துல் காதர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதினார். நூல் முடிவுறும் முன்னரே சீதக்காதி மறைந்தார். பின் அபுல்காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது. உமறுப்புலவர் முதுமொழி மாலை என்ற எண்பது பாக்களால் ஆன நூலையும் படைத்துள்ளார்.

## 10.2 நோக்கம்



இந்து சமய இலக்கியங்கள் தோன்றியது போன்று கிறித்துவம், இசுலாம் சமயத்திலும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இசுலாம் சமயத்தில் புகழ்பெற்ற காப்பியமாகத் திகழ்வது சீறாப்புராணம் ஆகும். இப்புராணம் நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் கூறும் நூலாகத் திகழ்கிறது. நபிகள் நாயகத்தின் பெருமைகளை மாணவர்களுக்கு இப்புராணத்தின் வழியாக உணர்த்துவதே நோக்கமாக அமைகிறது.

## 10.3 நூற் குறிப்பு

- சீறா என்பதற்கு வாழ்க்கை என்பது பொருள். புராணம் என்பதற்கு வரலாறு என்பது பொருள்.
- சீறாப்புராணம் என்பதற்கு நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு என்று பொருள்
- இந்நூல் விலாத்தத்துக் காண்டம் (பிறப்பியற் காண்டம்), நுபுவத்துக் காண்டம் (செம்பொருட் காண்டம்), ஹிஜ்ரத்துக் காண்டம் (செலவியற் காண்டம்) என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
- இந்நூலில் 5027 விருத்தப்பாக்கள் உள்ளன.
- பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும், திருமணமும் விலாத்தத்துக் காண்டத்தில் கூறப்பட்டுள்ளன.
- வானவர் ஜிப்றாயில் மூலம் திருமுறை நபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன் பின் மக்கத்தில் நடந்தவையும் நுபுவத்துக் காண்டத்தில் பேசப்படுகின்றன.
- மக்கத்தை விட்டுப் பெருமானார் மதீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தத்திற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் ஹிஜ்ரத்துக் காண்டத்தில் வரையப்பட்டுள்ளன.
- சீறாப்புராணத்தில் நபிகளின் வல்லவு முற்றிலுமாகப் பாடி நிறைவு செய்யப்படவில்லை.
- பனூஅகமது மரைக்காயர் என்பவர் தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தார். அது “சின்ன சீறா” என வழங்கப்படுகிறது.

## 10.4 சீறாப்புராணம் உட்பகுதிகள்

குறிப்பு

சீறாப்புராணம் மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது. முதற்பாகம் விலாதத்துக் காண்டம் எனவும், நுபுவத்துக் காண்டம் எனவும் பிர்க்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகம் ஹிஜ்ரத்துக் காண்டம் ஆகும்.

| | |
|---|---|
| விலாதத்துக் காண்டம் | - 23 படலங்கள் |
| நுபுவத்துக் காண்டம் | - 21 படலங்கள் |
| ஹிஜ்ரத்துக் காண்டம் | - 47 படலங்கள் |

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஈத்தங்குலை வரவழைத்த படலம் முதற்பாகமான நுபுவத்துக் காண்டத்தில் 12ஆம் படலமாக இடம்பெற்றுள்ளது.

## 10.5 சீறாப்புராணம் - ஈத்தங்குலை வரவழைத்த படலம்

### 10.5.1 பாடல் மற்றும் விளக்கம்

சுருதியின் முறைவழித் துணைவர் சூழ்தரக்

கருமுகி னிழலொடுங் கருணை பொங்கிட

மருவுமெண் டிசைக்குமான் மதங்க மகிழ்ந்திட

விருநிலம் புகழ்நபி யிருக்கும் போதினில். (1)

பெரிய இந்தப் பூலோகமானது துதியா நிற்கும் நபியாகிய நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் காத்திமுல் அன்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் புறுக்கானுல் அலீமான்னும் வேதத்தினது முறைமையான மார்க்கத் துணைவர்க ளாகிய சஹாபாக்கள் சூழவும், கரிய நிறத்தைக் கொண்ட மேகக் குடையினது நிழலுடன் காருண்ணியம் அதிகரிக்கவும், கஸ்தூரி வாசனையானது பொருந்திய எட்டுத் திக்குகளிலும் கமழவும் இருக்குங்காலத்தில்

காலினிற் கபுசுமோர் கையிற் குந்தமு

மேவிடுஞ் சட்டையும் விசித்த கச்சையுந்

தோலொரு தோளினுந் தூக்கி வந்தவ
னாலநந் நபிதமை யடுத்து நோக்கினான் (2)

குறிப்பு

பாதங்கயில் கபு சென்று கூறா நிற்கும் பாதரட்சையும் ஒரு கையின்கண் ஜட்டியும், சரீரத்தின்கண் இரட்டிரா நின்ற அங்கியும், அரையின்கண் கட்டிய கச்சையும், ஒரு தோளின்கண் பரிசையும் தூக்கிக் கொண்டு வந்தவனான ஓர் அறபி, ஆல நபியாகிய நமது நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைச் சமீபித்துப் பார்த்தான்.

தரியலர்க கன்புறுஞ் சார்பி னான்மறைக்
குருநெறி முகம்மதைக் குறித்தெ திர்ந்துநீ
ரிருநிலத் தெவரென வியம்பி னான்பர
ருரநெரிந் திடச்செவி யுழுக்குஞ் சொல்லினால் (3)

அவ்விதம் பார்த்த பகைவர்களின் மார்பானது நெரியும் வண்ணம் காதுகள் உளுத்துப் போகின்ற வார்த்தையினால் அந்த அறபிச் சத்துராதிகளுக்கு அன்பு பொருந்தும் சார்பினால் புறக்கானுல் அலீமன்னும் வேதத்தை யுடைய குருமார்க்கத்தைக் கொண்ட நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு

அச்சமொன் றின்றிநின் றறபி கூறலும்
வச்சிரப் புயமுகம் மதுதம் வாய்திறந்
திச்சகம் புகழ்தனி யிறைவன் றூதியா
னிச்சய மிதுவென நிகழ்த்தி னாரரோ. (4)

அந்த அறபி யானவன் அவ்வாறு ஒரு பயமு மில்லாமல் நின்று வினாவுதலும், வச்சிரத்தை நிகர்த்த தோள்களை யுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்

தங்களின் வாயைத் திறந்து நான் இந்த உலகமானது துதியா நிற்கும் ஒப்பற்ற இறைவனான ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் தூதாகிய றசூல் இ∴து உண்மை யென்று கூறினார்கள்.

குறிப்பு

ஆதிதன் றூதென வறிவ தற்கரும்.

பூதலத் தென்மனம் பொருந்தி யன்பொடுஞ்

சாதமுற் றிடப்பெருஞ் சாட்சி யாமெனுங்

கோதறு குறிப்பெவை கூறுவீ ரென்றான். (5)

அவ்விதம் கூறவே அதற்கு அறபி நீவிர் யாவற்றிற்கும் முதன்மையனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதாகிய றசூலென்று உணர்வதற்கு அருமையான இந்தப் பூமியின்கண் எனது இருதயமானது சம்மதித்து அன்புடன் உண்மையைப் பொருந்தும் வண்ணம் பெரிய சாட்சியா மென்னுங் குற்றமற்ற குறிப்பு யாவை? அவற்றைக் கூறுவீராகவென்று கேட்டான்.

காரணக் கரியுனக் கியையக் காண்கிலென்

னாரணத் துறுங்கலி மாவை யன்பொடும்

பூரண மனத் தொடும் புகல்வை யோவெனச்

சீர்தரு மமுதவாய் திறந்து செப்பினார். (6)

அவன் அவ்விதம் கேட்க உனக்குக் காரணத்தைக் கொண்ட சாட்சியைப் பொருந்தும்படி பார்த்தால் எனது புறுக்கானுல்ட அலீமென்னும் வேதத்திற் சார்ந்த கலிமாவை அன்போடும் நிறைவாகிய மனதோடும் கூறுவாயா? என்று தங்களின் சிறப்பைப் பெற்ற அமுத வாயைத் திறந்து கேட்டார்கள்.

குறிப்பு

அவனியி லெவர்க்குநன் கறிய வென்மனக்

கவரறக் காரணக் கரியண் டாமெனி

னபியுமை யலதிலை யென்ன நண்பொடும்

பவமற நும்வழிப் படுவ னியானென்றான். (7)

இந்தப் பூலோகத்தின்கண் யாவர்களும் நன்கு அறியவும் எனது இருதயத்தின் கவரறவும் காரணத்தைக் கொண்ட சாட்சியா உண்டுமே யானால் உம்மை யல்லாது வேறே நபி யில்லையென்று நண்போடும் எனது பாவங்களானவை அற்றுப் போகும்படி நான் உமது மார்க்கத்தி லுட்படுவேனென்று கூறினான்.

நிலத்தினில் விண்ணினீ டிசைக்கு னின்மன

நலத்தது கரியெவை நாட்டு வாயெனக்

குலத்துறு முகம்மது கூறக் கேட்டுநற்

சிலைத்தழும் பிருந்ததோ ளறபி செப்புவான் (8)

நற்குலத்திற் பொருந்திய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இப்பூலோகத்திலும் வானலோகத்திலும் நீட்சியுற்ற எண்டிசைகளுக்குள்ளும் உனது இருதயத்திற்கு நன்மையை யுடையதான சாட்சியானது யாவை? அவற்றை எடுத்து இங்கு நாட்டிக் கூறுவாயாக வென்று சொல்ல, நல்ல வில்லினது தழும்பானது இருக்கப் பெற்ற தோள்களையுடைய அறபி தனது காதுகளினாற் கேள்வியுற்றுக் கூறுவான்.

இருவருக் கெதிர்தர நின்ற வீந்ததின்

விரிதலைக் குலைமலர் வீழ்ந்தி டாதிவண்

வரவழைத் திடுவிரேன் மனமும் வாக்குமொத்

தருமறை மொழிவழி யாவ னியானென்றான். (9)

நம்மிருவருக்கும் எதிராக நிற்கப் பெற்ற விரிந்த தலையையுடைய இந்த ஈத்தமரத்தின் ஈத்தங்குலையைப் புஷ்பங்கள் கீழே விழாமல் இவ்விடத்திற்கு வரும்படி செய்வீரேயானால் நான் மனமும் வாக்கும் ஒத்து அருமையான உமது புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது வார்த்தைகளின் வழியிலாகிப் போவேனென்று கூறினான்.

குறிப்பு

ஈந்தினை நோக்கிநின் நிறைவன் றூதுவர்
வாய்ந்தநின் குலையிவண் வருக வேண்டுமென்
றாய்ந்தநன் மறைதெரி யமுத நன்கனி
யேய்ந்தவர்க் கினைத்திறந் தியம்பி னாரரோ. (10)

இறைவனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் தூதுவராகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அந்த ஈத்தமரத்தைப் பார்த்து நின்று கொண்டு சிறந்த உனது குலையானது இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று ஆராயப் பெற்ற நன்மை தங்கிய வேதங்களைத் தெரிந்த அமுதத்தையும் நல்ல கனியையும் நிகர்த்த வாக்கையுடைய வாயைத் திறந்து கூறினார்கள்.

ஆதிதன் றூதுவ ரரையக் கேட்டலுஞ்
சோதிவெண் குருத்தொடுந் தோன்ற மேலெழுந்
தேதினுஞ் சிதைகிலா திழிந்து மாநில
மீதினில் விரிதலை விளங்கி நின்றதே. (11)

யாவற்றிற்கும் முதன்மையான ஜல்ல ஷகுனகுவத்த ஆலாவின் தூதுவராகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவரல்ல மவர்கள் அவ்வாறு கூறக் கேட்ட மாத்திரத்தில் அந்த ஈத்த மரமானதுபிரகாசத்தைக் கொண்ட வெள்ளிய குருத்தோடும்

*Self-Instructional Material*

குறிப்பு

விளங்கும் வண்ணம் மேலோங்கி யாதிலும் சிதைவடையாது இறங்கி மகத்தாகிய இந்தப் பூமியின் மீதில் விரிந்த தலையானது விளக்கமுற்று நின்றது.

விரிதலைத் தருவடி நின்ற மென்குலைப்
பரிவொடும் பயப்பயக் குதித்துப் பாரிடை
யிருவிழி தெரிபவ ரெவர்க்கு மின்புறத்
திருமுகம் மதுமுனஞ் சிறந்து நின்றதே. (12)

அன்றியும், விரிந்த தலையையுடைய அந்த ஈத்த மரத்தின் உச்சியில் நிற்கப் பெற்ற மெல்லிய ஈத்தங்குலையானது அன்போடும் மெல்ல மெல்லச் சாடி வந்து இந்தப் பூமியின்கண் இரண்டு கண்களும் தெரிவோர்களாகிய யாவர்களும் இன்பமடையும்படி தெய்வீகந் தங்கிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் முன்னர் சிறப்புற்று நின்றது.

அந்தர விரிதலைக் கமைந்த பூங்குலை
யிந்தமா நிலத்திடை யிறங்கி யிவ்வுழை
வந்ததிற் புதுமையு மறுத்துண் டோவெனச்
சிந்தையுற் றறபிநந் நபியைச் சிந்தித்தான். (13)

அப்பொழுது அந்த அறபி யானவன் ஆகாயத்தினிடத்து விரிந்த சிரத்தைக் கொண்ட ஈத்த மரத்தில் அமைந்த புஸ்பங்களையுடைய அழகிய குலையானது மகத்தாகிய இந்தப் பூமியின் கண்ணிறங்கி இவ்விடத்தில் வந்ததைப் பார்க்கிலும் ஆச்சிரியமானது வேறே யுளதா? இல்லையென்று தனது மனதின் கண் பொருந்தி நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சலலல்லாகு அலைகிவசல்ல மவர்களை நினைத்தான்.

குறிப்பு

படித்தலம் புகழ்நபி பாதம் போற்றிநின்
றடிக்கடிப் புதுமையுற் றறபி யீந்தின
திடத்தினிற் குலைபொருந் திடச்செய் வீரெனத்
திடத்தொடும் பயத்தொடுஞ் செப்பி னானரோ. (14)

அன்றியும், அந்த அறபியானவன் இவ் பூலோகமானது புகழா நிற்கும் நபியாகிய நபிகட்பெருமான் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அவைகிவசல்ல மவர்களின் திருவடிகளை அடிக்கடி துதித்து நின்று ஆச்சரிய மடைந்து இந்த ஈத்தங் குலையை ஈத்த மரத்தின்கண் பொருந்தும் வண்ணம் செய்வீர்களாகவென்று தைரியத்தோடும் அச்சத்தோடும் கூறினான்.

மழைமுகிற் கவிகையின் வள்ள னன்கெனக்
குழைதரும் விரிதலைக் குலையைப் பார்த்துநின்
னுழையினிற் செல்கென வுரைப்ப வோடிமுற்
புழைவழி நுழைந்தது பொருந்தி நின்றதே. (15)

அறபியானவன் அவ்வாறு கூற மழையைப் பொழியா நிற்கும் மேகக் குடையினது வள்ளலான நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நல்லதென்று தளிர்களைத் தரா நிற்கும் விரிந்த தலையையுடைய அந்த ஈத்த மரத்தினது குலையை நோக்கி நீ உன்னிருப்பிடத்திற் செல்வாயாக வென்று சொல்ல, அக்குலையானது ஓடி முன்னருள்ள புழையினது நெறியிற் புகுந்து சேர்ந்து நின்றது.

மேதையைச் சமமுள விலங்கி னாயதோ்

சாதியன் றீதொரு தருமுன் னாதலும்

போதலும் படைத்தவா் புதிய நாயகன்

றூதுவ ருண்மையயென் றடியைச் சூடினான். (16)



அவ்வாறு நிற்க, இ∴து அறிவையும் அச்சத்தையுமுடைய மிருகங்களிலான ஒரு சாதியல்ல ஒரு மரம். இ∴தை முன்னே வரவும் போகவும் செய்தவர்கள் புதிய ஆலத்தையுடைய நாயகனாகிய அல்லாகு கபுகானகுவத்த ஆலாவினது சத்தியத்தைக் கொண்ட றசூல் தாமென்று அந்நபிகட் பெருமானவர்களின் பாதங்களைத் தனது சிரசின்கண் அணிந்தான்.

பாதபங் கயமலா் சிரசிற் பற்றிநின்

றாதியிற் சொலுங்கலி மாவை யன்பொடு

மோதினன் றெளிந்தன னுரிய நாயகன்

றூதுவா்க் கிவனொரு துணைவ னாயினான். (17)

அவ்வாறு அவர்களின் பாதங்களாகிய தாமரை மலரைத் தனது தலையிற் கொண்டு நின்று முதலில் கூறும் “லாயிலாஹி இல்லல்லாகு முகம்மதுர் றசூல்லாஹி” யென்னுங் கலிமாவை அன்புடன் ஓதி அதைத் தெளிந்தறிந்து உரிமையான நாயகனாகிய அல்லாகு கபுகானகுவத்த ஆலாவின் தூதுவர் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு இந்த அறபி ஒப்பற்ற துணைவனாயினான்.

## 10.6 நிறைவாக

குறிப்பு

நபிகள் நாயகத்திடம் ஒரு அறபி வருகிறான். அவன் நபிகளைப் பார்த்து யார் என வினவினான். அதற்கு நபி நான் இறைத்தூதர் என்கிறார். அதற்கு என்ன சாட்சி என்று கேட்கிறான் அறபி. நபி, நான் சான்று காட்டினால் நீ கலிமாவை ஓதுவாயா என்று கேட்கிறான். சரி என்று ஒப்புக்கொள்கிறான் அறபி.

இங்கிருக்கும் ஈச்ச மரத்தில் குலை வரவழைத்தால் நான் கலிமாவை ஓதுகிறேன் என்கிறான் அறபி. உடனே நபி ஈச்ச மரத்தில் குலையை வரவழைக்கிறான். நபிகளின் பெருமைகளை உணர்ந்து கலிமாவை ஓதுவதாகச் சம்மதிக்கிறான்.

இப்பகுதியில் நபிகள் நாயகத்தின் புகழ் உலகெங்கும் பரவ இப்பகுதி சான்றாக உள்ளது.

## 10.7 சோதித்தறியும் வினா விடைகள்

1. நபிகள் நாயகத்தைப் பற்றிக் குறிப்பு வரைக
2. சீறாப்புராணம் பற்றிக் குறிப்பு எழுதுக

## 10.8 பயிற்சி வினா

1. நபிகள் நாயகம் ஈச்சங்குலை வரவழைத்தத் திறம் பற்றி விவரி

## 10.9 பொருளறிக

துணைவர் - நண்பர், குந்தம் - ஜட்டி, தரியலர் - சத்துராதி, மறை – புறக்கானுல் அலீம் என்னும் வேதம், வச்சிரம் - ஆயுதம், கோதறு – குற்றமற்ற, அவனி – பூலோகம், சிலைத்தழும்பு – வில்லினது தழும்பு, இயம்பினார் - கூறினார், மீதினில் - மேல், கவிகை – குடை, கலிமா - இஸ்லாமிய மூல மந்திரம்

## 10.10 மேலும் படித்தறிக

உமறுப்புலவர், சீறாப்புராணம், கவிஞர் நாச்சிகுளத்தார் (பதிப்பாசிரியர்), நாச்சிகுளத்தார் பதிப்பகம், உதயமார்த்தாண்டபுரம், தஞ்சை மாவட்டம், பதிப்பு செப்டம்பர் 1974.

குறிப்பு

## பிரிவு – 4 (தொடர்ச்சி)

## கூறு 11

## தேம்பாவணி - காட்சிப்படலம்

**பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)**

1. **இன்னவாயில்**
2. **கொழுந்துறும்**
3. **பஞ்(ச) அரங்கில்**

**11 - பாடஅமைப்பு:**

**11.1 அறிமுகம்-**

**11.2 நோக்கம்**

11.3 தேம்பாவணியின் பொருள்

11.4 தேம்பாவணி காப்பியத்தின் மூலநூல்

11.5 தேம்பாவணியின் அரங்கேற்றம்

11.6 வீரமாமுனிவர் பெயர் வந்த காரணம்

11.7 தமிழ் மரபு

11.8 தமிழ் இலக்கியத் தாக்கம்

11.8.1 திருக்குறளை ஒத்திருத்தல்

11.8.2 சேக்கிழார் பாடலை ஒத்திருத்தல்

11.8.3 திருவாசகத்தை ஒத்திருத்தல்

11.9 நூலின் சிறப்பு

11.10 தேம்பாவணியில் விவிலியச் செய்திகள்

11.11 நூலின் பகுப்புகள்

11.12 பாடல் 1 வானவர் இறைவனை வணங்க ஆயர்களை அழைத்தல்

11.13 பாடல் 2 ஆயர் இறைவனிடம் பணிந்து மகிழ்தல்

11.14 பாடல் 3 இறைவனைப் போற்றத் தொடங்குதல்

11.15 நிறைவாக

11.16 சோதித்தறியும் வினாவிடைகள்

11.17 பயிற்சி வினா

11.18 பொருளறிக

11.19 மேலும் படித்தறிக..

## 11.1 அறிமுகம்

தேம்பாவணி என்னும் நூல் இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையான புனித யோசேப்பு மீது இயற்றப்பட்ட முதற் பெரும் செய்யுள் வகை நூலாகும். இந்நூல் இத்தாலிய நாட்டவரான வீரமாமுனிவர் (1680 – 1742) அவர்கள் தமிழில் திறம்பட ஆக்கிய நூல் எனப் புகழப்படுகிறது. கிறிஸ்துவ சமயத்தின் சுருக்கமென்றே இந்நூலை அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

## 11.2 நோக்கம்

தேம்பாவணி வீரமாமுனிவரின் இலக்கியத் திறனைப் புலப்படுத்துகிறது. தேம்பாவணியில் இயற்கை வளம், கிறித்துவ சமயச் சிறப்பு போன்றவை மிகுதியாகப் பேசப்பட்டுள்ளன. தேம்பாவணி என்ற இக்காப்பியத்தின் வாயிலாக இயேசு கிறித்துவின் வளர்ப்புத் தந்தையான யோசேப்பு என்ற சூசையப்பரின் வரலாற்றை மாணவர்களுக்கு அறிவுறுத்துவது நோக்கமாக அமைகிறது.

குறிப்பு

## 11.3 தேம்பாவணியின் பொருள்

தேம்பா + அணி எனப் பிரிந்து வாடாதமாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்துத் தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் இதற்குப் பொருள் உண்டு. இயேசு நாதரை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இது பாடப்பட்டது. சூசையப்பருக்குத் தேம்பாவணி எனப் பெயரிட்டு இந்நூலில் பாடியுள்ளார்.

## 11.4 தேம்பாவணி காப்பியத்தின் மூலநூல்

தேம்பாவணி என்ற தமிழ்க் காப்பியம் பிறமொழி நூல் ஒன்றில் வருகின்ற செய்திகளைத் தழுவி, தமிழ் நெறிக்கேற்ப எழுதப்பட்டதாகும். அதாவது, ஸ்பானிய நாட்டு ஆகிர்த நகரில் வாழ்ந்த ஆகிர்த மரியாள் (Mariyal de Agreda) என்னும் கன்னி மறைபொருளான இறைநகரம் (Mystical City of God) என்னும் நூலை, கன்னி மரியாவின் ஆணைப்படி எழுதியதாகக் கூறியுள்ளார். அந்த நூலில் இயேசுவின் வளர்ப்புத் தந்தையான யோசேப்பு பற்றிய செய்திகளும் உண்டு. ஆகிர்த மரியின் அந்நூலைத் தழுவி, தமிழ் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்ப யோசேப்பின் வரலாற்றை இயற்றியிருக்கிறார்.

## 11.5 தேம்பாவணியின் அரங்கேற்றம்

தேம்பாவணி கி.பி.1726ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் அரங்கேற்றப்பட்டது. பல புலவர்களின் அடுக்கடுக்கான கேள்விகளுக்குச் சளைக்காமல் பதிலளித்த வீரமாமுனிவரிடம் தமிழ்ப் புலவர்கள், ‘எல்லாம் தெரியுமெனக் கூறும், பெஸ்கி அவர்களே, வானத்தில் எத்தனை நட்சத்திரம் இருக்கிறது? எனக் கூற முடியுமா? என நையாண்டியாகக் கேட்டார்கள். பதட்டமின்றி “முப்பது மூன்று கோடி, முப்பத்திமூன்று லட்சத்து முப்பத்தி மூவாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று நட்சத்திரங்கள் சந்தேகமிருந்தால் எண்ணிப் பாருங்கள்” என்றதும் சபையில் சிரிப்பொலி எழுப்பிப் பலர் முனிவரைப் பாராட்டினார்கள்.

## 11.6 வீரமாமுனிவர் பெயர் வந்த காரணம்

குறிப்பு

வீரமாமுனிவர் தனக்காக தமிழில் இட்ட பெயர் தைரியநாதர் என்பதாகும். அப்பெயர் சில காலம் வரை மட்டுமே நிலைத்தது. பின்னர் தேம்பாவணி அரங்கேற்றம் செய்தவுடன், தேம்பாவணியில் உள்ள சிறப்புகளை உணர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கம் பெஸ்கிப் பாதிரியாருக்கு 'ராஜரிஷி' (வீரமாமுனிவர்) என்ற பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தது. அன்றுமுதல் பெஸ்கி பாதிரியார் வீரமாமுனிவர் என்றே அழைக்கப்பட்டார்.

## 11.7 தமிழ் மரபு

தேம்பாவணி ஆசிரியர் வெளி நாட்டவரே ஆயினும், காப்பியக் கதைத் தலைவர் சூசை வாழ்ந்ததும் தமிழ் மண்ணில் இல்லை எனினும், காப்பியம் முழுக்கத் தமிழ் மணம் கமழ்வதாகத், தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்தவராகவே படைக்கப் பெற்றுள்ளமைக்குப் பல சான்றுகள் கூறலாம்.

பிற தமிழ்க் காப்பியங்களைப் போலவே, சீரிய உலகம் மூன்றும் என மங்கலச் சொற்களைப் பெய்தே, தொடங்குகிறார் ஆசிரியர். இறைவனை வணங்க முற்படும் போது, மேனாடுகளில் வழங்கும் கிறித்துவ மரபுகளைச் சாராது, தமிழ் மரபையே சார்ந்து, இறைவனது பாதங்களையே முதலில் வணங்குவதையும், இறைவனது பாதங்களை மலராகக் காண்பதையும் இங்குக் காண்கிறோம். இறைவனுக்கு வாகனங்களை உரிமை செய்து பாடுவன தமிழகச் சமயங்கள். அத்துடன் இறைவனுக்குரிய கொடிகளாகச் சிலவற்றைக் குறிப்பதும் இங்குள்ள சமய மரபு. இதனைப் பின்பற்றி வீரமாமுனிவர் திருமகன் இயேசுவை மேக வாகனத்தில் வருபவராகவும், அவரது முன்னோரான தாவீது அரசனைச் சிங்கக் கொடியோன் என்றும் பாடுகிறார்.

மேலும் இறைவனது திருமேனிக்கு வண்ணம் (நிறம்) குறித்துப் பாடுவது, இறைவனைத் தலையில் தலைபட வணங்குவது, கை கூப்பி வணங்குவது, மலர்கள் தூவி வழிபாடு செய்வது, பல்வகை விளக்ககளை ஆலயத்தில் ஏற்றுவது, தேர்த்திருவிழா காண்பது முதலிய பல தமிழ்ச் சமய மரபுகளனைத்தும் காப்பியத்தில் வீரமாமுனிவர் இணைத்துள்ளதைக் காண்கிறோம். ஓரிரு இடங்களில் தாம் கூறவரும் செய்திகளுக்கு உவமையாகத் தமிழ்நாட்டுப் புராணச் செய்திகளையும் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு தமிழ் மரபுக்கேற்ப தம் காப்பியத்தைக் கவிஞர் அமைத்துள்ளமை புலனாகிறது.

### 11.8 தமிழ் இலக்கியத் தாக்கம்

வீரமாமுனிவர் வெளிநாட்டவராக இருந்தும் தமிழ் மரபைக் கருத்தாகக் கடைப்பிடிப்பது சிறப்பு. அவர் வருணிக்கின்ற பாலத்தீன நாடும், எருசலேம் நகரும் தமிழ் மண்ணின் மணம் கமழ்வதாகவே உள்ளன. முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றிய வீரமாமுனிவர் திருவள்ளுவர், சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்கதேவர், கம்பர், மாணிக்கவாசகர் போன்றோரின் நடை, சொல், உவமை, கருத்து போன்றவற்றைச் சூழலுக்குப் பொருத்தமாக எடுத்தாள்கிறார்.

#### 11.8.1 திருக்குறள் கருத்தை ஒத்திருத்தல்

கபிரியேல் வானதூதன் கடவுளின் நற்செய்தியை மரியாவிடம் உரைத்தபோது, மரியா கலக்கமுற்றதையும் அக்கலக்கத்தை வானதூதர் உணர்ந்தறிந்தார் என்பதையும் விளக்கவந்த வீரமாமுனிவர்,

பளிங்கு அடுத்தவற்றைக் காட்டும் பான்மையால் இவள் முகத்தில்

உளம் கடுத்தவற்றை ஓர்ந்த கபிரியேல் உறுதி சொல்வான்…(பாடல்.535)

என்ற வரிகளில் திருவள்ளுவரின்

அடுத்தது காட்டும் பளிங்குபோல நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

என்னும் குறட்பா அமைவதைக் காணலாம்.

### 11.8.2 சேக்கிழார் பாடலை ஒத்திருத்தல்

குறிப்பு

எருசலேம் நகரை வருணிக்கும் வீரமாமுனிவர்,

நீர் அல்லதும் அலைஇல்லது நிறை வான் பொருள் இடுவார்

போர் அல்லது பகைஇல்லது புரிவான் மழை பொழியும்

கார் அல்லது கறைஇல்லது கடி காவலும் அறனால்

சீர் அல்லது சிறைஇல்லது திரு மாநகர் இடையே (பாடல்.162)

பொருள்

எருசலேம் என்னும் திரு மாநகரில் நீரே அலைபடுவதல்லாமல், வேறு அலைச்சர் இல்லை. நிறைந்த சிறந்த பொருளை இரவலர்க்கு இடுவாரிடையே எழும் போட்டிப் போரேயல்லாமல் பகையால் எழும் போர் இல்லை. தாரையாக வானத்தினின்று மழை பொழியும் கருமேகமே கறை கொண்டுள்ளதல்லாமல், மக்களிடையே எவ்விதக் கறையும் இல்லை. குற்றங்களைக் கடிவதற்கான காவலும் அறவுணர்வினால் சீர் பெறுவதேயல்லாமல் சிறைக்காவல் என்பது இல்லை.

இப்பாடல் சேக்கிழார் வருணிக்கும்

ஓங்குவன மாடநிலை ஒழுகுவன வழுவில் அறம்

நீங்குவன தீங்குநெறி நெருங்குவன பெருங்குடிகள்….

என்னும் பாடல் வரிகளை ஒத்திருப்பதைக் காணலாம்.

### 11.8.3 திருவாசகத்தை ஒத்திருத்தல்

பொன்ஆர் சிறகால் புட்கரம் சேர் புள்குலமே

என் ஆர் உயிரே, என் நெஞ்சத்து ஆள் அரசே

ஒன்னார் மனம் நேர் வனம் சேர உற்ற வழி

அன்னான் நாட, அறையீரோ எனக்கு? (பாடல்.3143)

குறிப்பு

பொன் போன்ற அழகிய சிறகுகளால் வானம் சேரும் திறம் கொண்ட பறவை இனங்களே, எனக்கு அரிய உயிர் போன்றவனும் என் உள்ளத்தில் அமர்ந்து ஆளும் அரசனுமாகிய திருமகன், பகைவர் மனம்போல் இருண்ட வனத்தை அடையச் சென்ற வழியை, அவனை நான் தேடிக் காணும் பொருட்டு, எனக்குச் சொல்ல மாட்டீரோ? என்றான்.

அறக்கடல் நீயே அருள் கடல் நீயே அருங்கருணாகரன் நீயே

திறக் கடல் நீயே திருக் கடல் நீயே திருந்து உளம் ஒளிபட ஞான

நிறக் கடல் நீயே நிகர் கடந்து உலகின் நிலையும் நீ உயிரும் நீ நிலை நான்

பெறக் கடல் நீயே தாயும் நீ எனக்கு பிதாவம் நீ அனைத்தும் நீ அன்றோ? (பாடல்487)

அறத்தின் கடலாய் இருப்பவனும் நீயே, அருளின் கடலாய் இருப்பவனும் நீயே, அரிய கருணைக்கு இருப்பிடமானவனும் நீயே, வல்லமையின் கடலாய் இருப்பவனும் நீயே, செல்வக் கடலாய் இருப்பவனும் நீயே, திருந்திய மக்களின் உள்ளம் ஒளி பெறுமாறு ஞான அழகின் கடலாய் இருப்பவனும் நீயே, ஒப்புமையெல்லாம் கடந்து நின்று, இவ்வலகின் நிலைக்களனாய் இருப்பவனும் நீயே, அதன் உயிராய் இருப்பவனும் நீயே, நான் நிலைபெறக் கடல்போல் நின்று தாங்குபவனும் நீ எனக்குத் தாயாய் இருப்பவனும் நீ, தந்தையாய் இருப்பவனும் நீயே அனைத்தும் நீயே அல்லவா?

இவ்வாறு தேம்பாவணியின் இப்பாடலில் திருவாசக மணம் கமழ்கிறது.

## 11.9 நூலின் சிறப்பு

குறிப்பு

தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு.

### 11.10 தேம்பாவணியில் விவிலியச் செய்திகள்

வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி கிறித்துவ விவிலியத்தில் வருகின்ற பல நிகழ்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது. அவை 150க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலுள்ளன.

அதே நேரத்தில் விவிலியத்தில் காணப்படாத பல செய்திகளையும் தேம்பாவணி கொண்டுள்ளது. அச்செய்திகள் பலவற்றையும் வீரமாமுனிவர் ஆகிர்த மரியாவின் நூலிலிருந்து பெற்றார். எடுத்துக்காட்டாக யோசேப்பு துறவறம் புகச் சென்ற போது கடவுளருளால் மனம் மாறி, இல்லறத்திலேயே துறவியாக வாழ முடிவு செய்து எருசலேம் கோவில் செல்வதும், அங்கு ஏற்கனவே கன்னியாக அர்ப்பணிக்கப்பட்டு வாழ்ந்த மரியா திருமணம் செய்ய முன்வந்த போது அங்கே வரிசையாக நின்று கொண்டிருந்த ஆடவர்களுள் யோசேப்பு கையில் பிடித்திருந்த கோல் அதிசயமாகத் தளிர்விட்டு பூக்களால் நிறைந்ததும் அதையே கடவுள் தாம் யாரை மணக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் என்று மரியா விளக்கம் பெற்று யோசேப்பை மணப்பதையும் குறிப்பிடலாம்.

### 11.11 நூலின் பகுப்புகள்

தேம்பாவணி முதற்காண்டம், இரண்டாம் காண்டம், மூன்றாம் காண்டம் என்ற மூன்று காண்டங்களை உடையது. ஒவ்வொன்றிலும் 12 படலங்களாக 36 படலங்கள் அமைந்துள்ளன. மொத்தம் 3615 விருத்தப்பாக்களும், 90 சந்த வகைகளும் கொண்டமைந்துள்ளது தேம்பாவணி. இதில் காட்சிப் படலம் முதற்காண்டத்தில் 11ஆம் படலமாக அமைந்துள்ளது.

**11.12 பாடல் 1 வானவர் இறைவனை வணங்க ஆயர்களை அழைத்தல்**

இன்ன வாயில் இன்ன தன்மை இன்ன யாவையும் ஆகையில்
பொன்ன நாடு துன்னும் உம்பர், பொன்னுருக்கொடு ஆங்குபோய்,
மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாதனைத் தொழ,
உன்னலாத கோவர் இன்பம் உண்ண உற்று அழைத்தனர். (1)

குகையாகிய இவ்விடத்தில் இவ்விதமாய் இவையெல்லாம் நிகழ்கையில், பொன்னுலகில் வாழும் வானவர் பொன் மயமான உருவம் கொண்டு அவ்விடம் போய்ச்சேர்ந்து, இடையர் நினைத்தற்கரிய இன்பம் கொள்ளுமாறு மின்னல் போன்ற கன்னித்தாய் பெற்ற வேத நாதனாகிய குழந்தையைத் தொழ அழைத்தனர்.

**11.13 பாடல் 2 ஆயர் இறைவனிடம் பணிந்து மகிழ்தல்**

கொழுந்துறும் குளிர்ந்தமுல்லை கொண்டகோவர் கூட்டமும்
எழுந்துறும் குடத்தியாரும் ஏகி, ஆய காட்சியால்
விழுந்துறும் களிப்புவிஞ்சி வேதநாதன் மேற்பதம்
தொழுந்தொறும் தொழுந்தொறும் துளங்குகின்ற தோற்றமே. (2)

தளிர் கொள்ளும் குளிர்ந்த முல்லை நிலத்தைக் குடியிருப்பாகக் கொண்ட இடையர் கூட்டமும், அவர்களோடு எழுந்து வரும் இடைச்சியருமாகச் சேர்ந்து போய், அங்கே கண்ட காட்சியால் ஆகும் மகிழ்ச்சி மேலோங்கி, வேதநாதனாகிய அக்குழந்தையின் கால்மீது விழுந்து தொழுந்தோறும் தொழுந்தோறும், விளங்குகின்ற தோற்றம் கண்டனர்.

**11.14 பாடல் 3 இறைவனைப் போற்றத் தொடங்குதல்**

பஞ்ச அரங்கில் இன்பு அரங்கு பான்மையால், அடைவரத்து
அஞ்சலம் குழித்து உவந்து அமிழ்ந்து, அமிழ்ந் (து) உளந்தனில்
விஞ்ச இன்பம், நெஞ்சு அடங்குஇல், மேவல் ஆர்ந்ததம்முயிர்
ஊஞ்சல் ஆடி, வாயின் வாயிலுற்று உரைத்த லுற்றனர். 3

ஐம்பொறிகளாகிய அரங்கில் இன்பம் நுகர்ந்த தன்மையால் அடைந்த வரம் என்னும் அழகிய கடலைத் தோண்டி அதனுள் மகிழ்ந்து மூழ்கி, அவ்வாறு மூழ்கிய உள்ளத்தில் பேரின்பம் பெருகப் பெற்று, அப்பேரின்பம் நெஞ்சுக்குள் அடங்காமல் மேலோங்குமாறு நுகர்ந்த தம் உயிர் ஊஞ்சல் ஆட, வாயின் வழியாக அப்பேரின்பம் வெளிப்பட பின்வருமாறு கூறலாயினர்.

## 11.15 நிறைவாக

வானவர் இறைவனை வணங்க ஆயர்களை அழைக்கின்றனர், இறைவன் காட்சி கொடுத்தவுடன் ஆயர் இறைவனிடம் பணிந்து வணங்கி மகிழ்கின்றனர். இறைவன் காட்சி கொடுத்தவுடன் இறைவனைப் போற்றி வழிபடுகின்றனர்.

## 11.16 சோதித்தறியும் வினா விடைகள்

**1. வானவர் இறைவனை வணங்க எவ்வாறு ஆயர்களை அழைக்கின்றனர்?**

குகையாகிய இவ்விடத்தில் இவ்விதமாய் இவையெல்லாம் நிகழ்கையில், பொன்னுலகில் வாழும் வானவர் பொன் மயமான உருவம் கொண்டு அவ்விடம் போய்ச்சேர்ந்து, இடையர் நினைத்தற்கரிய இன்பம் கொள்ளுமாறு மின்னல் போன்ற கன்னித்தாய் பெற்ற வேத நாதனாகிய குழந்தையைத் தொழ அழைத்தனர்.

**2. இறைவன் காட்சி கொடுத்த விதம் பற்றி எழுதுக.**

தளிர் கொள்ளும் குளிர்ந்த முல்லை நிலத்தைக் குடியிருப்பாகக் கொண்ட இடையர் கூட்டமும், அவர்களோடு எழுந்து வரும் இடைச்சியருமாகச் சேர்ந்து போய், அங்கே கண்ட காட்சியால் ஆகும் மகிழ்ச்சி மேலோங்கி, வேதநாதனாகிய அக்குழந்தையின் கால்மீது விழுந்து தொழுந்தோறும் தொழுந்தோறும், விளங்குகின்ற காட்சி கண்டனர்.

3. ஆயர்கள் இறைவனை எவ்வாறு போற்றி வழிபடுகின்றனர்?

ஐம்பொறிகளாகிய அரங்கில் இன்பம் நுகர்ந்த தன்மையால் அடைந்த வரம் என்னும் அழகிய கடலைத் தோண்டி அதனுள் மகிழ்ந்து மூழ்கி, அவ்வாறு மூழ்கிய உள்ளத்தில் பேரின்பம் பெருகப் பெற்று, அப்பேரின்பம் நெஞ்சுக்குள் அடங்காமல் மேலோங்குமாறு நுகர்ந்த தம் உயிர் ஊஞ்சல் ஆட, வாயின் வழியாக அப்பேரின்பம் வெளிப்படுமாறு இறைவனைப் போற்றி வழிபட்டனர்.

## 11.17 பயிற்சி வினா

1. ஆயர்கள் இறைவன் வழிபட்ட திறத்தை உரைக்க.

## 11.18 பொருளறிக

உம்பர் - வானவர், பொன்னுரு – பொன் மயமான உருவம், கோவல் கூட்டம் - ஆயர் கூட்டம், களிப்பு – மகிழ்ச்சி, துளங்குகின்ற – விளங்குகின்ற, பஞ்ச அரங்கு – ஐம்பொறிகளாகிய அரங்கு, அஞ்சலம் - அழகிய கடல்

### 11.19 மேலும் படித்தறிக

வீரமாமுனிவர், தேம்பாவணி முதற்காண்டம், மாதாக் கோவில் அச்சுக்கூடம், புதுவை, பதிப்பு 1927.

## பிரிவு – 4 (தொடர்ச்சி)

## கூறு 12

## தேம்பாவணி - காட்சிப்படலம்

**பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி**

1. **எண்ணுளே**
2. **ஒண்தலங்கள்**
3. **இரவியேந்த கஞ்சக்**

**12 - பாடஅமைப்பு:**

குறிப்பு

**12.1 அறிமுகம்-**

**12.2 நோக்கம்**

**12.3 வீரமாமுனிவரின் வாழ்க்கைக் குறிப்புகள்**

12.3.1 பிறப்பு

12.3.2 கல்வி

12.3.3 சமயப் பணி

12.3.4 கோவில் நிறுவுதல்

12.3.5 படைப்புகள்

12.3.6 படைப்புகள்

12.4 பாடல் 1 வானவர்க்கு மன்னன் பிறத்தல்

12.5 பாடல் 2 வானவர் மன்னனை ஆயர்கள் வாழ்த்துதல்

12.6 பாடல் 3 அன்னையையும் சூசை முனிவனையும் வாழ்த்துதல்

12.7 நிறைவாக

12.8 சோதித்தறியும் வினாவிடைகள்

12.9 பயிற்சி வினா

12.10 பொருளறிக

12.11 மேலும் படித்தறிக..

## 12.1 அறிமுகம்

நம் தமிழ்நாட்டுக்குச் சமயப் போதகம் செய்ய வந்த சேசு சபையாருள் புனிதர் பிரான்சிஸ் சவேரியார், தத்துவ போதகர் என்னும்

ராபர்ட் தெ.நொபிலி, புனிதர் அருளானந்தர் என்னும் ஜான் டி.பிரிட்டோ, வீரமாமுனிவர் என்னும் கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி ஆகியோர் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றனர். இவருள் இத்தாலி நாட்டிற் பிறந்த தத்துவ போதகர் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டிற்கு வந்து மதுரையில் சமயப்பணி புரிந்து வருகையில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய மொழிகளை நன்கு பயின்று ஞானோபதேசப் பர்வத காண்டம், ஆத்தும நிர்ணயம் முதலிய பல உரைநடை நூல்களை யாத்தார். தத்துவ போதகரைப்போல் இத்தாலி நாட்டிற் பிறந்து, நம் நாட்டிற்கு வந்து நம் நாட்டு மொழிகள் பலவற்றைப் பயின்று சமயப்பணி புரிந்ததோடு புலவரும் வியக்கத்தக்க முறையில் தமிழ்ப் பணியாற்றியவர் வீரமாமுனிவராவார்.

## 12.2 நோக்கம்

வீரமாமுனிவர் சீரிய செந்தமிழிற் பெருங்காப்பியம், சிறுகாப்பியங்கள், உரைநடை நூல்கள், தமிழ்மக்களும் மேனாட்டவரும் படிப்பதற்குரிய தமிழ் இலக்கண நூல்கள், தமிழ் இலக்கிய அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையான அகராதி முதலிய பல துறைப்பட்ட நூல்கள் எழுதியும், உலகப் பொது நூலாக விளங்கும் திருக்குறளை மொழிபெயர்த்தும், தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக எழுத்தின் வரிவடிவில் சீர்திருத்தம் செய்தும் தமிழ் மகனாக வாழ்ந்த வீரமாமுனிவரின் வரலாற்றையும், அவர் சமயப்பணி ஆற்றியதையும், தமிழுக்குப் படைத்தளித்த படைப்புகளையும் காண்பது நோக்கமாகும்.

## 12.3 வீரமாமுனிவரின் வாழ்க்கைக் குறிப்புகள்

### 12.3.1 பிறப்பு

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் வெர்ஜில் என்னும் கவிஞர் பிறந்த மாந்துவா மாவட்டத்தில் காஸ்திக் கிலியோன் என்னும் சிற்றூரில் கி.பி.1680ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 8ஆம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கொண்டல் போ.பெஸ்கி. தாயாருடைய பெயர் எலிசபெத். பெற்றோர் இவருக்குக் கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி என்று பெயரிட்டனர்.

## 12.3.2 கல்வி

குறிப்பு

இவர் தம் பள்ளிப்படிப்பை முடித்து, 1698ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28ஆம் நாள் சேசு சபையிற் சேர்ந்தார். சமயக் கல்வியோடு இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் முதலிய பல மொழிகளையும் பயின்று தேர்ச்சியடைந்தார். 1707ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் குரு பட்டம் பெற்றார்.

## 12.3.3 சமயப்பணி

பெஸ்கி அடிகளாா் தமிழ்நாட்டில் சமயப்பணி ஆற்றுவதற்கு கி.பி.1710ஆம் ஆண்டு தம் தாய்நாட்டை விட்டுப் புறப்பட்டார். 1711ஆம் ஆண்டு மே 8ஆம் நாள் மதுரையை அடைந்தார். தத்துவ போதகரையும், அருளானந்தரையும் போல பெஸ்கி அடிகளாரும் ஊனுணவு துறந்து, காவியாடை அணிந்து தமிழ்நாட்டுத் துறவிபோல் வாழ்ந்து சமயப் போதகம் செய்து வந்தார். பல மொழிகளிற் புலமையுடைய அடிகளார்க்கு நம் நாட்டு மொழிகளைப் பயில்வது மிக எளிதாகவே

இருந்தது. தமிழ்ப் பேச்சுமொழி, இலக்கிய மொழி ஆகியவற்றைறெல்லாம் நன்கு கவனித்து முறையாகக் கல்வி கற்றார். அவர் சுப்ர தீபக் கவிராயர் என்பவரிடம் தமிழ் பயின்றார்.

பெஸ்கி அடிகளார் காமநாயக்கன்பட்டி, குருக்கள்பட்டி, எயிலூர், இராமநாதபுர வட்டாரம், ஏலாக்குறிச்சி, புதுச்சேரி, வடுகர்பட்டி, தூத்துக்குடி, மணப்பாடு, அம்பலக்காடு முதலிய பல இடங்களில் சமயப் பணி ஆற்றியதாகத் தெரிய வருகிறது.

## 12.3.4 கோவில் நிறுவுதல்

அடிகளார் ஏலாக்குறிச்சி வட்டாரக் குருவாகப் பணியாற்றிய போது, அவ்வூரையாண்ட குறுநில மன்னராகிய மழவராயன் என்பவரிடம் நட்புக்கொண்டு ஏலாக்குறிச்சியில் ஒரு கோவில் நிறுவினார்.

விருத்தாசலத்துக்கு ஆறு மைல் தொலைவில் உள்ள கோனான்குப்பம் என்னும் சிற்றூரில் ஒரு கோவில் கட்டி, மரியாளின் திருவுருவைத் தமிழ்நாட்டுப் பெண் உருவில் அமைத்துப் பெரியநாயகி எனப் போற்றினார்.

### 12.3.5 படைப்புகள்

ஏலாக்குறிச்சியில் உள்ள மாதாவின் அருளை வேண்டி, காதலாற் கசிந்துருகித் திருக்காவலூர்க் கலம்பகம், அன்னையழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை முதலிய பக்திச் சுவை ததும்பும் நூல்களைப் பாடினார். மேலும் கோனான்குப்பம் என்னும் சிற்றூரில் அமைந்துள்ள மரியாளின் அருளைப் பெற்று முனிவர் பாடிய நூலே தேம்பாவணி என்னும் பெருங்காப்பியமாகும். இது 1726இல் இயற்றப்பட்டது. தேம்பாவணியை முனிவர் மதுரையில் உள்ள புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றியபோது, புலவர்கள், அவரது நூலில் புலமை வீரமும், சமயவீரமும், உள்ளத்தூய்மையும் ஒருங்கே விளங்கக் கண்டு, அவரை வீரமாமுனிவர் என்று போற்றினர் என்பர்.

வீரமாமுனிவரைப் போல் தமிழுக்குப் பல துறைகளிற் பணியாற்றியவர் இலர் என்றே கூறலாம். அவர் இயற்றிய பெருங்காப்பியம் தேம்பாவணி. சிறு காப்பியங்கள் திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, கலிவெண்பா, அன்னையழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை, கருணாம்பரப் பதிகம் ஆகியவையாகும். இலக்கண நூல்கள் தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், கிளாவிஸ் என்பன. இவற்றுள் தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணங்களையும் கொண்டுள்ள இனிய நூல். தமிழ்ப்புலமை பெறுபவர்க்கு ஏற்ற நூல். கொடுந்தமிழ் இலக்கணம் தமிழ்ப் பேச்சு நடையின் அமைப்பையும், ஏனையவை தமிழ் இலக்கிய மொழிநடையின் இலக்கணத்தையும் மேனாட்டவர்க்கு உணர்த்த இலத்தீன் மொழியில் எழுதப்பட்டனவாகும். முனிவர் எழுதிய உரைநடை நூல்கள் வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகமறுத்தல், லுத்தேரினத்தாரியல்பு, ஞான உணர்த்துதல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்த குரு கதை முதலியன. இப்பொழுது காணப்படும் பேரகராதிகளுக்கெல்லாம் முதல் நூலாக விளங்குவது முனிவர் இயற்றிய சதுரகராதியேயாகும்.

ஆதலால் அறிஞர் அவரை, "அகராதியின் தந்தை" என்று புகழ்வர். மேலும் அவர் தமிழ் கற்கும் ஐரோப்பியருக்காகத் தமிழ் - இலத்தீன், தமிழ் - போர்த்துக்கீசு, தமிழ் - பிரெஞ்சு அகராதிகளும் யாத்துள்ளார். தமிழ்மொழியின் உயிர்நிலை எனப் போற்றப்படும் திருக்குறள் என்னும் நூலில் காமத்துப் பாலொழிந்த அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டினையும் இலத்தீனில் மொழிபெயர்த்து மேனாட்டு அறிஞர் உலகுக்கு அளித்தார். அம்மொழிபெயர்ப்பு வாயிலாகவே மேனாட்டவரும் அவணின்று இந்நாட்டுக்கு வந்த அறிஞர் பலரும் திருக்குறளின் சிறப்பை அறியலாயினர். வீரமாமுனிவருக்கு முன் திருக்குறளை வேறெவரும் எம்மொழியிலும் மொழிபெயர்த்ததாகத் தெரியவில்லை.

குறிப்பு

### 12.3.6 எழுத்துச் சீர்திருத்தம்

வீரமாமுனிவர் காலத்துக்கு முன் எ, ஒ என்ற உயிரெழுத்துக்களையும் அவற்றோடு கூடிப் பிறக்கும் கெ, கொ முதலிய மெய்யெழுத்துக்களையும் எழுதி மேலே புள்ளி வைத்தால் (எ், ஒ், கெ், கொ்) குறிலாகவும், புள்ளி வைக்காவிட்டால் நெடிலாகவும் கொள்வதே மரபாக இருந்தது. எ-ஏ, ஒ-ஓ, கெ-கே, கொ-கோ என இவ்வாறு எழுதும் வழக்கத்தைப் புகுத்தியவர் வீரமாமுனிவரேயாவர். அவர் தமிழ் வரிவடிவின் வரலாற்றில் செய்த சீர்திருத்தம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தமையால் புலவர்கள் அதனை விருப்பமுடன் பின்பற்றி எழுதலாயினர்.

### 12.4 பாடல் 1 வானவர்க்கு மன்னன் பிறத்தல்

எண்ணுளே அடங்கலின்றி ஏந்து மாட்சி பூண்டு, வான்
விண்ணுளே பொலிந்து வந்த விண்ணவர்க்கு வேந்தனே
புண்ணுளே மருந்து நீவிப்போன ஆட்டை மீட்கவோ,
மண்ணுளே எழுந்துவந்து மண்ணன் என்று உதித்தனை? 4

எண்ணில் அடங்காமல் உயர்ந்த மாட்சிமை பூண்டு, சிறந்த விண்ணுலகில் பொலிவுடன் மகிழ்ந்து இருந்த வானவர்க்கு மன்னனே, உன்னை விட்டுப் பிரிந்து போன ஆட்டை அதன் புண்ணுக்கு மருந்து தடவி மீட்டுக் காக்கவன்றோ இம் மண்ணுலகிற்கு எழுந்து வந்து மனிதனாகப் பிறந்துள்ளாய்?

**12.5 பாடல் 2 வானவர் மன்னனை ஆயர்கள் வாழ்த்துதல்**

ஒண்தலங்கள் அண்டஉம்ப ரும்தொழும் பராபரா

விண்தலம் கலந்துஇலங்கு வெண்களங்கன் ஒப்பெனா,

மண்தலங்கள் எங்கும் யாரும் வாழ, வீரவெண் குடை

கொண்டு, அலங்கல் கொண்டதேறல் கொண்டஅன்பு கொற்றவா(5)

ஒளி மயமான இடங்களைக் கொண்ட வானுலகில் வாழும் வானவரும் தொழும் பராபரனே, இம்மண்ணுலகின் இடங்களெங்கும் யாவரும் நல் வாழ்வடையும் பொருட்டு, வான மண்டலத்தில் தங்கி இலங்கும் வெண்ணிறமான மதிக்கு ஒப்பென்று சொல்லத்தக்க குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக் குடையும் கொண்டு மாலையில் பொருந்திய தேனுக்கு ஒப்பான இனிய அன்பும் கொண்ட மன்னவனே?

**12.6 பாடல் 3 அன்னையையும் சூசை முனிவனையும் வாழ்த்துதல்**

இரவிவேய்ந்த கஞ்சம் ஈன்ற இலகுமுத்தம் ஏய்த்து எல்

புரவுஇல், வேய்ந்த சேயைஈன்ற பொருவில் அன்னை வாழுதி

சுருதிவேய்ந்த மாட்சிபூண்ட துணைவனாய மாதவத்து

உருவில் வேய்ந்த வேந்த வாழி உறுதி என்று வாழ்த்தினார்.(6)

குறை இல்லாமல் கதிரவன் தந்த கதிரைப் போல, தன் கன்னிமைக்குப் பழுது இல்லாமல் திருமகனைப் பெற்றெடுத்த மாலை போன்ற மரியாளின் அடிகளில், குளிர்ந்த இன்பத்தோடு இனிய பாலை

அவ்விடையர் காணிக்கையாகத் தந்தனர். அது அவள் அடியில் ஒன்றியுள்ள மதி பிறப்பித்த பாலொளியை ஒத்திருக்கும்.

**குறிப்பு**

## 12.7 நிறைவாக

வானவர்க்கு மன்னன் வந்து பிறத்தலும், வானவர் மன்னனை ஆயர்கள் வாழ்த்துதலும், அன்னையையும் சூசை முனிவனையும் வாழ்த்துதலும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

### 12.8 சோதித்தறியும் வினா விடைகள்

1. ஆண்டவன் பிறத்தலைக் கூறுக

எண்ணில் அடங்காமல் உயர்ந்த மாட்சிமை பூண்டு, சிறந்த விண்ணுலகில் பொலிவுடன் மகிழ்ந்து இருந்த வானவர்க்கு மன்னனே, உன்னை விட்டுப் பிரிந்து போன ஆட்டை அதன் புண்ணுக்கு மருந்து தடவி மீட்டுக் காக்கவன்றோ இம் மண்ணுலகிற்கு எழுந்து வந்து மனிதனாகப் பிறந்துள்ளாய்.

**2. ஆயர்கள் ஆண்டவனை எவ்வாறு வாழ்த்தினர்?**

ஒளி மயமான இடங்களைக் கொண்ட வானுலகில் வாழும் வானவரும் தொழும் பராபரனே, இம்மண்ணுலகின் இடங்களெங்கும் யாவரும் நல் வாழ்வடையும் பொருட்டு, வான மண்டலத்தில் தங்கி இலங்கும் வெண்ணிறமான மதிக்கு ஒப்பென்று சொல்லத்தக்க குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக் குடையும் கொண்டு மாலையில் பொருந்திய தேனுக்கு ஒப்பான இனிய அன்பும் கொண்ட மன்னவனே.

### 12.9 பயிற்சி வினா

1. அன்னையையும் சூசை முனிவரையும் வாழ்த்தும் முறை பற்றிக் விளக்குக

### 12.10 பொருளறிக

ஏந்த – உயர்ந்த, நீவிப்போன – பிரிந்து போன, உதித்தனை – பிறந்தனை, ஒண்தலங்கள் - ஒளிமயமான இடங்கள், உம்பர் - தேவர், அலங்கல் - மாலை, தேறல் - தேன், இரவி - சூரியன்,

குறிப்பு

## 12.11 மேலும் படித்தறிக

1.சே.சுந்தரராஜன் (உரையாசிரியர்), தேம்பாவணி, பாரிநிலையம், சென்னை

## பிரிவு – 4 (தொடர்ச்சி)

## கூறு 13

## தேம்பாவணி - காட்சிப்படலம்

**பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)**

1. **கன்னியாயதாயும்**
2. **ஏந்தி ஓங்கு உளத்து**
3. **ஆவ தேமுனர்**
4. **கொல்லும் வேலொடும்**

**13 - பாடஅமைப்பு:**

**13.1 அறிமுகம்-**

**13.2 நோக்கம்**

**13.3 தேம்பாவணி காப்பியச் சிறப்பு**

13.3.1 சூசையப்பர் பிடித்திருந்த கோல் துளிர்விட்டுப் பூத்துக் குலுங்கல்

13.3.2 இயேசு, மரியா, சூசை ஆகியோர் இணைந்த வரலாறு

13.3.3 தேம்பாவணியில் சூசையப்பர் வரலாறு

13.3.4 நீதி நூல்

13.3.5 மறை உண்மைகள்

13.3.6 சூசையப்பரின் மாட்சி

13.3.7 சூசையப்பர் உயிர் துறத்தல்

13.3.8 உயிர்நீத்த சூசை இறந்தோர் உலகில் இயேசுவின் செய்தியை அறிவித்தல்

13.3.9 இயேசு அனுபவித்த துன்பம் சாவு

13.3.10 சூசை விண்ணில் ஏற்கப்பட்ட போது எழுந்த மகிழ்ச்சி ஒலி

13.3.11 சூசையப்பருக்கு விண்ணகத்தில் இறைவன் முடிசூட்டல்

13.4 பாடல் மற்றும் விளக்கம்

13.4.1 கன்னித்தாயும் சூசையும் ஆயர்க்கு விடை கொடுத்தல்

13.4.2 சாந்தி என்னும்ட இடைச்சி மரியாளிடம் பேசத் தொடங்குதல்

13.4.3 சாந்தியின் வினாக்கள்

13.5 நிறைவாக

13.6 சோதித்தறியும் வினாவிடைகள்

13.7 பயிற்சி வினா

13.8 பொருளறிக

13.9 மேலும் படித்தறிக.

## 13.1 அறிமுகம்

தேம்பாவணி என்ற காப்பியம் முழுவதும் சூசையப்பரின் வரலாற்றைக் கூறுவதால் அந்நகரமாகிய சூதேய நாட்டின் வளத்திலிருந்து தொடங்கி முடிசூட்டுப் படலத்துடன் முடிவடைகிறது. இக்காப்பியம் இல்லறம், துறவறம், ஆன்மீகம் பற்றி அதிகமாகக் கூறியுள்ளது.

## 13.2 நோக்கம்



தேம்பாவணியின் காப்பியச் சிறப்பை மாணவர்களுக்கு எடுத்துரைப்பதும், மிக அரிதாகக் காணப்படும் சூசையப்பரின் வரலாற்றைக் காண்பதும், விவிலியத்தில் கூறப்பட்டுள்ள சில அளவே உள்ள நீதிக் கருத்துக்களைக் காண்பதும் நோக்கமாகும்.

## 13.3 தேம்பாவணி காப்பியச் சிறப்பு

தேம்பாவணி என்ற காப்பியம் சூசையப்பர் என்ற வளன் பற்றிய கதையாக அமைகிறது.

13.3.1 சூசையப்பர் பிடித்திருந்த கோல் துளிர்விட்டுப் பூத்துக் குலுங்கல்

திறல் ஆர்திரு நீரிய தீம் கொடியைப்
பெறல் ஆக எனக்கு ஒரு பேறு உளதோ
துறவாய் மணம் நீக்குப சொல்லிய பின்
ஊறல் ஆம் மணமோ என உள்ளினன் ஆல்
(பாடல்.397)

வல்லமை பொருந்திய வானுலகச் செல்வமே போன்ற இனிய மலர்க் கொடியாகிய மரியாவை மனைவியாகப் பெறத்தக்க ஒரு பேறு எனக்கு உண்டோ? மேலும், துறவு மேற்கொண்டு, திருமணத்தை விலக்கி வாழ்வதாக வாக்குறுதி சொல்லியபின் மணம் புரிந்து கொள்ளுதல் தகுமோ என்றெல்லாம் சூசை எண்ணினான்.

உள்ளும் பொழுதே இவன் ஓங்கிய கோல்
கள்ளும் கடியும் பொழி காமர் இதழ்
விள்ளும் செழு வெண்மலர் பூத்தமையால்
மள்ளும் உரை ஆலயம் மல்கியதே (பாடல்.398)

துறவறம் கடைப்படிக்க எண்ணிய சூசை,

கடவுளின் திட்டப்படி மரியாவை மணக்க வேண்டிய நிலை பற்றி எண்ணத்தில் ஆழ்ந்திருந்த பொழுதே அவர் உயர்த்திப் பிடித்திருந்த கோவில் தேனும் மணமும் பொழியும் அழகிய இதழ் விரியும் செழுமையான வெண்ணிற லீலி மலர்கள் பூத்தமையால் பரவுகின்ற வாசனை எருசலேம் கோவில் முழுவதும் நிறைந்தது.

குறிப்பு

காம்பா அணிகாட்டிய கன்னி நலத்து

ஓம்பா அணி இல்அணி ஓர்ந்த பிரான்

நாம்பா அணி நம்பியை நல்கிட ஓர்

தேம்பா அணிஆம் கொடி சேர்த்தான் என்றார்

மேலியாத அழகைத் தன்னகத்தே கொண்டு நின்ற கன்னி மரியாவின் நன்மைக்கு இவ்வுலக அழகெல்லாம் வேண்டாத அழகு என்று உணர்ந்த ஆண்டவன், கெடாத அழகுடைய

ஆண்களில் சிறந்தவனாகிய சூசை ஓர் அழகாகச் சேர்த்துக் கொடுக்கும் அறிகுறியாக, ஒரு வாடாத மாலை போன்ற இம்மலர்க் கொடியை அவனுக்குத் தந்தான் என்று அனைவரும் கூறினர்.

### 13.3.2 இயேசு, மரியா, சூசை ஆகியோர் இணைந்த வரலாறு

தேம்பாவணியின் காப்பியத் தலைவனாக சூசை இருந்த போதிலும், அங்கே அன்னை மரியா மற்றும் இயேசுவின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளன.

மரியாவை மணந்த பின்னரும் திருமண உறவில் ஈடுபடவில்லை சூசை. மரியா கடவுளின் துணையால் கருத்தாக்கி ஒரு மகவை பெற்றெடுத்து அவருக்கு ‘இயேசு’ என்று பெயரிடுகிறார். கன்னியும் தாயுமாகவும் விளங்குகின்ற மரியாவின் பெருமையை வீரமாமுனிவர் தேம்பாவணியில் இவ்வாறு பாடுகிறார்.

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய,

இலயை மூன்றினும் இழிவு இல் கன்னியய்,

அலகு இல் மூன்றினுள் நடுவ மைந்தனை,

நிலவு மூன்றினும் நிறப்ப ஈன்றனள் (பாடல்.946)



மூன்று உலகங்களிலும் இதற்கு ஓர் ஒப்புமை இல்லாத தன்மையாய, முக்காலங்களிலும் பழுதில்லாக் கன்னியாய்த் தான் இருந்தே, அளவில்லாத தெய்வ மூன்றாட்களுள் நடுப்பட்டு நிற்கும் மகனாம் ஆண்டவனை, முச்சுடர்களினும் சிறந்து விளங்க மரியாள் பெற்றெடுத்தாள்.

இலயை மூன்றினும் என்னும் சொற்றொடர் மரியா மகனைப் பெறு முன்னும் பெற்ற போதும் பெற்ற பின்னுமாக முப்பொழுதும் கன்னியாகவே விளங்கினர் என்று பொருள்படும்.

வாய்ப் படாநுழை பளிங்கின் வாய்கதிர்

போய்ப் படாஒளி படரும் போன்று, தாய்

நோய்ப் படாது அருங் கன்னி நூக்கு இலாது,

ஆய்ப்படா வயத்து அமலன் தோன்றினான் (பாடல்.947)

கண்ணாடியிடத்து வாயில் இல்லாமல் நுழையும் பகலவனின் கதிர் உள்ளே போய்க் கெடாத ஒளியைப் பரப்புதல் போன்று எக்குற்றமுமற்ற ஆண்டவன் ஆராய்ச்சிக்கு எட்டாத

வல்லமையோடு, தன் தாய் பேறுகால நோவு அடையாமலும், அவளது அரிய கன்னிமைக்கு அழிவில்லாமலும் மகனாய்ப் பிறந்து தோன்றினான்.

13.3.3 தேம்பாவணியில் சூசையப்பர் வரலாறு

இயேசுவின் பிறப்புக்குப் பின்னர் சூசையும் மரியாவும் தம் குழந்தையோடு நாசரேத்து வந்து அங்கு சில ஆண்டுகள் வாழ்கின்றனர். பின்னர் பாட்டுடைத் தலைவராகிய சூசை பிணி சேர்கின்றது. அவர் அதனைப் பொறுமையோடு தாங்கிக் கொள்கிறார். பின்னர் சூசை உயிர் துறக்கிறார்.

இறந்த சூசை மண்ணுலகோராலும் விண்ணுலகோராலும் முடிசூட்டப் பெறுகிறார்.

இந்நிகழ்வுகளைத் தேம்பாவணி கலைநயம் இலக்கிய நயம் பொருந்த பாடுகின்றது.

குறிப்பு

### 13.3.4 நீதி நூல்

தேம்பாவணி காப்பியம் இயற்கை வனப்பில் இறைவனின் தோற்றம், இல்லறம் துறவறம் ஆகியவற்றின் மாட்சி, உழைப்பின் மேன்மை, வறுமையில் செழுமை, கற்பின் பெருமை, கடவுளின் இலக்கணம், வானோர் உயர்வு, நரகோர் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் மேன்மை, காதலின் பெருமை, காமத்தின் தீமை ஆகியவற்றை விளக்கும் நீதி நூலாகவும் விளங்குகின்றது.

### 13.3.5 மறை உண்மைகள்

தேம்பாவணியில் வீரமாமுனிவர் கிறித்தவ மறை உண்மைகளைத் துல்லியமாக எடுத்துரைக்கிறார். மூவொரு கடவுளின் இரண்டாம் ஆளாகிய மகன் இவ்வுலகில் இயேசு கிறித்துவாக வந்து அவதரிக்கும் நிகழ்ச்சி, அவருடைய தாய் அன்னை மரியா அவரைக் கன்னியாகக் கருத்தரித்து, தம் கன்னிமை கெடாமலே அவரை ஈன்றளித்த செய்தி, இயேசு மனித குலத்தின் பாவத்திலிருந்து மக்களை மீட்டு விண்ணகப் பேற்றினை ஈந்திட, தம் உயிரைச் சிலுவையில் கையளித்து மீண்டும் உயிர் பெற்றெழுந்த செய்தி போன்றவை தேம்பாவணியில் விளக்கம் பெறுகின்றன.

### 13.3.6 சூசையப்பரின் மாட்சி

புனித சூசையப்பரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ள தேம்பாவணியில் அவருடைய மாட்சி பல இடங்களில் பாடப்படுகிறது. சூசை இவ்வுலகில் மரியாவையம் இயேசுவையும் அன்போடு பாதுகாத்து வளர்த்து, கடவுளின் திட்டத்தை விருப்புடன் நிறைவேற்றினார் என்பதுவே அவருக்கு இறைவன் மாட்சி அளித்ததற்கு அடிப்படை ஆகும்.

உன் உயிர் தன்னினும் ஓம்பி, தாய் மகன்

இன் உயிர் காத்தனை, இனி, பயன் கொளீஇ

மன் உயிர் பெறும் கதி வானில் வந்து உறீஇ

நின் உயிர் வாழ்தலே நீதி ஆம் அரோ (3344)

குறிப்பு

கன்னித் தாயும் திருமகனுமாகிய இருவர் தம் இனிய உயிரை, நீ உன் உயிரைக் காட்டிலும் பேணிப் பாதுகாத்தாய். இனி, அதன் பயனை நீ பெறக்கொண்டு, நிலையான மனித உயிர்கள் பெறுதற்குரிய கதியாகிய வான் வீட்டில் வந்தடைந்து, உன் உயிர் என்றும் நிலையாக வாழ்தலே நீதியாகும்.

இவ்வாறு சூசையின் புகழை இறைவனே எடுத்துரைப்பதாக வீரமாமுனிவர் பாடுகிறார்.

## 13.3.7 சூசையப்பர் உயிர் துறத்தல்

பிணி வாய்ப்பட்டு சூசை இறக்கும் நிலையில் உள்ளார். அப்போது அவரைச் சூழ்ந்து அவர்தம் மனைவி மரியாவும் அன்புக்குழந்தை இயேவும் நிற்கின்றனர். அவர்களது அன்பை உணர்கிறார் சூசை. அவருடைய உள்ளத்திலும் அன்பு ததும்புகிறது. அந்த அன்பின் வலிமை அவருடைய உயிர் உடலை விட்டுப் பிரிய விடாமல் பிடித்து வைக்கிறது என தேம்பாவணியில் பாடுகிறார் வீரமாமுனிவர்.

விண் மண் பாதலமென்னும் மூன்று உலகங்கள் முழுவதையும் தாங்கி நடத்தும் ஆண்டவனாகிய திருமகன் ஒரு பக்கமும், தெய்வ உலகம் முழுவதும் போற்றும் தேவ தாயாகிய மரியா மற்றொரு பக்கமும் தன்னைத் தாங்கிக் கொண்டிருக்க, மேலுலகத்தை நினைந்து உடலை விட்டுப் பிரியவிருந்த தன் உயிரை, அவ்விருவர் மீது கொண்ட அன்பு ஒன்றே இம்மண்ணுலகில் பிடித்து வைத்து இருத்தினாற் போல், சூசை தனது மலர் போன்ற கைகளைக் குவித்த வண்ணம் நின்றான்.

மரியாவும் திருமகனுமாகிய இருவரும் இரு பக்கமும் தம் நல்லாசி கூறி, அருள் கொண்ட சொல்லால் தேற்றவும், உருவத்தோடு வந்து தோன்றிய வானவர் சூழ்ந்து நின்று, ஒலிக்கும் சூழலிசையோடு தாமும் வாயாற் பாடி, மணம் பிறக்கும் மலர்களைத் தூவி, வழி காட்டி

அழைத்துத் தாம் முன்னே செல்லவும், சூசையின் புண்ணியத் தெளிவு கொண்ட உயிர் அத்திருவுடலை விட்டு நீங்கிப் போயிற்று அம்மா!

குறிப்பு

### 13.3.8 உயிர்நீத்த சூசை இறந்தோர் உலகில் இயேசுவின் செய்தியை அறிவித்தல்

தேம்பாவணியில் பாட்டுடைத் தலைவன் சூசை என்பதால் அந்நூலில் இயேசுவின் வாழ்க்கை வரலாறு, அவரது சிலுவைச் சாவு, உயிர்த்தெழுதல் போன்றவற்றை நேரடியாக எடுத்துரைக்கும் வாய்ப்பு இல்லை. இயேசு தமது பொது வாழ்வைத் தொடங்குவதற்கு முன்னரே சூசை இறந்து விட்டார். எனவே, வீரமாமுனிவர் மற்றொரு உத்தியைக் கையாளுகின்றார். அதாவது, இயேசு வருங்காலத்தில் என்னென்ன போதனைகளை அறிவிப்பார். எவ்வாறு இறப்பார் என்ற செய்திகள் சூசை கடவுளால் முன்னரே அறிவிக்கப்படுவதாகவும், அச்செய்தியைச் சூசை தம் இறப்பிற்குப் பிறகு இறந்தோர் உலகம் சென்று அங்குள்ளோருக்கு எடுத்துக் கூறுவதாகவும் வீரமாமுனிவர் எடுத்துக் கோக்கின்றார்.

சூசை இயேசு தம் சீடர்களுக்குக் கண்ணைத் தருவான், கையைத் தருவான், நடந்து செல்லக் காலைத் தருவான், உணவு தருவான், மகிழ்ச்சி தருவான், உயிர் தருவான், மதிக்கத்தக்க பழமை வாய்ந்த அரிய துயர்கள் நோய்கள் பலவற்றையும் தீர்த்துத் தருவான். இவ்வாறு தன்னிடம் கிடந்த அரிய தயை நலத்தை மக்களுக்கு வழங்கும் ஆற்றலைச் சீடருக்குக் கொடுத்துள்ளான்.

### 13.3.9 இயேசு அனுபவித்த துன்பம் சாவு

சூசை தம் வளர்ப்பு மகன் இயேசு அனுபவித்த துன்பங்களை எடுத்துரைக்கிறார்.

இயேசு அறையுண்டு இறந்த சிலுவை மரம், பண்டைய நாள்களில் முதற் பெற்றோர் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் உண்ட கனியைத் தின்ற மரத்தினால்

விளைந்த பாவம் என்னும் தீ நிலையை மனித குலத்திலிருந்து போக்கிடும் மருந்தாயிற்று என்பது கிறித்துவக் கொள்கை. அதை சூசை எடுத்துக் கூறுகிறார்.

இயேசு சிலுவையில் இறந்து மனிதர்க்கு இறைவாழ்வில் பங்களித்துள்ளார்.

இறப்புக்குப் பின் தம் பாவக் கறைகள் அனைத்திலிருந்தும் விடுதலை பெறும் வண்ணம் உத்தரிப்பு இடத்திற்கு இறந்தோர் செல்வர் என்பது கத்தோலிக்க கிறித்துவ போதனை. அவ்வாறு உத்தரிப்பு இடத்தில் இருந்தோரைச் சேர்ந்தடைந்த இயேசு தம் துன்பங்கள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கிறார்.

### 13.3.10 சூசை விண்ணில் ஏற்கப்பட்டபோது எழுந்த மகிழ்ச்சி ஒலி

மொடமொடவென்று, பலவகை முரசுகளின் ஒலியும் பறைகளின் ஒலியுமாக, அடிக்கப்பட்ட வாத்தியங்கள் யாவும் அதிர்ந்து முழங்கவும், நெடநெடவென்று கைகளிற் கொண்டுள்ள சூழல்களின் பாடலும் வீணைகளின் பாடலுமாக, நல்லியல்பு வாய்ந்த இசைக் கருவிகளின் ஓசை கலந்து இனிமையூட்டவமாக, படபடவென்று மேகத்திற் பிறக்கும் இடியொலியும் கடல் அலையொலியும் தம் பெருமை இவற்றின் நேரே ஒழிந்து மடியுமாறு, விடவிடவென்று, வெளி சூழ்ந்த வானுலகிலும் கடல் சூழ்ந்த மண்ணுலகிலும் வீரம் சிறந்த ஓசையாக மயங்கி எழும்.

### 13.3.11 சூசையப்பருக்கு விண்ணகத்தில் இறைவன் முடிசூட்டல்

தன்னை வளர்த்து ஆளாக்கிய சூசை மண்ணுலகில் இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்து சிறப்புற்றமையால் அவருக்கு விண்ணக மகிழ்ச்சியில் பங்களித்து அவரை மாட்சிப்படுத்த வேண்டும் என்று இயேசு தந்தையாம் இறைவனிடம் கேட்கின்றார். முழுமுதல் இறைவனாகிய தந்தை அவ்வாறே சூசையப்பருக்கு மணிமுடி சூட்டுகின்றார். பின்னர் மகனாம் இறைவன் இயேசு சூசையப்பருக்கு மகுடம் சூட்ட, இறுதியில் தூய ஆவி இறைவன் சூசையப்பரைப் பெருமைப்படுத்துகிறார்.

## 13.4 பாடல் மற்றும் விளக்கம்

குறிப்பு

### 13.4.1 கன்னித்தாயும் சூசையும் ஆயர்க்கு விடைகொடுத்தல்

கன்னியாய தாயும்ஓங்கு காவலனும் அன்புற,

இன்இறாலினும் கனிந்த இன்ப அம்சொல் ஓதலால்

உன்னம் மேவும் ஈர அன்பு முன்னமுள உறாமையால்

மின்ன(ல்) மாரி தூவலொத்த வீழும்நாட்ட மாரியே. (7)

கன்னியாகிய தாயும், அக்கன்னிமைக்குச் சிறந்த காவலனாகிய சூசையும் இனிய தேனடையினும் கனிவான இன்பம் தந்த அழகிய சொற்களை அன்போடு சொல்லியமையால், அவ்விடையர் தம் சிந்தனையில் அமைந்த குளிர்ச்சியான அன்பு மனத்தினுள் அடங்காமையால், அவர்கள் கண்களினின்று விழும் மகிழ்ச்சிக் கண்ணீர் மழை மின்னலோடு மழை தூவுதலை ஒத்திருந்தது.

### 13.4.2 சாந்தி என்னும் இடைச்சி மரியாளிடம் பேசத்தொடங்குதல்

ஏந்தி, ஓங்கு உளத்து இன்ப நெடுங்கடல்

நீந்தி, நீந்தி நிலைக்கரை காண்கிலா,

காந்தி வேய்ந்தனளைக் கனிந்து ஓதுவான்

சாந்தி நாமம் தரித்த குடத்தியே. (8)

சாந்தி என்னும் பெயர் தாங்கிய ஓர் இடைச்சி, உயர்ந்து ஓங்கிய தன் உள்ளத்தில் கொண்ட இன்பம் என்னும் நெடிய கடலை நீந்தி நீந்தி, நிலை கொள்வதற்கான கரையைக் காண இயலாமல், ஆதவனின் ஒளியை ஆடையாக அணிந்துள்ள மரியாளை நோக்கிக் கனிவோடு பின்வருமாறு கூறுவாள்.

### 13.4.3 சாந்தியின் வினாக்கள்

ஆவ தேமுனர் ஆயது போல் அறிந்து,

ஈவ தேநசை பின்ற அளித்திடும்

கோவ தேமிசை ஆள்தனிக் கோலினான்

நோவ தேஇனி தென்றுஉதித் தான்கொலோ? (9)

குறிப்பு

நடக்கவிருப்பதனை மன்னர் நடந்தது போல் அறிந்து, மனிதர்க்கு ஈவதென்றால் அவர் தம் ஆசை பிற்படுமாறு மிகுதியாகத் தருபவனாய், வானத்தின் மீது இருந்து தனியரசு செலுத்தும் செங்கோலை உடைய ஆண்டவன், துன்புறுவதே தனக்கு இனிதென்று கருதி, இவ்வெளிமைக் கோலத்திற் பிறந்தானோ?

கொல்லும் வேலொடும் கூர்நெடும் வாளொடும்

வில்லும் வாளியும் ஆழியும் வில்செய

ஒல்லும் ஆழி உருட்டிடக் கோன்துணை

செல்லும் வீரவெஞ் சேனைஇலா யதுஏன்? (10)

கொல்லும் வேலோடும் கூர்மையான நெடிய வாளோடும் வில்லும் அம்பும் சக்கரமும் ஆகிய படைக்கலன்கள் ஒளிர, தனக்கு உரித்தாகிய ஆணைச் சக்கரத்தை உருட்டி ஆட்சி செய்ய ஓர் அரசனுக்குத் துணையாகச் செல்லக்கூடிய வீரமுள்ள கொடிய சேனை இவனுக்கு இல்லாது போனது ஏன்?

## 13.5 நிறைவாக

இதில் கன்னித்தாயும் சூசையும் ஆயர்க்கு விடைகொடுத்தலும், சாந்தி என்னும் இடைச்சி மரியாளிடம் பேசத் தொடங்கலும், சாந்தியின் வினாக்களும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

## 13.6 சோதித்தறியும் வினா விடைகள்

1. கன்னித்தாயும் சூசையும் ஆயர்க்கு விடைகொடுக்கும் முறையைக் கூறுக

கன்னியாகிய தாயும், அக்கன்னிமைக்குச் சிறந்த காவலனாகிய சூசையும் இனிய தேனடையினும் கனிவான இன்பம் தந்த அழகிய

குறிப்பு

சொற்களை அன்போடு சொல்லியமையால், அவ்விடையர் தம் சிந்தனையில் அமைந்த குளிர்ச்சியான அன்பு மனத்தினுள் அடங்காமையால், அவர்கள் கண்களினின்று விழும் மகிழ்ச்சிக் கண்ணீர் மழை மின்னலோடு மழை தூவுதலை ஒத்திருந்தது.

2. சாந்தி என்னும் இடைச்சி மரியாளை நோக்கிக் கூறியது யாது?

நடக்கவிருப்பதனை மன்னர் நடந்தது போல் அறிந்து, மனிதர்க்கு ஈவதென்றால் அவர் தம் ஆசை பிற்படுமாறு மிகுதியாகத் தருபவனாய், வானத்தின் மீது இருந்து தனியரசு செலுத்தும் செங்கோலை உடைய ஆண்டவன், துன்புறுவதே தனக்கு இனிதென்று கருதி, இவ்வெளிமைக் கோலத்திற் பிறந்தானோ?

**13.7 பயிற்சி வினா**

1. மரியாள் ஆயர்களிடம் வைத்த அன்பின் திறத்தைப் புலப்படுத்துக

13.8 பொருளறிக

ஓங்கு – உயர்ந்து, ஆழி – கடல்

13.9 மேலும் படித்தறிக

வீரமாமுனிவர், தேம்பாவணி, சாரதா பதிப்பகம், சென்னை, 2014

## பிரிவு – 4 (நிறைவு)

## கூறு 14

## தேம்பாவணி - காட்சிப்படலம்

**பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)**

**1. என்ற வாசகம்**

2. அம்பினால்

3. வேண்டும் ஓர் வினை

குறிப்பு

**14 - பாடஅமைப்பு:**

**14.1 அறிமுகம்-**

**14.2 நோக்கம்**

14.3 பாயிரம்

14.4 பாவகை

14.5 கடவுள் வணக்கம்

14.6 காப்பியத் தலைவன்

14.7 வீரமாமுனிவரின் அவையடக்கம்

14.8 ஆகிர்த மரியாளின் குணம்

14.9 கன்னி மரியாளும் ஆகிர்த மரியாளும் பெறுதல்

14.10 ஆகிர்த மரியாளும் கன்னி மரியாளும்

14.11 ஊரும் பேரும்

14.12 பாடல் மற்றும் விளக்கம்

14.12.1 தாய்மரியின் விடை

14.13 நிறைவாக

14.14 சோதித்தறியும் வினாவிடைகள்

14.15 பயிற்சி வினா

14.16 பொருளறிக

14.17 மேலும் படித்தறிக..

## 14.1 அறிமுகம்

குறிப்பு

வீரமாமுனிவர் தேம்பாவணி காப்பியத்தை இயற்றுவதற்கு முன்னர் அவர் தமிழ் கற்று சான்றோர்களின் அவையில் தன் காப்பியத்தை அரங்கேற்றம் செய்தார். கற்றறிந்த சான்றோர்களின் அவையில் கூறும்போது சான்றோர்கள் கேட்ட கேள்விகளுக்கு மிகச் சரியாகவும், தன்னடக்கத்தோடும், நகைச்சுவையோடும் பதிலளித்துள்ளார். இதைத் தன்னடக்கமாகப் பாயிரத்திலும் எழுதியுள்ளார்.

## 14.2 நோக்கம்

ஒவ்வொரு நூல் இயற்றும் போதும் கடவுள் வாழ்த்து அமைப்பது மரபு. வீரமாமுனிவரும் தேம்பாவணியில் கடவுள் வாழ்த்துப் பாடல் மூன்றினைப் பாடியுள்ளார். தன்னடக்கமாகச் சில பாடலிலும், தான் நூல் இயற்றக் காரணமாக அமைந்த சூழ்நிலையையும் தன் பாயிரப் பாடல்களில் பதிவு செய்துள்ளார். காட்சிப் படலத்தில் விரியும் பாடல்களைக் கற்பதின் மூலம் தேம்பாவணியின் காப்பியச் சிறப்பை அறிவது நோக்கமாகும்.

## 14.3 பாயிரம்

இது தம் காப்பியத்திற்கு முன்னுரையாக ஆசிரியரே அமைத்ததாதலின் தற்சிறப்புப் பாயிரம் என்க. கடவுள் வணக்கமும் நூலிற் சொல்லப்படும் பொருளும் போன்றவற்றை எடுத்துக்கூறும்.

## 14.4 பாவகை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## 14.5 கடவுள் வணக்கம்

தேம்பாவணியின் கடவுள் வாழ்த்து அனைத்து தெய்வத்தையும் வணங்குமாறு அமைந்துள்ளது. சிறந்த மூன்று உலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கவும் வல்லவனாய் தனக்கு நேராக வேறு உயர்வும் ஒப்பும் இன்றி யாவற்றையும் கடந்து நின்ற ஒரே கடவுளின் தூய்மையும் நறுமணமும் கொண்ட தாமரை மலர் போன்ற பாதத்தை நம்

பாவ வினை அறுமாறு வணங்கியும் வாழ்த்தியும் அறங்களால் உயர்ந்தோனாகிய வளனின் கதையை அறம் முதலிய நாற்பொருளும் விளங்குமாறு சொல்வோம் என்கிறார் வீரமாமுனிவர்.

குறிப்பு

மூவுலகம் எனப்படுவன விண் மண் பாதாளம் என்பன, அறம் முதலிய நாற்பொருளாவன அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

## 14.6 காப்பியத் தலைவன்

தேம்பாவணியின் காப்பியத் தலைவன் சூசையப்பர் என்னும் வளனாவான். வீரமாமுனிவர் காப்பியத் தலைவனை மூன்று பாடல்களில் வாழ்த்துகிறார்.

தேவுல கிறைஞ்சுஞ் சூசை தேன்மலர்க் கொடியைப் பூத்து

மூவுல கனைத்து மெஞ்சா முறையொடு நிழற்று நாதன்

பூவுல கெய்தி யன்ன பூநிழற் கொடுங்கிச் சாய்ந்த

யாவுல கனைத்தும் வாழ்த்து மிருங்கதை யியம்பல் செய்வாம்

தெய்வ உலகுமே வணங்கும் சூசை தேன் நிறைந்த மலர்க் கொடியைப் பெற்றான். மூன்று உலகங்களையும் குறையாத நீதி முறையோடு நிழல் செய்து காக்கும் ஆண்டவன் மனிதனாக இப்பூவுலகை அடைந்து, அந்த மலர்க்கொடியின் அழகிய நிழலில் தங்கித் துயில் கொண்டான். இவ்வாறு உலகங்கள் அனைத்தும் வாழ்த்தும் பெருமையுள்ள கதையை நாமும் சொல்லத் தொடங்குவோம்.

வளம்செயும் வரங்க டம்மால் வலையில் வளர்வ மைந்த

வுளஞ்செயு மரிய மாட்சி யுடையவ னாய தன்மை

நளஞ்செயும் வடநூ லோர்க ணவின்றிவற் சூசை யென்ப

தளஞ்செயுந் தமிழ்ச்சொல் லானு மவன்வள னென்ப தொத்தே

சூசை தன்னை வளப்படுத்தும் தெய்வ வரங்களால் எல்லை இல்லாத வளர்ச்சி அமைந்து, தன் உள்ளம் அதற்கேற்பச் செயலாற்றும் பெறுதற்கு அரிய மாட்சி உடையவன். அத்தன்மையைச் சொல்லும்

முகமாக விரிவு கொண்டுள்ள வடநூற் புலவர் இவனைச் சூசை என்று அழைப்பர். அது நிறைவு கொண்ட தமிழ்ச்சொல்லாலும் அவன் வளன் எனச் சொல்வதனைப் பொருள் அளவில் ஒத்ததே ஆகும்.

குறிப்பு

விவிலியத்தில் யோசேப்பு என்று அமைந்துள்ளது. இது எபிரேயப் பெயர். இது ஒலி அடிப்படையில் அமைந்ததாகும். பிற மொழிகளில் சூசை என வழங்குதல் உண்டு. பொருள் அடிப்படையில் தமிழ்மொழியில் வளன் எனப் பெயர் கொண்டது.

## 14.7 வீரமாமுனிவரின் அவையடக்கம்

அவையடக்கம் என்பது புலவன் கற்றோர் அவைமுன் தன் அடக்கத்தைத் தெரிவித்து அன்பைப் பெறுவதோர் இலக்கிய மரபு.

சூசையுற் றனவ ரங்கட் டூய்கடல் கடக்கலில்லா

லோசையுற் றொழுக மிர்த முடைகட லென்ன நண்ணிப்

பூசையுற் றதனை நக்கப் புக்கென வுளத்தைத் தூண்டு

மாசையுற் றூம னேனு மருங்கதை யறைய லுற்றேன்

சூசை பெற்றுள்ள வரங்களாகிய கடலைக் கடத்தல் என்பது இயலாத செயல். ஆதலால் முதலில் அதன் ஓசையை உற்றுக் கேட்டு அமைந்தேன். பின் அது அலையால் கரைக்கு வந்து ஓடும் அமிர்தத்தை உடைய கடலென்று அணுகினேன். பின்னும் நெருங்க அஞ்சி எட்ட நின்று வணங்கினேன். அதனைக் கையால் தொட்டு நாவால் நக்கிக் கொள்ள வேண்டும் போல் உள்ளத்தைத் தூண்டிய ஆசைக்கு ஆட்பட்டேன். அதற்குத் துணிந்து புகுந்தாற் போல, நான் இதைப் பொறுத்தமட்டில் ஓர் ஊமைக்குச் சமமானவனேனும், இவ்வரிய கதையைச் செய்யுளால் சொல்லத் துணிந்தேன்.

குறிப்பு

முறையடுத் தருநூ லோருண் மூழ்கிய வுவப்பி லன்ன

துறையடுத் தள்ளி யுண்ணுந் துணி விலா னென்னை நோக்கிற்

குறையெடுத் தனையென் றன்னார் கொடுஞ்சினத் துறுக்க னன்றே

பறையெடுத் துலகங் கேட்பப் பழித் தெனை நகைக்க னன்றோ.

அரிய நூல்களைக் கற்று வல்ல புலவர் முறையாக அவ்வமுதக் கடலை அடுத்து அதன் உள்ளே மூழ்கி உண்ட களிப்பினால் அந்தக் கடலில் கரையை அடுத்துக் கையால் அள்ளியே உண்ணும் துணிவில்லாதவனாகிய என்னைக் கண்டால், நீ உனக்குக் குறைவரத் தக்க அலுவலில் ஈடுபட்டுள்ளாய் என்று என்னை அவர்கள் கொடுஞ்சினத்தோடு அதட்டுதல் நல்லதோ? அதன் மேலும் பறையை எடுத்து அடித்துக் கூட்டி, உலகமே வந்து கேட்க என்னைப் பழித்து அதன் பின் தாமும் சேர்ந்து நகைப்பது நல்லதோ?

வளமான தமிழ்ச் சொல்லை இனிமையாகக் கேட்ட ஓர் இளங்கிளி தான் இயல்பாகச் சொல்லும் திருந்தாத சொல்லைக் கொண்டு உமிழ்ந்தாற் போல் அதனைச் சொல்ல, நூலில் வல்ல புலவர் அதனைக் குறையுடையது என்று கேளாதிருப்பரோ? உலகமெல்லாம் ஒன்றாய் ஆள்பவனாகிய கன்னி மரியாள், தான் உண்டஅமிர்தத்தை உமிழ்ந்தாற் போல் சொன்ன பழைய கதையாகிய அமிர்தத்தை நானும் உண்டு, என் திருந்தாத செய்யுளோடு கலந்து கக்க, அப்புலவர் கேட்பர்

அடவியால் வனப்பில் வாய்ந்த வாகிர்த வெனுந கர்க்குட்

புடவியா லுவமை நீத்த புகழ்வரத் துயர்ந்த கன்னி

நடவியார் தவத்தி லோங்கி நாதனை யீன்றா டாளைத்

தடவி ஆர்வு உயரப் போற்றி, தகவு அடைந்து இருந்தாள் அன்றோ

சோலைகளால் அழகு வாய்ந்தது ஆகிர்த என்னும் நகரம். உலகத்தில் ஒப்புமை கடந்த புகழுள்ள வரங்களால் உயர்ந்த ஒரு

கன்னிகை அந்நகர்க்குள் வாழ்ந்தாள். அவள் ஒழுக்கமாய் நடந்து, நிறைந்த தவத்தில் உயர்ந்து, ஆண்டவனைப் பெற்றெடுத்த கன்னி மரியாளின் பாதத்தைத் தடவி அன்பு உயரப் போற்றி, மேன்மை பெற்று இருந்தாள்.

குறிப்பு

### 14.8 ஆகிர்த மரியாளின் குணம்

அவள் இவ்வுலகில் சிறப்பாய் வாய்க்கப் பெற்ற ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட தெய்வக் காட்சியினால், தான் சொல்லும் இனிமை தோய்ந்த கருணை மலரும் வாயை உடையவள். தத்துவப் பொருள் நிறைந்த சொல்லை உடைய மனிதராகிய முனிவர்களிடம் காணப்படும் புண்ணிய இயல்போடு நடந்து வேத வாக்கின் உண்மையைத் தன் வாழ்க்கையால் காட்டும் மாண்பு கொண்ட அறத்தை உடையவள்.

சீதரு ளுடுக்க ளூடு திங்களைப் போலக் கன்னி
மாதரு ளரிய மாண்பால் வயங்கினா ளன்றித் தன்னற்
கோதருள் குறையற் றும்பர் குழுவினுக் கெந்தை யண்ட
மீதருள் காட்சி பூத்து வேதியர்க் கொளியே போன்றாள்

குளிர்ச்சி தரும் விண்மீன்களிடையே தான் ஒரு சந்திரனைப் போல தன்னைப் போன்ற கன்னிப் பெண்களிடையே அரிய மாண்பால், அவள் உயர்ந்து விளங்கினாள். அன்றியும் தன்னுள் பாவத்தைத் தரும் எவ்விதக் குறைபாடும் அற்று வானவர் கூட்டத்திற்கு நம் தந்தையாகிய ஆண்டவன் வானுலகத்தில் வழங்கும் தெய்வக் காட்சியைத் தானும் அடைந்து, வேதம் ஓதும் குருக்களுக்கும் ஒளி போன்று விளங்கினாள்.

14.9 கன்னி மரியாளின் பெயரை ஆகிர்த மரியாளும் பெறுதல்

இளங்கொடி மாட்சி காட்ட வினியதன் னாமந் தந்து
வளங்கொடு நட்பு காட்டவரைவில வரங்க ளீந்தாள்
விளங்கொளி யுடுத்த மேனி வெண்மதி மிதித்த பாத
முளங்குடு சூட்டுஞ் சென்னி யுடையவள் பரம தாயே

குறிப்பு

விளங்குகின்ற சூரியனை ஆடையாக உடுத்த மேனியும் வெண்ணிறமான பிறைச் சந்திரனை மிதித்த பாதமும், வானில் உலாவும் விண்மீன்களை முடியாகச் சூட்டுதலும் உடையவளாகிய தேவ தாய், இளமையான வஞ்சிக்கொடி போன்ற இப்பெண்ணின் மாண்பைக் காட்ட இனிய தன் பெயரையே இவளுக்கும் பெயராய்த் தந்தாள்.

**14.10 ஆகிர்த மரியாளும் கன்னி மரியாளும்**

இன்னவை மகளுந் தாய மிணையென நடததும் வேளை

பன்னவை யறுந்தன் பூமான் பழங்கதை யுரைத்து ரைத்த

வன்னவை யெவருங் கேட்ப வவை வரை கென்றா டாயுஞ்

சொன்னைவ மகளு மன்ன துணி வொடு வரைந்திட்டாளே

மகளாகிய ஆகிர்த மரியாளும் தாயாகிய கன்னி மரியாளும் இணைந்த தன்மையாய் இவற்றை நடத்தி வந்த வேளையில், பல வகைக் குற்றங்களில் எதுவும் அற்ற தன் கணவனின் பழமையான கதையைத் தாயாகிய மரியாள் இவளுக்கு எடுத்துரைத்தாள். நான் உரைத்த அவற்றை எல்லோரும் கேட்டுப் பயனடையுமாறு எழுதி வைப்பாயாக என்றும் சொன்னாள். மகளும் அத்தாய் சொன்னவற்றை அத்தகைய துணிவோடு எழுதி வைத்தாள்.

வருந்திய நசையா னானம் வரைந்தவை வரைந்து காட்டத்

திருந்திய தமிழ்ச்சொல் லில்லாற் செவிப் புலன் கைப்ப நல்லோர்

பொருந்திய குறைக ணோக்கிற் புணர்ந்தமட் கலத்தைப் பாரா

தருந்திய வமுது நன்றே லருத்தியோ டருந்தல் செய்வார்

ஆகிர்த மரியாள் எழுதியவற்றை உந்தித் தூண்டிய ஆசையால் நானும் எழுதிக் காட்டியுள்ளேன். திருந்திய தமிழ்ச் சொல் அறிவு போதுமான அளவு எனக்கு இல்லாமையால், நல்லோர் தம் செவியறிவாகிய கேள்விக்குக் கசப்பு ஊட்டுவனவாகப் பொருந்திய குறைகளை இதனிற் காணவுங் கூடும். எனினும் அவர் நல்லோராகையால்,

*Self-Instructional Material*

குறிப்பு

இதனில் அடங்கிய அமுது அருந்துவதற்கு நல்லதென்று கண்டால் அது பொருந்தியுள்ள மண் பாத்திரத்தின் குறையைப் பாராமல் ஆசையோடு அருந்தவே செய்வார்.

**14.11 ஊரும் பேரும்**

சீரிய மறைநூற் பூண்ட செழுந்தவத் தரிய மாட்சி

நேரிய வுளத்தி லோங்கி நேமிகாத்த வனைக் காத்த

வேரியங் கொடியோன் காதை விளம்பவக் கொடிவிள் பைம்பூ

வாரிய னூரிற் றேம்பா வணி யெனப் பிணித்தல் செய்வாம்.

சிறந்த வேத நூல் அடிப்டையில் தாங்கிய அரிய தவத்தின் மாண்பினால் நேர்மையான உள்ளத்தோடு உயர்ந்து நின்று, இவ்வுலகினைக் காத்த ஆண்டவனை வளர்ப்புத் தந்தையாக இருந்து காத்த, மணமுள்ள அழகிய பூங்கொடியைத் தாங்கிய வளனின் வரலாற்றைப் பாவால் சொல்வதற்கு, அந்தப் பூங்கொடியில் மலர்ந்த பசுமையான பூக்களைக் கொண்டே, ஆரியநல்லூரில், தேம்பாவணி என்ற பெயரால் மாலையாகக் கட்டத் தொடங்குவோம்.

தேம்பாவணியில் தேம்பாவணி என்ற தொடர் அமைந்த பாடல்கள்

வீரமாமுனிவர் யாத்த தேம்பாவணி என்னும் நூலின் பெயரை வெவ்வேறு முறைகளில் பிரித்துப் பொருளுரைப்பது உண்டு. நூலிலேயே பெயர் விளக்கம் தருகின்ற பாக்கள் சில உள்ளன.

வான் மேல் மகுடம் புனை நாளில், வர மாதவன், தன்கொடி பூத்த

தேன் மேல் தளம்பு, ஆறு அறு நூறு சேர்ந்த மூ ஐந் திரு மணிப் பூ

நூல் மேல் முறை நையா தொடுத்த நுண் மண் ஆறு அறு இது' என மீன்

மேல் விளங்கும் வளன் பதத்தில் விரும்பிச் சாத்தி, மீண்டு உரைத்தார்

குறிப்பு

வரங்கொண்ட பெருந் தவத்தோனாகிய சூசை, வானுலகத்தில் முடி புனைந்து கொண்ட நாளில், திருமணத்தின்போது தன் கைக் கொடியில் பூத்தனவும், தேன் நிறைந்து மேலே தளம்புவனவுமான ஆறு அறுநூறோடு சேர்ந்த மூவைந்துமாக மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து அழகிய மணிப்பூக்களைக் கொண்டு, நூல்முறை வழுவாமல் தொடுத்து அணிந்த ஆறாறு முப்பத்தாறென்று அமைந்த மாலைத் தொகுப்பு இது' என்று கூறி, விண்மீனினும் சிறந்து விளங்கும் சூசையின் அடியில் விரும்பிச் சாத்தி, மீண்டும் பின்வருமாறு கூறினர்.

ஆறறு நூறு சேர்ந்த மூவைந்து (6 + 600) + (3 ×5) = 3600 + 15 = 3615. ஆறாறு 6×6=36. முன் இப்படலத்தும் திருமணப் படலத்தும் குறித்த செய்திகளை நினைவிற் கொண்டு, வேண்டிய சொற்கள் விரித்துரைக்கப்பட்டன.

நாம்பா அணிப்பூங் கொடி பூத்தநறும் பூ அனைய சொல் மலரால்

காம்பா அணி வில் வீசிய தன் கன்னித் துணைவி, களித்து இசைத்த

தேம்பா அணி இ∴து, இதை அணிவார் திரு வீட்டு உயர்வார்! அவ் இருவர்

சாம்பா அணித்தம் மைந்தனோடு ஆர் தயையின் காப்பார்! என மறைந்தார்

கெடாத கற்பென்னும் அணி ஒளி வீசிய தன் கன்னித் துணைவி, தன் இளைக்காத அணியாகிய மலர்க்கொடியில் பூத்த மணமுள்ள மலர் போன்ற சொல்லாகிய மலரால் களிப்புடன் இணைத்துக் கட்டிய வாடாத மாலை இது. இதனை அணிவார் வானுலக வீட்டில் உயர்வு பெறுவார்! அக்கன்னியும் சூசையுமாகிய இருவரும், ஒடுங்காத அணி போன்ற நம் மகனோடு சேர்ந்து, நிறைந்த தயவோடு அவரைக் காப்பார்! என்று கூறி மறைந்தனர்.

திருவாய் மணித்தேன் மலர் சேர்த்த தேம்பாவணியைத் தொழுது ஏந்தி,

குறிப்பு

மருவாய் மணிப்பூ வயல்நாடு வடு அற்று உய்ய ஈங்கு உற்றேன்

உருவாய் வேய்ந்த என் இறையோனுடன் மூவரின் பொற் பதத்து அணிய

வெருவாய்ப் புன்சொல் அஞ்சிய பின், விருப்பம் தூண்ட, தொழுது அணிந்தேன்

அக்கன்னிமரியாள் தன் திரு வாயினின்று பிறந்த அழகிய சொல் மலரால் சேர்த்துத் தொடுத்த தேம்பாவணி என்னும் சூசையின் வரலாற்றைத் தொழுது ஏந்திக் கொண்டு, மணம் பொருந்திய அழகிய பூக்கள் நிறைந்த வயல்களைக் கொண்ட இத்தமிழ்நாடு பாவ வடுவினின்று நீங்கி வாழும்படி இங்கு வந்தடைந்த நான், மனித உருவாய் வந்து தோன்றிய என் ஆண்டவனாகிய திருமகனுடன், கன்னி மரியாளும் சூசையுமாகக் கூடிய அம்மூவரின் பொன்னடிகளில் ஒரு காப்பியமாக அணியுமாறு எண்ணி, எனது புன்சொல்லைக் கருதி நடுக்கத்தோடு அஞ்சி வாளாவிருந்தபின், அவ்விருப்பம் மேன்மேலும் என்னைத் தூண்டவே, இதனை இயற்றி அம்மூவர் அடியைத் தொழுது சூடினேன்.

ஆகையால் தேவதாய் முன் வாய்மொழியாற் சொன்ன தேம்பாவணியைப் பொருளும் பிறழாது அளவும் மாறாது தானும் தமிழ்மொழியாற் சொன்னது என்பதாயிற்று என்க’ என்பது பழையவுரை அடிக்குறிப்பு.

14.12 பாடல் மற்றும் விளக்கம்

14.12.1 தாய்மரியின் விடை

என்ற வாசகம், எந்தை மனுக்குலம்

சென்றவாய் அருள் காட்டிய சீர் உணர்வு

ஒன்றலாகி உருகிய தாய் , புனல்

மின்தவா விழி தூவி விளம்பினாள். (11)



என்று சாந்தி கூறிய வார்த்தையும், நம் தந்தையாகிய ஆண்டவன் மனித குலத்தில் தானும் ஒருவனாய் வந்து பிறந்த விடத்து அருள் காட்டிய சிறப்பும், தன் உணர்வில் பொருந்தக் கொண்டு உருகிய தாயாகிய மரியாள், மின்னொளி நீங்காத தன் கண்களினின்று நீரைப் பொழிந்த வண்ணம் பின்வருமாறு கூறினாள்.

அம்பினால் அபயர் செயும் அத்துணை

நம்பினார், தனி நற்செய்கை ஈடிலார்

கொம்பில் ஏறும், இடைதுவளும் கொடி

எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ? (12)

அம்பினால் வீரர் தமக்குச் செய்யும் அந்தத் துணையை நம்பியிருப்பவர். தனியாக நல்ல வீரச் செயலைச் செய்யும் வலிமை இல்லாதவர் ஆவார். இடையே துவளும் கொடியே கொம்பைத் துணையாகக் கொண்டு ஏறிப் படரும் எம்பெருமானின் வலிமைக்கு இவ்விதத் துணையெல்லாம் வேண்டுமோ?

வேண்டும் ஓர்வினை வேண்டுமென்றால் முடித்து

ஆண்டும் ஓர்தனிக் கோல்அரசான் எரி

தூண்டும் ஓர்சினம் தோன்றுழி. அப்பகை

தாண்டும் ஓர்வலி தாங்குவர் யாவரோ? (13)

தான் செய்ய வேண்டிய ஒரு செயலை, வேண்டுமென்று நினைத்தாலே முடித்து, ஒரு தனிச் செங்கோலால் உலகங்களையெல்லாம் ஆளும் அரசனாகிய ஆண்டவனிடம் நெருப்பை மூட்டி விட்டது போன்ற ஒரு சினம் தோன்றும் போது, அந்தப் பகையைத் தாண்டிச் செல்லக் கூடிய ஒரு வல்லமை கொண்டவர் யாரோ?

குறிப்பு

## 14.13 நிறைவாக

சாந்தி என்ற இடைச்சியிடமிருந்து கன்னியாகிய தாய் மரியாள் விடை பெறுவது காட்சிப் படலத்தின் நிறைவுப் பகுதியாக அமைந்துள்ளது.

## 14.14 சோதித்தறியும் வினா விடை

1. தாய் மரியாள் கண்ணீர் மல்கக் கூறிய சொற்களை எழுதுக

சாந்தி கூறிய வார்த்தையும், நம் தந்தையாகிய ஆண்டவன் மனித குலத்தில் தானும் ஒருவனாய் வந்து பிறந்த விடத்து அருள் காட்டிய சிறப்பும், தன் உணர்வில் பொருந்தக் கொண்டு உருகிய தாயாகிய மரியாள், மின்னொளி நீங்காத தன் கண்களினின்று நீரைப் பொழிந்த வண்ணம் பின்வருமாறு கூறினாள்.

2. சூசையப்பரை எதற்கு உவமையாகக் கூறுகிறார்?

அம்பினால் வீரர் தமக்குச் செய்யும் அந்தத் துணையை நம்பியிருப்பவர். தனியாக நல்ல வீரச் செயலைச் செய்யும் வலிமை இல்லாதவர் ஆவார். இடையே துவளும் கொடியே கொம்பைத் துணையாகக் கொண்டு ஏறிப் படரும் எம்பெருமானின் வலிமைக்கு இவ்விதத் துணையெல்லாம் வேண்டுமோ? என்று சூசையப்பரை ஏறிப் படரும் கொடிக்கு இணையாக உவமிக்கிறார்.

## 14.15 பயிற்சி வினா

1. சூசையப்பர் பற்றிய வருணனைகளைத் தொகுத்துரைக்க

## 14.16 பொருளறிக

வினை – செயல், புனல் - நீர், விளம்பினாள் - கூறினாள், ஈடுலார் - இணையர் இல்லாதவர்

## 14.17 மேலும் படித்தறிக

1. புலவர் என்.வி.கலைமணி, தமிழ் அகராதிகளின் தந்தை வீரமாமுனிவர், மங்கை பதிப்பகம், மங்கை வெளியீடு, சென்னை

2. முனைவர் சூ.இன்னாசி, தேம்பாவணித் திறன், எல்.கே.எம்.கம்யூட்டர் பிரிண்ட்ஸ், பி.ஆர்.லித்தோகிராபர்ஸ், அவ்வை அச்சுக் கூடம், சென்னை, முதற் பதிப்பு 1983, இரண்டாம் பதிப்பு 1994

## மாதிரி வினாத்தாள்

## 11A – பொதுத்தமிழ்

## பகுதி - I தாள் - I

**காலம்: 3மணி** **மதிப்பெண்- 75**

**பகுதி-அ**

**(அ) அனைத்து வினாக்களும் ஓரிரு வரிகளில் விடையளி:**
**(10 x 2=20 மதிப்பெண்கள்)**

1. கண்ணதாசனின் தன்வரலாற்று நூல்கள் யாவை?

2. யார் ஞானவான் ஆகலாம் என்று கண்ணதாசன் கூறுகிறார்?

.3. பட்டுக்கோட்டையார் தொழிலின் சிறப்புக்களாகக் கூறுவனவற்றை விளக்குக

4. பாரதியாரின் தேச பக்தியைக் கூறுக

5. பெ.தூரன் பற்றிக் குறிப்பு வரைக

6. எதிலிருந்து நம்மைக் காக்க வேண்டும் என்று வல்லிக்கண்ணன் கூறுகிறார்?

7. வழக்குரை காதையில் கண்ணகியின் தோற்றப் பொலிவினை வாயிற்காவலன் உரைத்த கருத்தை விளக்குக

8. சீறாப்புராணம் பற்றிக் குறிப்பு வரைக

9. ஆயர்கள் ஆண்டவனை எவ்வாறு வாழ்த்தினர்?

0. சூசையப்பரை எதற்கு உவமையாகக் கூறுகிறார்?

**குதி-ஆ ப**

**குறிப்பு**

**(ஆ) அனைத்துவினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி:**
**(5x5=25 மதிப்பெண்கள்)**

11 (அ) கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து கண்ணதாசன் பாடும் பாடற் கருத்தைத் தொகுத்துரைக்க

அல்லது

(ஆ) பட்டுக் கோட்டையாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் புலப்படுத்துக

12. (அ) கண்ணன் செய்யும் குறும்புகளை விளக்குக

அல்லது

(ஆ) பாரதிதாசன் இயற்றிய உலகப்பன் பாடற் கருத்தைக் கட்டுரைக்க

13. (அ) வெறும்புகழ் என்ற கவிதையில் கவிஞர் வல்லிக்கண்ணன் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரைக்க

அல்லது

(ஆ) சர்ப்பயாகம் என்ற கவிதை குறியீட்டுக் கவிதை விளக்குக

14. (அ) கண்ணும் எழுதேம் என்னும் கவிதையில் அப்துல் ரகுமானின் கவித்திறத்தை விவரி

அல்லது

15. (அ) ஆயர்கள் இறைவனை வழிபட்ட திறத்தை உரைக்க

அல்லது

(ஆ) மரியாள் ஆயர்களிடம் வைத்த அன்பின் திறத்தைப் புலப்படுத்துக

**குறிப்பு**

## பகுதி - இ

**(இ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கும கட்டுரை வடிவில் விடையளி (3x10=30 மதிப்பெண்கள்)**

16. கண்ணனின் குழலோசையின் மகிமையைக் கவிஞர் கண்ணதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க

17. நாமக்கல் கவிஞரின் நோயற்ற வாழ்வு பற்றிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க

18. மந்திரக் கிழவரின் மாண்புகள் குறித்து விளக்குக

19. நபிகள் நாயகம் ஈத்தங்குலை வரவழைத்த திறம் பற்றி விவரி

20. காட்சிப் படலத்தின் வாயிலாக வீரமாமுனிவர் கூறும் கருத்துக்களைக் கட்டுரைக்க